# இந்து தருமம்

2006





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

# இந்து தருமம்
# 2006

இந்து மாணவர் சங்கம் 2006

பேராதனைப் பல்கலைக்கழகம்,

பேராதனை.

# HINDU DHARMAM
# 2006

**Hindu students' Union 2006**

**University of Peradeniya,**

**Peradeniya.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | இந்து தருமம் 2006 |
| இதழாசிரியர்கள் | : | சி. பிரஷாந் (பொறியியற் பீடம்)<br>க. அபிரா (பொறியியற் பீடம்) |
| வெளியீடு | : | இந்து மாணவர் சங்கம்,<br>பேராதனைப் பல்கலைக்கழகம்,<br>பேராதனை. |
| பிரதிகள் | : | 400 |
| அட்டைப்படம் | : | ச. சக்திராஜ் (பொறியியற் பீடம்) |
| அச்சுப்பதிப்பு | : | சந்துனி பதிப்பகம் |

| | | |
|---|---|---|
| Title | : | Hindu Dharmam 2006 |
| Editors | : | S. Prashanth (Faculty of Engineering)<br>G. Abira (Faculty of Engineering) |
| Published by | : | Hindu Students' Union,<br>University of Peradeniya,<br>Peradeniya. |
| Copies | : | 400 |
| Cover Design | : | S. Sakthiraj (Faculty of Engineering) |
| Printed by | : | Sanduni Offset Printers |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காப்பு

கலைமாதும் திருமாதும் கனிந்தே வாழும்
கவின் போராதனை நகரிற் கோயில் கொண்டு
நிலையான நற்கல்வி கலையின் ஞானம்
நெஞ்சுருகும் பக்தருக்கே யருளுஞ் சேந்தன்
தலையான தண்டமிழின் ஊஞ்சலேறித்
தமிழ் குறிஞ்சிக் குமரனவன் கனிந்தே அருள
மலை மீதிலே பாரதத்தை எழுதும் ஞான
மதகரியின் செஞ்சரணம் காப்பதாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் இந்த மலரைப் பற்றி. . .

"*பேராதனையுறைந்து பேணிநம்மைக் காக்கும் கூரான வேல்தாங்கும் குறிஞ்சிக்குமரன்*" திருவருளால் "*இந்து தருமம் 2006*" இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது. "*மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்*" என்பதற்கிணங்க இயங்கி வரும் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் ஆண்டிதழான இம்மலர் 1954ம் ஆண்டு முதன்முதலாக வெளிவந்தது. கடந்த காலங்களில் ஏற்பட்ட சில தடங்கல்கள் காரணமாக சிறிது காலம் இவ்விதழினை வெளியிட முடியாமலிருந்தது. இருந்தபோதும் தற்போது முருகன் துணையால் கிரமமாக வெளிவந்து கொண்டிருகின்றது.

எமது சமயத்தின் பன்முகத்தன்மையைக் காட்டும் நோக்கில் இந்த இதழினை வாழ்த்தியல், வாழ்வியல், சமூகவியல், படைப்பியல், பதிவியல் என ஆறு தொகுப்புக்களாக வடிமைத்துள்ளோம்.

பெரியோர்களின் ஆசியுரைகளும், அவர்களின் வாழ்த்துக்களும் வாழ்த்தியல் எனும் தொகுப்பின் கீழும், ஆன்மீக வாழ்விற்கு எம்மை இட்டுச்செல்லும் கருத்துடைய ஆக்கங்கள் வாழ்வியல் எனும் தொகுப்பிலும், சமூக ஒழுக்கங்களை எடுத்தியம்புகின்றவை சமூகவியலிலும், ஆராயப்பட்டவை ஆய்வியலிலும், மாணவர்களின் படைப்புக்கள் படைப்பியலிலும், எமது சங்கத்தின் பதிவுகள் பதிவியலிலும் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்விதழிலில் அடங்கியுள்ள ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியவர்களே பொறுப்புடையவர்களாவர். மேலும் இம்மலரில் ஏதும் தவறுகள் இருப்பின் அவற்றை மன்னித்து ஏற்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இவ்விதழினை குறிஞ்சிக்குமரனுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

குறுகிய காலத்தில் பல பயனுள்ள ஆக்கங்கள் தந்துவிய பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்விதழ் அழகுற வெளிவர உதவிய அனைத்து நண்பர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

"*பொங்கும் மங்களம் எங்கும் தங்குக*"

இதழாசிரியர்கள்

*சி. பிரஷாந் (பொறியியற் பீடம்)*
*க. அபிரா (பொறியியற் பீடம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழின் உள்ளே......

## ❖ வாழ்த்தியல்


1. ஆலயப்பிரதம குருவின் வாழ்த்துச் செய்தி
2. நல்லை ஆதீன முதல்வரின் வாழ்த்துச் செய்தி
3. Message from the Vice – Chancellor
4. பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி
5. பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி
6. கௌரவ கணக்காய்வாளரின் வாழ்த்துச் செய்தி
7. பொறுப்பாண்மைக் குழுத்தலைவரின் ஆசியுரை
8. இந்துப்பட்டதாரிகள் சங்கத்தலைவரின் வாழ்த்துச் செய்தி
9. இந்து மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துரை


## ❖ வாழ்வியல்


1. இறை வழிபாடு — 01
   - *சி. திவாகரன்*
2. சைவம் என்பதன் பொருள் — 04
   - *கார்த்திகா திருநாவுக்கரசு*
3. காயத்திரி மந்திரம் — 05
   - *பிரதீபா இராமசாமி*
4. சேக்கிழார் காட்டிய பெண்மை — 07
   - *மகியினி பாலச்சந்திரன்*
5. சக்தி வழிபாடு — 10
   - *க. தர்சினி*
6. முருக வழிபாடும் விழாக்களும் — 12
   - *சோதிமலர் ரவீந்திரன்*


## ❖ சமூகவியல்


7. ஆலயக் கிரியைகளும் நாட்டிய முத்திரைகளும் — 17
   - *ப. சிவறூபி*
8. இந்து மதமும் இன்றைய இளைஞர்களும் — 20
   - *கா. கார்த்தீபன்*
9. இந்து மதத்தை வளர்ப்போம் மதமாற்றத்தைத் தடுப்போம் — 23
   - *வி. மன்மதராஜன்*
10. இந்துமத தத்துவங்களும் சாஸ்த்திரங்களும் — 26
    - *ஜெ. நிவேதன்*
11. உச்சியில் இருந்தே ஆரம்பி... — 29
    - *பூ. சோதிநாதன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❖ ஆய்வியல்


12. பக்திக் கவிதை 35

- *செ. சுதர்சன்*

13. கலியுகக் கந்தனின் உகந்தைப் பதியினுடைய தத்துவமும், தலவரலாற்றுச் சுருக்கமும், மகிமையும் 42

- *ந. சிவகுமார்*

14. மரவழிபாடு ஓர் மானிடவியல் நோக்கு 44

- *சண் பத்மநேசன்*

15. சாந்தோக்கிய உபநிடதத்தில் 'தத்வமஸியும் அதன் மெய்யியல் அர்த்தங்களும்' 49

- *முபீஸால் அபூபக்கர்*

16. பகவத்கீதை காட்டும் கர்மயோகம் 53

- *தி. திலீபன்*

17. வட இலங்கையில் இந்து சமய வளர்ச்சியும், ஆறுமுக நாவலரும் 55

- *பேரா. அ. சிவராஜா*

18. கொக்குவில் சபாரத்தின முதலியார் பற்றிய ஓர்அறிமுகக் குறிப்பு 58

- *பேரா. இரா. வை. கனகரத்தினம்*

19. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 68

- *ஜனார்த்தினி தவராஜா*

20. நாவலர் இயக்கம் 70

- *மா. ரூபவதனன்*


## ❖ படைப்பியல்


21. வல்லமை தாராயோ ...! 77

- *க. தர்சினி*

22. இந்து மதமும் இன்தமிழும் 78

- *ம. ரமணசுந்தரன்*

23. விஞ்ஞானம் மெய்ப்பிக்கும் மூடநம்பிக்கைகள் 81

- *சி. எழில்வேள்*

24. சரீரத்தில் தச வாயுக்கள் 82

- *ச.சதீசன்*

25. பூஜையும் அதன் முக்கியத்துவமும் 84

- *தேவகிசுதா சிவநேசன்*


## ❖ பதிவியல்


26. ஆண்டறிக்கை 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயை புரிவாய்
# சண்முகனே...!

கந்தானை மலை மீது ஓங்கி நின்று
வந்தாரை வரவேற்றுத் தாங்கி நிற்கும்
குன்றத்து வேலன் குறிஞ்சிக் குமரன்
என்றைக்கும் எமைக்காக்கும் மால்மருகன்

ஆழிசூழ் ஈழவள நாட்டில்
அழகுப் பேராதனை திருப்பதியில் - என்றும்
ஏழு ஸ்வரங்கள் மங்களம் இயற்ற
எழுந்தருளிக் காத்து நிற்கும் பால குமாரன்

நித்தமும் வீசும் சில்லென்ற தென்றலும்
சத்தமாய்ச் சரசரக்கும் சவுக்கு மர நாட்டியமும்
சித்தமாய் நாங்கள் இங்கு பயின்றிடும் வித்துவமும்
மொத்தமும் உன் விழிப்பார்வையின் தண்ணொளியன்றோ....

நிச்சயமற்ற வாழ்க்கை தனில் விறைந்திட்டு
சச்சரவுடன் சஞ்சரித்திருக்கும் மனித வாழ்க்கையில்
மிச்சமாய் இருக்கும் சொற்ப தருணங்களும்
அச்சமின்றி வாழ அருள்புரிவாய் குறிஞ்சிக்குமரனே.....

வெஞ்சமர் புகையினால் கருகிப்போய்
கந்தலாய்க் கிடக்கும் இந்தத் தேசமதில்
நொந்து போய் நிற்கும் மனித மனங்களில் - என்றும்
சந்தன மலர்கள் தவழ்ந்திட தயை புரிவாய் சண்முகனே.....!!

அட்டைப்படக் கவிதை

*சி. பிரஷாந்*

*(பொறியியற் பீடம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்தியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ மகா கணபதயே நமஹ

# ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

"ஓம் ஸாம் ஸ்கந்தாய கார்த்திகேயாய
பார்வத நந்தனாயச /
மகாதேவ குமாராய
குறிஞ்சிக் குமராயதே நமஹ //"

மனிதர்கள் நாகரீகம் உடையவர்களாகவும் பண்பாடுடையவர்களாகவும் வாழும்போதே நிறை வாழ்வு வாழ்ந்ததாகக் கருத முடிகின்றது. நாகரீகத் தேவைகளான வசதி வாய்ப்புக்கள், புகழ், அந்தஸ்து, பணம், பண்டங்கள், பட்டம், பதவிகள் இவற்றைத் தேடுவதுடன் நின்று விடாது, அதற்கும் மேலாக மனிதப் பண்பாட்டுடனும் நல்லொழுக்கத்துடனும் வாழ்வதே நிறைவாழ்வு ஆகின்றது. அதையே இந்து தரும ஒழுக்க நெறிகள் காட்டி நிற்கின்றன. இந்து சமய நடைமுறைகளைப் பின்பற்றி மனித மேம்பாடு அடைவதை நோக்கமாகக் கொண்டு, பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் அமைக்கப்பட்டு சமய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் ஓர் அங்கமாக நூல் வெளியீடும் இருந்து வருகின்றது. இம்முயற்சிகள், போதனைகள் யாவும் சாதனைகளாக மிளிர வேண்டும்.

கல்வியின் பயனாகப் பெறப்படுவது அறிவு. அந்த அறிவைப் பயன்படுத்தி மனிதப் பண்பாட்டுடனும், நல்லொழுக்கத்துடனும் வாழ்ந்து, அதன் பயனாக நிறை வாழ்வும் நற்கதியும் அனைவரும் பெற்றுய்ய எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரன் திருவருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ பா. நித்தியாநந்த குருக்கள்.
ஆலய பிரதம குரு,
குறிஞ்சிக்குமரன் கோயில்,
பேராதனைப்பல்கலைக்கழகம்,
பேராதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வெளியிடுகின்ற "இந்து தருமம்" மலர் இம்முறையும் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். வருடா வருடம் வெளியிடப்படும் இம்மலர் வழமைபோல, சிறப்பான ஆன்மீகக் கருத்துக்களையும் பயன்தரு ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது போற்றுதற்குரியது.

இன்றைய சூழ்நிலையில் மனித மனங்கள் ஆன்மீக நெறிகளினின்று விலகிச் செல்கின்ற, கலாச்சார நெறிமுறைகளினின்று மாறுபட்டுச் செல்கின்ற சூழ்நிலையில் இவ்வாறான நூல்கள், சஞ்சிகைகளின் பங்கும், இவ்வாறான பணிகளை மேற்கொள்ளத் தூண்டும் வகையிலான சமய உணர்வுடையோரின் பங்களிப்பும் இன்றியமையாததாகும்.

இம்மலரினை வெளியிடுவற்கு தம்மை அர்ப்பணித்த இதழாசிரியர்களுக்கு இறைவனது ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். இம்மலர் சிறப்புற வெளிவந்து அனைவருக்கும் பயனுள்ளதாக அமைய இறைவன் ஆசீர்வதிப்பானாக.

***"என்றும் வேண்டும் இன்ப அன்பு"***

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
***ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM
## THE VICE - CHANCELLOR

It is with great pleasure that I extend my greetings to the Hindu Students' Union on the issue of the annual magazine of ***"Hindu Dharmam".***

The union offers its members the diverse cultural activities which expand opportunities to those interested to exchange their values and ideas on matters of mutual interests The creative writings and articles by Tamil speaking staff and students, in the publication of ***"Hindu Dharmam"***, have contributed substantially, to advance the knowledge and understanding of the cultural diversity and tradition of Srilankan society.

I earnestly hope that the experience acquired by University students in active participation of social and cultural events organized by the society would help to broaden their understanding on the society.

I take this opportunity to congratulate the members of the Hindu Students' Union for their efforts and achievements and wish them success in their endeavours.

**Prof. H. Abeygunawardena**
Vice - chancellor
Universitiy of Peradeniya

1st January 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் காரணமாக குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் அன்றாட பூசைகளும், விழாக்களும் நியமம் தவறாது சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தமது பல்கலைக்கழக பாட நெறிகளை ஒழுங்கு தவறாது பின்பற்றி வருவதுடன், மாணவர்கள் ஆலயத்தை நிருவகிப்பதிலும் தமது நேரத்தை ஒதுக்கி பணி புரிவதிலும் அளப்பரிய பங்களிப்புச் செய்து வருவது பராட்டுக்குரியது.

மாணவர்கள் தாமாகவே முன்வந்து ஆலயப் பணிகளை மனமுவந்து செய்து வருவதுடன் புதிய மாணவர்களையும் அதிலே ஈடுபடச் செய்ய சந்தர்ப்பங்களை வழங்கி வருவதும் போற்றுதற்குரியது. நாட்டின் இன்றைய சூழ்நிலையில் தருமம் வலுக்குன்றி வருவது வேதனைக்குரியது. இதனால் நீதி, நேர்மை, நியாயம், மனித உரிமை என்பவை முற்றாகவே அழிவடையும் அபாயம் தோன்றியுள்ளது. இந்நிலைமையிலும் நாம் எமது உயர்வான சமயக்கோட்பாடுகளை அனுசரித்து வாழவேண்டியது இன்றியமையாததது.

இத்தருணத்திலும் இந்து சமயத்தின் மேன்மைகளைப் பரப்பி நிலைநாட்டவும், வேதநெறி தழைத்தோங்கவும் இந்து மாணவர் சங்கத்தினர் ஆக்கங்களைத் தொகுத்து "இந்து தருமம்" என்ற நூலாக வெளியிடுவது மகிழ்ச்சி தருகின்றது. எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனின் அருள் பரப்பும் இந்து தருமம் இதழை சகல மாணவ மணிகளும் படித்து, உணர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நற்கதி பெற வாழ்த்துகின்றேன்.

*"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"*

**வைத்திய கலாநிதி. தி. ஆனந்த மூர்த்தி**
**பெருந்தலைவர்,**
**இந்து மாணவர் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக் கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்து இலக்கிய வரலாற்றின் புதிய தடயங்கள் இன்று பெரும்பாலும் இதழ்களின் மூலமே கட்டமைக்கப்படுகின்றது. இவை வார இதழ்கள், மாத இதழ்கள், காலாண்டு இதழ்கள், அரையாண்டு இதழ்கள், ஆண்டு இதழ்கள் எனக் கால இடைவெளிகளுக்கேற்ப வெளிவருவதுண்டு. பல்வேறு கருத்தாடல்களுக்கான புதிய வாயில்களை இவை திறக்கின்றன. ஈழத்தின் இதழியல் வரலாற்றுக்கும், அறிவு வளர்ச்சிக்கும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளிவரும் இதழ்களும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகின்றன. புலமைத்துவம் சார் கட்டுரைகளைத் தாங்கி அவை தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு தொடர்ச்சியாக ஆண்டுக்கொருமுறை வெளிவரும் இதழ்களில் ஒன்றாகப் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் "இந்து தருமம்" என்ற இந்த இதழும் அமைந்து காணப்படுகின்றது. சமயக் கருத்துக்களை சமூகவியற் பின்புலத்திலும் அழகியற் பின்புலத்திலும் அணுகும் ஆக்கங்களை இது தாங்கி வருகின்றது. இந்த ஆண்டில் மலரும் இந்த இதழும் அவ்வாறு கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமது கற்றல் கடமைகளின் மத்தியிலும் குறிஞ்சிக்குமரன் கோவிலின் நாளாந்த செயற்பாடுகளில் தம்மை அர்ப்பணித்து வரும் எமது இந்து மாணவர் சங்கத்தினரின் அர்ப்பணிப்பைப் பாராட்டாமல் இருந்துவிட முடியாது. அவர்களின் அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக வெளிவரும் இவ்விதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பூரிப்படைகின்றேன்.

*"என் கடன் பணி செய்து கிடப்பதே"*

"எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் அருள் பாலிப்பாராக"

**வடிவேல் முருகன் தர்மதாசன்**
**பெரும்பொருளாளர்,**
**இந்து மாணவர் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**

**முகாமைக் கல்வித்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ கணக்காய்வாளரின் வாழ்த்துரை

*"தென்னாடுடைய சிவனே போற்றி*
*எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி"*

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களை அறிவு ரீதியாக மட்டுமின்றி, ஆன்மீக ரீதியாகவும் உருவாக்குவதில் குறிஞ்சிக் குமரன் கோயிலுக்கும் முக்கிய இடம் உண்டு.

இன்றைய நாட்டுச் சூழலில் ஆன்மீக அறிவு இளைஞர்கள் மத்தியில் பெருகினால் மட்டுமே சமாதானம் நிறைந்த வாழ்வை சுவாசிக்க முடியும். அம்முயற்சியில் மாணவர்களை இணைத்து வழிப்படுத்துவதே இந்து மாணவர் சங்கம் செய்யும் பெரும் பணியாகும். மேலும் கோயிலை நிருவகிப்பது, அங்கு நடைபெறும் பூசைகள், திருவிழாக்கள் என்பவற்றை கொண்டாடுதல் போன்ற பணிகள் இச்சங்கத்தினால் ஆற்றப்படுகின்றன.

அறிவு செறிந்த ஆக்கங்களோடு ஆன்மீகக் கருத்துக்களையும் தாங்கி வெளிவரும் "இந்து தருமம்" எனும் இதழ் இவ்வருடமும் வெளிவருவதையிட்டு பெரும்மகிழ்ச்சியடைவதோடு இவ்விதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையும் அடைகின்றேன். இச்சங்கத்தின் பணிகள் மென்மேலும் வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*கலாநிதி வே. சிவகுமார்*
பௌதீகவியற்றுறை
விஞ்ஞான பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழுத்தலைவரின் ஆசியுரை

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமர்ந்து அருளாட்சி செய்யும் குறிஞ்சிக் குமரன் ஆலயப் பணிகள் சிறப்புற அமைய இந்து மாணவர்கள் செய்யும் தொண்டுகள் அளப்பரியன. இச்சங்கத்தின் பணிகளுக்கு மகுடம் சூட்டுவது போல் *'இந்து தருமம்'* நூல் வெளியீடு அமைந்துள்ளது. வருடந்தோறும் வெளியிடப்படும் இந்நூல் இக்கட்டான இச்சூழ்நிலையில் இவ்வருடமும் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் சமயப் பெரியோர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவது குறித்து, எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் பெரும்மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த வருடம் போன்று இவ்வருடமும் இந்து மாணவர் சங்கம் பொறுப்பாண்மைக் குழுவுடன் இணைந்து குறிஞ்சிக் குமரன் ஆலய வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றி வந்துள்ளமை குறித்தும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக நித்திய, நைமித்திய பூசைகளில் ஆலய பிரதம குருவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குதல், ஆலயத்தினையும் அதன் சுற்றுப் புறத்தினையும் சுத்தமாக வைத்திருத்தல், ஆலய உட்புறத்தில் தேவையான திருத்த வேலைகளைச் செய்தல், ஆலயம் தொடர்பான தீர்வு காணப்பட வேண்டிய விடயங்கள் குறித்து பொறுப்பாண்மைக் குழுவின் கவனத்தில் கொண்டு வந்து அவற்றிற்குத் தீர்வு காண உதவுதல் போன்ற செயற்பாடுகள் இவ்வருடமும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வருடமும் *'இந்து தருமம்'* மலர் மகிமையும் பொலிவும் நிறைந்து வெளிவரவும், இம்மன்றத்தின் பணிகள் மேலும் மேன்மையுற்றுத் திகழவும் வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் செ. சிவயோகநாதன்**
**தலைவர்**
**பொறுப்பாண்மைக் குழு,**
**குறிஞ்சிக்குமரன் ஆலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பட்டதாரிகள் சங்கத் தலைவரின் வாழ்த்துரை

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினர், தமது வருடாந்த சஞ்சிகையான இந்து தருமத்தை இம்முறையும் வெளிக்கொணருவதையிட்டு மகிழ்வடைதுடன் , அதற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் ஆனந்தம் கொள்கின்றேன்.

இந்து மாணவர் சங்கம் என்பது வெறுமனே இந்து மாணவரை ஒன்று சேர்த்து சமய விழாக்களைக் கொண்டாடும் அமைப்பு மட்டுமல்ல, அது பல்கலைக்கழக வளாகத்துள் அமைந்து அருள்பாலிக்கும் குறிஞ்சிக்குமரன் ஆலயப் பணிகளுடனும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இயங்கும் அமைப்பாகும். இந்தச் சங்கத்தின், துடிப்பும் அர்ப்பணிப்பும் மிக்க இளைஞர்களின் கூட்டுப்பணி மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும். குறிஞ்சிக்குமரன் ஆலய பொறுப்பாண்மைக் குழு, இந்துப் பட்டதாரிகள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து கோயில் கைங்கரியங்களில் ஈடுபடும் அதேவேளை, மாணவர் நலன்புரிப் பணிகளிலும் ஈடுபடுவது பாராட்டுக்குரியது.

பேராதனைப் பல்கலைக்கழகம் என்பது இன்று தேசிய அந்தஸ்த்துடைய பல்கலைக்கழகமாக விளங்குகின்றது. பல்லின பண்பாட்டுச் சூழல் கொண்ட ஒரு கேந்திரமாகவும் விளங்குகின்றது. இங்கு உயர்கல்வி கற்கும் மாணவர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுடன் மாத்திரமின்றி தமது தனித்த அடையாளங்களையும் பேணவேண்டிய சூழலில் உள்ளனர். இந்த வகையில் இங்கு இயங்கும் தமிழ்ச் சங்கமும் இந்து மாணவர் சங்கமும் குறிஞ்சிக்குமரன் கோயிலினதும், தமிழ் மாணவர்களினதும் தனித்துவ அடையாளத்துடனான பண்பாட்டுப் பேணுகைக்கான களங்களாக உள்ளன. அவற்றினூடாக அவர்கள் தமது ஆத்மீக, உலகியல் சார்ந்த ஆளுமைப் புலங்களை வெளிக்கொணருவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அவ்வாறானதொரு பின்னணியிலே தான் இந்து தருமத்தின் வருகையை நோக்க வேண்டியுள்ளது. இது சங்க ஏடு மட்டுமல்ல வரலாற்று ஆவணமும் கூட. இவ்வாறான செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இது காலத்தினால் செய்த செயலுமாகும்.

இந்து பட்டதாரிகள் மன்றம் என்பது குறிஞ்சிக்குமரன் ஆலயப்பணிகளையும் பராமரிப்பையும் முன்னிறுத்திய அமைப்புக்களுள் ஒன்று என்ற வகையில், இந்து தருமம் தொடர்ந்து வெளிவர ஆலயப் பணிகள் சிறக்க எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் அருள்பாலிப்பார் என்று இறைஞ்சி எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

*கலாநிதி. வ. மகேஸ்வரன்*
**தலைவர்,**
**இந்துப்பட்டதாரிகள் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துரை

ஈழத்தில் முருக வழிபாட்டில் மிகவும் சிறப்பான ஆலயமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் குறிஞ்சிக் குமரன் ஆலயம் விளங்கி வருகின்றது என்பது உலகறிந்த உண்மை. குறிஞ்சிக் குமரனின் அருளினால் எமது சங்கத்தின் செயற்பாடுகளை இக்கோயிலுக்கு அர்ப்பணிப்பதையிட்டு பெரும்மகிழ்ச்சியடைகின்றோம்.

வழமை போன்று இவ்வருடமும் "இந்து தருமம்" எனும் நூல் வெளிவருவதையிட்டு பெரும்மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றோம்.

எமது செயற்பாடுகள் வெற்றியடைய பெரும் உதவி புரிந்த ஆலயப் பிரதமகுரு, பெருந்தலைவர், பெரும் பொருளாளர். கௌரவ கணக்காய்வாளர், பொறுப் பாண்மைக் குழு உறுப்பினர்கள், இந்துப்பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

*எஸ் மோகனஜீவ்*
*(பொறியியற் பீடம்)*
தலைவர்,
இந்து மாணவர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வழிபாடு



**சிவம் திவாகரன்,**
மூன்றாம் வருடம், பொறியியல் பீடம்

*"பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிற்கின்ற பரிபூரானந்தமே"*
*"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது"*

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் 'இறு' என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம், அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியுள்ளவன் இறைவன். உடம்பிலே உயிரும், உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. எல்லாப் பொருள்களையும், எல்லா உயிர்களையும் இயக்குகின்றதனால், *'பரம் பொருள் இயவுள்'* எனப் பெயர் பெற்றது. *"பெரும் பொருள் இயவுள்"* என்பார் நக்கீரர். எல்லாவற்றையும் கடவுவதனால், கடவுள் எனவும் பெயர் பெற்றது.

ஒரு மருத்துவமனையில் மருத்துவர் தங்கியிருப்பதன் நோக்கம், அம்மருத்துவனையில் இருக்கும் பிணியாளர்களின் பிணிகளைப் போக்குவதேயாகும். அது போல் இறைவன் எல்லா உயிர்களிலும் தங்கயிருந்து அவ்வுயிர்களின் பிறவிப் பிணியை போக்குகின்றனன். பாலில் நெய் மறைந்திருப்பதுபோல், பிற இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணெய் உருண்டு திரண்டு வெளிப்பட்டிருப்பதுபோல், ஞானிகள் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்றான். மற்ற இடங்களில் இறைவனை நாம் நினைந்து தியானிப்பதனாலும், வழிபடுவதினாலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெந்து கரிந்து நீறாகி விடுகின்றன. கொடிய வெயிலில் ஒரு துணியை வைத்தால், அத்துணி வெதும்புமேயன்றி வெந்து சாம்பலாகாது. சூரிய காந்தக் கண்ணாடியை வெயிலில் துணியை வைத்தவுடனே அத்துணி சாம்பலாகிவிடுகின்றது. நேர் வெயிலுக்கு இல்லாத ஆற்றல், சூரிய காந்தக் கண்ணாடிக்கு உண்டு. பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன் கீழே பாய்ச்சுகின்றது சூரியகாந்தக் கண்ணாடி. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது, வெயிலில் வைப்பது போலாகும். திருக்கோயிலில் இறைவனை வழிபடுவது, சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வைப்பது போலாகும். ஆதலால், திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததாகும்.

திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப் பெற்ற காரணத்தால் அவை மேன்மை பெற்று, வழிபடுவோருடைய வல்வினைகளையகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள்புரிகின்றன. பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியிடி மூலமாகவே அதனைப் பெறுவதுபோல், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளை திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் மூலமாக நாம் பெறுதல் வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பதுபோல், இறைவழிபாட்டுக்கு பூவும், நீரும் வேண்டப்படுகின்றன. எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எழிதாகக் கிடைக்கக் கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆச்சாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

கோயில்கள் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில். இந்த உடம்பு அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ் ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற பஞ்ச கோசங்களுடையது.

நமது சரீரத்தில் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கோயிலில் உள்ள யாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், நிருத்த மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் என்ற மண்டபங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கின்றன. எனவே, திருக்கோயிலில் சென்று இறைவனை வழிபட்டு அங்கே கண்ட பரம்பொருளை நம் உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெற வேண்டும்.

திருக்கோயில்களில் காட்சியளிக்கின்ற துவார பாலகர்களில் ஒருவர் ஆள்காட்டி நிற்பது, உள்ளே வழிபடச் செல்பவர்களுக்கு கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகின்றது. மற்றொரு துவார பாலகர் கையை விரித்துக் காட்டுவது, கடவுள் ஒன்றைத்தவிர வேறொன்றுமில்லை என்பதை உணர்த்துகின்றது. தெய்வ வழிபாடு செய்வோர் தெய்வ பேதம், மூர்த்தி பேதம், குறித்து மாறுபட்டு மலையாது, நிலையாய அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபட வேண்டும்.

ஒரு காகிதத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல, தெய்வத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று தட்பம், மற்றொன்று வெப்பம், வெப்பமும் தட்பமும் சமமாக இருந்தால் தான், மலர் மலராகக் காட்சியளிக்கும். வெப்பம் மிகுந்தால் மலர் வாடும், தட்பம் மிகுந்தால் மலர் அழுகும். உலகுக்கு தட்பமும், வெப்பமும் மிக மிக இன்றியமையாதவை. வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுண்மை திருமால். வெப்பத்தின் நிறம் சிவப்பு. தட்பத்தின் நிறம் பச்சை. சிவமூர்த்தி பவளம் போல் மேனியன், திருமால் பச்சை மா மலை போல் மேனியன். சிவம் அனல் ஏந்தி விளையாடுகின்றது. திருமால் ஆழியிடைத் துயில்கின்றார். அதனால்தான் சிவா லயத்தில் வெந்த நீற்றையும், விஷ்ணு கோயிலில் தீர்த்த பிரசாதத்தையும் வழங்குகின்றனர்.

நம்மிடைப் பலருக்கும் இறைவனை ஏன் வணங்க வேண்டும்? வணங்காவிடில் என்ன? மனித வாழ்வில் இறையுணர்ச்சி இல்லாமல் வாழ முடியாதா? நாம் வணங்காவிடில் கடவுளுக்கு என்ன நஷ்டம்? என்ற வினாக்கள் உள்ளுணர்வில் எழுவது இயல்பு. இவைகளுக்கு விடை காண முயல்வது முறை.

விலங்குகளும் உண்ணுகின்றன, உலாவு கின்றன, வம்சத்தை வளர்க்கின்றன. மனிதர் களாகிய நாமும் உண்ணுகின்றோம், உறங்கு கின்றோம், மக்களைப் பெறுகின்றோம். இரை மனிதருக்கும், விலங்குகளுக்கும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றது. விலங்குகளின்றும் மனிதன் உயர்ந்து காட்சியளிப்பது தெய்வ உணர்ச்சி ஒன்றிலேயே தான்.

ஒரு கானகத்தில் விலங்கு மாநில மாநாடு கூடிற்று. அதில் தலைமை தாங்கிய சிங்கம் *''விலங்குத் தோழர்களே! உயிர் வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மனிதர்கள் ஆடைக்கு, அதிகம் செலவழிப்பது அறிவின்மையாகும். அது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது''* என்று கூறிற்று. இதுபோல் மனித வாழ்க்கைக்குக் கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கடவுளை வணங்காமல் வாழவில்லையா? என்று சிலர் வினவுவார்கள். மானம் உள்ளவன் ஆடை உடுத்துவான். மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்.

கருணை வடிவமாகிய இறைவன், உயிர்கள் மீதுள்ள இரக்கத்தினால் இந்த உடம்பை வழங்கினான். அவன் தந்த இந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும். இன்றேல் கடமையை மறந்த மடைமையாகும். காவிரியில் ஒருவன் நீராடுவது காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று. தன் உடம்பில் உள்ள வெப்பம் தணியும் பொருட்டுக் காவிரியில் நீராடுகின்றான். அதுபோல் அருட் கடலாயிருக்கின்ற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

கோயிலில் வழிபடுவோர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமய சின்னங்கள் தரித்து அன்புடனும், ஆசாரத்துடனும் கோயிலுக்கு செல்லுதல் வேண்டும். கொடிமரத்திற்கு வெளியே விழுந்து வணங்குதல் வேண்டும். உள் பிரகாரங்களில் விழுந்து வணங்குதல் குற்றம். விநாயகரை ஒரு முறையும், சிவமூர்த்தியை மூன்று முறையும், அம்பிகையை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

கோயிலில் ஒருமைப்பட்ட மனதுடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண் வார்த்தைகள் பேசுவதும், எச்சில் துப்புதலும், பிற தீமைகள் செய்தலுங் கூடா. அர்ச்சகர் தரும் விபூதி, பிரசாதங்களை பயபக்தியுடன் இரு கரங்களாலும் ஏந்திப் பெறுதல் வேண்டும். பெற்ற பிரசாதத்தை கீழே சிந்துதலும், ஒரு புறத்தில் எறிதலும் பெரும் பாவமாகும். சண்டேசுவரர் மீது நூல் இடுவதும், சிவலிங்கத்திற்கும் நந்தி தேவருக்கும் இடையே போவதும் மிகக் குற்றமாகும். கோயில் பிரசாதங்களை உண்டு கோயில் தூண்களில் துடைப்பது அனுசிதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனி இழையை எழிதில் அறுத்து விடலாம். பல இழைகள் ஒன்றுபட்டுத் திரித்த கயிறு (வடம்) தேரை இழுத்து விடும். அதுபோல, பல அன்பர்கள் வாரத்திற்கொரு நாள் கோயிலில் ஒன்றுபட்டுக் கூட்டு வழிபாடு செய்தால் திருவருளை ஈர்த்து விடலாம். அன்பர்கள் காதலாகிக் கசிந்து கடவுளை வழிபட்டு இகபரநலன்களை எளிதில் பெறுதல் வேண்டும்.

## தீபாராதனை

ஆலயங்களில் பலவிதமான தீபங்களைக் கொண்டு பூஜை காலங்களில் ஆராத்தி ஆராதனை செய்கின்றார்கள். ஒளி வடிவில் அஞ்ஞான இருள் அகல இத்தீபங்கள் காட்டப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| அடுக்குத் தீபம் | – | பஞ்சபூத பிரதி பலிப்புக்கள் |
| கும்ப தீபம் | – | பூரணத்துவ தத்துவத்தை |
| வில்வ தீபம் | – | ஆணவம் கன்மம் மாயை அகல |
| நாக தீபம் | – | சந்ததி விருத்தி தருவதற்கு |
| நட்சத்திர தீபம் | – | ஆரோக்கியம் தருவதையும் |
| கும்ப தீபத் தட்டுக்கள் | – | ஈசனின் ஐந்து முகங்களையும் |
| தீபங்கள் (ஒற்றைத் தீபம்) | – | யாவும் ஒன்றே என்ற தத்துவத்தை |
| மகா கற்பூரம் | – | எங்கும் நீக்கமற நிறைந்து ஒரு முகமாக அடியாருக்கு அருள்தனையும் |

இதே போன்று ஒவ்வொரு தீபமும் ஒவ்வொரு அருள் சக்தியைத் தெரிவிக்கன்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் என்பதன் பொருள்



கார்த்திகா திருநாவுக்கரசு,
பல்மருத்துவ பீடம்.

சைவம் என்பது சிவசம்பந்தம் உடையது. சிவம் என்பது நன்மை, செம்மை, பெருமை, மேன்மை, இன்மை என்றெல்லாம் பொருள் தரும். சிவத்தை உடையவனும், சிவத்தை தருபவனும், சிவமயமானவனும் சிவன் என்று அழைக்கப் படுகின்றான். அதாவது

*"தன்னிலமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி*
*பின்னமிலான் எங்கள் பிரான்"*

என திருவருட்பயன் எனும் நூலிலே உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுவது போல சிவன் இன்பமயமானவன், அன்புமயமானவன், பிறப்பு இறப்பு அற்றவன். மனிதன் பிறக்கிறான், வாழ்கிறான், இறக்கிறான். இவ்வுலகில் வாழுங் காலத்தில் பலவற்றையும் நினைக்கிறான். அவை நினைத்தவாறு நிறைவேறாத போது துன்பப் படுகிறான். பிறவிக்கு காரணம் பற்று. ஆசைக்கு காரணமாக அமைவது பற்று. ஆசை அற்ற இடத்தில் பிறவி அற்று விடுகிறது. இதன் விளக் கமாக திருவள்ளுவரும்

*"பற்றுக பற்றற்றான் பற்றினை*
*அப்பற்றை பற்றுக பற்று விடற்கு"*

எனக்குறிப்பிடுகிறார்.

சிவபெருமான் பற்றற்றவர். விருப்பு வெறுப்பு அற்றவர். அவரது பாதங்களை நாடி மனிதன் மற்றய பற்றுக்களிலிருந்தும் விடுதலை பெறுவது சுலபமாகிறது. அதுவே விடுதலை பெறுவதற்கு வழி, அதுவே முத்திக்கு வித்து என சைவம் எடுத்துக்கூறுகின்றது.

பிறப்பு, இறப்பு அற்றவன் இறைவன். அதேவிதமாக பிறப்பு இறப்பு அற்ற நிலையடைவதே பிறவி எடுத்ததன் பெரும் பயன் என குறிப்பிடுவது சைவம். பிறப்பு இறப்பு அற்ற நிலையை மனிதருக்கு அருளிச்செய்யும் ஆற்றலுடையவன் சிவன். சிவனை வழிபடுபவன் பிறவிப்பெருங்கடலை நீந்தி கரை சேர்வான். இறைவனை வழிபட்டவர்கள் நன்மை பெறுகிறார்கள். வழிபடாதவர்கள் நன்மை பெறமாட்டார்கள். வழிபாடு செய்தவர்கள் மீது விருப்போ, வழிபடாதவர்கள் மீது வெறுப்போ இல்லாதவனது பெயர் சங்கரன். சங்கரன் என்பது சிவனைக் குறிக்கும். எனவே நன்மை பெறுவதற்கும், மேன்மை பெறுவதற்கும், இன்பம் அடைவதற்கும் வழிபட வேண்டியவன் சிவன் என சைவம் வலியுறுத்துகின்றது. சைவநெறி அன்பு நெறி. சைவசமயம் அன்புக்கு முக்கியத்தவம் கொடுக்கிறது. இச்சமயம் கொல்லாமையை யாவரும் கடைபிடிக்க வேண்டும் என்று விதந்தோதுன்றது. வள்ளுவன் கொல்லாமை எனும் அதிகாரத்தில்

*"கொல்லான் புலானை மறுத்தானை*
*கைகூப்பி எல்லா உயிரும் தொழும்"*

எனக்கூறுவதிலிருந்து கொல்லாமை எவ்வ ளவு தூரம் ஒவ்வொருவராலும் கைக்கொள்ளப்பட வேண்டியது என்பது புலப்படும். இதுவே சைவ சமயத்தின் அடிப்படை. இறைவன் எல்லா உயிரின ங்களுக்கும் பொதுவானவன். எல்லா உயிர்களி னுள்ளும் உள்நின்று இயக்குபவன் என சைவசமயம் கூறுகின்றது.

சிவனை அன்புமயமாகக் கண்ட நெறி சைவ நெறி என்பதனை திருமூலர் தமது பாடலில் விளக்கும் போது,

*"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்*
*அன்பே சிவமாவதாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"*

எனக் கூறுகிறார்.

அன்பு வேறு சிவம் வேறு எனக் கருதுவோர் அறிவு சிறிதும் இல்லாதவர்களே என அறுதியிட்டுக் கூறியுள்ளதை அவதானிக்கலாம். இறைவனை இன்ப மயமானவனாகவும் அன்பு மயமானவனாகவும் உணர்ந்த பெரியோர்கள், தபோதனர்கள், நாயன்மார்கள் அன்பினை சைவ நெறியாக தமது பாடலினூடே புகட்டியுள்ளார்கள். இதன்மூலம் சைவத்தின் அருமையினையும், பெருமையினையும் நாம் உய்த்து உணர்ந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்



*பிரதீபா இராமசாமி,*
*பல்மருத்துவ பீடம்.*

காயத்திரி மந்திரம் ஓர் அரிய பொக்கிஷம். சகல ஆற்றல்களையும், சித்திகளையும் எமது வாழ்க்கையில் அளிக்கவல்ல ஒரு தெய்வீக மந்திரம்.

வேத உபநிடத நூல்களாலும், தெய்வீக அவதார புருசராகிய பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா, மற்றும் பெரிய மகான்களாகிய இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ஆதிசங்கராச்சாரியார் போன்ற மகான்களாலும் சிறப்பாக புகழப்படும் இம்மந்திரம் நல்ல சிறந்த நன்மைகளையும், வெற்றிகளையும் தரவல்ல தெய்வீக மந்திரமாகும்.

இம்மந்திரத்தை உச்சரிப்பதால் தெய்வீக பலம் நமக்கும் கிடைக்கிறது. இக்காயத்திரி மந்திரத்தை நாம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து உச்சரித்து வருவோமானால் நாம் எல்லோரும் எமது வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களையும், திடமான மனம், இடைவிடாத இறைசிந்தனை, விடாமுயற்சி, சோம்பலின்மை, கல்வியில் நல்ல ஊக்கம், சகல ஜீவராசிகளிலும் அன்பு வைக்கும் தன்மை, செந்தழிப்பான வாழ்க்கை, துணிவு, நோயின்மை, ஆயுட்பலம், பெற்றோர் பெரியோரின் ஆசீர்வாதம் எல்லாம் எமக்கு நிச்சயம் கிடைக்கும் என்று பவான் ஸ்ரீசத்யசாயி பாபா அவர்கள் ஆணித்தரமாக தமது போதனைகளில் கூறியுள்ளார். அத்துடன் எம்மிடையேயுள்ள பகைமையுணர்வுகள், கோபவுணர்வுகள், பழிவாங்கும் உணர்வுகள் எல்லாம் எம்மை விட்டகன்று விடுகின்றன என்றும் பாபா கூறியுள்ளார்.

காயத்திரி மந்திரத்தை உச்சரிக்க முன் கீழ்க்கண்ட காயத்திரி வணக்கத்தை ஒருமுறை சொல்லி வணங்கிவிட்டு அந்த நாளில் எந்நேரமும் காயத்திரி மந்திரத்தை சொல்லலாம்.

### காயத்திரி வணக்கம்.

*"ஓம் காயத்திரியாயை நமஹ*
*ஓம் சர்வரோக நிவாரணி காயத்திரியாயை நமஹ*
*ஓம் சர்வ துக்கபரிகாரிணி காயத்திரியாயை நமஹ*
*ஓம் சர்வ மனோவாஞ்ஜா பலஸ்ரி காயத்திரியாயை நமஹ"*

கருத்து:- காயத்திரி மாதாவே! சகல நோய் களையும் நீக்கும் தெய்வமே! சகல துக்கங்களையும், துன்பங்களையும் நீக்கும் தெய்வமே! சகல நல்ல விருப்பங்களையும் நிறைவேற்றும் தெய்வமே உங்களுக்கு வணக்கம்.

### காயத்திரி மந்திரம்

*"ஓம் பூர் புவஸ் வஹ*
*தத் ஸவிதுர் வரேண்யம்*
*பர்கோ தேவஸ்ய தீமஹி*
*தியோ யோ ந பீரசோதயாத்"*

கருத்து :- ஓம் மாதாவே! முக்காலம், மூவுலகம், முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே! எனது புத்தியை கூர்மைடையச்செய்து சூரியப் பிரகாசம் எல்லா இருளையும் அகற்றி உதவுவது போல், எனது சகல அறியாமைகளையும் அகற்றி, எனது புத்தியை சாந்தசித்த நிர்மலமானதாக பிரகாசிக்க செய்யும்படி யான் உன்னை துதிக்கிறேன்.

காயத்திரி மந்திரமானது *'விசுவாமித்திர முனிவரால்'* கண்டுபிடிக்கப்பட்டது. இம்மந்திரம் இருக்கு வேதங்களிலும், உபநிடதங்களிலும் காணப்படுகிறது. காயத்திரி வேதங்களின் மாதா, காயத்திரியே சந்தாசம் மாதா.

மனத்தூய்மை, உடற்தூய்மை இரண்டையும் கடைப்பிடித்தே இம்மந்திரத்தை ஓத வேண்டுமெனப் பகவான் ஸ்ரீசத்யசாயி பாபா போதிக்கிறார். அவர் தனது போதனைகள் மூலம் காயத்திரி மந்திரத்தை எந்த நேரமும், எப்பொழுதும் உடற்தூய்மை, உளத்தூய்மையுடன் கூறலாம் எனக் கூறியுள்ளார்.

வாகனங்களில் பயணம் செய்யும் போதும், இம்மந்திரத்தை கூறிக்கொள்ளலாம். அதனால் எவ்வித ஆபத்துகளிலிருந்தும் எம்மை காத்துக் கொள்ளலாம் என பாபா கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா மேலும் காயத்திரி மந்திரத்தை உச்சரிப்பவர்கள் எதனை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென பின்வருமாறு கூறியுள்ளார்.

1. உண்மை, நேர்மை, நீதி கடமையைச் செயற்படுத்த வேண்டும்.

2. எண்ணத்திலும், சொல்லிலும், தூய்மையும், இசைவும் வேண்டும்.

3. எப்பொழுதும் உதவி செய்யும் மனப்பான்மையும், யாரையும் புண்படுத்தாமை ஆகிய மனப்பான்மையும் இருக்க வேண்டும்.

4. நல்ல சேவை மனப்பான்மையுடன் எல்லா செயற்பாடுகளையும், பலாபலன்களையும் இறைவனுக்கே அர்ப்பணித்தல் வேண்டும்.

ஆகவே பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவும், மற்றும் பெரிய மகான்களும் இருக்கு வேத உபநிடதங்களும் போதித்த போதனையின் படி நாம் காயத்திரி மந்திரத்தை தினமும் உச்சரித்து காயத்திரி மாதாவை வழிபட்டு வந்தால் எமது வாழ்க்கை சிறப்பாகவும் சந்தோசமாகவும் அமையும் என்பது சர்வ நிச்சயம்.

## பூஜையில் செய்யப்படும் 16 வகை உபசாரங்கள

1. தியானம்
2. ஆசனம்
3. ஆசமனம்
4. வஸ்திரம்
5. அலங்காரம்
6. புஸ்பம்
7. நிவேதனம்
8. வலம்வரல்
9. ஆவாகனம்
10. அர்க்யம்
11. அபிஷேகம்
12. சந்தணம்
13. தூபதீபம்
14. அர்ச்சனை
15. ஆரத்தி
16. பிழை பொறுக்க வேண்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் காட்டிய பெண்மை



*மகியினி பாலச்சந்திரன்,*
*மெய்யியல்துறை, கலைப்பீடம்.*

செந்தமிழின் தீஞ்சுவையும் பக்திப் பிரவாகத்தில் இன்சுவையும் மங்கை நல்லாளின் வாழ்க்கைச் செழுமையும் சமய வரலாறுகள் ஒவ்வொன்றுடனும் சேர்ந்து மிளிர்கின்றன. சைவம் சிவசம்பந்தமுடையது. சிவம் அன்பு மயமானது. எனவே அன்பு நெறியே சைவநெறி. எல்லாச் சமயங் களையும் தன்னுள் அடக்கி அவற்றுள் அடங்காப் பெரு நெறிகளையும் தமதாக்கிப் பரந்து பெரு நோக்குடன் விளங்குவது சைவசமயம். இத்தகைய சமயத்தின் பணிகளில் ஆண்களோடு பெண்களும் சமபங்கெடுத்துப் பணிபுரிந்துள்ளனர் என்பதை எமது சமய வரலாறு காட்டுகின்றது. பெண்மையின் சக்தியைக் காட்டுவதற்காகவே இறைவன் மாதொரு பாகனாய் விளங்குகின்றான். சைவத்தமிழ் பெண் மணிகள் சமயவளர்ச்சியிலும் குடும்பநலன் பேணுவதிலும் கணவனைத் தெய்வமாக மதித்தலிலும் விருந்தோம்பல் பண்பினிலும் எந்தளவிற்கு முன்னிற்கிறார்கள் என்பதை சேக்கிழாரது பெரியபுராணம் மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறு கூறும் பெரியபுராணத்தில் இருபத்தெட்டு மகளிர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. நாயன்மார்களின் மனைவியராக இருபத்தொரு பேரும், தாயார் என்ற முறையில் நான்கு பேரும், மகள் என்ற முறையில் இருவரும், உடன்பிறந்த சகோதரி என்ற முறையில் ஒருவருமாக இவர்கள் தெரிய வருகின்றனர். இவர்களில் மூவர் மட்டுமே நாயன்மார்களாக வழிபடும் அருட்பேற்றையும், பெருமையையும் கொண்டனர். இசைஞானியாரும், மங்கையர்க்கரசியாரும் நாயன்மார்களாகக் கூறப்படுவதுடன் காரைக்காலம்மையாரையும் சேர்த்து சேக்கிழார் பெண் நாயன்மார் மூவரை பெரிய புராணத்தில் காட்டுகின்றார். மேலும், திலகவதியாரின் வரலாறு நாவுக்கரசர் புராணத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. சமயம், சமுதாயம் இவற்றிற்கு தீங்கு ஏற்பட்ட பொழுது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தீங்கினைக் களைந்ததை மங்கையற்கரசியார், திலகவதியார், காரைக்காலம்மையார் ஆகியோரின் செயல்களில் இருந்து அறியமுடிகின்றது. பக்தித்துறையில் முக்திப் பேறு பெண்களுக்குக் கிடையாதென்று மறுக்கப்பட்ட காலகட்டத்தில், இறைவனே அவர்களுக்குக் காட்சி தந்து முக்திப் பேறருளியதோடு யாவரும் காணும்படி செய்த பெருமையைச் சேக்கிழார் காட்டுகிறார். பெண்மையை தெய்வநிலைக்கு உயர்த்தியதற்கு இம்மகளிரின் வாழ்வு சான்றாகிறது.

பெரியபுராணத்தில் உயர்ந்த பெண்மைக்குச் சிறந்த இடம் அளிக்கப்படுகிறது. பெண்களைக் கற்புக்கரசிகள் ஆகவும், இல்லக்கிளத்திகளாகவும் போற்றப்படும் இடங்கள் பல. முதலில் காரைக்காலம்மையாரது வரலாற்றையும் அடுத்து திலகவதியார், மங்கையர்க்கரசியார் என்போரின் சிறப்புப் பற்றியும், இங்கு சற்று விரிவாக நோக்குவது பொருத்தமானதே!

நாயன்மார்களுக்கு முன்பு பக்தி இலக்கியத்தைச் சைவ உலகிற்கு வழங்கிய பெருமை காரைக்காலம்மையாருக்கே உண்டு. இதனால் இவருடைய பதிகங்கள் '*மூத்ததிருப்பதிகம்*' எனப்பட்டன. கன்னியர்கள் தமக்குக் கிடைக்கப்பெறும் கணவன்மார் சிவதொண்டராகவே அமையவேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர். ஏனென்றால் பக்தியனுபவம் கணவனுக்கும் மனைவிக்கும் ஒன்றாக அமையாத விடத்துத் திருப்தியாக இல்லற தர்மம் அமையாது. இதற்கு எடுத்துக்காட்டாக காரைக்காலம்மையார் வாழ்வமைகின்றது. ஆனால் காரைக்காலம்மையாரது திருமண வாழ்வு சிறப்பாக அமையவில்லை. அம்மையாரின் தெய்வத்தன்மையைக் கண்ட கணவன் அம்மையாரோடு இல்லறம் நடத்த அஞ்சி, அம்மையை விட்டகன்று வேற்றூரில் வேறுதிருமணம் செய்தும், தன் மனைவியோடு வந்து அம்மையை வணங்கினார். இதனால் கணவனாலேயே தெய்வம் எனப் போற்றப்படும் பெருநிலையும் இவருக்கு ஏற்பட்டது. சிவனறிவு ஒன்றே கைவரப் பெற்றவராய் உற்பவித்து எழுந்த ஞானத்தால் அற்புதத் திருவந்தாதியைப் பாடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் தன்னைவிட்டு நீங்கிய நிலையில் சிவநெறியில் ஊன்றி நின்று தமது உடலழகு அலங்காரம் அனைத்தையும் உதறித்தள்ளிவிட்டு இறை வனிடமே பேய்வடிவை வேண்டிப்பெறுகிறார். இதனை பெரியபுராணத்தில் சேக்கிழார் அழகாகக் கூறுவார்.

*"ஈங்கிவள் குறித்த கொள்கை இதுஎ இனி இவனுக்காக*
*தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங்குன்பால்*
*ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்கு*
*பாங்குற வேண்டும் என்று பரமன் தாள்பரவி நின்றார்"*

இறையருள் வழிநின்று எலும்பும் தோலு மாகிய பேய்வடிவு கொண்டு இறைவனைக்காண தலையினால் நடந்து கயிலைக்குச் சென்றார். இதனைக்கண்ட உமையம்மை வியப்படைந்தார். *"ஏற்புயாக்கையோடு தலையினால் நடந்து வருமிவர் யார்?"* என்று எம்பெருமானைக் கேட்கின்றார். இந்த இடத்தில் சேக்கிழார் காட்டும் பெண்மைக்கு உரிய இடம் கிடைக்கின்றது. 'அம்மையே! ஏன காரைக் காற் பேயாரை அழைத்து, உலகமெல்லாம் உய்யும் படி திருவாய் மலர்ந்தருளுகின்றார் எம்பெருமான்.

*"வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்,*
*உமையே! மற்றிப்பெருமை சேர்வடிவம் வேண்டிப்பெற்றனள்...."*

என்பது மட்டுமன்றி அம்மையே என எம்பெருமான் அழைத்த பெருமை காரைக் காலம்மையாரையே சாரும். அம்மையார் இறை வனிடம் வேண்டிநின்ற வரங்களை நோக்குவோம்.

*"இறவாத இன்ப அன்புவேண்டிப் பின் வேண்டுகின்றார்,*
*பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி*
*அறவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்"*

அடுத்து அப்பர் சுவாமிகளின் தமக்கை யாரான திலகவதியாரின் திண்மையைப்பற்றிக் கவனிப்போம். சேக்கிழாரால் 'தூண்டுதவ விளக்கனையார்' என்று பேசப்படுகின்றார். சைவத்தைத் தூண்டிய விளக்கு தம்பியாய் உளராக வேண்டும் என வைத்த தயவு, இவரை உயிர்வாழச் செய்தது. தம்பிக்காக அம்மையார் கைம்மை நோன்பு நோற்றிருக்க, நிலையாமை உணர்வு தோன்ற தம்பி மருணீக்கியார் சமணமதத்தில் போய்ச்சேருகின்றார். அம்மையாரின் இணையற்ற பக்தியை உலகுக்கு காட்ட வேண்டி தம்பியாருக்கு சூலைநோய் ஏற்படுகின்றது. இவ்விடத்தில் திலக வதியாரின் மனத்திண்மை வெளிப்படுகின்றது. தூதனுப்பிய தம்பியை, சமணப்பள்ளியில் சென்று பார்க்க மறுத்துவிட்டார். தம்பியாக வரும்போது விபூதி கொடுக்கின்றார். அதை அணிந்து *'கூற்றாயினவாறு....'* என்ற தேவாரம் பாட சூலைநோய் மறைந்துவிட்டது. தம்பியை சைவ த்திற்கு மீட்ட பெருமை திலகவதியாரையே சாரும். சேக்கிழார் வாக்கில் இவற்றை நோக்குவோம்:

*"தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழுது*
*என்னைஆண்டருளும் நீராகில் அடியேன் பின் வந்தவனை*
*ஈண்டு வினைப்பரசமயக் குழி நின்றும் எடுத்தாள வேண்டும் எனப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனரால்"*

திலகவதியாரின் விண்ணப்பத்தை ஏற்ற நிலையிலேயே எம்பெருமான் தம்பியாருக்கு சூலைநோயைக் கொடுத்து ஆட்கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது. சேக்கிழார் காட்டிய பெண் மையில், திலகவதியாருக்கு சிறப்பிடம் உண்டு என்பதை இதனால் அறியலாம்.

மேலும் *'தெய்வப்பாவை'* என சேக்கிழார் பெருமானால் போற்றப்பட்ட மங்கை யர்க்கரசி என்ற மாதர்குல மாணிக்கத்தின் சிறப்புச் சித்தரிக்கப் படுகின்றது. பல்லவர் காலத்திலே அ;தாவது கி.பி ஏழாவது நூற்றாண்டிலே மங்கயர்க் கரசியாரின் சிறப்பைக் காணலாம். கூன் பாண்டியனின் மனைவியாகிய மங்கையர்க் கரசியார் செய்த சைவப்பணி, பெண் இனத்துக்கே பெருமை தருவதாக அமைந்துள்ளது.

*"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்*
*வளவர் திருக்குலக் கொழுந்து வளக்கைமானி*
*செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்*
*தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை*
*எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இருந்தமிழ் நாடுற்ற இடர்நீக்கித் தங்கள்*
*பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்*
*போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே"*

என்று சேக்கிழார் பெருமான் போற்றுகின்றார். மானிடப்பண்பிலிருந்து உயர்ந்து நிற்கும் ஓர் நிலையே தெய்வநிலை ஆகும். அதாவது சாதாரண ஒரு இல்லத்தரசி என்ற நிலையிலிருந்தும் உயர்ந்து, தனது கணவன் நின்ற நெறி பிழையென்று கண்டு, தனிமையாக நின்று சைவத்தைப் போற்றியவர். பாண்டி நாட்டிலே மங்கையற்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவத்தைப் பின்பற்றினர். ஏனை யோர் சமண வசப்பட்டிருந்தனர். இதற்கு பாண்டியனும் விதிவிலக்கல்ல. பாண்டிநாடு சமண இருளில் ஆழ்ந்து மன்னனும் அவ்வழி நின்றபொழுது அரசியார் தனித்து சைவத்தை காப்பாற்றியது வியப்பிற்குரியதே!

*"அம்புய மலரால் போல்வார்*
*ஆலவாய் அமர்ந்தார் தம்மைக்*
*கும்பிட வேண்டும் என்று*
*கொற்றவன் தனக்கூறி"*

பாண்டிமாதேவி தமது பரிசனங்களுடன் சென்று ஆலவாய் அண்ணலைத் தொழுதுவந்தமை கூர்ந்து கவனிக்கத்தக்கது. ஞானக்குழந்தை மதுரையின் எல்லையில் வந்திருக்கிறாரென அறிந்தவுடன் ஓடோடிச் செல்கிறார். திருவடிகளில் வீழ்ந்து அழுகிறார். "*நானும் என் பதியும் செய்த தவம் என் கொல்!*" என பாண்டியனையும் இணைத்துக் கொள்கிறார். சேக்கிழார் காட்டிய மனைத்தக்க மாட்சியில் பெண்மைக்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பாண்டியனுக்கு வெப்புநோய் ஏற்பட்டதும் ஞானச்சிறுவனைக்கொண்டே நோய் தீரும் மார்க்கத்தையும் ஏற்படுத்துகின்றார். ஆளுடைய பிள்ளையாரால் தேவாரத்தில் சிறப்பித்துப் பாடப்பட்டவர். ஆலவாயண்ணலைப் போற்றித் தொழும்போது "*மங்கையர்க்கரசி*" என்றே தொடங்குகின்றார். பின்பு சமணர்கள் ஏதாவது தீங்கு செய்துவிடுவார்களோ என்று அஞ்சியவேளை "*மானினேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்*" என்று பாடுகின்றார் "*மானி*" என்பது பெருமையுடைய பெண்களுக் குரியது. நெருக்கடியான சூழ்நிலையில் இவர் வாழ்ந்திருக்கிறார் என்பதை ஞானசம்பந்தர் வருமாறு கூறுகிறார்.

*"சூழுமாகிய பரசமயத்திடைத் தொண்டு*
*வாழுநீர்மையீர்! உமைக்காண வந்தனம்"*

இந்நிலையில், மன்னவன் சைவம் சேர்கின்றார். சமணம் தாழ்கின்றது. இதற்கு அரசியாரின் உறுதிப்பாடே காரணம். சேக்கிழார் தெய்வப்பாவை, வளைக்கைமானி, செங்கமலத்திருமடந்தை எனவும் அரசியாரைப் போற்றுகின்ற இடங்கள் இணையற்ற உயர்ந்த பெண்மைக்குச் சான்றாகின்றன.

மேலும் சேக்கிழார் காட்டிய பெண்கள் பலரை நாம் எடுத்துக்காட்டலாம். திருநீலகண்ட நாயனாரது மனைவி, இயற்பகையாரின் மனைவி, இளையான்குடிமாறநாயனாரது மனைவி, அப்பூதியடிகளின் மனைவி, சிறுத்தொண்டரின் மனைவி, சுந்தரரின் மனைவியரென நாம் பலரைக் காணலாம். இவ்வாறு சேக்கிழார் பெரியபுராணத்தில் பெண்ணின் பெருமையையும் கற்பின் திண்மையையும் எடுத்துக் காட்டுதல் பெண்மையின் உயர்வைப் போற்று வதாகும்.

எனவே, சமயவாழ்வில் பெண்களின் பங்கு மகத்துவமானது என்பதை உள்ளத்தே கொண்டு மனையறத்தின் வேராய் தமைக்காத்துத் தற்கொண்டானைக்காத்து, நாட்டைக்காத்து, சைவத்தைக் காத்து தனிப்பெரும் சக்தியினராய் பெண்கள் வாழ்ந்த வரலாற்றை மிக அழகாக பெரிய புராணத்தில் சேக்கிழார் காட்டியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு



க. தர்சினி, புவியியல்துறை

*"எங்கெங்கு காணினும் சக்தியடா – தம்பி*
*ஏழுகடல் அவள் வண்ணமடா – அங்கு*
*தங்கும் வெளியினிற் கோடிஅண்டம் – அந்த*
*தாயின் கைப்பந்தென ஓடுமடா"*

அன்னையே சக்தி. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்தவள். அவள் இன்றி அணுவும் அசையாது. நீரிலும் நெருப்பிலும் விண்ணிலும் மண்ணிலும் நிறைந்திருப்பவள். ஏழுகடலும் அவள் வண்ணமே. காற்றிலும் உயிருள்ளவை உயிரற்றவை எல்லாவற்றிலும் நிறைந்திருப்பவள் சக்தி. இத்தகைய சக்தியைப் போற்றிச் செய்யப்படும் வழிபாடே சக்தி வழிபாடாகும்.

உள்ளன யாவுமாகி அவற்றையெல்லாம் வியாபிக்கும் அன்னை பக்தர்களின் பொருட்டு பல விதங்களில் காட்சி தருகின்றாள். பக்தர்களின் அன்புள்ளத்திற்கேற்பவும், அவர்களின் எண்ணங்களுக்கேற்பவும் நல்லவளாகவும் வல்லவளாகவும் காக்கின்றாள். துஷ்டர்களை அழிக்கின்றாள். துஷ்டர்களை அழிப்பதற்காக அவள் ஏந்தியுள்ள ஆயதங்களே நல்லவர்களைக் காக்கின்றது. இதனால் தான் தேசியகவி பாரதியார் *"அன்புவடிவமாக நிற்பவள்ளு துன்பமெல்லாம் அவள் இழைப்பள்"* என்று பாடுகின்றார். அன்னை துன்பம் தருவது பக்தர்களை நல்வழியில் இட்டுச்செல்வதற்கே என்பது இவரது பாடலின் பொருளாகும்.

*'தயை'* என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததே *'தாய்'* என்ற சொல்லாகும். தயை என்பது இரக்கம், கருணையைக் குறித்து நிற்பதால் தாய் என்ற சொல்லும் அவற்றையே குறித்து நிற்கின்றது. கருணைவடிவான சக்தியை தாயாக நினைத்தே சக்தி வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. அன்னை உயிர்களைக் காக்கின்றாள். தனது கண்ணால் நோக்கி அருள்பாலிக்கின்றாள். இதனால் தான் சக்தியை நாம் காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி என்ற பல்வேறு பெயர் கொண்டு அழைக்கின்றோம். இலக்குமி, சரஸ்வதி, தூர்க்கை என்பனவெல்லாம் சக்தியின் பல்வேறு வடிவங்களே ஆகும். இதனையே விபுலானந்தர்

*"திருவிழை மாந்தர் திருமகள் கண்டனர்*
*கலைவிழை மாந்தர் கலைமகள் கண்டனர்*
*சுற்றமும் தொடர்பும் நீங்கிய கொள்கைப்*
*பற்றறி மாண்பினர் பரவெளி கண்டனர்*
*தாயெனக் கண்டனம் யாம்"*

என்று பாடியிருக்கின்றார்.

எல்லாவிதமான செயற்பாடுகளுக்கும் மூல காரணமானவள் சக்தி. மனிதன் முதன்முதலாக கடவுளை தாயுருவிலேயே தான் வழிபட்டான் என்பதை சக்தி வழிபாடு எடுத்துக்காட்டுகின்றது. இறைவனைத் தாயாக வழிபடுவதில் அவனுக்கு பூரண திருப்தி ஏற்படுகின்றது. இறைவனைத் தாய்மை உருவில் கண்டு வணங்கிய மனிதன் தன்னால் காணமுடிந்த மலையையும் அலையையும் உருவகப் படுத்தி மலைமகளாக, அலைமகளாக அன்னையைப் போற்றினான். இவ்வாறுதான் சக்தி வழிபாடு ஆரம்பமாகியது. சக்தியை அழகாகக் கண்ட மனிதமனம் அவளைக் கலைமகளாகவும் உருவகப்படுத்தியது. இவ்வாறு மலைமகள், அலைமகள், கலைமகளாகத் தோன்றிய சக்தியை ஒரே ஒருவராகக் காண முற்பட்டபோதே பராசக்தியாக அவள் தோன்றினாள். பராசக்திதான் அளப்பரிய சக்தியுடையவளாகப் போற்றப்பட்டாள்.

*"ஒன்றாய் அரும்பிப் பலவாய்*
*விரிந்திவ் வுலகெங்குமாய் நின்றாள்"*

என்று அன்னை பராசக்தியின் அளப்பரிய ஆற்றலைப் போற்றுவதாய் இப்பாடல் அமைகின்றது.

சைவசமயத்தை வளர்ச்சி பெறச்செய்ய அரும்பாடுபட்ட நாயன்மார்கள் சக்திவழிபாட்டின் உச்சத்தை தொட்டிருக்கின்றார்கள். *"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்..."* என்று மனமுருகிப் பாடுகின்றார் மாணிக்கவாசகர். இதேபாடலில் *"...உலப்பிலாமானந்தமாய தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே..."* என்கின்ற அடியும் வருகின்றது. குழந்தையானது சாப்பிடாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடம்பிடிக்கும் பட்சத்தில் குழந்தைக்கு முன்னும் பின்னும் திரிந்து உணவூட்டுபவள் தாய்... அந்தத் தாயாகவே இறைவனை நினைத்துக் கசிந்துருகும் மாணிக்கவாசகர் *"நாயிற்கடையாய் கிடந்த அடியேற்கு தாயிற்சிறந்த தயவான தத்துவனே"* என்று பாடுகின்றார். திருநாவுக்கரசர் தாய் வழிபாட்டில் இறைவ னைக் காண்கின்றார்.

*"ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்......"* என்கின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் *"அன்னையே! உன்னை யல்லால் இனியாரை நினைக்கேனோ!"* என்று பாடி மகிழ்கின்றார். இவ்வாறாக சக்தி வழிபாடு நாயன்மார்களாலும் போற்றப்பட்டிருப்பதைக் காணலாம். இறைவனுடைய திருவருளை தாயாக வழிபாடு செய்யும் நெறி *'சாக்தம்'* ஆகும். சக்தியை முழுமுதற்கடவுளாக கொண்ட சாக்தநெறி இந்து மதத்தின் அறுவகை பிரிவுகளில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதியில் இருந்த ஒரே ஒரு பொருள் அருள்மயமான பராசக்திதான். இவளிடம் இருந்து தான் அண்ட சாசரங்களும் தோன்றின. தேவரும், மூவரும் அவளுடைய குழந்தைகளே என்று தேவி உபநிடதங்கள் கூறுகின்றன. மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள் என்பதனாலேயே சக்தியை மகா திரிபுர சுந்தரி என்று அழைத்து வணங்குகின்றோம்.

*"மூவருக்கும் முதற்பொருளாய்*
*முத்தொழிலுக்கும் வித்தாகி*
*நாவிற்கும் மனதிற்கும்*
*நாடரியப் பேரறிவாய்*
*தேவர்க்கும் முனிவர்க்கும்*
*சித்தர்க்கும் நாகர்க்கும்*
*யாவர்க்கும் தாயாகும்*
*எழிற்பரையை வணங்குவாம்"*

என்ற பாடல் அன்னை சக்தியே எல்லா வற்றிற்கும் மூத்தவள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

அன்புகள் எல்லாவற்றிலும் தலை சிறந்த அன்பு தாயன்பு. அதற்கு நிகராக உலகில் எதுவுமே இல்லை. உலகில் தன்னைத் தன் குழந்தைக்காக அர்ப்பணிக்கும் உயரிய உள்ளம் தாய்க்குத்தான் உண்டு. மகான்கள் கூட இத்தகைய தாயை மறந்த தில்லை. துறவு வாழ்வில் ஈடுபட்ட ஆதிசங்கரரும் பட்டினத்தடிகளும் தாயைப் பாடிப்பாடி உருகியுள்ளனர். பட்டினத்தடிகளின் தாயின் இறப்பின் போது ஓடோடி வந்து உள்ளம் உருகி அவர் பாடிய பாடல்கள் நினைவைவிட்டு அகலாதவை. ஸ்ரீராம கிருஸ்ண பரமகம்சர் *"அன்னை, அன்னை"* என்றே இறைவனை நோக்கிக் கதறிப் பேரநிலை எய்தினர். இவையெல்லாம் அன்னை சக்தியின் மகிமையை விளக்குவதாகக் காணப்படுகின்றது.

சக்தியையும் சிவனையும் இந்துக்கள் வேறாகக் காணவில்லை. பழத்தில் இருந்து எங்கனம் ருசியை வேறாக்க முடியாதோ, மோதிரத்தில் இருந்து எங்கனம் தங்கத்தையும் மோதிரத்தையும் வேறுவேறாக்க முடியாதோ அவ்வாறே சக்தியையும் சிவனையும் வேறு வேறாக்கவோ வேறுவேறாக நோக்கவோ முடியாது. சிவமின்றி சக்தியில்லை, சக்தியின்றி சிவமில்லை. இதனையே அர்த்தநாரீஸ்வரர் உருவம் விளக்கு கின்றது. சிவன் பாதி சக்திபாதி இவை இணைந்தது தான் சைவத்தின் சிறப்பாகும்.

*"தன்னிலமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி*
*பின்னமிலான் எங்கள் பிரான்"*

என்கிறது திருவருற்பயன். இறைவனும் சக்தியும் இரண்டறக் கலந்திருக்கும் நிலையையே இது தெளிவுபடுத்துகின்றது.

*வாயும் மனமும் கடந்த மனோன்மணி*
*பேயும் கணமும் பெரிதுடைப்*
*பெண்பிள்ளை*
*ஆயும் அறிவும் கடந்த அரசனுக்குத்*
*தாயும் மகளும் தாரமும் ஆமே"*

என்கிறார் திருமூலர். பராசக்தியானவள் சிவத்திற்கு தாயாகவும் மகளாகவும் மனைவியாகவும் சகோதரியாகவும் இருந்து தொழிற்படுத்துகின்றாள் என்பதையே இப்பாடல் சுட்டிநிற்கின்றது.

எங்குமாய் எல்லாமும் நீக்கறமற நிறைந் திருக்கும் சக்தியை நவராத்திரி காலத்தில் நாம் சிறப்பாகப் பூஜிக்கின்றோம். உலகமெங்கும், உள்ள மெங்கும் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்பின் வடிவமான அன்னை சக்தியை வழிபட்டு உய் வோமாக.

***"அன்னை காட்டும் அன்புநெறி***
***விளங்குக உலகமெல்லாம்."***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாடும் விழாக்களும்



*திருமதி சோதிமலர் ரவீந்திரன்,*
*சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை*

பழங்கால தமிழர்களால் வழிபடப்பட்ட தெய்வங்களுள் முருகன் சிறப்பிடம் பெறுகின்றான். முருகன் என்ற சொல் "*முருகு*" எனும் முதனிலைச் சொல்லின் அடியாகத் தோன்றியதாகும். முருகு எனும் முதனிலைச் சொல் '*அன்*' விகுதியைப் பெற்று முருகன் ஆயிற்று. முருகு என்னும் சொல் அழகையும், முருகன் என்னும் சொல் முருகக்கடவுளையும் குறிக்கின்றன.

தமிழ் நாட்டின் முருக வழிபாடு தொன்று தொட்டு வழக்கிலிருந்து வந்துள்ளது. ஆனால் முருகனைப்பற்றிய புனைக்கதைகள் எதுவும் இலக்கியங்களில் குறிப்பிடப்படவில்லை. எனினும் பின்னாட்களில் முருகனை கார்த்திகேயனாகவும், சிவகுமாரனாகவும் கொண்டு பல கதைகள் வடமொழியில் தோன்றியுள்ளன. இது தமிழ் நாட்டில் வடமொழி செலுத்திய செல்வாக்கைக் காட்டுவதாகவுள்ளது.

முருக வழிபாடு தொடர்பாக, இருவேறுபட்ட கருத்துக்கள் அறிஞரிடையே நிலவுகின்றன. முருகன் தமிழ் நாட்டுக்குரிய தெய்வமாகவும், வட நாட்டுக்குரிய தெய்வமாகவும் குறிப்பிடப்படுகின்றான். சு.வித்தியானந்தன் போன்றோர் இவனை பழந்தமிழ்க் கடவுள் எனக் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாது, இவன் ஆரிய கார்த்திகேயனின் தன்மைகளையும் தன்னுடன் இணைத்துக் கொண்ட ஒரு தெய்வம் எனவும் குறிப்பிடுவர். இவர்களின் இத்தகைய கருத்துக்கள் முருகனை ஒரு கலப்புத் தெய்வமாகவே காட்டுகின்றன. முருகனை தமிழ் நாட்டுக்குரிய தெய்வமாகவும், வட நாட்டுக்குரிய தெய்வமாகவும் காட்டுபவர்கள் பல விதமான ஆதாரங்களை காட்ட முயற்சிக்கின்றனர்.

முருகனை தமிழ் நாட்டுக்குரிய தெய்வம் என்பவர்கள், அவனை திராவிடத் தெய்வமாகக் காட்டுகின்றனர். இவனே "*வேலன்*" என்ற பெயரில் காலங்காலமாக வழிபடப்பட்ட தெய்வம் எனவும் குறிப்பிடுவர். முருக வழிபாடானது ஆரியருக்குரிய வழிபாடென கூறுபவர்கள், இவனை "*கார்த்திகேயன்*" என்ற பெயரில் அழைக்கின்றனர். கார்த்திகேயன் வேத புராணங்களின் விளக்கப்படி பிரமாச்சாரியாகவோ அல்லது தேவசேனாவின் கணவனாகவோ காட்டப்படுகின்றான். அதேவேளை இவனின் பிறப்பு தொடர்பான ஏராளமான புராணக்கதைகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான கதைகளுடன் தொடர்புபட்ட முருகனை சுப்ரமணியன் எனவும் அழைக்கின்றனர்.

இவ்வகையில் இக்கடவுள் பற்றிய உண்மையான விபரங்களை கண்டறிய முயலும் போது ஒரு பொதுவான முடிவுக்கு வரலாம். இம் முருகு வழிபாடனாது, இந்திய துணைக் கண்டத்திலேயே தோன்றிய ஒரு கடவுள் வழிபாடு என்பது தெளிவாகின்றது. ஒரு பொதுவான கடவுள் தான் பிற்காலப்பகுதிகளில் இருவேறுபட்ட இரு தெய்வங்களாக காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்துக் கடவுளர்களுக்காக உருவாக்கப் பட்டுள்ள ஆகம நெறிகளுக்குட்பட்ட ஆலயங்கள் அனைத்திலும் கடவுள் சிலையை முறையாக நிறுவி அவற்றுக்கு நாள் தோறும் நேரம் தவறாது வழிபாடியற்றுவது வழிவழியாக பின்பற்றப்பட்டு வரும் வழக்கமாகும். அதேபோல் கோள்களின் இயக்கங்களைக் கொண்டு நல்ல நாட்களையும் நேரத்தையும் கணித்து அந்நாளில் சிறப்பாக விழாக்களை கொண்டாடும் வழக்கமும் தொன்று தொட்டு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

முருகனுக்குரிய விழாக்கள் கந்தசஷ்டி, விசாக விழா, கார்த்திகை விழா, பங்குனி உத்தர விழா என்பவற்றை சிறப்பாக கூறலாம்.

### கந்த சஷ்டி விழா

கந்த சஷ்டியானது முருகனுக்குரிய சிறப்பு விழாவாக கொள்ளப்படுகின்றது. ஐப்பசி திங்களில் அமாவாசையை அடுத்து முருகன் சூரனை வென்ற திருநாளாக குறிப்பிடப்படுகின்து. அத்தினத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருவிழா கொண்டாட்ப்படுகின்றது. முருகனின் வீரதீர செயல்களை திரும்பச்செய்து காட்டுவதே இவ்விழாவின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது.

கந்தசஷ்டி விழா தொடர்பாகவும், வழிபாடு தொடர்பாகவும் பல்வேறுபட்ட கருத்துக்களும், புராண விளக்கங்களும், நாட்டார் கதைகளும் காணப்படுகின்றன. கந்த புராணத்தில் கந்தசஷ்டி பற்றி கச்சியப்பர் கூறுமிடத்து, தேவர்கள் முருகனின் அருள் வேண்டி ஐப்பசி திங்கள் வளர்பிறையில், முதல் ஆறு நாட்களும் முருகனை தம்பவிம்பம் கும்பங்களில் பூசை செய்து உண்ணாது நோன்பிருந்தனர் எனக்கூறப்படுகின்றது. இதிலிருந்து இவ்விரதமானது, சிறந்த பலனை வேண்டி நிற்பவர்கள் கொண்டாடுகின்ற விரதமாக அல்லது விழாவாக கொள்ளப்பட்டது எனலாம்.

மகாபாரதமானது கந்தசஷ்டி தொடர்பாக இன்னொரு வித்தியாசமான காரணத்தைக் குறிப்பிடுகின்றது. அது சுப்ரமணியனின் பிறப்பு தொடர்புபட்டதாகும். அக்கதையானது இருடிகள் (முனிவர்கள்) அமாவாசையன்று வேள்வியை தொடங்கியதாகவும், அதன் போது தீயின் வித்து ஆறு நாட்கள் சேகரிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. வேள்வியின் பயனாகப் பின்பு, சஷ்டியன்று எழுகின்ற ஞாயிற்றினை ஒத்த ஒளி பொருந்திய முருகன் பிறந்தானென்று கூறப்படுகின்றது.

கந்தபுராணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்களில் கந்தசஷ்டி தொடர்பாக கூறப்பட்டுள்ள விடயங்களை விட சற்று வித்தியாசமான வகையில் தத்துவவாதிகள் விளக்கமளிக்கின்றனர். அவர்கள் இவ்விழாவினை மும்மலங்களுடன் தொடர்புபடுத்திக் காட்டுவதுடன், அதனை நீங்கப் பெற்றவர்கள் இறைவனை அடையலாம் என்கின்றனர். கந்தபுராண கதைகளின் வாயிலாக இதற்கு விளக்கமளிக்கின்றனர். முருகன் யானைமுகன், சிங்கமுகன், சூரபன்மன் ஆகிய மூன்று அரக்கர்களையும் முறையே மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மலங்களின் குறியீடுகளே என்பர். அத்துடன் ஆணவம் இலகுவில் அழியாதது என்பதுடன், முருகன் சூரனின் ஆணவத்தை அழிக்க முற்பட்ட போதே சூரன் அழிக்கப்பட்டதுடன் அவனே மயிலாகவும் சேவலாகவும் மாறிநின்று முருகனுக்கு பணி செய்ததாகவும் குறிப்பிடுவர்.

நாட்டார் கதைகள் இன்னும் சில வித்தியாசமான கதைகளைக் கூறுவதைக் குறிப்பிடலாம். சூரபன்மன் முருகனைத் தூக்கிக் கொண்டு கடலில் ஒளிந்துக் கொண்டான். கோயிலில் முருகன் இல்லாததால், குடத்துக்குள் முருகனை எழுந்தருளச்செய்து சிவபெருமானை நோக்கி, முருகன் திரும்பக் கிடைக்க வேண்டுமென வேள்வி செய்வதுதான் கந்தசஷ்டி என்கிறார். சுப்ரமணிய சாஸ்த்திரி. இக்கதை கி.பி 1648ல் திருச்செந்தூர் கோயில் முருகன் சிலைகள் டச்சுக்காரர்களால் கவர்ந்து செல்லப்பட்டதை அடிப்படையாக கொண்டு எழுந்திருக்கலாம் எனக்கருதலாம்.

இவ்வாறு புராண ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும், நாட்டார் கதைகளும் முருக வழிபாடு தொடர்பாக காணப்படுகின்றன.

தற்போது அனைத்து முருகன் கோயில்களிலும் கந்தசஷ்டி விழா கொண்டாடப்படுகின்றது. ஆறு நாட்கள் கொண்டாடப்படும் இப்பெருவிழா மிகவும் சிறப்பாகத் திருச்செந்தூரில் கொண்டாடப்படுகின்றது. ஏனெனில், முருகனின் கண்ணில் படாதவாறு சூரபன்மன் என்ற அசுரன் திருச்செந்தூருக் கருகிலுள்ள கடலினுள்ளே ஒளிந்துக் கொண்டதாகவும், அத்தலத்திலேயே முருகன் சூரபன்மனை இருகூறாகப் பிரித்தான் எனவும் கருதப்படுகின்றது. இக்கூறில் ஒன்று சேவலாகவும், மறுகூறானது மயிலாகவும் மாறிக்கொண்டபடியினால், இக்கூறுகளில் சேவல் முருகனின் கொடியாகவும், மயில் அவனது வாகனமாகவும் காணப்படுகின்றதென தமிழர்கள் கருதுகின்றனர். இது நம்பிக்கையடிப் படையில் தோன்றிய கதையாகும். எனினும் இந்நிகழ்ச்சியினை மையமாகக் கொண்டே இன்று "*சூரசங்காரம்*" என்ற விழா இடம்பெறுகின்றது.

இன்று நம்மிடையே வழங்கப்படும் பழமொழிகளில் "*சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்*" என்பதும் ஒன்றாகும். இதில் பாத்திரத்தில் இருந்தால் தான் அகப்பையில் எடுக்க முடியும் என நாம் தவறாக பொருள் கொள்கின்றோம். அம்முதுமொழியில் சஷ்டி விரதமிருப்பின் கருப்பையில் குழந்தைச் செல்வம் தோன்றுமென்பதே பொருத்தமாகும். உடற்கூற்றியலில் நோன்புகளை ஏற்று தம்மை தயார் செய்து கொண்டால் குழந்தை பேறு கிட்டும் என்ற நம்பிக்கையின் பாற்பட்டதே இம்முதுமொழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரதத்தை மேற்கொள்ளும் பெண்கள், இன்றும் பெருமளவில் முருகனது கோயிலில் சென்று தங்கி, ஆறு நாட்களும் உண்ணா நோன்பினை மேற்கொள்கின்றனர். அவ்விரத நாட்களில் அவர்கள் துளசி நீரினை மட்டுமே உட்கொள்வர். சூரனை முருகன் வென்று கொன்ற நாளைக் கடந்ததும் விரதத்தினை முடிப்பார்கள்.

இவ்வாறு முருகன் கோவில்களில் விரதமிருக்கும் நாட்களில் தேவராய சுவாமிகள் அருளிய கந்தஷ்டி கவசத்தினை ஓதுவர். இதனால் மனத்தை இறைவனின் பால் செலுத்தலாம் எனவும் நம்புகின்றனர். கடவுள் நம்பிக்கை, புனைந்துரைகள் ஆகியவற்றின் அடிபடையில் பெண்களை உண்ணா விரதத்தினை ஏற்கச்செய்து உடற்கூற்றில் மாற்றமேற்படல் செய்து பலன் பெறச்செய்யும் இவ்விழாவானது நம்பிக்கையின் பாற்பட்டதாகும்.

கந்தஷ்டி விரத தினங்களில் விடியற்காலத்தில் எழுந்து காலைக்கடன்களை முடித்து நீராடி புண்ணிய நீரால் நிரம்பிய பூரண கும்பம் வைத்து மாவிலை தருப்பைகளைப் பரப்பி, அதன் மீது சந்தனம் வைத்து குங்குமம், அட்சதை இட்டு, முருகனை நெஞ்சில் நிறுத்தி அவனை வணங்குதல் வேண்டுமெனவும், அத்துடன் முருக மந்திரங்களை கூறி வழிபட வேண்டுமெனவும் கூறப்படுகின்றது. விரதமேற்பவர்கள் பகலில் தூங்கக்கூடாது. அத்துடன் முருகனின் கதைகளைப் பாராயணம் செய்வதும் பிறர்க்கு அதனை எடுத்துச்சொல்வதும் சிறப்புடைய செயல்களாக கருதப்படும்.

## சூரசங்கார விழா

சூரசங்கார விழாவானது கந்த சஷ்டியின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. முருகன் அவதரித்து சூரபன்மஉ ன அழிக்கும் நிகழ்ச்சி கலைத்துவ அம்சங்களுடன், கோயில் சடங்கு களையும் சேர்த்து நடப்பதே இவ்விழாவாகும்.

இவ்விழாவானது ஆறு நாட்கள் நடைபெறும். ஆறு நாள் அளவினையுடைய அக்காலம், "*கந்தசஷ்டி*" என அவ்வாறாவது நாளின் பெயரால் குறிக்கப்படுகின்றது. சூரசங் காரத்தின் போது பாடப்படும் பாடல்கள் பெரும் பாலும் தர்க்கப்பாடல்களாகவே அமைந்திருக்கும். பாடல்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் தனியான முறையில் வெவ்வேறுபட்ட வடிவில் அமைந்திருக்கும். ஆயினும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் ஒன்றாகவே அமையும்.

சூரசங்கார விழாவின் பெரும்பகுதி நிகழ்ச்சி முறையில் சடங்காக நடத்தப்படுகின்றது. இதற்காக முருகன் சார்பாகவும், சூரன் சார்பாகவும் சிலர் வேடமிட்டுக் கொண்டு பாட்டுப்பாடி நிகழ்ச்சிகளை நடத்துவர். விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக கருதப்படுவது வேல் வாங்கும் நிகழ்ச்சியாகும். இது சஷ்டி தினத்துக்கு முதல் நாள் நடைபெறும். முருகன் வீதியுலா சென்ற கோயிலிலுள்ள பார்வதியின் முன் நிற்பா அப்போது கோயிலின் பூசகர் சக்தியிடமுள் வேலை எடுத்து வந்து முருகனிடம் கொடுப்பா வேலை தாங்கி முருகனாக பாத்திரமேற்பவ அதனைப் பெற்றுக்கொள்வார். இது உணர்ச் பூர்வமாக ஆவேசமாக நடைபெறும்.

## விசாகப் பெருவிழா

முருகனுக்குரிய விழாக்களில் விசாக விழாவும் சிறப்புடையது. இவிழாவானது வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தன்று அனைத்து முருகன் கோயில்களிலும் சிறப்பாக கொண்டாப்படுகின்றது.

இவ்விழாவினைப் பற்றி புராணங்கள் குறிப்பிடுகின்றன. சிவபெருமானிடத்திலிருந்து வெளிப் பட்ட ஆறு பொறிகள் அக்கினி பகவானால் சரவண பொய்கையில் விடப்பட்டன. அவை வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தன்று ஆறு குழந்தைகளாக உருவெடுத்து கார்த்திகை பெண்டீர் அறுவரின் கரங்களை அடைந்ததாகக் கூறப் படுகின்றது. முருகனின் பிறந்த நாளான அந் நாளையே விசாக விழாவாக கொண்டாடி வருகின்றனர்.

திருப்பரங்குன்றத்தில் இவ்விழாவின் போது பாற்குட விழா என்ற சிறப்பு விழாவொன்றும் நடைபெறும். குழந்தை வடிவிலான முருகனைப் பால் கொண்டு வந்து வணங்கினால், பால் போல் பல்வேறு நலன்களும் பொங்கிப் பெருகும் என்ற நம்பிக்கையிலேயே இவ்விழா நடைபெறுகின்றது. இத்தலத்தில் விசாக விழா மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

வைகாசி விசாகத்திற்கு முதல் ஒன்பது நாட்கள் வசந்த உற்சவம் நடைபெறுகின்றது. விசாகத்தின் இரண்டாம் பிரிவாக பாலாபிஷேகம் இடம்பெறும். விசாகத்தின் மூன்றாம் பிரிவாக "*மொட்டையரசு உற்சவம்*" எனப்படும் விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும். இது வைகாசி மாத முழுமதியன்று இடம்பெறும். இந்நாளில் முருகனும் தெய்வானையும் கோயிலுக்கு வெளியே ஊர்வலம் வருவர்.

திருச்செந்தூரில் விசாகத்தினத்தன்று மீன்விளையாட்டு என்ற விளையாட்டொன்றும் இடம்பெறுகின்றது. இதற்கு கந்தபுராண கதையே அடிபடையாக அமைகின்றது. சிவனின் மனைவியான உமாதேவியார் சரவணப்பொய்கையில் முருகனுக்கு பாலூட்டும் போது, அப் பால் பொய்கையில் வழிந்தது. பராசுர முனிவரது மக்கள் மீனை பிடித்து விளையாடியதால் தந்தையின் சாபம் பெற்று சரவணப்பொய்கையில் மீன்களாகத் திரிந்து கொண்டிருந்தனர். வழிந்த பாலை பருகியதும் அவர்களது சாபம் நீங்கி முன்னைய வடிவத்தை பெற்றனரென்பர்.

இக்கதையை மையமாக கொண்டு திருச்செந்தூர்க் கோயிலில் வசந்த மண்டபத்திலுள்ள நீர் தொட்டியில் ஆறு பொம்மை மீன்களை விட்டு விளையாடுகின்றனர்.

## பங்குனிப் பெருந்திருவிழா

பங்குனி மாதத்தில் உத்தர நட்சத்திரத்தில் முருகன் இந்திரனின் மகள் தேவசேனாவைத் திருமணம் செய்து கொண்டதன் நினைவாகப் பங்குனி உத்தரப் பெருவிழா கொண்டாடப் படுகின்றது. இதனை தெய்வானை திருமண நாள் எனவும் கூறுவர்.

புராண கதையின் அடிப்படையில் இவ் விழாவினை நோக்கினால் அசுரர்களால் துன்பறுத் தப்பட்ட தேவர்களை துன்பத்தினின்றும் காக்கும் பொருட்டு முருகன் தேவர்களின் சார்பில் அவர் களின் படைக்கு தலைமைத் தாங்கிச் சென்றான். தேவர்களை அத்துன்பத்தினின்றும் அசுரர்களை அழித்துக்காத்தான். இவ்வாறு முருகன் தேவர் களுக்கு உதவிய உபகாரத்துக்காக இந்திரன் தனது மகளை முருகனுக்கு மணம் முடித்து கொடுத்தான் எனவும், அத்திருமணம் செய்து கொண்ட தினமே பங்குனி பெருவிழாவாக கொண்டாடப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

## தைப்பூச விழா

முருகனுக்குரிய விழாக்களுள் தைப்பூசவிழாவும் ஒன்றாகும். இதனை தைமாத பூச நட்சத்திரத்தன்று கொண்டாடுவர். தைப்பூச நாளன்று உமாதேவியார் தனது மகன் முருகனுக்கு வேலினைக் கொடுத்து தாரகன் என்ற அரக்கனை அழித்து வரும்படி அனுப்பியதாக கூறப்படுகின்றது. இக்கதையினை அடிப்படையாக கொண்டதே இவ்விழாவாகும்.

## திருக்கார்த்திகை விழா

கார்த்திகை மாதம் வரும் கார்த்திகை நட்சத்திரத்திக்கு திருக்கார்த்திகை என்பர் சிவ பெருமானது நெற்றிக்கண்ணிலிருந்து விழுந்த ஆறு நெருப்புப் பொறிகளும் ஆறு குழந்தைகளாயின. அக்குழந்தைகளுக்கு கார்த்திகை பெண்டிர் அறுவர் பாலூட்டி வளர்த்தனர் இதனால் முருகன் கார்த்திகேயான் எனப்பட்டான். கார்த்திகை பெண் கள் முருகனை வளர்த்ததால் அவர்களை பாராட் டும் முகமாக சிவபெருமான் ஒரு வரமளித்ததாகவும் அதன்படி கார்த்திகை நட்சத்திரத்தில் விரதமிருந்து முருகனை எவர் வழிபடுகிறாரோ அவர் செல்வம், கல்வி, ஆயுள், நல்லோர் தொடர்பு என்பவற்றைப் பெறுவர் எனவும் கந்தபுராணத்தில் கூறப்படு கின்றது.

பாமரர்களின் கற்பனையில் இந்நாளானது முருகனின் பிறந்த தினமாக கருதப்படுகின்றது. அத்துடன் முருகன் ஒளியிலிருந்து தோன்றியவ னென்றும் கருதப்படுவதால் அத்தினத்தில் முருகனுக் காக கார்த்திகை விளக்கிட்டு வழிபடுவதுண்டு. பெருங்கார்த்திகை தினத்தில் "*ஒளி*" ஏற்றப்படுவதே முக்கியமாக கருதப்படுகின்றது. பெருங்கார்த்திகை யன்று விளக்கேற்றுவது முருகனுக்குரியதாகும். கார்த்திகை மகளிர் அறுவர் நட்சத்திரமாக ஒளி வீசுவதை குறியீடாக காட்டுவது அவ்விளக்கேற்று வதின் நோக்கமாகும்.

புராண மரபுபடி கார்த்திகை விளக்கேற்றும் சிவனுக்குரியதாகவே கருதப்பட்டு வந்துள்ளது. அதாவது பிரம்மாவும், விஷ்ணுவும் சிவனின் அடியையும் முடியையும் தேடிய போது, சிவன் அக்கினி வடிவமாக மண்ணுக்கும் விண்ணுக்குமாக ஓங்கி நின்றதை நிகழ்த்திக்காட்டுவது சொக்க பானை கொளுத்துவதன் அடிப்படையாகும் எனக் கருதப்படுகின்றது.

## வேல் திருவிழா

இவ்விழாவானது ஒவ்வொரு ஆண்டிலும் புரட்டாதிமாத வெள்ளிக்கிழமை ஒன்றில் நடைபெறுகின்றது. இவ்விழாவிற்கு மலைமேல் குமரன், வேல் திருவிழா எனப் பலப்பெயர்கள் உண்டு. வேல் திருவிழா கொண்டாடப்படுவதற்கான காரணத்தை முருகனின் பழைய கதையொன்றின் வாயிலாக கூறுவது வழமையாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் நக்கீரரை காத்தற்பொருட்டு வேலினால் மலையை பிளந்தார். இதனை நினைவு கூறுதற் பொருட்டே இவ்விழா நடைபெறுகின்றதென சிலர் கூறுகின்றனர். இவ்விழாவினை முடித்தவிட்டு மலையிலிருந்து வந்தவுடனே எந்த வரட்சி காலமாயினும் மழை பெய்யுமென கருதுவர். இவ்விழாவானது பண்டைய தமிழ் மக்கள் வேற்கோட்டம் அமைத்து வேலை வழிபட்டதை நினைவூட்டுவதாகவுள்ளது.

ஆரம்ப காலத்தில் மழை வளம் வேண்டி கிராமிய மக்களால் செய்யப்பட்ட இவ்விழா காலப்பொக்கில் சமய சார்பினைப் பெற்று பெருவிழாவாக மாறியுள்ளது. இவ்வேல் விழா இலங்கையிலுள்ள கதிர்காம ஆடி விழாவினை நினைவூட்டுவதாகவுள்ளது.

### காவடி எடுத்தல்

முருகனுக்கு உகந்த வழிபாடுகளுள் காவடி எடுத்தலும் ஒன்றாகும். முருக உற்சவங்கள் அனைத்திலும் காவடி எடுத்தல் நடைபெறுகின்றது. தைப்பூசம், பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம் ஆகிய நாட்கள் காவடி எடுத்தல் வழிபாட்டுக்குரிய சிறப்பு தினங்களாகும்.

காவடியின் பெயர்களானது பலவிதமாக அமைக்கப்படுகிறது. குறிப்பிட்ட காவடியொன்றில் இருமுனையிலும் கட்டப்படும் பொருட்களின் அடிப்படையில் இக்காவடியின் பெயர் குறிக்கப்படும். அவை பால்காவடி, பன்னீர் காவடி, சந்தன காவடி, புஷ்ப காவடி என பல வகைப்படும். பெரும்பாலும் நேர்த்திகளை நிவர்த்தி செய்யும் பொருட்டே காவடி எடுப்பதுண்டு. தற்காலத்தில் காவடியானது எல்லா விழாக்களின் போதும் எடுக்கப்படுகின்றதெனலாம்.

இவ்வகையில் நோக்கும் போது முருகனுக்குறிய விழாக்களாக கந்தசஷ்டி (சூரசங்காரம்), விசாக பெருவிழா, பங்குனி பெருவிழா, தைப்பூசம், திருக்கார்த்திகை விழா, வேல் திருவிழா என்பவற்றையும் சிறப்பாக குறிப்பிடலாம்.

## தெய்வங்களுக்கு ஆகாத மலர்கள், தளங்கள்

- விஷ்ணு – எருக்கம் பூ
- சிவன் – தாழம் பூ
- விநாயகர் – துளசி
- தேவி – அறுகம்புல்
- சூரியன் – வில்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயக்கிரியைகளும் நாட்டிய முத்திரைகளும்



ப. சிவரூபி,
புவியியற் துறை, இறுதி வருடம்.

*'கலை'* என்பது தெய்வீகத் தன்மையோடு கூடியதொன்றாகவே காணப்படுகின்றது. இக்கலைகளுள் நாட்டியக் கலையும் ஒன்று. இது ஆரம்ப காலங்களிலிருந்து ஆலயங்களை மையமாகக் கொண்டே வளர்ந்தது. இதனால் இறைவனுக்கு செய்யப்படுகின்ற உபசாரங்களில் கூட இவ்நாட்டிய முத்திரைகள் நிகழ்த்தப்படுகின்றன. நாட்டிய கலையின் தலைவனாக நடராஜர் குறிப்பிடப்படுகின்றார். இதனால் இவரை ஆடல் அரசு, ஆடல் இறை, அம்பலத்தாடி எனப்பல நாமங்களில் அழைக்கப்பட்டு நாட்டியக்கலை தெய்வத்தன்மை பொருந்தியதாக விளங்கியது.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் சடங்குகளையும், கிரியைகளையும் அடிப்படையாகக் கொண்டே ஆரம்பமாகின்றது. ஒருவன் பிறந்ததில் இருந்து அவன் இறக்கும் வரை அவனது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் கிரியைகள் முக்கிய இடம் பெறுகின்றது. கிரியா என்பது 'கிறு' எனும் வினையடியாகப் பிறந்து, எல்லா செயல்களையும் உணர்த்தினாலும் நடைமுறையில் அவை சமயத்தொடர்பு கொண்டமைந்தனவாகக் காணப்படுகின்றது. இதனையே நாவுக்கரசர்,

> *"பூமென்கோதை உமையொரு பாகனை*
> *ஓமஞ் செய்தும் உணர்மின்கள்*
> *உள்ளத்தால்"*

எனக் கூறியுள்ளார். ஆகமங்கள் கூறியவாறு *'சிவனைப் புறத்தொழிலாலும் அகத் தொழிலாலும் வழிபடுகை கிரியை ஆகும்'* எனத் தமிழ் அகராதியில் கூறப்பட்டுள்ளது.

மந்திரங்கள் எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடியதல்ல. அவற்றை மக்களுக்கு புரிய வைப்பவை கிரியைகள். ஆகவே கிரியை நிகழ்த்துபவர் பாவனையை வெளிப்படுத்தும் திறமையைப் பெறுவது அவசியமாகும். காரணாகமத்தில் ஆசார்ய லட்சணம் பற்றி *'மந்திரம், தந்திரம், கிரியை, முத்திரை, பாவனை ஆகியவற்றை உள்ளீடாகக் கொண்டவர் ஆசார்யா'* எனக் கூறப்படுவார். முத்திரை என்பது அடையாளம் எனப் பொருள்படும். இம்முத்திரைகளினூடாக ஆச்சார்யார் கிரியைகளை நிகழ்த்தி ஆன்மாவை இறைவனிடம் நெருங்க வைக்கின்றார். ஆகமங்களில், முத்திராலட்சண விதி என்பதில் முத்திரைகள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. கிரியை நிகழ்த்தும் ஆசாரியார் பக்தி எனும் ரசத்தை, தன்னை சூழ உள்ளோரிடம் தோற்றுவிக்க இம்முத்திரைகள் உதவுகின்றன. இது ஒரு வகை அபிநயமே. அதாவது நாட்டிய நிகழ்ச்சியை நிகழ்த்தும் கலைஞன் ரசங்களையும், பாவங்களையும் மாற்றி மாற்றி தோற்றுவிக்கும் கலையே அபிநயம் எனப்படும். இவற்றினூடாக நாட்டிய கலைஞனுக்கும் ஆசார்யாருக்கும் உள்ள தொடர்பு புலனாகின்றது.

எனவே கிரியைகளின் போது முத்திரைகளின் பாவனை மிக முக்கியமாக விளங்குகின்றது. நாட்டியத்தில் பயன்படும் முத்திரைகள் கிரியைகளின் போது அதே அம்சங்களுடன் அதே பெயருடன் பிரயோகம் பெறுவது கவனிக்கப்படுகின்றது. ஆகமங்கள் *'பாவனைக்கு துணை செய்யும் இம்முத்திரைகள் தேவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பன'* எனக் கூறுகின்றன. நாம் ஒரு கருத்தை கூறுவதை விட சைகை மூலம் அதை மற்றவர்களுக்கு உணர்த்துவது எளிது. ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த இம்முத்திரைகள் உதவி செய்கின்றன. ஆலயக் கிரியைகளில் எவ்வாறு இம்முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன என நோக்குவது முக்கியமானதாகும். சிவமகாமண்டப பூஜையில் யாக ரட்சகரான ஐந்து முகம் கொண்ட சிவனையும் செந்திறம் கொண்ட உமாதேவியாரையும் பூஜிப்பது மரபு. அவ்வாறு பூஜிக்கும் சிவ கும்பத்தை சிவ முத்திரையாலும் வர்த்தனி கும்பத்தை முஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரையாலும் தொழ வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன.

இம்முத்திரைகளைத் தொடும் போது சகல சௌபாக்கியங்களும் பெறப்படுகின்றது என ஆகமங்கள் கூறும். இம்முத்திரைகள் பரதக்கலை வழக்கில், ஒற்றைக் கை முத்திரையில் 9 வது 10 வது முத்திரைகளாகும். பரதக்கலையில் இடம் பெறும் பதாக முத்திரையானது கிரியைகளின் போது பதாக என அழைக்கப்படுகின்றது. இம்முத்திரையினால் நீரைத் தொட்டுத் தெளிப்பது புரோக்ஷணம் எனப்படும். தலைசுத்தி, திரவிய சுத்தி என்பவற்றுக்காக இது செய்யப்படுகின்றது. ஆசனம் செய்த பின் ஆதாரங்களை துடைக்கவும், பதாக முத்திரையே பயன்படுத்தப்படுகின்றது. பதாக முத்திரையை கவிழ்த்துப் பிடித்தல் அம்யுக்ஷண முத்திரை எனப்படுகின்றது. இதனை சோத்திக முத்திரை எனவும் அழைக்கப்படுகின்றது. தோற்றுவிக்கப்படுகின்ற சிவசக்தி பிரகாஷம் நீங்காது நிலை பெற்று இருக்கச் செய்தல் இதன் நோக்கமாகும். இரு கைகளையும் உள்ளங்கைகள் ஒன்றன் மேல் ஒன்று பொருத்த சேர்த்து நிமிர்த்தி பெருவிரல்கள் ஒன்றன் மேல் ஒன்று பிணையுமாறு சிரசில் அல்லது மார்பில் வைத்து வணக்கம் செய்தல் நமஸ்கார முத்திரையாகும்.

இம்முத்திரை நாட்டியத்தில் ஸம்யுத ஹஷ்தத்தின் முதலாவது முத்திரை அஞ்சலி ஹஸ்தமாகும்.

மேலும் கிரியைகளில் விநாயக வணக்கம் நடைபெறும் போது அங்கு தலையினை இரு கைகளாலும் முஷ்டி முத்திரை மூலம் குட்டிக் கும்பிடுதல் முறை. இதே போல் சங்கல்பம் எனும் கிரியையின் போது இரு கைகளையும் ஒன்றாகப் பொத்தி மடியின் மேல் வைத்திருப்பர். இங்கு ஸம்யுதஹஸ்த 14 வது முத்திரையாகிய ஸம்புட முத்திரை பாவிக்கப்படுகின்றது. மேலும் சிவாச்சார்யார் புக்களை இரு கைகளாலும் எடுத்து இறைவனுக்கு முழுமையாக சமர்ப்பிக்கின்றார். அங்கு புஷ்பபுட முத்திரை பயன்படுத்தப்படுகின்றது. அதாவது பெருவிரலால் மோதிர விரலை வளைத்துப்பிடித்து மற்றய விரல்களை நீட்டியவாறு இவ்விடைவெளி மூலமாகப் பார்த்தலைக் குறிக்கும். இது அஸம்யுதஹஸ்த மயுர முத்திரையாகும்.

மேலும் விபுதி கொடுப்பதற்கும் ஓமம் செய்யும் போதும் கிரியைகளில் மிருக் என்ற முத்திரை பாவிக்கப்படுகின்றது. அதாவது வலக்கையின் சுட்டுவிரல், சிறுவிரல்களை நீட்டி ஏனைய மூன்று விரல்களையும் ஒருங்கு சேர்தலைக் குறிக்கும். இது ஆடல்கலையின் அஸம்யுதஹஸ்த சிம்ம முக முத்திரையாகும். வலக்கை சுட்டுவிரல், பெருவிரல், நடுவிரல் மூன்றின் நுனிகளையும் ஒன்று சேர்த்து ஏனைய இரண்டு விரல்களையும் நீட்டிப்பிடிப்பது நாட்டியமுத்திரையில் கடகாமுகம் எனப் பெயர் குறிப்பிடப்படுகின்றது. இம்முத்திரையானது கிரியைகளின் போது ஹம்ஸ முத்திரையாகப் பாவிக்கப்படுகின்றது.

சிவசக்தியை சுற்றிலும் மூன்று மதில்களும், மூன்று அகழ்களும் உண்டாவதாக அல்லது வெளியிலுள்ள அசுத்தங்கள் வந்து சேராத வண்ணம் தடை செய்வதாக பாவனை செய்து மும்முறை சுற்றுவதற்கு அவகுண்டன முத்திரை உபயோகிக்கப்படுகின்றது. இது ஒற்றைக்கை முத்திரையின் ஆசி முத்திரையைக் குறிக்கும். இடக்கையைக் கவிழ்த்து விரல்களை நீட்டி அதன் மேல் வலக்கையையும் அதே போல் வைத்து இரண்டு பெருவிரல்களையும் அசைப்பது மகா முத்திரையாகும். இம்முத்திரை கிரியைகளில் பயன்படுவது போல் நாட்டியத்தில் மட்சய முத்திரையாக மீனைக் குறிக்கப் பயன்படுகின்றது.

அங்குச முத்திரை என்பது வலக்கையை முஷ்டியாகப் பிடித்து பெருவரலை விலகாது நீட்டி அதன் மேல் சுண்டு விரலை வளைத்துப்பிடித்தல் ஆகும். இம்முத்திரை பரதக்கலையில் கபித்த முத்திரையாக பால் கறத்தல், கண்ணுக்கு மை போடுதல், பிள்ளையார் போன்ற விநியோகங்களுக்கு பயன்படுகின்றது.

எனவே மேற்கூறிய கருத்துக்களை தொகுத்து நோக்கும் போது, இறைவனுடன் தொடர்பு பட்ட பரதக்கலையானது தெய்வீக மயமானதுடன் இறைவனுடன் ஆன்மாவை நெருங்க வைப்பதற்காக நிகழ்த்தப்படும் கிரியைகளில் பயன்படும் முத்திரைகளுக்கும், ஆடற்கலையில் உபயோகிக்கப்படும் ஹஷ்தங்கள் எனப்படும் முத்திரைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது புலனாகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. HINDU OLI 2006, ALL CEYLON HINDU CONGRESS.
2. www.hinducongress.org.
3. அறம் வளர்த்தனார், 1954, 'பரத சங்கிரகம்', அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சரஸ்வதி. க, 1994, 'நாட்டியக்கலை', சென்னை திருமகள் நிலையம்.
5. சிவகாமி. வி, 1998, 'பரதக்கலை', யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
6. நாட்டிய சாத்திர சங்கிரகம் தொகுதி, சரஸவதி மஹால் நூல் நிலையம், தஞ்சாவூர்.
7. பத்மநாதன். சி, 2002, 'கர்நாடகத்து கோயில்களும் இந்து கலாச்சாரமும், நடனங்களும் ஓவியமும்', இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
8. பத்மா சுப்பிரமணியம், 1995, 'பரதக்கலையின் கோட்பாடு', சென்னை.
9. தாமோதரன். கு, 1999, 'வரலாறும் கலையும்', தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.
10. லீலாம்பிகை. செ, 2001, 'நடன சாரம்', யுனிஆட்ஸ் (பிறைவேற்) லிமிடெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதமும் இன்றைய இளைஞர்களும்



**கா. கார்த்தீபன்,**
*விலங்கு மருத்துவ பீடம்*

இன்றைய பரபரப்பு நிறைந்த கணனி யுகத்திலே வேலை செய்யாமல், செயலில் ஈடுபடாமல் யாரும் ஒரு கணம் கூட இந்த உலகில் வாழ முடியாது. குறிப்பாக இன்றைய இளந்தலைமுறையினர் ஆரவாரம் மிகுந்ததும் ஆர்ப்பாட்டம் கலந்த நாகரீகத்துடனான லௌகீக வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டிருகிறார்கள். உடலளவில் செயல் நடைபெறாவிட்டாலும் அது மனத்தளவில் நடைபெற்றுக்கொண்டே இருக்கும் ஆகவே இப்படி நாம் ஈடுபட்டேயாக வேண்டியதான செயலை எப்படி எமது ஆன்ம அனுபுதிக்கான வழியாகக் கொள்ள வேண்டும் என்பதை இந்து மதம் தெளிவாக எடுத்தியம்பியிருக்கிறது. மனித குலம் முழுவதற்கும் இருக்கின்ற பொதுவான கடமைகளைத் தவிர, ஒவ்வொரு மனிதனுக்கும் சில தனிக்கடமைகளும் இருப்பதாக இந்து மத சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இந்து தனது வாழ்க்கையை ஒரு மாணவனாகத் தொடங்குகின்றான். பிறகு திருமணம் செய்து கொண்டு இல்லறத்தானாகின்றான். வயதான காலத்தில் குடும்பக் கடமைகளில் இருந்து விடுபடுகின்றான். இறுதியில் இல்லற வாழ்வைத் துறந்து துறவியாகின்றான். வாழ்வின் இந்த ஒவ்வொரு நிலைக்கும் தனிக்கடமைகள் வரையறுக்கப் பட்டுள்ளன. இந்த வாழ்க்கை நிலைகள் எல்லாம் தன்னளவில் உயர்ந்தவையும் அல்ல தாழ்ந்தவையும் அல்ல. திருமணம் செய்து கொண்டவனின் வாழ்க்கை, திருமணம் செய்து கொள்ளாமல் மதக்காரியங்களில் ஈடுபட்டுள்ள பிரமச்சாரியின் வாழ்வைப் போல் மிகச் சிறப்பானதுதான். துறவி தனது ஆற்றல் முழுவதையும் பிரச்சாரம், வழிபாடு என மத வாழ்க்கையில் செலவிடுகின்றான். ஆனால் எல்லோராலும் எல்லா இன்பங்களையும் துறந்து துறவியாக முடிவதில்லை. அதனால் தான் இந்து மதம் இல்லற வாழ்வோடு சார்ந்த இறை வழிபாட்டினை பின்வருமாறு தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. "*இல்லறத்தான் இறை பக்தி கொண்டவனாக இருக்க வேண்டும். அதேவேளை அவன் இடையீடின்றி செயல் புரிய வேண்டும். தன் கடமைகள் அனைத்தையும் சரியாகச் செய்ய வேண்டும். செயல்கள் அனைத்தின் பயனையும் அவன் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.*" ஆனாலும் இன்றைய தலைமுறை சமூகத்திலே எத்தனை பேர்தான் இப்படி இருக்கிறார்கள் என்றால் அவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம்.

இன்றைய இளைஞர்களிடம் கோயிலுக்கு செல்லவில்லையா? எனக் கேட்டால், இன்று இட்டலியா, இடியப்பமா, பிட்டா? என்று வினவுகின்ற நிலமைக்கு, இறையுணர்வு நிரம்பியிருக்கின்ற வழிபாட்டுத் தலங்களை அறுசுவை உணவு பரிமாறப் படுகின்ற உணவுச் சாலைகளாவே மாத்திரம் கருதுகின்றார்கள். இன்னும் இவற்றுக்கு மேலாக இப்படியும் விளக்கம் தருகின்றார்கள் "*உள்ளம் பெருங்கோயில் உன்னுடம்பாலயம்*" என்று. அப்படியானால் அன்பானவர்களே "*கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்*", "*ஆலயம் தொழுவது சாலவும் நன்று*" என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் வீட்டிலிருந்து கொண்டே எல்லா வேலைகளையும் செய்து விடலாமல்லவா? ஏனெனில் இணையத்தளங்கள், மின்னஞ்சல்கள் என்று கணணி யுகம் தன் கிளை பரப்பி உலகத்தை ஒரு கிராமமாக மாற்றியிருக்கின்ற தருணமல்லவா. பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டிலிருந்தே இணையத்தளங்களின் உதவி கொண்டே கற்றுவிடலாமல்லவா?

எவ்வாறான வசதி வாய்ப்புக்கள் வந்தாலும் அந்தந்த வேலைகளை அதற்குரிய இடங்க ளிலிருந்து செய்கின்ற போதுதான் அவை ஒரு முகப்படுத்தப்பட்டு, ஒழுங்கான அவற்றின் குறிக் கோளைத் தொட்டுவிடுகின்றன. அதேபோன்றுதான் ஆலய வழிபாடும், இறைவழிபாட்டிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா அமைதிப்படுத்தப்பட்டு ஒருமுக சிந்தனையிலே மனம் உறைந்திருக்க வேண்டும். அவ்வாறு ஆன்மா வை லயப்படுத்தி ஆரவாரமற்ற அன்பான அமை தியான சூழலை ஆலயம் ஏற்படுத்தித்தருகின்றது என்பதில் எவருக்கும் ஐயமிருக்க சந்தர்ப்பம் இல்லை. லௌகீக அறிவோ, ஆனமீக அறிவோ எல்லாமே மனதில்தான் இருக்கின்றது. பலரிடம் இவை கண்டுபிடிக்கப்படாமல் மூடப்பட்டிருக்கின்றது. மூடப்பட்டிருக்கின்ற திரைகள் மெல்ல நீக்கப் படுகின்ற போது நாம் கற்கின்றோம் என்று சொல்கின்றோம். நாம் பெறுகின்ற அறிவின் அளவு இந்த திரையை விலக்குகின்ற அளவைப் பொறுத்தே அமைகின்றது. இந்தத் திரை யாரிடமிருந்து தூக்கப்பட்டிருக்கின்றதோ அவன் அதிகம் தெரிந்தவன், யாரிடம் இந்தத்திரை கனமாக இருக்கின்றதோ அவன் அறிவிலி. ஆனாலும் இன்றைய காலகட்டத்திலே லௌகீக அறிவுத் திரையைத் திறந்து கற்கின்ற அளவுக்கு ஆன்மீகத் திரை விலக்கப்பட்டு ஆன்மீகக் கல்வி கற்கப் படுகின்றதா? அல்லது கற்பிக்கப் படுகின்றதா? என்றால் அதற்கும் சொற்பம் என்ற விடை தான் விளைவாகின்றது. இருந்தாலும் கூட எல்லா அறிவும் நிரம்பியவர்கள் இப்போதும் இருக்கின் றார்கள். ஆனால் இவர்கள் நேற்றைய தலை முறையின் பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள். இன்று இவர்களுக்கு பாரிய பொறுப்பொன்று இருக் கின்றது. இன்றைய தலைமுறையினை இந்து மத சாஸ்திரங்களின் அடிப்படையில் சரியான வழியில் கொண்டுசெல்வதற்கு. ஏனெனில் இன்றையவர்கள் தான் நாளைய தலைவர்கள் மட்டுமல்லாமல் நாளை மலரும் சமூகத்தின் வழி நடத்துனர்கள். இன்று இவர்கள் இதனைக் கற்றுக்கொள்ள தவறிவிட்டால் நாளைய தலைமுறை துடுப்பிழந்த ஓடமாய் நட்டாற்றில் திக்குத் தடுமாறித் திணறிப் போகும். தன்னுடைய மதக்கடமைகளைச் சரிவர செய்வதிலிருந்து தவறிப் போய்விடுமோ என்ற ஐயமும் இன்று வெகுவாக எழுந்திருக்கின்றது.

ஆழ்ந்த அமைதியிலும் ஏகாந்தத்திலும் இடையீடற்ற செயல்களைக் காண்பவனும், இடை யீடற்ற செயல்களிடையே பாலைவனத்தின் அமை தியையும் ஏகாந்தத்தையும் காண்பவனுமான ஒரு வனே இலட்சிய மனிதன். அவன் சுய கட்டுப் பாட்டின் இரகசியத்தை கற்றுக்கொண்டு விட்டவன். அவன் தன்னைத்தானே கட்டுப்படுத்தி விட்டவன். அதனூடே அவன் இடையீடற்ற செயலிலும் ஈடுபட்டு இருப்பவன். இதைத்தான் இந்து மதத் திலே கர்மயோக வழிபாடு எனக்குறிப்பிடுகிறார்கள். இவற்றினை மேம்படுத்தவே ஆலய வழிபாடும் அங்கு இடம்பெறுகின்ற தியான செய்முறைகளும் உதவுகின்றன. மேலும் கடவுளை அடைவதற்கான சிறந்த ஒரே வழி தியானம் எனப்படுகின்றது. தியானம் என்பது என்னவெனில் ஒரே பொருளை முழுக்க அறிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப் போடு, பற்றோடு, பிரியத்தோடு, ஆழமாகச் சித் தித்தல். பல நேரம் ஏதோ ஒரு விடயம் திரும்பத் திரும்ப நம் நினைவிற்கு வரும் தேகத்திற்கு சம்பந் தமில்லாமல். ஆன்மா அந்த விடயத்தில் ஐக்கியப் பட்டு விட்டது எனபதே அதன் பொருள். அது காதலாக இருக்கலாம். அதில் தவறில்லை. அது பாசமாக இருக்கலாம் குற்றமில்லை. ஆனால் அது இறைவழிபாடாக இருந்தால் ஈடுஇணையில்லாத ஞானம் கைகூடும். மேற்சொன்ன இரு வியங்க ளுக்கு தங்களைத் தியாகம் செய்கின்ற இளைய சமுதாயம் மூன்றாவதில் முடியுமானவரை அக்கறை செலுத்தினால் முழுமையான அர்த்தமுள்ள இந்து மத வாழ்க்கையினை இல்லறத்தோடு சேர்ந்து வாழலாம் அல்லவா?

பிறப்பையும், வாழ்க்கை நிலையையும் அடிப்படையாகக் கொண்ட கடமைகளைப் பற்றி பகவத் கீதை பல இடங்களில் கூறுகின்றது. பிறப்பும் வாழ்க்கையும் மற்றும் சமூகத்தில் ஒருவன் பெறு கின்ற இடமுமே அவனது வாழ்க்கையின் பல்வேறு செயற்பாடுகளின் மீது அவன் கொள்கின்ற மன நிலையையும் தார்மீக நிலையையும் பெரு மளவிற்கு நிர்ணயிக்கின்றன. எனவே நாம் எந்த சமூகத்தில் பிறந்துள்ளோமோ, அந்த சமுதா யத்தின் இலட்சியங்களுக்கும், பழக்கவழக்கங்க ளுக்கும் ஏற்ப நம்மை உயர்த்தவும் உன்னதப் படுத்தவும் உதவுகின்ற செயலே நமது கடமை ஆகின்றது. இதிலே உருவன் தன்னுடைய மதம் சார்ந்த கடமையை மாண்புடன் நிறைவேற்றுவதற்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளான் என்பது தெளிவாக சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆகவே பிறவியால் நம க்கு அமைந்த கடமையைச் செய்வோம். அதை முடித்த பின்னர் நமது வாழ்வு மற்றும் சமுதாய த்தின் நமது நிலைகளின் காரணமாக நமக்கு ஏற்படுகின்ற கடமைகளைச் செய்வோம்.

ஒவ்வொரு மதத்திலும் தத்துவம், புராணம், சடங்கு என்ற மூன்று பகுதிகள் உள்ளன. எந்த மதத்திற்கும் தத்துவமே சாரமாக அமைந்துள்ளது. இத்தத்துவத்தை ஏறக்குறைய கற்பனைப் பாத்திர ங்களான மாமனிதர்களின் வாழ்க்கைக்கதைகள், உவமைகள் போன்ற அற்புதமான விடயங்கள் மூலம் விளக்கி விபரிப்பது புராணம், சடங்கு என்பது தத்துவக் கருத்துக்களுக்கு எல்லோரும் புரிந்து கொள்ளும்படி வடிவம் கொடுப்பது. உண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையில் தத்துவத்தின் உருத்தோற்றமே சடங்கு. இந்தச் சடங்குதான் கர்மம் என்று இந்து மதத்திலே குறிப்பிடப்படுகின்றது. இவை எந்த வொரு மதத்திற்கும் இன்றியமையாதவை. ஏனெனில் ஆன்மீகத்தில் மிகவும் முன்னேறாமல் நுட்ப மான உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியாது. எதையும் புரிந்து கொள்ள முடியும் என்று நினைப்பது சுலபம். ஆனால் நடைமுறை அனுப வத்திலோ நுட்பமான கருத்துக்களைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமானது அல்ல என்பது தான் உண்மை. எனவே சின்னங்கள் சிறந்த உதவிகளாக அமைந்துள்ளன. அவற்றின் மூலம் எதையும் தெளிவுபடுத்துகின்ற முறையை நாம் ஒதுக்கி விட முடியாது. மிகப் பழங் காலத்திலிருந்தே எல்லா மதங்களும் சின்னங் களைப் பயன் படுத்தி வருகின்றன.

ஒருவகையில் சின்னங்களின் மூலம்தான் நாம் சிந்திக்கவே முடியும். சொற்கள் என்பவை சிந்தனையின் சின்னங்களே தவிர வேறொன்றுமில்லை. இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே ஒரு சின்னம். அதன் பின்னாலுள்ள சாரம் இறைவன். இத்தகைய சின்னங்களின் உருவாக்கம் ஒரு குறிப பிட்ட மதத்தைச் சேர்ந்த சிலர் ஒன்றாக அமர்ந்து தங்கள் மனத்துள் சிந்தித்து வெளிக் கொண்டு வந்தவையல்ல. மாறாக மதச்சின்னங்கள் இயல் பாக தோன்றி வளர்ந்தவை. இல்லையென்றால் எல் லோரின் மனதிலும் குறிப்பிட்ட கருத்துக்கள் குறிப் பிட்ட சின்னங்களோடு மட்டுமே தொடர்பு டையனவாக எப்படி இருக்கும். இவற்றையெல்லாம் ஏன் குறிப்பிட வேண்டிய தேவை உள்ளதென்றால் எங்களுடைய இளஞ்சந்ததியினர் பாதிப்பேருக்கு புராண சடங்கு வழிபாடு பற்றித் தெரியாதது எந்தளவற்கு உண்மையோ அதைவிட ஒருபடி மேலே சென்று இன்னும் சிலர் இவற்றைப் பற்றி வெகுவாக விமர்சிக்கின்றார்கள். உலக மதங்களில் சடங்கிற்காக அமைந்துள்ள சின்னங்கள் அனைத் திலும் மனித சமுதாயத்தின் சிந்தனை வெளிப் பாட்டைக் காண்கின்றோம். இதனைத்தான் எமது இந்து மதமும் விளக்குகின்றது. சடங்குகள், கோயி ல்கள் மற்றும் அது போன்ற சம்பிரதாயங்கள் எது வும் தேவையில்லையென்று சொல்லி விடுவது இலகு. இன்றைய சிறுபிள்ளைகள் கூட இப்படித் தான் சொல்கிறார்கள்.

ஆனால் கோயிலுக்குச் சென்று வழிபடுபவர்கள் மற்றவர்களிடமிருந்து பல வகையிலும் வேறுபட்டிருப்பதை எல்லோரும் எளி தாக அறிந்து கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட மதத் தின் கோயில்கள், சடங்குகள், மற்றும் சம்பிர தாயங்கள் போன்ற தூல வடிவங்கள் யாவும் அந்த மதத்தின் குறிப்பிட்ட சில கருத்துக்களைக் குறித்து நிற்கின்றன. இந்த தூல வடிவங்களுடன் அந்த குறிப்பிட்ட மதத்தினர் தொடர்பு கொள்ளும் போது, அவை எதைக்குறித்து நிற்கின்றனவோ அந்த கருத்துக்களை, எண்ணங்களை அவர்களின் மனதில் கொண்டு வருகின்ற தன்மை படைத் தவையாக இருக்கின்றன. எனவே சடங்குகளையும், சின்னங்களையும் தவிர்ப்பது அறிவுடைமை ஆகாது. எனவே இது இயல்பாகவே இந்துமத கர்மயோக வழிபாட்டில் பின்பற்றப்படுகின்றது என்ற உண்மையை தர்க்கிக்கின்ற இளைய சமுதாயமும் ஏற்க வேண்டுமென்பதே அனைவரினதும் அவா ஆகும்.

மன அழுத்தமும், பரபரப்பும் நிறைந்த இன்றைய நமது உலக வாழ்வினால் நமது நரம்புகள் மென்மையை உணரும் தன்மையை இழந்து கடினமாகி விட்டன. வயதானவர்களாக மாறுகின்ற போதும் உலகால் பந்தாடப்படுகின்ற போதும் கடினமானவர்களாகி விடுகின்றோம். அதனால் நம்மைச் சுற்றி தெள்ளத்தெளிவாக நிரந்தரமாக நடைபெறுகின்றவற்றை கவனிக்காமல் போகின்ற நிலைக்கு நாம் வந்து விடுகின்றோம். எனினும் சில வேளைகளில் மனிதத்துவம் தன் இயல்பை நிலை நாட்டுகின்றது. அப்போது இந்த அன்றாட நிகழ்வுகளுள் சிலவற்றைப் பற்றிச் சிந்திக்கவும் வியந்து நிற்கவும் செய்கின்றோம். இவ்வாறு வியந்து நிற்பது தான் ஆன்மீக ஒளி பெறுவதற்கான முதற் படியாகும். ஆதலால் இன்றிருக்கின்ற இளைய இந்து சமுதாயமே நாம் முழுமையான இந்து தர்மத்தின் படி ஒழுகு வதற்கும் அத்தோடு உயர்ந்த உன்னத நிலையை அடைவதற்கும் ஆக்குறைந்த முதற்படியிலாவது ஏறுவோமாக..........

*"மேன்மைகொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதத்தை வளர்ப்போம் மதமாற்றத்தைத் தடுப்போம்



வி. மன்மதராஜன், இறுதி வருடம்,
பொறியியற் பீடம்

*"இந்துமதம்"* என்ற பதம் இன்று பல இந்துக்களுக்கு கேள்விப்பட்ட ஒரு ப(ம)தமாக மாறி யிருக்கின்றது என்றால், இல்லையென்றா மறுக்க முடியும். *"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது அதனிலும் அரிது இந்துவாகப் பிறப்பது அரிது"* இதுதான் உண்மை. மறுக்கவோ மறைக்கப் படவோ முடியாத உண்மை.

ஆதியிலே ஆழமாக தனது ஆணிவேரை செலுத்தி நாருரு வேர்களை பக்கமெல்லாம் பரப்பி அன்றும் இன்றும் என்றும் புதுமையாய்க் காட்சி தருவது இந்து மதம். அகிலமெல்லாம் பரந்து விரிந்து அனைத்து மக்களுக்கும் நடுநாயகமாக விளங்குவதுடன் அறிவு பூர்மான இந்(து)த மதம் அழியாத பொருள் ஒன்றே என்று உரத்துக் கோஷமிடுகிறது.

*"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"* என்றும் *"எம்மதமும் சம்மதம்"* என்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உயரிய சிந்தனையை உலக வாழ் மக்களுக்கு உணர்த்தி நிற்பது இந்து மதம். போர் முனையில் வாள் முனையையோ, அம்பு முனை யையோ நம்பி இந்து மதம் வாழ்ந்ததில்லை. நேர்மையான துணிவான வாதத்திறமையினாலேயே இந்து மதம் வரலாற்றைத் தொட்டது. தொட்டுக் கொண்டிருக்கிறது.

கீதையில் கிருஷ்ண பரமாத்மா உபதேசி த்ததைக் கொஞ்சம் கிட்ட எடுத்துக் கொள்வோம். *"முத்துக்களைக் கோர்த்து நிற்கும் இழை போல் எல்லா மதங்களிலும் நான் இருப்பேன். மனத இனத்தை புனித படுத்தும் எல்லா மார்க்கத்திலும் நான் பிரசன்னமாக இருப்பேன்."* இப்படியான உயரிய பொதுத்தன்மை நிரம்பிய, கருத்துக்கள் பொதிந்த வார்த்தைகளை வேறு எந்த மதத்திலும் காட்ட முடியுமா? இவ்வாறான சிறப்புக்கள் மதத்தை ஒருபக்கம் சிறப்பித்துக் கொண்டிருக்க மறுபக்கம் அறுபத்துநான்கு கலையம்சங்களுக்கு உயிர் கொடுத்து இயற்கையோடு இணைந்து பின்னிப் பிணைந்து கலை கலாச்சாரத்தை வளர்க்கும் அன்பான வாழ்வை, அறமான வாழ்வை, இன்பமான வாழ்வை, இனிய வாழ்வைப்பற்றி எடுத்தியம்பி நிற்கிறது. இவ்வாறான இந்து மதத்தை விட்டு விலகியிருப்பது அல்லது வேறு மதத்தில் இணைவது இந்து மதத்தின் குறையல்ல, இன்னோர் மதத்தில் இணைவோரின் மடமை., அறியாமை, புரியாரமை, இவற்றை விட வறுமை.

## வளர்ப்போம் மதத்தை

இந்து(த) மதத்தின் தத்துவங்களே தெரியாது பல பேர் இந்துவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்து மதத்தை வளர்ப்பதற்கு அடிப்படைத் தத்துவங்கள் சிலவற்றையாவது தெரிந்து அதன்படி ஒழுக வேண்டும். உதாரணமாக *"விபுதி"* என்பது இந்துக்களின் அடிப்படைச் சின்னங்களில் ஒன்று. இதை எப்படி நெற்றியில் புச வேண்டும் என்று கேட்டால் 5 வீதமானவர்கள் கூட சரியான வழியை சொல்வார்களோ தெரியாது. அந்த நிலை இந்து மதத்திற்கு. விபூதியை வலது கையின் ஐந்து விரல்களினாலும் தொட்டு அண்ணாந்து பார்த்து சிவ சிவ என்று உச்சரித்து நெற்றியின் இடது பக்கத்தி லிருந்து வலது பக்கம் வரை மூன்று முறை பட்டையாக பச வேண்டும். தீட்சை கேட்டவர்கள் நடு மூன்று விரல்களினால் மூன்று குறி போன்று புச வேண்டும். இருந்து கொண்டோ, நடந்து கொண்டோ, விபுதியை கீழே சிந்திக்கொண்டோ புசுதல் கூடாது. புசி முடித்தபின்னர், கையில் ஏந்தியுள்ள விபுதியை நிலத்தில் சிந்த விடுதல், ஆலய சுவர்களில் புசுதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். நடு நெற்றியில் தடிப்பாப ஒரு கோடு போடுதல் இந்து மதத்தின் தடிப்பையே (வலிமையை) குறைக்கின்றது.

இரண்டாவது *"ஆடை"* இதுவும் ஒரு அடிப்படைத் தேவை தான். அதற்காக அலங்கோலமாகவா? ஆண்களுக்கு வேஷ்டியும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் பெண்களுக்கு (சிறுமிகளுக்கு) பாவாடை தாவணியும், பெரிய பெண்களுக்கு சேலையுமென ஆலயத்திற்கு வருவதற்கான ஆடைகளாக அங்கீக ரிக்கப் பட்டுள்ளன. தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு, சுதந்திரம் என்ற பேரில் அலங்கோலமான ஆடைக ளுடன் ஆலயத்திற்கு வர முடியாது. ஏற்ற இடத்திற்கு ஏற்ற ஆடைகள் அணிவதன் மூலம் தமக்குத் தாமே ஒரு அந்தஸ்த்தை சமுதாயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இவையிரண்டும் தனிப்பட்ட மனித விழுமிய ங்கள் கூட்டாக சேர்ந்து இந்துமதம் சித்திரவதை செய்யப்படும் சந்தர்ப்பம் ஒன்றைப் பார்ப்போம். விசேடமாக உற்சவ நாட்களில் சுவாமி திருவீதியுலா வருவது சிறப்பான கண்கொள்ளாக் காட்சியாகும். சுவாமி முன்னால் வந்துகொண்டிருக்க பின்னால் பஜனைப்பாடல்கள் பாடி பக்திப்பரவசமாக வர வேண்டியது தான் முறையாகும். ஆனால் இப்போது "*யானை வரும் முன்னே மணியோசை வரும் பின்னே*" என்பது போல முன்னாலே நாத ஸ்வர த்தில் சினமாப்பாடல்கள் கொட்டி முழங்கிட பின்னாலே இறைவன் கம்பீரமாக வீற்றிருந்து அருள்பாலிக்க வருவார். இது இந்து மதத்திற்கு எழுதப்படாத சாபமா? கடந்த வருடம் தலைநகரில் நடைபெற்ற ஒரு ஆலய தேர் உற்சவத்தின் போது வேற்று மத நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார், '*சுவாமி வீதியுலா வரும் போது சினமாப்பாடல்கள் வாசிக்கிறார்களே? ஏன் உங்கள் சமயத்தில் பக்திப்பாடல்கள் இல்லையா? அல்லது சினிமாப் பாடல்களுக்கு தான் பக்தி கூடுமா?*" எனக் கேட்டார். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. மறுமளியாது நின்று விட்டேன். அந்த திருவிழாவில் எத்தனையோ பக்தர்கள் பக்திப்பரவசமாக இருக்கின்ற வேளையிலே இவ்வாறான சில விடயங்கள் மதத்தைப்பற்றி தப்பான அபிப்பிராய ங்களைத் தோற்றுவிக்கின்றன. முன்னைய காலங் களில் ஆலயங்களில் திருவிழா நாட்களில் சமய அறிவுகளை வளர்க்கும், சமய ஆதாரத் தன்மை களை அறிந்து கொள்ளும் வகையில் நாட்டுக் கூத்துக்கள், வில்லுப்பாட்டுக்கள் என்பன தொடர்ச் சியாக நடத்தப்பட்டன. ஆனால் தற்போது மேலைத் தேய இசைவருந்து என்ற பெயரில் ஆலய முன்ற லில் சினிமாப்பாடல்கள் பாடப்படுகின்றன. இது ஒரு போதும் மதத்தை வளர்க்க உதவப்போவதில்லை.

மேலே என்னால் சுட்டிக்காட்டப்பட்டவை ஒரு சில விடயங்கள் மாத்திரமே. இவ்வாறான பல விடயங்கள் களையாக வளர்ந்து கிளைவிட்டு வேரூன்றி நிற்கின்றன. இவற்றை வேரோடு பிடுங்கி முழுமையாக அழித்துவிட முடியாவிட்டாலும் அழிக்கக்கூடியவற்றை விரைவாகவும், செம்மை யாகவும் அழித்துவிட வேண்டும். அத்துடன் எமது மதம் சம்பந்தமான அறிவுகளை வளர்ந்த சமுதா யத்திடமும், வளரும் சமுதாயத்திடமும் வளர்க்க வேண்டும். ஆனாலும் எமது நாட்டைப் பொறுத்த வரையில் சுதந்திரத்திற்கு முன்னும் சரி, பின்னும் சரி இற்றை வரையுமே உயிர் உடமைகளையே காப்பாற்றிக் கொள்ளமுடியாத தமிழ் பேசும் இந்துப் பெருமக்கள் எமது சமயத்தையும், வழிபாட்டுத்தலங் களையும், கலை கலாச் சாரங் களையும் கட்டிக்காத்து வந்ததை எம்மால் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இந்த இடை வெளியில் தான் வெளியே சென்று விட்டது எமது மதம், கலை, கலாச்சாரம் என்று சொன்னாலும் ஏற்கத்தான் வேண்டும்.

இவற்றை வளர்ப்பதற்கான பெரும் பங்கை ஆலயங்களே கொண்டிருக்கின்றன. ஆலயங்களை நிர்வகிக்கும் நிர்வாகிகள் தங்களைப் பிரபலப படுத்தும் நோக்கிலே இருக்காது சமயத்தை வளர்க் கும் நோக்கில் இருக்க வேண்டும். இவர்களை விட சமயச் சான்றோரும், குருக்கள்மார்கள், அர்ச்சகர்கள் எல்லோருக்கும் முக்கிய பங்கு உண்டு. அந்த வகையில் ஆலயங்களில் தேவாரத் திருமுறை வகுப்புக்கள், சமயபாட வகுப்புக்கள் வாரத்திற்கு ஒரு தடவையேனும் எமது மதம் சம்பந்தமான சொற் பொழிவுகள் நடாத்தப்பட வேண்டும். ஒரு முறை வேற்று மதங்களை எடுத்து நோக்கினால், அந்தந்த மதகுருமார்களே தங்களது மதங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எமது இந்து குருமார்களுக்கு நித்திய, நைமித்திய பூசை, கும்பா பிசேஷக நாட்களில் விசேட பூசைகள், திருமணங்கள், பிறப்பு, இறப்பு, திவசம், அந்தி யேட்டி, குரு, சாந்தி, சோதிடம் என்று ஏராளமான சமயச் சடங்குகள் உள்ளன. இதற்காக விட்டுவிட முடியாதல்லவா? குருமார்கள் கோயில் நிருவாகத்தி னருடன் சேர்ந்து மேல் மட்டத்திலான ஆய்வுகள், கருத்தரங்குகள், பிரசங்கங்கள், சொற்பொழிவுகள், நூலாக்கங்கள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும். முடிந்த வரையில் எமது மதம் சம்பந்தமான பாடல்கள், கீர்த்தனைகள் என்பவற்றை ஆலயச் சூழலில் ஒலிக்கச்செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *தடுப்போம் மாற்றத்தை*

மதமாற்றம் என்பது பெற்றெடுத்த தாய் உயிரோடு இருக்கும் போது வேறோர் தாயைத் தேர்ந்தெடுப்பது போன்றதாகும். அறியாமையும், வறுமையும் சேர்ந்து இதற்கு வழிவகுக்கின்றது எனலாம். முன்னைய காலங்களில் வெளிநாடுகளுக்கு வியாபார நோக்கில் விஜயம் செய்த மேலைநாட்டவர்கள் மக்களுடைய வறுமையைத் தமது ஆயுதமாகப் பயன்படுத்தி அவர்களை மதம் மாற்றினார்கள். சில மக்கள் வலுக்கட்டாயமாக வறுமைப்பிடிக்குள் தள்ளப்பட்டு மதம் மாற்றப்பட்டனர். இன்று எமது மக்களுக்குத் தேவை சாதி, இன பேதங்களில்லை. இந்து மக்களுடைய வறுமையைப் போக்க வேண்டும். பசியைப் பறிக்க வேண்டும். ஆலயங்களை அளவுக்கு அதிகமாக அலங்கரிப்பதை நிறுத்தி விட்டு அதிகமாக சேரும் பணத்தை வறிய மக்களை காப்பாற்றும் விதத்தில் பயன்படுத்த வேண்டும். இதில் இந்து மதப் பெரியார்கள், செல்வந்தர்கள், இந்து மதஸ்தாபனங்கள், முக்கியமாக இந்து சமய விவகார அமைச்சு என்பன முக்கிய கவனம் எடுக்க வேண்டும். இவற்றை விட ஊடகங்கள் பெரும் பங்கை ஆற்ற வேண்டும்.

இந்திய தொலைக்காட்சிகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் கிறிஸ்தவ மதம் சம்பந்தமான போதனைகள் உலகளாவிய ரீதியில் ஒளிபரப்பப்படுகின்றன. ஏன் எமது நாட்டில் இஸ்லாம் மதம், பௌத்த மதம்(பௌர்ணமி) சம்பந்தமான மத போதனைகள் நடாத்தப்படுகின்றனவே. இந்து மதம் சம்பந்தமாக ஒருநாளாவது போதனை இடம் பெறுகின்றதா? ஊடகங்களில் இந்து சமய பண்டிகை நாட்களில் சினிமா மோகத்தில் சினிமா நிகழ்ச்சிகளே ஒளிபரப்பப்படுகின்றன. தொடர் நாடகங்களே தொடர்ச்சியாகப் போடப்பட்டு தொடர்ச்சியாக அழவைப்பதை நிறுத்திவிட்டு மத வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட இந்து மத ஸ்தாபனங்கள், சர்வதே இந்து மத குருபீடங்கள் முன்வர வேண்டும். *"உன்னை நீ விளம்பரப்படுத்துவதை நிறுத்து மதத்தை வளர்க்க முயற்சி செய், மதம் மூலம் நீ விளம்பரப்படுவாய்."* இது எனது தாழ்மையான கருத்து. எனவே இந்துக்களாகிய நாம் எமது மதத்தை வளர்க்க எம்மாலியன்ற முயற்சிகளை எடுப்போம்.

"இந்துவாக வாழ்வோம்
இந்து தருமம் காப்போம்"

*"புச்சியத்துக்குள்ளே – ஒரு
இராட்சியத்தை ஆண்டு கொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன் – அவனை
புரிந்து கொண்டால் அவனே இறைவன்".*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத தத்துவங்களும் சாஸ்த்திரங்களும்



ஜெ. நிவேதன்.,
2ம் வருடம், பொறியியற் பீடம்

நாம் இந்துக்களாகப் பிறந்தது எமது முன் பிறவிகளில் நாம் செய்த நல்வினைகளின் காரண மாகவே. எமது இந்து மதமாகிய சனாதன தர்மமே உலகின் தெளிவான, இயற்கையான, ஆதாரமான ஆன்மீக நெறியில் மனிதனை வழிநடத்துகின்றது. இது எவராலும் எப்போதும் தோற்றுவிக்கப்படாதது. அவ்வப்போது மகரிஷிகளாலும், அவதார புருஷர் களாலும், மகா பக்தர்களாலும் தான் அழியாது பாதுகாக்கப்படுகின்றது.

இந்து தர்மத்தின் ஆதாரமாக ரிக், யசுர், சாம, அதர்வா ஆகிய 4 வேதங்கள் விளங்கு கின்றன. எந்த வேதாந்த, சித்தாந்த நூல்கள், உபநிஸத், புராணம், தர்ஷண நூல்களை எடுத்துக் கொண்டாலும் அவை இந்த வேதத்தினை அடிப் படையாகக் கொண்டே எழுந்தவையாகும். ஆதியில் ஒன்றாக இருந்த வேதத்தை பகவான் வேத வியாசகர் நான்காக வகுத்து தனது சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். ஆக வேதத்தில் எது முதலில் தோன்றியது என்ற பேச்சுக்கே இடமில்லை. இவ் வேதத்திற்கும் ஆதி, அந்தம் எதுவும் இல்லை என்றே அவதார புருஷர்கள் கூறியுள்ளார்கள். வேதம், ஆதியில் மிகப் பரந்திருந்தது. காலத்தின் போக்கில் அதன் பெரும் பகுதி அழிந்து இன்று எஞ்சியுள்ளது ஒரு சிறு பகுதியே.

இவ்வேதம் சம்திதா, பிராக்மண, ஆரண் யஹ, உபநிஷத் என நான்காக வகுக்கப்படுகிறது. இதில் சம்கிதைகள் மந்திரங்கள் எனவும் அழைக்கப் படுகின்றன. இவற்றில் முக்கியமானவையாகவும், ஆழ்ந்த தத்துவ ஆராய்ச்சிக்குரியவையாகவும் விள ங்குபவை உபநிஷத்கள். இவை இறைவனால் பல்வேறு மகரிஷிகளுக்கு அவர்களது ஆழ்ந்த தியான நிலையில் வெளிப்படுத்தப் பட்ட பேருண்மை களாகும். இவற்றுள் 12 மிக முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன.

முதலாவது உபநிஷத் ஆகிய ஈசா உப நிஷத் தனது முதலாவது பாடலாகிய

*"ஓம் பூர்ணமத பூர்ணமிதம் பர்ணாற் பூர்முதச்சதே /*
*பூர்ணஸ்ய பூர்ணமாதாய*
*பூர்ணமேவாவஸிஷ்யதே //"*

உடன் ஆரம்பிக்கின்றது. ஈஷா உபநிஸத் பருமனில் சிறியது. ஆனால் சாதாரண ஆன்மீக நிலையிலுள்ள எம்போன்றவர்களால் அது கூறும் ஆழ்ந்த உண்மைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாது. இது அனைத்து உபநிஷத்க ளினதும் சாரமாக விளங்குகின்றது. இவ்வுபநிஷ த்தின் மேற்கூறிய முதற்பாடல் அனைத்து உபநிஷத் சாரத்தையும் தன்னுள் அடக்கியதாக விளங்குகின்றது. இதன் பொருள்

"ஓம், பூர்ணமே அது அனைத்தும், புரணமே இது அனைத்தும். புரணம் புரணத்திலிருந்து பிறந்து ள்ளது. புரணத்திலிருந்து புரணத்தை எடுத்தும் எஞ் சியிருப்பது புரணமே."

இந்த உபநிஷத்கள் இறைவனையடையும் வழியை மட்டுமன்றி, மனிதனது கடமைகள் அவன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள் போன்றவற்றையும் வகுத்துச் சென்றுள்ளன. அத் வைத தத்துவத்தை எடுத்து விளக்கிய ஆதிசங்கரர் 10 உபநிஷத்களுக்கு விளக்கவுரை எழுதியுள்ளார். எமது இந்துக்கடவுளின் உருவங்கள் யாவும் மகா முனிவர்களுக்கு தமது ஆழ்ந்த அனுபுதி நிலையில் இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவையாகும். அந் நிலையில் அவர்கள் அந்த உருவத்தின் மகிமை யையும், தன்மையையும் ஒரு ஸ்தோத்திரத் தொகுதி யாகப் பாடியுள்ளனர். இவ்வொவ்வொரு தொகுதி களும் ஒவ்வொரு உபநிஷத்களாகக் கொள்ளப் படுகின்றன. உதாரணமாக அர்வரிஷி ஸ்ரீமந் நாராய ணனது திவ்விய தரிசனத்தை விழித்து உருவாக் கியது *"நாராயண உபநிஷத்"*

உபநிஷத்களில் சில பரப்பிரமத்தை ஸ்ரீமந் நாராயணன் என்று அழைக்கின்றன. சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபிஷதங்கள் பரப்பிரமத்தை சிவன் அல்லது ஹரன் என்று அழைக்கின்றன. ஆயினும் இவை இரண்டும் உண்மையே. இது ஒரு முரண்பாடல்ல. சிவனும் ஹரியும் பரப்பிரம்மத்தின் உருவங்களே. பிரம்ம மாகிய களிமண்ணால் ஆகிய பானை, சட்டி போன் றவையே அவனது வடிவங்கள். ஆகவே சிவன், விஷ்ணு, கணபதி, முருகன், சக்தி யாவும் அந்த ஒன்றான பரப்பிம்மத்தையே குறிக்கின்றது. உருவம், குணம், குறிகளற்ற நிர்குண பிரம்மத்தை மனிதனால் உணரமுடியாது. இதனால் தான் உயிர்களுக்காக பரப்பிரம்மம் தான் மாயையுடன் சிறிது கலந்து மேற்கூறிய இறை உருவங்களாக மாறி அருள் புரிகின்றது. ஆகவே இறைவன் உருவம், குணம் எதுவும் அற்றவன் என்பதும் உண்மையே, உருவம் உள்ளவன் என்பதும் உண்மையே. இறைவனது உருவங்கள் உருவ வழிபாடு சந்தேகத்திற்கிடமின்றி உண்மையா னவையே.

இந்து மதத்தில் அத்வைதம், விஷிஷ்டாத் வைதம், துவைதம் ஆகிய மூன்று பிரதான கொள கைகள் உள்ளன. இவை ஆத்மானுபூதியை அடைய வெவ்வேறு வழிகளினூடாக அழைத்துச் செல்கி ன்றன.

துவைத கொள்கையை வலியுறுத்தியவர் மத்வாச்சாரியார். இவரது கொள்கைப்படி ஜீவாத்மா வும் (ஜீவன்), பரமாத்வாவும் (இறைவன்) வேறா னவை. பரமாத்மா வரம்புகள் எதுவுமற்றது, ஜீவாத்மா வரையறைகளுக்குட்பட்டது. ஆத்மா தனது கர்ம நாசமடைய முக்தி பெறுகின்றது. முக்தியடைந்த ஆத்மா ஆண்டவனிடம் சரிசம நிலையை அடை வதில்லை. ஆயினும் அங்கு அது பேரின்பத்தில் திளைத்திருக்கின்றது. என்று ஸ்ரீமத்வர் கூறுகின்றார். இவர் ஸ்ரீமந்நாராயணனே பரப்பிரம்மம் (பரமாத்மா) எனறு கூறுகின்றார். மத்வர் இங்கு கூறிய முக்தி நிலையிலும் சற்று மேம்பட்ட முக்தி நிலையை விஷிஷ்டாவைதம் கூறயுள்ளது.

விஷிஷ்டாத்வைதத்தை நிறுவியவர் ஸ்ரீ ராமா னுஜாச்சாரியார். இது மிகப்பழைமையானது. இவரது கொள்கைப்படி பரப்பிரம்மம் எனும் தீப்பிழம்பில் ஆன்மா ஒரு தீப்பொறி போன்றது. அதாவது பிரம்மம் ஒரு மாதுளங் கனி போன்றது. ஒவ்வொரு மணியும் தனித்த ஆன்மாவுக்கு ஒப்பானது. இவர் கூறுகின்றார் *"இறைவா நான் நீயல்ல, நான் உன்னில் ஒரு பகுதி"* ஸ்ரீமந்நாராயணனே பிரம்மம் என்று ஸ்ரீ ராமானுஜர் கூறுகின்றார். இவர் இறைவன் சர்வ வல்லமை யுள்ளவன், அவன் எங்கும் எதிலும் நிறைந்துள்ளான் என்று கூறியுள்ளார். ஆன்மாக்கள் தமது இறுதியான முக்தி நிலையில் இறைவனை அடைகின்றன. இங்கும் ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றேயென்ற கொள்கை மறுக்கப்படுகின்றது. விஷிஷ்டாத்வைதம் துவைதத்திலும் ஒரு படி மேலே அழைத்துச் செல்கிறது. அத்வைத தத்துவம் இறுதியான அறு தியான ஆத்மானுபுதியை விபரிக்கின்றது.

அத்வைத தத்துவத்தைப் போதித்தவர் ஸ்ரீ ஆதிசங்கரர் இவர் சிவபெருமானது அம்ச அவதாரமாவார். அத்வைத கொள்கை இறுதியா னதும் அறுதியானதும் ஆழமானதுமாகும். இதுவே இறுதியான (Ultimate) பரமார்த்திக நிலையை விபரிக்கி ன்றது. இக்கொள்கையே உபநிஷ தங்களில் ஆழப்புதைந்து கிடந்த உண்மையாகும். ஆதிசங்கரர் இயற்றிய *"விவேக சூடாமணி"* அத் வைத தத்துவத்தின் தலை சிறந்த நூலாக விளங்கு கின்றது. அத்வைத தத்துவத்தை சங்கரரின் பின் வரும் செய்யுளிலிருந்து விளங்கிக் கொள்ள முடி யும்.

*"பிரம்மம் சத்யம் ஜகத்மித்யா ஜீவோ பிரம்மைவ நாபர் முழுமுதற்பொருளாம் பிரம்மனே உண்மைப்பொருள் (சத்யம்) இவ்வுலகம் நிலை யில்லாதது. ஜீவன் அல்லது தனித்த ஆத்மா பிரம்ம த்திலிருந்து வேறுபட்டதல்ல"* அத்வைத தத்துவ த்தின் சாரம். அதாவது எம்முள் உறையும் ஆத் மாவே இறைவன். அந்த ஒரே பொருளாகிய பிரம்மம் - ஆத்மாவே எல்லா உயிரினுள்ளும் உள்ளது. தானே பிரம்மம் (சிவலிங்கம்) அதுவே எல்லா உயிர் களும் என்ற பேருண்மையை ஒருவன் (ஆத்மா) உணரும்போது அது பரிபுரன கைவல்யநிலையை அடைகிறது. இங்கு என்றும் ஓரேயொரு உண்மைப் பொருளே எஞ்சியுள்ளது அதுதான் பிரம்மம் – ஆத்மா,

**"தத்துவம் அஸி"** – நீ அதுவாகின்றாய்

என்ற மகாவாக்கியம் இந்நிலையை அழகாக கூறுகின்றது, சிவலிங்கம் இந்த நிற்குணப் பிரம்மனைக் குறிக்கும் உன்னத அடையாளமாகும். அத்வைத தத்துவம் ஆத்மீகத்துறையில் ஓரளவு முன்னேறிய நிலையல் உள்ளவர்களாலேயே புரிந்து கொள்ளக்கூடியது. இங்கு உருவக்கடவுள் என்ற பேச்சேயில்லை. இறுதியானதாகிய நிற்குணப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மனையே அத்வைதம் ஏற்றுக்கொள்கின்றது. ஆயினும் ஆதிசங்கரர் முற்றும் அறிந்த மகாஞானி, அவர் இறைவனின் சகுண (உருவமுடைய) நிற்குண (உருவமற்ற) இரு நிலைகளையும் ஏற்றுக் கொள் கிறார். இதற்கு ஆதாரமாக அவர் சிவன், சுப்ர மண்ணியர், தேவி, விஷ்ணு, கணபதி முதலிய இறைவனின் வடிவங்களுக்கு இயற்றிய ஸ்தோத் திரங்களை கூறலாம்.

துவைதம், விஷிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்றும் உண்மையானவையே. ஆன்மீகத்தில் ஒவ்வொருவரது தகுதிக்கும் ஏற்ப(நிலை) இக்கொள்கை பின்பற்றப்படுகின்றன. துவைத, விஷிஷ்டாத்வைத கொள்கைகள் எல்லோராலும் ஓரளவு விளங்கக்கொள்ளக் கூடியவையாக விளங்குகின்றன. சிவாத்வைதம், சைவசித்தாந்தம் என்பன விஷிஷ் டாத்வைதத்திற்கும், அத்வைதத்திற்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள இன்னொரு கொள்கைளாகும். சைவ சித்தாந்தத்தின் படி ஆன்மா முக்தியடையும் போது அது தான் சிவனுடன் இரண்டறக் கலக்கின்றது என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது. இந்து மதத் தில் அடுத்து நோக்கக்கூடியவை 6 தரிசன நூல்க ளாகும். இந்த 6 தரிசன நூல்களும் பழம்பெரும் முனிவர்களால் ஆக்கப்பட்ட வெவ்வேறு வகைப்பட்ட கடவுள் தத்துவங்களாகும். இவை வெவ்வேறு கொள்கைளை வலியுறுத்துகின்ற போதும் இவை இறுதியாக ஒரே இடத்திற்கு செல்லும் பாதையையே காட்டுகின்றன.

சாங்கியம், நியாயம், வைஷேஷிகம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் ஆகியவை முறையே கபில முனிவர், கௌதம மகரிஷி, கணாத மகரிஷி, பதஞ்சலி முனிவர், ஜெய்மினி முனிவர், பகவான் வேதவியாசகர் ஆகியோரால் ஆக் கப்பட்டுள்ளன. இந்நூல்கள் ஆத்மீக ஆராய்ச்சியில் மிக மிக முக்கியமான ஆழ்ந்த தத்தவங்களை உள்ளடக்கியுள்ளதுமான ஆத்மீக அறிவுடையோர். இவற்றுக்கு பல அறிஞர்களும் முனிவர்களும் எழுதிய விளக்கவுரைகளின் உதவியுடன் இத்தத்து வங்களை ஓரளவு மேலோட்டமாக புரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீமத் பகவத்கீதை எந்த ஒரு இந்துவும் கட்டாயமாக படித்து பின்பற்ற வேண்டிய ஒரு உன்னத நூலாகும். அனைத்து வேத உபநிஷத் களின் கருத்துக்களையும் மகாவிஷ்ணுவின் புர்ணா வதாரமாகிய கிருஷ்ண பரமாத்மா சுருக்கமாகவும், எல்லோருக்கும் ஓரளவு புரிந்து கொள்ளக்கூடிய முறையில் பகவத் கீதையாக அமைத்துள்ளார். இதில் ஒரு மனிதனுக்குத் தேவையான சகல உப தேசங்களும் அடங்கியுள்ளன. கீதையின் பெருமை சொல்லற்கரியது. இதைப் படிப்பதால் விளையும் நன்மையும் அளப்பரியது. கீதையை 18 அத்தியா யங்களாக வகுத்துள்ளார். கீதை உபதேசிக்கப் பட்டது, அர்ச்சுனனுக்கு போர்க்களத்தில் ஆயினும் அது உண்மையில் பகவானால் உலகம் முழு வதுக்குமாக உலக நன்மைக்காக அருளப்பட்ட பொக்கிஷமாகும்.

**ஸ்ரீசிவார்ப்பணமஸ்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சியில் இருந்தே ஆரம்பி



பூ.சோதிநாதன்,
விரிவுரையாளர், முகாமைக் கல்வித்துறை.

இரண்டு பன்னிரு திருமுறைகள் இருக்கின்றன. சிவனடியார்கள் போற்றும் சைவத் திருமுறை ஒன்று, முருகன் அடியார்கள் போற்றும் முருகவேள் பன்னிரு திருமுறைகள் மற்றது. சைவத்திருமுறைகளைப் பன்னிரண்டாகத் தொகுத்ததில் நம்பியாண்டார் நம்பிக்குப் பெரும் பங்கு உண்டு. முருகவேள் பன்னிரு திருமுறையைத் தொகுத்தவர் செங்கல்வராய பிள்ளை ஆவார்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டையும் பாடியவர்கள் இருபத்தேழு ஆசிரியர்கள் ஆவர். முதல் மூன்று திருமுறைகளும் சம்பந்தராலும், நான்கு முதல் ஆறு வரை உள்ள திருமுறைகள் அப்பராலும், ஏழாந்திருமுறை சுந்தரராலும் அருளப்பட்டன. மாணிக்கவாசகர் எட்டாந் திருமுறையான திருவாசகம், திருக்கோவையார் என்பவற்றைப் பாடி அருளினார். திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துரத்தி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருஷோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பது அடியார்களால் ஒன்பதாந் திருமுறை பாடி அருளப்பட்டது. திருமந்திரம் எனும் பத்தாம் திருமுறையைத் திருமூலர் பாடி அருளினார். திருவாலவுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவ நாயனார், கல்லாட தேவ நாயனார், கபில தேவ நாயனார், பரண தேவ நாயனார், இளம் பெருமாள் அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி எனும் பன்னிருவர் பதினோராம் திருமுறையைப் பாடினர். பன்னிரண்டாந் திருமுறையான திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தை பாடியவர் சேக்கிழார் ஆவார்.

சைவத் திருமுறையை பின்பற்றி முருகவேள் பன்னிரு திருமுறையைச் செங்கல்வராய பிள்ளை தொகுத்தார். அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ் பாக்கள் அனைத்தும் முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், பழநி, சுவாமி மலை, குன்றுதொறாடல், பழமுதிர்ச்சோலை, ஆகிய ஆறுபடை வீட்டுத் திருப்புகழ்ப் பாடல்கள் முதல் ஆறு திருமுறைகளாகவும், ஏனைய தலங்களின் திருப்புகழ்ப் பாடல்களும், பொதுத்திருப்புகழ்ப் பாடல்களும் ஏழாந்திருமுறையாகவும் அமைந்துள்ளன. சைவத்திருமுறைகளில் முதல் ஏழு தேவாரம் போல், இங்கு முதல் ஏழும் திருப்புகழ்கள் ஆகும். திருவாசகத்திற்கு இணையான கந்தரலங்காரமும், அகப்பொருள் பொதிந்த திருக் கோவையாருக்கு நிகரான கந்தரந்தாதியும் எட்டாந் திருமுறையாகும். திருவிசைப்பாவைப் போன்று இசைப்பாடலான திருவகுப்பு ஒன்பதாந் திருமுறையாகும். திருமந்திரத்துக்கு ஒப்பான மந்திர நூலாகக் கந்தரநுபூதி அமைக்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா முதலான பழைய முருகன் அடியார்கள் பாடியவற்றைத் திரட்டிப் பதினொராந் திருமுறை அமைக்கப்பட்டுள்ளது. தேனூர் வரகவி சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் பாடிய சேய்த்தொண்டர் புராணம் பன்னிரண்டாந் திருமுறையாக அமைந்துள்ளது.

மேற்கூறியவற்றுள் எட்டாந் திருமுறைகளாக உள்ள மாணிக்கவாசகருடைய திருக்கோவையாரும், அருணகிரிநாதருடைய கந்தரலங்காரமும் மிகவும் கடினமான நடையில் அமைந்த அகப்பொருள் பாடல்களாகும். திருக்கோவையாரை சிவனடியார்களில் சிலரும், கந்தரந்தாதியை முருகடியார்களில் சிலரும் மட்டுமே பயன்படுத்துகின்றனர். இவற்றின் பயன்பாடும், புகழும் குறைந்ததற்கு காரணம் இவற்றில் காணப்படும் கடினமான இலக்கியநடையாகும். திருவாசகமும், கந்தரலங்காரமும் மிக எளிய நடையில் உள்ளன. சிவனடியார்கள் பலர் திருவாசகத்தையும், முருகன் அடியார்கள் பலர் கந்தரலங்காரத்தையும் தமது நித்திய பாராயண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாகக் கைக்கொள்ளுகின்றனர். இவர்களில் சிலர் இந்நூல்களில் உள்ள பாடல்கள் அனைத்தையும் மனப்பாடம் பண்ணி வைத்திருக்கின்றனர். இந்த இரண்டு நூல்களுக்கும் இடையே பல அம்சங்களில் ஒற்றுமையுண்டு. அந்த ஒற்றுமைகளுள் ஒன்றான உயர்ந்த சாதனை முறையையே இங்கு கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

சாதனை முறை எதற்காக தேவை என்னும் ஒரு வினா எழுவது இயற்கை. மனித வாழ்க்கை அவ்வப்போது சிறு சிறு இன்பங்களைத் தருகின்ற போதும் துன்பம் மிகுந்தது என்பதை எல்லோரும் உணர்கின்றனர். துன்பங்களை நீக்கி இன்பங்களை மட்டுமே பெற மனித மனம் அவாவுகின்றது. அதனால் வாழ்க்கை எல்லோருக்கும் மிகப்பெரும் போராட்டமாகின இன்பங்களும் மாயை ஆகி ஏமாற்றி விடுகின்றன. ஆனால் சற்று ஆழ்ந்து கவனித்தால் துன்பங்கள் இன்றி இன்பங்களும், இன்பங்கள் இன்றி துன்பங்களும் இருக்க முடியாது என்பது தெரிய வரும். இவை ஒன்றில் இருந்து மற்றையது பிரிக்க முடியாத என்பது தெரிய வரும். இவை ஒன்றில் இருந்து மற்றையது பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளன.

துன்பங்கள் மனிதருக்கு ஒரு செய்தியை உணர வைக்கின்றன. துன்பங்களை நீக்கிக்கொள்ள முயற்சி செய்யுங்கள் என்பதே அந்தச் செய்தியாகும். துன்பங்களை நீக்க வேண்டுமாயின் அவற்றொடு இணைந்துள்ள இன்பங்களையும் நீக்கியே ஆக வேண்டும். அனால் மனதிற்கோ இன்பங்களை விட்டுப் பிரிய மனம் இல்லை. இந்த இன்ப துன்பங்கள் என்ற இரட்டைகளை விடுத்து ஓடும் மனத்தை நிறுத்தி ஆனந்தம் காண வழி காட்டுவதே சாதனை ஆகும். எல்லாச் சமயங்களுமே அந்த ஆனந்தத்தை அடைய வெவ்வேறு வழிகளை, சாதனை முறைகளை காட்டுகின்றன. ஆனால் அவை கூறும் மிக உயர்ந்த முடிவான நிலை முத்தி, வீடுபேறு, பேரானந்தம், நிர்வாணம், சாத்தோரி என்னும் ஒரே விடயமாகும்.

சாதனைமுறைகள் பலவாக இருப்பதற்கு காரணம், ஒவ்வொருவரின் மன அமைப்பும் வேறாக இருப்பதே ஆகும். ஒரு அருளாளர் தனது நூலிலேயே பல சாதனை முறைகளை எடுத்தியம்பக் காரணம் வெவ்வேறு மனிதருக்கு வெவ்வேறு சாதனை முறை பொருத்தமாகும் என்ற நோக்கிலே தான். சைவ சித்தாந்தத்திலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகளையும் அவற்றை மேலும் சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்பன முதலாக ஞானத்தில் ஞானம் ஈறாக பதினாறு சாதனைகளைக் கூறுவர். ஞானத்தில் ஞானமான பதினாறாவது சாதனையினால் பரமுத்தியும், ஏனையவற்றினால் பதமுத்தியும் கிட்டும் என்பர். பதமுத்தி என்பது இந்திரன் முதலான பதவிகளைத் தரும் குறைவான முத்தியென்றும், பரமத்தி முடிந்த முடிபு என்றும் கொள்வர்.

பேரானந்தம் என்ற பரமுத்தியாகிய இறுதி முடிவை அடையாது விடில் ஏனைய எல்லாம் வெறும் ஆரவாரங்களாகவே இருக்கும்.

*"மனத்துக்கண் மாசிலன் ஆதல்*
*அனைத்து அறன் ஆகுல நீர பிற"*

என்பது திருக்குறள். எல்லா விதமான செயல்களையும் மன மாசுக்களை நீக்கி கொள்வதற்காகவே செய்ய வேண்டும் என்பதையும், அப்படியல்லாத செயல்கள் வெறும் ஆரவாரங்கள் என்பதையும் இக்குறள் விளக்குகின்றது.

விவேகானந்தர் தனது ராஜ யோகம் என்னும் பதங்சலியோக சூத்திர விளக்கத்தில் பின்வருமாறு கூறுகின்றார்,

*"ஒவ்வொரு ஆன்மாவும் உள்நிறைந்த*
*தெய்வத்தன்மையுடையது. உள்ளும்*
*புறமும் நிறைந்திருக்கும் இயற்கையை*
*அடக்கி உள்ளேயுள்ள தெய்வத் தன்மையை*
*வெளிப்படுத்துவதே நோக்கமாகும்.....*
*கொள்கைகளும், சடங்குகளும், நூல்களும்,*
*கோயில்களும், பிறவும் இதற்கு உதவி செய்யும்*
*கருவிகளே".*

பிரபுலிங்கலீலை என்னும் நூலில் இருந்தும், உயர்ந்த சாதனையின் அத்தியாவசியத்தை அறிய ஒரு செய்யுளை இங்கு எடுத்துக் கொள்ளலாம்.

*"உரைசெயிற் பரம ஞானம் ஒன்றுமே முத்திக்கு*
*ஏது சரியை நற்கிரியை யோகம் தாம் ஒரு மூன்றும்*
*ஞானம் மருவுவதற்கு ஏது என்றே மறை புகன்று*
*உரைக்கும் இந்தக் கருவியை பொருள் எண்ணிக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*களிப்பவர் கயவரன்றே''*

மேற்காட்டியவற்றில் இருந்து ஆரவாரங்கள் நிறைந்த சாதனை வழிகளிலேயே காலம் முழுவதையும் விரயமாக்காது பிரதான நோக்கத்தையடைய உயர்ந்த சாதனை முறையையே பின்பற்ற வேண்டும் என்பது வெள்ளிடை மலை ஆகும்.

திருவாசகம், கந்தரலங்காரம், பகவத் கீதை முதலான உயர்ந்த நூல்களில் பல சாதனைமுறைகள் கூறப்பட்டிருக்கும். அவரவர் தமக்கு பிடித்த சாதனை முறையை பின்பற்றலாம். குறைந்த சாதனை முறைகளை உயர்ந்த சாதனை முறைகளுக்கு இட்டுச் செல்லும் வழிகளாகவே அருளாளர்கள் அமைத்துள்ளனர். உயர்ந்த சாதனை முறையைக் கண்டு ஒதுங்குபவர்களுக்கு குறைந்த சாதனை முறைகளாவது கவர்ச்சியாக இருக்கும் என்றும் பின் அவர்கள் உயர்ந்த சாதனையின் பெருமையை உணர்ந்து கடைத்தேறுவர் என்றும் பெரியோர் வழி சமைத்தனர். ஆதலால் உயர்ந்த சாதனை முறையே முடிந்த முடிபான பிரதான நோக்கத்தின் பலனைத் தரவல்லது. திருவாசகமும். கந்தரலங்காரமும் சீவனை தேகமாகிய சிறையை விட்டு நிராதாரமாக ஆக்குவதை உயர்ந்த சாதனை முறையாக காட்டுகின்றன. மனத்தைச் சிதாகாய வெளியில் நிறுத்துவதே இந்தச் சாதனை முறையாகும். இடைவிடாத சாதனையினால் அவ்வாறு நிறுத்திக்கொள்ள முடியும். "எவ்வாறு நீ உன்னை பாவனை செய்கிறாயோ அவ்வாறு நீ ஆவாய்'' என்பது உயர்ந்த எல்லாச் சமயங்களுக்கும் ஒப்ப முடிந்த முடிபு ஆகும். அவ்வாறு சாதனை செய்து மனத்தை நிறுத்தியதும் மனம் தனது சேட்டைகளை விட்டு விடும். மனத்தின் சேட்டைகள் நின்றதும் பிரணாசயம் ஏற்படும்.

பிராணனும், மனமும் ஒன்றோடொன்று தொடர்புள்ள இரண்டு விடயங்கள் ஆகும். பிராணனனைக் கட்டுப்படுத்தும் வரைக்கும் மனம் தனது செயலை நிறுத்திவிடும். ஆனால் அக்கட்டுப்பாட்டை விட்டதும் மீண்டும் மனம் செயற்படத் தொடங்கித் தன் சேட்டைகளில் இறங்கி விடும். இதனால் மூச்சுப்பயிற்சியாகிய பிராணாயாம முறையை, அதாவது கடயோக சாதனையை உயர்ந்த சாதனையாக அருளாளர்கள் கொள்வதில்லை. இதனைத் தெளிவாக அருணகிரிநாதர் தனது கந்தரலங்காரத்தில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றி முறித்து

அருத்தி உடம்பை ஒறுக்கில் என்னாம் சிவயோகம்

என்னும் குருத்தை அறிந்து முகம் ஆறுபடைக்குருநாதன்

சொன்ன கருத்தை மனத்தில் இருத்தும் கண்டீர் முத்தி

கைகண்டதே''.

(துருத்தி – காற்றை உள்ளே இழுக்கும் கருவி, கும்மித்தல் - பிராண வாயுவை உள்ளே நிறுத்தல், சுற்றிமுறித்தல் - பிராணவாயுவை உள்ளே செல்லாது வளைத்துத் தடுத்தல், அருத்தல் - பிராண வாயுவை உள்ளே நிரப்பும் பூரகம் ஆகும்).

எனவே மனத்தை சிதாகாய வெளியில் நிறுத்திக் கட்டுப்படுத்தினால் பிராணசயம் தானாகவே ஏற்படும். மனம் கடினமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் போது சுவாசம் வேகமாக உள்ளதனையும், மனம் மிக அமைதியாக இருக்கும் போது சுவாசம் நடைபெறுவது தெரியாதவாறு மெதுவாகவும் ஒழுங்காகவும் இருப்பதையும் கொண்டு இதனை உய்த்துணரக்கூடும். பிராணசயம் ஏற்படும் நிலையில் ஆன்மாவின் சட்டைகளாகிய பஞ்ச கோசங்களில் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம் என்ற மூன்றும் செயலற்று விடும். அப்போது விஞ்ஞான மய கோசம் செயற்பட ஆரம்பிக்கும். விஞ்ஞானமய கொசம் செயற்பட ஆரம்பிக்க உடம்பு தெய்வத்தன்மையுள்ளதாக மாறி அகண்ட அறிவும் தூய அறிவும் ஏற்படும். விஞ்ஞான கோசம் வரை தான் மனித முயற்சி தேவைப்படுகின்றது. அதற்கு அப்பாலுள்ள ஆனந்த மய கோசமும் அதன் மேலுள்ள நிலையும் தானாகவே வந்து அமையும். யோக சுவாமி *"அங்காலை அது இழுத்து போடும்''* என்ற வாக்கியத்தினால் அதனை விளக்கியுள்ளார். இந்து சமய நூல்கள் எல்லாமே இறைவன் வலிய வந்து ஆட்கொண்டதாகப் பறை சாற்றுவதை இந்த விடயத்தையே அகும்.

திருவாசகத்திலும், கந்தரலங்காரத்திலும் உடல் சிறையை விட்டு சீவனை நிராதாரம் ஆக்க வேண்டும். என்பதற்கு சில எடுத்துக்காட்டுக்களை இங்கே காண்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"இங்கு ஓர் பார்ப்பு எனப்பாணனேன் படிற்று ஆக்கையை விட்டு உனைப் பூணுமாறு அறியேன"*

(பார்ப்பு – குஞ்சு, இங்கு சீவன், படிற்று ஆக்கை – பொய்யுடல்)

*"மலமாக்குரம்பை இது மாய்க்க மாட்டேன்"*

(குரம்பை – உடல்)

*"முடையார் புழுக்கூடு இது காத்து இங்கு இருப்பதாக முடித்தாயே"*

(புழுக்கூடு – புழுக்கள் நிறைந்த உடம்பு)

*"தரிக்கிலேன் காய வாழ்க்கை"*

(தரிக்கிலேன் - பொறுக்க மாட்டேன், காயம் - உடம்பு)

*"உடலிது களைந்திட்டு உம்பர் தந்து அருளு போற்றி"*

(உம்பர் தந்தருளுதல் - சிதாகாண வெளியில் மனதை நிறுத்த அருள் செய்தல்)

*"ஊன் கழியா விதி அடியேனை விட்டுடுதி கண்டாய்"*

(ஊன் கழியா – உடம்பை விட்டு நீங்காத)

*"செடி சேர் உடலைச் செல நீக்கிச் சிவலோகத்தே நமை வைப்பான்"*

(செடி சேருடல் - வினைகள் சேருதற்குக் காரணமாகிய இந்த உடல், சிவலோகம் - கேவல சகலங்களும் தற்போதமும் நீங்கப்பெற்றுத் திருவருள் வியாபகத்துக்கு உள்ளாக ஆன்மா சிதாகாய வெளியில் அடங்கியிருக்கும் இடம்)

*"பாவனை ஆலய கருத்தினில் வந்த பரா அமுது ஆகாதே அந்தமில்லாத அகண்டமும் வந்து நம்முள் அகப்படும் ஆகாதே"*

(பாவனை – தியானம், அந்தமில்லாத அண்டம் - எல்லையில்லாத சிதாகாயப் பெருவெளி)

திருவாசகம் முழுவதிலுமே இவை போன்று மாணிக்க வாசகர் உடல் உள்ள போதே உடல் சிறையில் இருந்து சீவனைப்பிரிப்பதற்குப் போரடிமையையும் அதில் அவர் வெற்றியடைந்தமையையும் பரக்கக் காணலாம்.

இவ்வாறு கந்தரலங்காரத்திலும் இதற்கான சான்றுகளைக் காணலாம்.

"நிர்க்குணம் பூண்டு என்னை மறந்திருந்தேன் இறந்தே விட்டது இவ்வுடம்பு"

"நிணம் காட்டும் கொட்டிலை விட்டு ஒரு வீடு எய்தி நிற்க நிற்கும்"

(கொட்டில் - உடம்பு)

*"ஒரு பூதரும் அறியாத் தனி வீட்டில் உரை உணர்வு அற்று இரு பூத வீட்டில் இராதே என்றேன்"*

(பூதர் - பஞ்ச பூத சம்பந்தமான உடலுள்ள ஆன்மாக்கள், தனி வீடு – தத்துவங்களின் செயலும் போதச் செயலும் நீங்கிய சிதாகாய வெளியில் நிராதரவாக ஆன்மா இருக்கும் இடம், பூத வீடு – பஞ்ச பூதங்கள் முதலாகப் பத்தாறு தத்துவங்களோடும் ஆன்மா கூடி இருக்கும் இந்த உடம்பு)

கந்தரலங்கார நூற்றியெட்டுப்பாடல்களுக்குள் சிலவற்றில் இந்த உயர்ந்த சிந்தனை முறையை அருணகிரி நாதர் விளக்கியுள்ளார். அவரும் அந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டமையை கந்தரலங்காரத்தில் காணலாம்.

கோயில்களிலே செய்யும் நித்திய, விசேட பூசைகளிலே உடலில் சிறைப்பட்டிருக்கும் சீவனை, இயமானன் என மணிவாசகர் கூறும் இந்தச் சீவனை, உடலில் இருந்து வெளியே கொண்டு வர வேண்டும் என்ற விளக்கம் உள்ளது. அந்தக் குறியீட்டை வெறும் கிரியை ஆகச் செய்வதோடு திருப்தி கண்டு கொள்கின்றோம். உண்மையை உணர்ந்து அதனை செயலில் அமுல்படுத்துவது இல்லை. முறையாகக் கட்டப்பட்ட கோயில்கள் மனித உடம்பின் அமைப்பில் அமைக்கப்படுவது மரபு. கோயிலில் செய்யும் நித்திய பூசைகளின் போது சுவாமியை எடுத்து வெளி வீதிக்கு கொண்டு வருவது இல்லை. அதன் உட்பொருள் ஆன்மா உடலுள் இருப்பதைக் குறிக்கும். விசேட திருவிழாக்காலங்களில் கோயில் கட்டடத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே சுவாமியை வெளி வீதி கொண்டு வருவார்கள். அதன் உட்பொருள் உடலில் சிறைப்பட்டிருக்கும் ஆன்மாவை உடலில் இருந்து வேறாக்கி நிராதார நிலைக்கு கொண்டு வருவதைக் குறிக்கும். இதேபோல் விசேட திருவிழாக் காலங்களில் செய்யும் கொடியேற்றமும் இவ்விடயத்தையே குறிக்கும். கொடியேற்றும் போது ஒரு நீண்ட வெள்ளைச்சீலையின் ஓர் அந்தத்தில் நந்தியின் படத்தை வரைந்து அத்துடன் ஒரு சிறு மணியையும் சேர்த்து கொடிக்கம்பத்தில் ஏற்றுவார்கள். அதில் நந்தி ஆன்மாவைக் குறிக்கும். அச்செயல் ஆன்மா உடல் சிறையில் இருந்து நீங்கி நிராதார நிலைக்குச் செல்வதைக் குறியீடாகக் காட்டுவதாகும். அதிலுள்ள சிறிய மணி நாத தத்துவத்தைக் குறிக்கும். உயர்ந்த சாதனையைச் செய்பவர்கள் பத்து விதமான ஓசைகளைக் கேட்பார்கள். அதில் ஒன்று மணியோசை. ஆன்மா நிராதார நிலையில் நிற்க நாத சம்பியம் துணைபுரிவதை அந்தச்சிறு மணி குறிக்கும். அந்த நிலையை அடைவது தான் சமயத்தின் குறிக்கோளே தவிர தொடர்ந்து வாழ்நாள் பூராவும்நித்திய பூசைகளையும், திருவிழாக்களையும் செய்வதில் மட்டும் திருப்தி காண்பது அல்ல. அதை உணர்ந்தவர்களுக்குத் திருவிழா தேவையில்லாதது ஒன்றாகும்.

மணிவாசகரும், அருணகிரிநாதரும் அந்த நிலையை முயன்று அடைந்து அப்பேரானந்தத்தைப் பெற்றார்கள். அதனை அவர்களே கூறுவதைக் காண்போம்.

*"சொல்லுவது அறியேன் வாழி முறையோ*
*தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது*
*தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு*
*அருளியது அடியேன் பருகியும் ஆரேன்*
*விழுங்கியும் ஒல்லகில்லேன்*
*செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து*
*உவாக்கடல் நள்ளுநீர் உள்அகம் ததும்ப*
*வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்*
*தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊதழை*
*குரம்பை தோறும் நாய் உடல் அகத்தே*
*குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய*
*அற்புதமான அமுத தாரைகள்*
*எற்புத்துளை தொறும் ஏற்றினன் உருகுவது*
*உள்ளங்கொண்டோர் உருகச் செய்து ஆங்கு எனக்கு*
*அள்ளூறு ஆக்கை அமைத்தனன் ஒள்ளிய*
*கன்னற் கனிதேர் களிறு எனக்கடை முறை*
*என்னையும் இருப்பது ஆக்கினேன் என்னில்*
*கருணை வான் தேன் கலக்க*
*அருளொடு பரா அமுது ஆக்கினேன்".*

- திருவாசகம், திவண்டகப் பகுதி.

*"போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்*
*வாக்கும் வடிவும் முடிவும் இல்லாதது ஒன்று வந்து வந்து*
*தாக்கும் மனோலயம் தானே தரும் எனைத்தன்*
*வசத்தே ஆக்கும் அறுமுகவா சொல் ஒணாது இந்த ஆனந்தமே"*

-கந்தரலங்காரம்.

மணிவாசகர் *'சொல்லுவது அறியேன்'* என்றார். அருணகிரிநாதர் 'சொல் ஒணாதது' என்றார். எனினும் அந்த அநுபவத்தை அவர்கள் வார்த்தைகளிலேயே தருவதற்கு முயற்சித் திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் வார்த்தைகளினால் சொல்லியதே மயிர் கூச்செறியச் செய்கின்றது, மெய்சிலிர்க்கின்றது என்றால் அவர்கள் அடைந்த அந்த உயர்ந்த நிலை எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும்! அதனை நயம்படத் தாயுமான சுவாமிகள் விளக்குவார். சிவனோ நான்கு முனிவர்களுக்கும் நாற்புறமும் கை காட்டினான், அருணகிரி நாதரோ கந்தரநுபூதி பெற்று அநுபூதியை எமக்குச் சொன்னார் என்று சிவனலும் அருணகிரி நாதரை உயர்த்திப் பேசுவார். சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய அந்த பேரின்பம் ஒப்பில்லாதது, மிக உயர்ந்தது, அதற்கு மேல் எதுவும் இல்லாதது. அதனால் தான் அருணகிரி நாதர் *"அவ்வாறு அறிவார் அறிகின்றது அல்லால் எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே"* என்று அதன் பெருமையைக் கூறுகின்றார். நாமும் சிறிய சிறிய விடயங்களுக்காக எனது, உனது என்று சண்டையிட்டு மோசம் போய் விடக்கூடாது. நம்முள் உறைகின்ற அம்மாபெரும் சக்தியை வெளிக்கொணர்வதற்கு ஆனமட்டும் முயற்சி பண்ண வேண்டும். அந்த முயற்சிக்கு அந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியே உதவுவதற்கும் காத்துக்கொண்டு தயாராக இருக்கின்றது.

இரண்டு பன்னிரு திருமுறைகளிலும் உள்ள எட்டாந் திருமுறையான திருவாசகமும் கந்தரலங்காரமும் மனித வாழ்க்கையின் மிக உயர்ந்த நோக்கத்தை அடைய உடல் உள்ள போதே உடல் சிறையிலிருந்து ஆன்மாவை நிராதாரமான நிலைக்குக் கொண்டு வரும் சாதனை முறையை எடுத்து கூறுகின்றன. ஆரவாரங்களைத் தவிர்த்து, துன்பங்களை நீக்கி மனித வாழ்வின் உயர்ந்த இலக்கையடைய முயல்வாருக்கு அச்சாதனை முறை மணிவாசகரும், அருணகிரிநாதரும் அளித்த அருள் பிரசாதமாகும்.

இவ்விடத்தில் சென் பௌத்த மதத்தில் குரு ஒருவருக்கும், அவரது சீடனுக்கும் இடையே நடந்த சம்பாஷணையை ஞாபகப்படுத்தவது மிகப்பொருத்தமாக அமையும்.

சீடன் :- *சுவாமி! மலை உச்சிக்கு செல்ல விரும்புகின்றேன். நான் எங்கே இருந்து ஆரம்பிக்க வேண்டும்?*

குரு :- *பிள்ளாய்! உச்சியில் இருந்தே ஆரம்பி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திக் கவிதை

## மொழி - அழகியல் மொழி - தத்துவ மொழி



*செ. சுதர்சன்,*
*தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.*

பக்திக் கவிதை என்பது எந்த ஒரு மதத்தினதும் மொழி ரீதியிலான அநுபவ அழகியல் வெளிப்பாடு ஆகும். அது தான்சார்ந்த மதத்தின் அனைத்துப் பொருண்மைகளையும் வெளிப்படுத்தும். அந்த வெளிப்பாடு அழகியல் சார்ந்ததாக இருக்கும். மதம் சார் பொருண்மைக் கூறுகளில் தத்துவம் முதன்மையானது. எந்த ஒரு மதத்தினதும் இருப்பு என்பது அம்மதம் கொண்ட தத்துவத்தளம் சார்ந்தது. மதத்தின் தத்துவம் தவிர்ந்த ஏனைய பொருண்மைக் கூறுகள் பக்திக் கவிதையுள் வரும்போது ஏற்படாத வலிமையும் ஏற்படுத்தாத உணர்வு நிலையும் தத்துவம் பக்திக் கவிதையின் பிரதான பொருண்மைக் கூறாக வரும் போது ஏற்படுகிறது. பக்திக்கவிதை தத்துவத்தை வெளிப்படையான தர்க்கக் கட்டுமானங்களாகவும் அளவைகளாகவும் வெளிப்படுத்தாது அழகியலுள் அரூபமாய் அவற்றைக் கொண்டிருக்கும். அழகியல் மொழியில் தோய்ந்த தர்க்கங்களையும் அளவைகளையும் கொண்ட தத்துவத்தின் வெளிப்பாடு பக்திக் கவிதையுள் இருக்கும்.

கவிதை என்பது *'மொழியினால் ஆகிய ஒரு தனிமொழி'* அந்தத் தனிமொழி பக்திக் கவிதையாயின் , அதற்குள்ளும் இன்னொரு மொழி அமைந்திருக்கும். அது தத்துவத்தின் மொழி. பக்திக்கவிதை முதலில் அது கொண்டுள்ள அழகியல் அம்சங்களூடாக ஓர் அழகியல் அநுபவத்தை ஏற்படுத்தும். அடுத்த கட்டத்தில் அந்தப் பக்திக்கவிதை தான் கொண்டுள்ள மொழிப் படிமத்தினூடு பயணம் செய்யவைத்து அக்கவிதைசார் மதத்தின் தத்துவத்தளத்தை உணரவைக்கும். இந்த உணர்த்தற் செயற்பாட்டில் பக்திக் கவிதையுள் வரும் சொற்கள், தொடர்கள், அணிப்பிரயோகங்கள் முதலானவை மதம்சார் தத்துவக் கருத்தியலின் குறியீட்டு நியமங்களாகச் செயற்படும். இவ்வாறு குறியீட்டு நியமங்களாகும் சொற்கள் முதலானவை பல்வேறு பொருள் விரிவை உண்டாக்குவன. இன்னும், இயல்பாகவே மதங்கள் தம்மகத்தே கொண்ட குறியீட்டு நியமங்களும் இங்கு இணைத்து நோக்கப்படும். இவ்வாறு *மொழி – மொழியால் ஆகிய தனிமொழி (அழகியல் மொழி) – மொழியால் ஆகிய தனிமொழிக்குள் அமைந்த இன்னொரு மொழி (தத்துவ மொழி)* என்ற நிலைகளில் பக்திக் கவிதை வாசிப்புத்தளத்தில் இயங்குகிறது. சாதாரண மொழியில் இருந்து அழகியல் மொழி உருப்பெறுகிறது. அழகியல் மொழியின் முடிச்சுகள் அர்த்தங்களால் அவிழ்க்கப்படும்போது தத்துவத்தின் மொழி பிறக்கிறது.

தமிழ்ச் சூழலில் பக்திக் கவிதையைத் தனியே அழகியல் மொழியாகவோ அல்லது தத்துவத்தின் மொழியாகவோ நோக்குவதைவிட அழகியல், தத்துவம் என்ற *"இரண்டும் இணைந்த ஒன்றாக"* பார்ப்பதே பொருத்தமானது. அப்போதுதான் பக்திக் கவிதை ஆழமும் விரிவும் தேடி நகர்வதாகவும் அழகியல் பகிர்வோடு தத்துவப் பகிர்வை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்.

இலக்கணவரம்புக்கு உட்படாத பழங்கவிதை மரபிலிருந்து சங்கக்கவிதை மரபூடாகப் பின்னர் காலந்தோறும் மாறிப்பயின்று இன்று இருக்கும் நவீன கவிதைவரை தமிழ்க்கவிதை மரபைப் பார்க்கும்போது பல்லவர்காலப் பக்திக் கவிதைகள் எளிமையும் இனிமையும் கலந்த மொழியினூடு மதத்தின் அநுபவ அழகியலை லாவகமாக வெளிப்படுத்தியுள்ளன. (நவீன கவிதையில் பாரதி இதனைச் செய்கிறான்) அத்துடனமையாது அக்கவிதைகள் தாம் சார்ந்த மதத்தின் (சைவம்,வைணவம்) தத்துவ அடிப்படைகளையும் (சைவம் - சைவசித்தாந்தம், வைணவம் - விசுஷிட்டாத்வைதம்) கொண்டுள்ளன. பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பக்திக் கவிதைகள் பெரும்பாலும் இத்தகைய தன்மை கொண்டவையே. கணங்களின் நுட்பமான உணர்ச்சி வேகத்தை மொழிக்குள் சிறைப்பிடிக்க முயன்று வெற்றிபெற்ற பல்லவர்காலப் பக்திக் கவிஞர்களுள் மாணிக்கவாசகர் முதன்மையானவர் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரூபத்தளத்தில் இயங்கும் போது ஏற்படும் அனுபவ அழகியலையும், தத்துவ அடிப்படையையும் அவர் கவிதையில் கண்டுகளிக்கலாம். எனவே அவரது கவிதை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு அழகியல், தத்துவம் ஆகியவற்றை விளக்குவது பொருத்தமானது. எல்லோருக்கும் நன்கு அறிமுகமான அவரது கவிதை ஒன்றையே எடுத்துக்கொள்ளலாம்.

*"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்*
*என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா*
*ளிட்டிடையின்*
*மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்*
*பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்*
*என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்*
*தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு*
*முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே*
*என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்"* [1]

இக்கவிதை வாசிப்பவர்க்கு இலகுவாக விளங்குகிறது. எனினும் புணர்ச்சிகளை நீக்கி இன்னும் இலகுவாக்கலாம்.

*"முன் இக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்*
*என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டு*
*இடையின்*
*மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்*
*பொன் அம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்*
*என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆள் உடையாள்*
*தன்னில் பிரிவு இலா எம்கோமான் அன்பர்க்கும்,*
*முன்னி அவள் நமக்கும் இ முன்சுரக்கும் இன்*
*அருளே*
*என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம்பாவாய்"*

இக்கவிதையின் பொருள் மிகச் சுருக்கமாக இங்கே தரப்படுகிறது.

"மழை மேகமே! (நீ) முதலில் இந்தப் புவியிலே உள்ள கடல் நீரை உட்கொண்டு, மேலே எழுந்து, எம்மை உடையவளாகிய சக்தியின் நீலநிறத் திருமேனி போல நீல நிறத்துடன் விளங்கி, எம்மை அடிமையாகக் கொண்ட அவளது சிற்றிடைபோல் மின்னி, எம்பிராட்டியாகிய சக்தி தமது திருவடிமேல் அணிந்த பொன்னினால் செய்யப்பட்ட அழகிய சிலம்பு போல ஒலித்து, அவளது அழகிய நெற்றிபோல வானவில்லைவிட்டு, நம்மை அடிமையாக உடைய அச்சக்தியினின்றும் பிரிதல் இல்லாத எங்கள் தலைவனாகிய இறைவனது அடியவர்களுக்கும் நமக்கும் அவள் திருவுளம் கொண்டு முன்பு சுரக்கின்ற இன்னருளைப் போல மழையைப் பொழிவாயாக!

இக்கவிதையின் அழகியல், தத்துவ அம்சங்களைத் தனித்தனியே நோக்கலாம்.

## பக்திக்கவிதை : அழகியல் மொழி

இக்கவிதை திருவாசகத்தின் திருஎம்பாவைப் பகுதியில் இடம்பெறுவது. 'திருஎம்பாவை' பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய மார்கழி நீராடல் முதலிய சமூக வழக்கங்களின்றும் உருவாகிய ஓர் இலக்கிய வடிவம். பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்த பெண்கள் மழைவளம் வேண்டியும், சிறந்த கணவர் கிடைக்கவேண்டியும் நீராடிப் பாடிப் பரவிய பண்டைய மரபினைப் பல்லவர்காலப் பக்திக் கவிஞர்கள் தத்தமது சமய உண்மைகளையும் அநுபவ நிலைகளையும் வெளியிடப் பயன்படுத்தினர். இத்தகைய பயன்படுத்தலின் விளைவே மாணிக்கவாசகரின் திருஎம்பாவையும் ஆண்டாளின் திருப்பாவையும் ஆகும்.

மாணிக்கவாசகர் *'ஆயிடை வானப்பேரியாற்று அகவயின் பாய்ந்து எழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்து சுழித்து'*, தன்னுள் *'கருணை வான் தேன்'* கலந்த செய்தியைப் பிறருக்கும் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திலும், பிறர் அதனை அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்திலும் பாவை வடிவத்தைக் கையேற்று *'திருவெம்பாவை'* ஆக்கினார். பல்லவர்காலப் பக்திக்கவிதை நாட்டார் மரபினைக் கையேற்ற முக்கியஅம்சம் இவ்விடத்தில் நினைக்கத்தக்கது. இதன்போது பக்திக்கவிதை இயல்பாகவே வெகுஜனத் தன்மையைப் பெற்றுவிடுகிறது. பாவைபாடும் வாய்மொழி இசைமரபைக் கையேற்கும் தன்மை பல்லவர்காலத்தில் நிகழ் கலைகளுடன் கவிதைக்கிருந்த பிணைப்பைக் காட்டுகின்றது.

மேற்படி கவிதையில் பெண்ணாகத் தன்னைப் பாவனை செய்துபாடும் ஒரு பக்தனையும், பக்தன் என்ற நிலையிலிருந்து வளரும் ஒரு பெருங்கவிஞனையும் கண்டுகொள்ள முடிகிறது. கொச்சகக் கலிப்பாவில் அமைந்த இக்கவிதை மிகச் சிறந்த ஓர் உவமைக் கட்டமைப்பினை உடையது. நீராடச்சென்ற மகளிர் பொதுப்பயனாகிய மழையை வேண்டிப்பாடுவதாய்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைந்து, அதன் மூலம் இறைவன் சக்தி மூலமாக மெய்யடியார்களுக்கு அருள் வழங்கும் தன்மையை வெளிப்படுத்துவது. மழைமேகத்தை விளித்து ஆரம்பமாகும் இக்கவிதை மழையைப்போல அருள் வேண்டும் என்று கூறாது அருளைப் போல மழைவேண்டும் என்று கூறுகிறது. பாவைப் பாடலின் பொதுப்பயன் மழைவளம் வேண்டிப்பாடுவதாகும். அந்தவகையில் இந்தப் பாடலும் அவ்வாறே அமைந்துள்ளது. பொதுப்பயனுக்காக மழையை வேண்டுவதோடு அருளின் வளத்தையும் கவிஞரது அனுபவ நிலையையும் பொதுமைப்படுத்திக் கூறுகிறது. மழையைப்போல அருளும் பொதுவானதாக, வேறுபாடற்றதாக வந்தமைய வேண்டும் என்ற விதத்தில் கவிதை அமைந்துள்ளது. இதனால்தான் *'எங்கோமான் அன்பர்க்கும்'*, *'நமக்கும்'* வேறுபாடற்று, பொதுவாக வழங்கும் அருள் போல மழை பெய்யவேண்டும் என்ற செய்தியைக் கவிதை தருகிறது. இத்தன்மை பக்திக்கவிதை தான் சார்ந்த பொருண்மைத் தளத்தை எவ்வாறு சிறப்புறச் செய்கின்றது என்பதை விளக்கி நிற்கிறது.

இக்கவிதையில்

(அ) மழைமேகம்
(ஆ) மின்னல்
(இ) இடி
(ஈ) வானவில்
(உ) மழைப்பொழிவு

ஆகிய ஐந்து அம்சங்களும் முறையே சக்தியின் பின்வரும் அம்சங்களுக்கு உவமையாக்கப்படுகின்றன.

(அ) சக்தி திருமேனியின் நீலநிறம்
(ஆ) சக்தியின் சிற்றிடை
(இ) சக்தியின் பாதத்தில் அணியப்பட்ட சிலம்பின் ஒலி
(ஈ) சக்தியின் வளைந்த புருவம்
(உ) அருள் வழங்கும் தன்மை.

இவ் உவமைகளைத் தனித்தனியே சுருக்கமாக நோக்குவோம்.

## (அ) சக்தி திருமேனியின் நீலநிறம்

கவிதையில் மழைமேகத்தின் நிறம் கூறப்படுவதற்கு முன்பு *'முன்இக் கடலைச் சுருக்கி'* என்று கடல்நீர் ஆவியாகி மழைமேகமாகும் செய்தி கூறப்படுகிறது. அதாவது நீரியல் வட்டம் அறிவியலுக்குப் பொருந்த அறிமுகப் படுத்தப்படுகிறது. இதனையே திருப்பாவையும் *'ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்தேறி'*[2] என்று கூறுகின்றது. மாணிக்கவாசகர் கவிதையில் வரும் *'சுருக்கி'* என்ற சொல் *"கடல் குறைவுபடுமாறு நீரை முகத்தல்"* என்ற பொருளைப் பொதிந்து வைத்துள்ளது. பின்னர் அவ்வாறு மேலெழுந்த மழைமேகத்தின் நிறத்திற்கு சக்தியின் திருமேனி உவமையாக்கப்படுகிறது. *"முன் இக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள் என்னத் திகழ்ந்து"* என்பதில் சக்தி திருமேனியின் நீலநிறம் வெளிப்படையாகப் பேசப்படவில்லை. எனினும் மழைமேகத்தின் தன்மை நோக்கி அவ்வாறு கூறப்பட்டதாகக் கொள்வது பொருந்தும். இன்னும் சக்தி நீலநிறமுடையவள் என்று இலக்கியங்கள் கூறும் செய்திகளையும் இவ்விடத்தில் இணைத்துப்பார்ப்பது பொருத்தமானது.

நாவுகரசர் பதிகம் ஒன்று *"மைம்மலர் நீல நிறங் கருங்கண்ணியோர் பால் மகிழ்ந்தான்"*[3] என்று கூறுகிறது. இவை முதலாய செய்திகளையும் இணைத்துச் சக்தியின் நிறம் நீலநிறம் என்று கொள்ள வாய்ப்பு உள்ளது. எனவே *'மழைமேகமே!'* என்று விளித்து *'கடல்நீரை முகந்து கொண்டு மேல் எழுந்து சக்தியின் நீல நிறத்திருமேனிபோல விளங்குக'* என்று கூறப்படுகிறது.

## (ஆ) சக்தியின் சிற்றிடை

மழைமேகத்தின் நீலநிறத்தின் பின்னர் மின்னல் கூறப்படுகிறது. மின்னலைச் சக்தியின் சிறிய இடைக்கு உவமையாக்குகிறார். *"..........எம்மை ஆளுடையாள் இட்டு இடையின் மின்னி......."* என்ற வரி இதனைக் காட்டுகிறது. திருப்பாவை கண்ணனது சக்கரத்தினை மின்னலுக்கு உவமையாக்கும். அது *'ஆழிபோல் மின்னி'*[4] எனக்கூறும். மாணிக்கவாசகர் மின்னலைச் சக்திக்கு உவமையாக்குவது இலக்கியமரபு சார்ந்தது. *"மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகத்தாரும்"*[5] என்று திருநாவுக்கரசர் பதிகம் கூறுகிறது. எனவே மாணிக்கவாசகர் கவிதையிலும் *'சக்தியின் சிறிய இடைபோல மின்னல் மின்னுக'* என்று கூறப்படுகிறது.

## (இ) சக்தியின் பாதத்தில் அணியப்பட்ட சிலம்பின் ஒலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் மின்னிய பின் இடி கேட்கும். எனவே கவிதை "......... *எம்பிராட்டி திருவடிமேல் பொன் அம் சிலம்பில் சிலம்பி......*" என்று தொடர்கிறது. ஆண்டாளின் திருபாவை இடியினை *'வலம்புரி போல் நின்றதிர்ந்து'*[6] என்று கூறும். மாணிக்கவாசகரின் கவிதை *'எம்பிராட்டியாகிய சக்தி தமது அழகிய பாதத்தில் அணிந்த பொன்னால் செய்யப்பட்ட அழகிய சிலம்பு போல ஒலிக்குக'* என்று மழை மேகத்தை வேண்டுவாய் அமைந்துள்ளது. மேகத்தின் இடி முழக்கம் சக்தியின் திருவடியில் உள்ள சிலம்பின் ஒலிக்கு உவமிக்கப்படுகிறது. சக்திகாலில் சிலம்பு உள்ளது என்பதும் சமய இலக்கிய மரபு சார்ந்தது.

### (ஈ) சக்தியின் வளைந்த புருவம்

மழைமேகம் மின்னலையும் இடியையும் மட்டுமல்லாது அதன் தொடர்ச்சியாக வானவில்லையும் விரிக்கும் தன்மையுடையது. வானவில் கவிதையில் "திருப்புருவம் என்னச் சிலைகுலவி" என்ற வரியின் மூலம் சக்தியின் புருவத்துக்கு உவமையாக்கப்படுகிறது. சிலை என்பது *'வில்'*. குலவி என்பது *'வளைத்து'*. "*திருப்புருவம் என்னச் சிலைகுலவி*" என்பதில் சக்தியின் புருவம் போல வானவில்லை வளைக்குக என்று கூறப்படுகிறது.

### (உ) அருள் வழங்கும் தன்மை.

முன்பு குறிப்பிட்ட நான்கு உவமைகளும் செயல் நிகழ்வின் ஒழுங்குக்கு அமைவாக வைக்கப்பட்டு இறுதி உவமை மூலம் மழைப்பொழிவின் தன்மை கூறப்படுகிறது. அருள் மழைபோலப் புவியில் மழைபொழிய வேண்டும் என்ற இந்த உவமை கவிதை முழுவதும் வியாபித்து நிற்கின்றது. கவிதைகூறும் முக்கியமான உவமையும், முதன்மைச் செய்தியும் இதுவே எனலாம்.

*"........நம் தம்மை ஆளுடையாள்*
*தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்*
*முன்னி அவள் நமக்கும் முன் சுரக்கும் இன்னருளே*
*என்னப் பொழியாய் மழை .........*"

இப்பகுதியில் வரும் உவமை கவிதையின் சாரத்தைக் கொண்டமைந்தது. இந்த உவமையும் அதற்குரிய உவமிக்கப்படுகின்ற பொருளையும் கூறுவதற்கு கவிதையின் ஆரம்பத்திலிருந்து பொருட்தொடர்ச்சிக்கு இயைபாக நான்கு உவமைகள் அமைக்கப்பட்டுக் கவிதை வளர்க்கப்பட்டுள்ளது. நான்கு செயல்களின் பின்னர் வரும் ஐந்தாவது செயலும் (மழைப் பொழிவு), நான்கு உவமைகளின் பின்னர் வரும் ஐந்தாவது உவமையும் (அருள் வழங்கும் தன்மை) கவிதையில் உயிர்த்துவத்தைப் பேணுகின்றன. இது நன்கு தேர்ந்த கவிஞன் ஒருவனின் படைப்பாளுமையையும் காட்டிநிற்கிறது.

"*நம்மை அடிமையாக உள்ள அச்சக்தியினின்றும் பிரிதல் இல்லாத எங்கள் தலைவனாகிய இறைவனது அடியவர்களுக்கும் பெண்களாகிய எமக்கும் அவள் திருவுளம் கொண்டு முந்திச் சுரக்கின்ற இன்னருளைப்போல மழையைப் பொழிவாயாக*" என்று கூறப்படுகிறது. *'தன்னிற் பிரிவிலா எங்கோமான்'* என்பது சக்தியினின்றும் பிரியாத இறைவனை மட்டுமல்லாது இறைவனைவிட்டுப் பிரியாத சக்தியையும் காட்டுகிறது. இக்கவிஞரின் பிறிதொரு கவிதையில் வரும்,"*உடையாள் உன்தன் நடு இருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி*"[7] என்ற தொடர் இவ்விடத்தில ஒப்பிடத்தக்கது.

கவிஞர் பெண்ணாகத் தம்மைப் பாவனை செய்து பாடும் இக்கவிதையில் *'நமக்கும்'* என்பது *'பெண்களாகிய நமக்கும்'* என்ற பொருளில் வருகிறது. *'ஆள் உடையாள்'* என்பதில் உள்ள *'ஆள்'* என்பது பல்லவர் காலத்தில் அடிமையைக் குறிக்கும் சொல்லாக இருந்தது. எனவே பக்தி நிலையில் இறைவிக்கு ஆன்மா அடிமையாகிய நிலையையும் அந்தப்பக்தி செய் அடிமையைத் தம் உடைமையாகக் கொண்ட சக்தியின் நிலையையும் அறியமுடிகின்றது. *'சக்தியின் இன்னருள் உயிருக்கு உய்தி அருளுவது போல மழைமேகமே நீ மழையினை பொழிந்து உலகைப் பாதுகாப்பாயாக'* என்ற தொனியோடு கவிதை முடிகிறது. அருள் அனுபவத்தைப்போல மழையினை நாடும் இயல்பையும், சக்தி திருவுளங்கொண்டு சுரக்கின்ற அருள் போல மழையும் தானே திருவுளங்கொண்டு பொழிய வேண்டும் என்ற தன்மையையும் கவிதை காட்டிநிற்கிறது.

இக்கவிதையில் சக்தி கூறப்படாது. சக்தியின் கூறுகளான நீலநிறம், சிற்றிடை, பாதச் சிலம்பின் ஒலி, வளைந்தபுருவம், அருள்வழங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை என்பவை மட்டுமே உவமையாக்கப்பட்டுள்ளன. சக்தியின் கூறுகளை உவமையாக்குவது சக்தியை உவமையாக்குவதற்கு ஒப்பானது என்று கூறமுடியும். எனினும், இக்கவிதை ஓர் உவமைக் கட்டமைப்பினை உடையது என்ற வகையில் அவ்வாறு அமைதிகாண முடியாது. இதுபோலவே *'மழை'* என்ற அம்சத்தின் கூறுகள் கூறப்படுகின்றனவே அன்றி மழை என்பது கவிதையில் பொதுவான அர்த்தத்தில் பயன்படுத்தப்படவில்லை. அதாவது மழைமேகம், மின்னல், இடி, வானவில், மழைப்பொழிவு என்ற ஐந்தும் கூறப்படுகின்றன. மழை என்று பொதுவாக கருதும் போது அதனுள் இவை ஐந்தும் அடங்கும் என்பது யாவரும் அறிந்ததே. எனவே, ஐந்து உவமைகளின் பிணைப்பின் மூலமாகவும், ஐந்து செயல்களின் பிணைப்பின் மூலமாகவும் வேறொரு அணியினை அரூபமாகக் கவிதை விரித்து வைக்கிறது. அவ் அணி உருவக அணி ஆகும். தண்டியலங்காரம்

*"உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து*
*ஒன்றென மாட்டின் அ∴து உருவகம் ஆகும்"*[8]

என்று கூறுகின்றது.

இக்கவிதையில் உவமையாகிய பொருளையும், உவமிக்கப்படும் பொருளையும் தனித்தனியே வளர்த்துவந்து கவிதை முடிவுற்ற பின்னர் உவமையாகிய பொருளையும், உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு இல்லாதுஇரண்டும் ஒன்றே என்று தோன்றுமாறு கருதவைக்கிற உருவக அணி அரூபமாக அமைந்திருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. உவமையே உவமிக்கப்படுபொருளாகிய தன்மை, சக்தியே மழையாகிய தன்மையை உணர்த்தி நிற்கிறது. இது கவிதை அரூபத்தளத்தில் இயங்கும்போது ஏற்படும் அனுபவ அழகியல் சார்ந்ததாகும்.

இதுவரை இக்கவிதையின் அழகியல் அம்சங்களே நோக்கப்பட்டன. தொடர்ந்து இக்கவிதையின் தத்துவம்சார் அம்சங்களைச் சிறிது ஆராயலாம்.

## பக்திக்கவிதை : தத்துவத்தின் மொழி

மாணிக்கவாசகர் சைவசித்தாந்த தத்துவத் தளத்தில் நின்றவர். அந்த வகையில் இக் கவிதையைச் சைவசித்தாந்த அடிப்படையில் நோக்குவதே பொருத்தமானது. இருப்பினும் சித்பாவனந்தர் முதலியோர் வேதாந்த அடிப்படையிலும், சுந்தரமாணிக்கேஸ்வரர் முதலியோர் யோக அடிப்படையிலும் இக்கவிதை அமைந்திருப்பதே சிறப்பிற்குரியது. சைவசித்தாந்த அடிப்படையில் இக்கவிதையை நோக்கியவர்களுள் மு.கதிரேசுச் செட்டியார் குறிப்பிடத்தக்கவர். அவரது கருத்தைப் பெரிதும் பின்பற்றி இப்பகுதி அமைக்கப்படுகிறது.

இக்கட்டுரையிலும் சைவசித்தாந்தத்தை அடிப்படையாகக்கொண்டே நோக்கப்படுகிறது. இன்னும், இக்கவிதை பசுவாகிய உயிர் ஒன்றின் ஆன்ம அனுபவ வெளிப்பாடு என்ற வகையில் சைவசித்தாந்தம் பேசும் உயிரின் நிலைகள் பற்றி மட்டுமே இக்கட்டுரையில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இந்த உயிர்நிலைகளுக்கேற்ப அமையும் சக்தியின் வெவ்வேறு நிலைகளும் கட்டுரையில் குறிப்பிடப்படும்.

சைவசித்தாந்தம் உயிரின்நிலைகளை
(அ) கேவலம்
(ஆ) சகலம்
(இ) சுத்தம்

என மூவகைப்படுத்தும். இம் மூன்று நிலைகளையும் இக் கவிதையில் எவ்வாறு காணமுடியும் என்பதை தனித்தனியே நோக்கலாம்.

### (அ) கேவலம்

கேவலநிலை என்பது உயிர் ஆணவத்தோடு மட்டும் கூடிய நிலை. இந்நிலையில் உள்ள ஆன்மாவுக்கு உடம்பு இல்லை. உயிர் தனது படைப்புக் காலம் வரும்வரையும் மாயாகாரணத்திலே ஒடுங்கி ஆணவ மலத்தாலே மறைக்கப்பட்டு ஒன்றுமே அறியாதபடி இருக்கும் நிலையே இது. கேவலநிலையில் இருக்கும் உயிர் தொகுதிகளைத் தமக்கு உடைமையாகச் சக்தி கொண்டிருப்பதால் கவிதையின் முதல் வரியில் *'உடையாள்'* என்று குறிப்பிடப்படுகிறாள்.

### (ஆ) சகலம்

சகலநிலை என்பது படைக்கப்பட்டது ஆதல் உயிரானது உடல், கரணம் முதலியவற்றைப் பெற்றுப் பிறந்து உழலும் நிலையாகும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களுடன் கூடிய நிலையே இது. கேவல நிலையில் வினை சூக்கும வடிவில் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் வினை அனுபவிக்கும் நிலையில் இருக்கும். இந்நிலையில் உள்ள உயிர்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களைத் தந்து சிறிது அறிவு விளங்கச்செய்து அவ்உயிர்களை ஆட்கொள்ளுவதற்குரிய தகுதியை ஏற்படுத்துவதால் சக்தி கவிதையின் இரண்டாவது வரியில் *'எம்மை ஆளுடையாள்'* என்று குறிப்பிடப்படுகிறாள்.

## (இ) சுத்தம்

சுத்தநிலை என்பது உயிர் திருவருளாலே இருவினையொப்பு, மலபரிபாகம் முதலானவை ஏற்பட்டு சத்திநிபாதநிலையை அடைந்து வினைநீங்கிய நிலையில் இறைவன் திருவருளோடு கூடிப் பேரின்புறும் நிலையாகும். சக்தியானவள் உயிர் சிவத்தோடு கூடி இன்புறுவதற்கு உதவி புரியும் தன்மையினால் எம்பிரானாகிய சிவனுக்கு இணையாக்கப்பட்டு *'எம்பிராட்டி'* என்று மூன்றாவது வரியில் தலைவியாக்கப்படுகிறாள். சுத்தநிலை ஆன்மா உடலோடு உள்ளபோது மாணிக்கவாசகருக்குக் கைகூடியது என்பது சமய வரலாற்று செய்தி. இந்நிலை உடல் அற்றுப்போன பின்னரும் ஏற்படலாம்.

இவ்வாறு முதல் வரியில் *'உடையாள்'* என்பதன் மூலம் உயிரின் கேவலநிலையும், இரண்டாவது வரியில் *'எம்மை ஆளுடையாள்'* என்பதன் மூலம் உயிரின் சகலநிலையும், மூன்றாவது வரியில் *'எம்பிராட்டி'* என்பதன் மூலம் உயிரின் சுத்தநிலையும் ஒழுங்குமுறையாகக் குறிப்பிடப்படுகின்றன. அத்துடன் அந்நிலைகளில் சக்தியின் செயற்பாட்டினையும் அறிந்துக்கொள்ள முடிகின்றது.

இவற்றைவிட இக்கவிதையில் வரும் ஒவ்வொரு அம்சங்களையும் சைவசித்தாந்த நிலைப்படுத்தி விளக்கமுடியும். உதாரணமாக, *'முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து'* என்பது சக்தியின் அருள் சூல் கொண்ட நிலையையும், *'இட்டிடையின் மின்னி'* என்பது ஒளியாகிய விந்துத் தத்துவத்தையும், *'திருவடிமேற் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி'* என்பது ஒலியாகிய நாத தத்துவத்தையும் குறித்து நிற்பதைக் கூறமுடியும். *'எங்கோமான் அன்பர்க்கும்'* என்பதில் வரும் *'அன்பர்'* என்பது சுத்தநிலையில் உள்ள ஆன்மாக்களையே குறித்து நிற்கிறது. மாணிக்கவாசகர் அந்நிலையினை அடைந்திருந்தாலும் அவர் எப்போதும் தன்னைத் தாழ்த்தி அந்நிலையை அடைய அருளுமாறு வேண்டுவது தன் உயிர் நிலையினை தானே தகுதியின்மை உடையதாகக் கருதுவதாலேயே ஆகும். *'எங்கோமான் அன்பர்'* நிலையிலிருந்து உயிர் தகுதி வேறுபாடுகாட்டித் தம்மைக் குறைத்து *'நமக்கும்'* என்ற சொல்லைக் கவிதையில் பயன்படுத்துகிறார். இவ்வாறு சைவசித்தாந்தக் கருத்தியலுக்கேற்ப இக்கவிதையை விரித்துச் செல்லமுடியும்.

இவ்வாறு மாணிக்கவாசகரின் கவிதை அநுபவத்தளத்தில் அவரைப் பக்தன் - மகா கவிஞன் - தத்துவஞானி என்ற மூன்று புள்ளிகளில் இணைக்கிறது. இம்மூன்று புள்ளிகளின் சங்கமமே அவரது கவிதைகள். நா. சுப்பிரமணியன் அவர்களின் கூற்றொன்று இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

> *"நமது சாராசரி புலனறிவிற்கும் சிந்தனை மற்றும் உணர்வுநிலை என்பவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒரு உயர்ந்த உணர்வுத்தளத்தில் அவர் உலா வருகிறார். ஒரு பக்தன் என்ற வகையிலும் கவிஞன் என்ற வகையிலும் மட்டுமல்லாமல் தத்துவஞானி என்ற வகையிலும் தமிழ் இலக்கிய உலகில் சிகரத்தில் நிற்பவர் அவர்".*[9]

இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும்போது பொதுவாக பக்திக் கவிதை என்பது அழகியல் மொழி, தத்துவ மொழி இரண்டினையும் தன்னகத்தே கொண்டுள்ளது எனக் கூறமுடியும். இவ் இரண்டும் இணைந்த அனுபவமே பக்திக் கவிதை தரும் அனுபவம். பக்திக் கவிதை பேசா அநுபூதியை மொழியில் தருகிறது.

### அடிக்குறிப்புகள்

1. திருவாசகம் - திருஎம்பாவை: 16
2. திருபாவை: 4
3. திருநாவுக்கரசு நாயனார் தேவார திருப்பதிகங்கள்: 89 : 5
4. திருப்பாவை : 4
5. திருநாவுக்கரசு நாயனார் தேவார திருப்பதிகங்கள்: 272 : 10
6. திருப்பாவை : 4
7. திருவாசகம் : கோயில் மூத்த திருப்பதிகம் : 1
8. தண்டியலங்காரம் : 35
9. சுப்பிரமணியன்,நா. (2006) **நால்வர் வாழ்வும் - வாக்கும்**, சென்னை: கலைஞன் பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுகக் கந்தனின் உகந்தைப்பதியினுடைய தத்துவமும், தல வரலாற்றுச் சுருக்கமும், மகிமையும்

*ந.சிவகுமார்,*
*கலைப்பீடம், இறுதிவருடம்*

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாம் அருள் பொருள்காட்டும் கந்தன் கறைந்துறைகின்ற ஆலயங்களுள் உகந்தையெனும் அருட்பதியும் ஒன்றாகும். இவ்வாலயம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தின் பாணமை பிரதேசத்தை அடுத்துள்ள உகந்தை எனும் இடத்திலே அமையப் பெற்றுள்ளது. அருட்சக்திமிக்கதும் தலமகத்துவம் பொருந்தியதுமான ஏகாந்தமான தெய்வீக மணம் கமழும் இப்பதியின் அழகினிய இயற்கை சூழலின் சக்திநிலைகளும் தெய்வீக உணர்வூட்ட வல்லன.

இலங்கையிலுள்ள முருகன் ஆலயங்களுள் சிறப்பான இடத்தினைப் பெற்றுக் கொள்ளும் இவ்வாலயம் பூவுலகில் முருகப்பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முக்கிய புண்ணிய சேஷத்திரங்களில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இப்பதியின் பெயர் ஓங்கார நாம ஒலி வடிவு கொண்டது. ஓங்கார தத்துவசக்தி அடங்கப்பெற்றது. பிரணவமந்திர நாம சொருப ஒலி ஓங்கப்பெற்றது. அருள்ஒலி பேசும் கருணைக் கடலாம் குமரக்கடவுளின் அருள் மகிமை நிறையப்பெற்றது இத்திருவருட்தலம்.

குமரக்கடவுளே தனக்கு உகந்த தலமாகக் கருதி இப்பதியின் மலையுச்சியிலே கோயில்கொண்டு எழுந்தருளி இருப்பதனால் இம்மலைக்கு உகந்த மலை எனப்பெயர் வந்தது.

*"உகந்தை உகந்தானுக்கு உவர்ப்பான தொன்றில்லை யாவும் உகப்பானவையே"*

இயற்கையழகு நிறைந்த சூழலிலே அமையப்பெற்றுள்ள உகந்தைமலையின் உச்சியிலே சூரபத்மனின் ஆங்கார சக்தியை அழித்த முருகப் பெருமானின் ஓங்காரசக்தி வேலிலிருந்து சிந்திய மூன்று கதிர்களிலிருந்து உருவெடுத்த மூன்று ஓங்கார சக்தி வேல்களிலும் முதன்மை வாய்ந்த அருட்சக்தி நிறைந்த ஓங்காரசக்தி வேல் தாங்கியமையினால் இப்பகுதியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானுக்கு ஒப்பிலா வேலர் என்ற திருநாமமும் உண்டு. ஓங்கார சக்திவேற் பெருமானின் திருத்தலமாகையால் ஆதியில் இப்பதிக்கு ஓம் கந்தா என்ற பெயர் இருந்து வந்துள்ளதாகவும் கூறப் படுகின்றது.

ஓம் கந்தப்பதியே பிற்காலத்தில் ஓகந்த என திரிபுற்று உகந்த என இப்பதியின் பெயர் மருவிற்று. முருகப்பெருமானுக்குரிய திருவுள விருப்பினாலே விரும்பியே பெருமானுக்கு உகந்த இடமாக இந்தத் தலத்திலே கோயில் கொண்டு எழுந்தருளியமையால் இத் திருவருட்தலத்தை அடியவர்கள் உகந்தை என்ற பெயர்களினால் பக்தியோடு அழைத்து வருகின்றனர். ஓம் கந்தா, ஓகந்தா, உகந்த, உகந்தை எனும் பெயர் நாமங்கள் அடியவர்களின் நாவிலிருந்து ஒலிக்க இறைவனின் திருவருட் கடாட்சமே மூல காரணமாயிற்று.

கதிர்காமத்திற்கு தல யாத்திரை புரியும் அடியவர்கள் தங்கியிருந்து முருகப்பெருமானின் அருட்கடாட்சத்தினைப் பெற்றுச்செல்கின்ற சிறப்பும் இத்தலத்தில் இடம்பெறுகின்றது. கந்தசஷ்டி விரதம், கார்த்திகைத் திருவிழா என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. திருவிழாக்காலங்களிலும் விசேட பூசை நாட்களிலும் உபயகாரர்களால் அன்னதானம் வழங்கப்படும். குறிப்பாக தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலமானது இதில் முக்கிய பங்கு கொண்டுள்ளது.

இப்பதியின் பெருமைபற்றிக் கூறும் பெரியவர்கள் பிரணவ மகா மந்திர சக்தியே பதியின் திருநாமமாகக் கொண்டு அத்திருநாமமே அடியவர்களின் நாவில் சதா எழச்செய்து அம்மகா மந்திரமே ஒலிக்கப்பெற்று பல்லாண்டு காலமும் ஒலித்து சக்தி உருப்பெற்ற பெருமை கொண்டது இப்பதி எனக் கூறுகின்றனர். உண்மையான பக்தியோடு தன்னை நாடிவருகின்ற அடியவர்களின் குறைகளை அகற்றுகின்ற அதேவேளை இறைநம்பிக்கையற்று பாதகச் செயல்களில் ஈடுபடும் மனிதர்களை நல்வழிப்படுத்தி தன்புகழ் பாடவைக்கும் அத்திருவுருவம் உகந்தைக் கந்தன் என இறைவன் புகழ் பாடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இப்பதியிலே சீதாப்பிராட்டியாரின் மறு அவதாரமாகப் போற்றப்படும் சிறந்த இராம பக்தையும் இலங்கையை ஆண்ட பேரரசியுமாகிய ஆடகசவுந்தரி என்பாள் நூற்றிருபது ஆண்டுகள் இளமை மாறாப் பேரழகியாகவும், இராமபிரானின் அருளால் பூதப்படைகளை அடிமைகளாகப்பெற்றும், வீர (பராக்கிரமசாலியாகவும்) தர்மநெறி தவறாத வளாகவும் வாழ்ந்து, தனது தவப்பேற்றின் மகிமையினால் நூற்றிப்பதினாறாவது வயதில் திருமணம் முடித்து அதன் பேறாக ஓர் ஆண்மகவை மட்டும் பெற்றனள். அவனே சிங்ககுமாரன். இக்குமரனுக்கு மூன்று வயதடையும் போதே இப்பேரரசி சிவபதமடைந்தனள். இக்குமாரன் வளர்ந்து தந்தையாகிய குளக்கோட்ட மன்னன் அல்லது மகாசேனன் என அழைக்கப்படும் மன்னனால் உன்னரசுகிரி இராட்சியத்திற்கு பட்டம் கட்டப்பெற்று அரசனானான். இவனே உகந்தமலை உச்சியில் சிவ, விஷ்ணு, பிரம்மா மும்மூர்த்திகளுக்கும் ஆலயமுமியற்றி மும்மூர்த்தி ஆலயங்களுக்கு நடுவில் தங்கக் கொடித்தம்பமும் உகந்தை மலையைச் சுற்றி தனித்தனியே அட்டதிக்குப் பாலகர்களின் ஆலயங்களுமியற்றி அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக எட்டுச் செம்புக் கொடித்தம்பங்களும் நிறுவினான்.

அத்துடன், ஆயிரம் அவண நெற்கழனிகளும் திருத்தி குமுக்கன் கங்கையிலிருந்து வெட்டு வாய்க்கால் மூலம் நீரும் அக்களனிகளுக்குப் பெற்றுக் கொடுத்து அக்களனிகளை ஆலயத்திருப்பணிக் கடமைகளுக் குரியவர்களுக்கும் ஆலயத்திற்கும் வருமான வழியமைக்கும் வகையில் ஏற்படுத்தினார். அத்துடன் ஆலய அபிஷேகமும் செய்து, ஆறுகாலப் பூசையுமியற்றி இராவணேஸ்வரன் பெயரில் தீபமுமிட்டு இறைபணி செய்து வழிபட்டு வந்தனன் என்பதும் வரலாறு காட்டும் உண்மைகளாகும்.

ஓங்கார சக்தி நாமமும் உருப்பெற்று, வலுப் பெற்று ஓங்கிய ஒலியலைகள் அலைமோதிப்பரவி மண்ணிலும் விண்ணிலும் அதிர வானமண்டலத்திலே இவ்வொலிகள் சூக்குமநிலையில் எமது செவிப்புலன்களுக்கு அப்பால் ஒலிப்பதிவுகளாகி பெருகிய வண்ணமே இப்பதியின் சக்தி, ஓங்கார சக்தியினால் மிகவும் உருப்பெற்று சக்திவாய்ந்த அருட்தலமாக உலகிலே சிறந்து விளங்குகின்றது எனலாம்.

இத்திருத்தலத்திலே நாம் இறைதிருவடிகளில் முழுச்சரணாகதி அடைந்த நிலையில் தூய அன்புடன் ஒரே மனநிலையில் முருகப்பெருமானை மனமுருகி வழிபட்டு வர அவனருளால் அனைத்து வினைகளும், மும்மலக்குற்றங்களும் ஐவிருள் அதிகாரமும் அதன் அகோரமும் ஆங்காரமும் சூரியனைக் கண்ட பனிபோல நிச்சயமாக நீங்கி மறையும். கலியுகவரதனாம் நம்முருகப்பெருமான் இருண்டயுகமாகி இரும்புயுகமாகிய கலியுகத்து இருளில் மருள்சேர்த்து அலையும் ஆன்மாக்களின்பால் கருணைகொண்டு திருநோக்குமுற்று அருள் ஒளி காட்டி அடியவர்களை இப்பதியிலே அரவணைத்து ஆட்கொள்கின்றான்.

இப்பதியிலே தசகண்ட இராவணேஸ்வரனால் தோற்றுவிக்கப்பட்ட பாபநாச தீர்த்தச் சுனைகளும் அரிய தீர்த்த மகிமையுமுண்டு. இராவணேஸ்வரனுக்கு யமதர்மராஜனால் சாபமிட்ட காரணத்தால் அவன் சாப விமோசனம் வேண்டி உகந்த மலையின் உச்சியிலே சிவாலயமுமியற்றி தீர்த்தச் சுனைகளுமியற்றி இறைவனைத் தூய அன்போடு பூரண சரணாகதியடைந்து வழிபட்டு சாபவிமோசனமடைந்தான்.

எம்மில் உள்ள ஆங்கார சக்தி முற்றாக நீங்கிய நிலையிலே நமது ஆன்மா நிர்மல நிலையான ஓங்கார சக்தியைப் பெறுகின்றது. இதுவே பரப்பிரம்ம தத்துவம். எம்மையும் இறைவனையும் உலகையும் பிறரையும் பிரித்தாளும் சக்தி ஐவிருளினால் வந்த மும்மல இருள்களுக்கும் உண்டு. ஆணவமே அனைத்து மல உற்பத்திக்கும் மூல ஆணிவேர். அத்தகைய மலங்களிலிருந்து விடுபடு வதற்கு துணைபுரியும் கருணைக்கடலாக உகந்தை முருகப்பெருமாள் இக்கலியுகத்திலே விளங்கு கின்றார்.

மலங்களின் ஆட்சியிலிருந்து நமது ஆன்மா விடுபட உகந்தைப்பதியானை நம்புங்கள். அவன் மீது தூய அன்புடன் பூரண சரணாகதி அடையுங்கள். அவன் பதியை நாடுங்கள். அவனை வழிபடுங்கள். ஐயனின் அருளுக்கும் கருணைக்கும் நிச்சயம் ஆளாவீர்கள். இந்த யுகத்திலே யுகயுகாதீரன் கலியுகக்கடவுளாம் கண்கண்ட தெய்வமான முருகப்பெருமானின் அருள் விளையாடலும் திருவிளையாடலும் சதா நிகழும் இப்பதியிலே குமரப்பெருமானின் குருவருட் சக்தியின் துணைகொண்டே நமது ஆத்மா சாந்தியடைய முடியும். இதுவே உகந்தைப்பதியின் தத்துவமுமாகும்.

**உசாத்துணை**


- கதிரவேல்.சி.பி (1998) உகந்தைக்கந்தன் அறவழி அமுதம் மஞ்சுலி வெளியீடு: பாணமை - பொத்துவில்.
- மட்டக்களப்பு மான்மியம்
- மட்டக்களப்புத் தமிழகம்
- கதிர்காமப் பிரபந்தங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரவழிபாடு
## ஓர் மானுடவியல் நோக்கு



*சண் பத்மநேசன்,*
*உதவி விரிவுரையாளர், சமூகவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்*

### *அறிமுகம்*

உலக பண்பாடுகளிடை, சமயங்கள் மீதான தம் பார்வைகளைச் செலுத்த மானுடவியலும் தவறாது தன்னகத்தே முகிழ்த்த, சமயத்தின் மானுடவியல், சமூக-பண்பாட்டு மானுடவியல் எனும் பிரிவுகளின் உறுதுணையுடன் இது பற்றிய தேடலுக்கு வளம் சேர்க்கும். பொதுவாகவே மானுடவியல் மரபில் சமயமானது நம்பிக்கை முறைமை (Belief system) என அர்த்தம் கொள்ளும் அதே சமயம் புனிதப் பொருட்கள், சமயக்குறியீடுகள், சமயச் சடங்குகள், வழிபாட்டுமுறைகள் என நீளும் ஓர் பட்டியலைத் தன்னகத்தே உள்ளடக்கும். இந் நிலையில் மரம் எனும் இயற்கைப்பொருளானது புனிதப்பொருளாக்கி, வேறுபடும் பண்பாட்டுப்புலங்க ளிடையே எவ்வாறு அர்த்தம் காணவிழைவது என்பதும் மானுடவியலில் சாதாரணமாக எழும் கேள்வியே. உலகெங்கும் பரவிக்காணப்படும் இவ் வழிபாட்டு மரபு, சமூகமாற்றத்திடையும் தொடரும் செயற்பாடே. இவ்வழிபாட்டு மரபு சமூக பண்பாட்டு அணுகு முறைகளை வேண்டிநிற்பதால், இவ்வாய்வுத் தேடலும் கட்டுரையாக இங்கே.

மரவழிபாடு உலகநாடுகள் பெரும்பாலா னவற்றுள் காணப்பட்ட/காணப்படும் வழிபாடாக இருப்பினும், தென்னிந்தியாவிலும், ஆபிரிக்காவிலும் அ;து இன்றும் பின்பற்றப்படுகின்றது. அரச மரவழிபாட்டை ஆபிரிக்கர் இந்தியாவில் அறிமுகப்படுத்தினர் என்ற ஒரு கருத்துண்டு. பண்டைய தமிழிலக்கியங்களிலும், ரிக்வேதத்திலும் அரசமரவழிபாடு குறிக்கப்படாமை மேற்கண்ட கருத்தை அரண் செய்யும். எனினும், எகிப்தில் மரவழிபாடு தெளிவுற இல்லாமையும் அதே சமயத்தில், சிந்துவெளியில் அரசமர முத்திரைகள் இருப்பதுவும், புத்தர் அறிவுபெற்ற மரமாக வரலாறு பேசுவதும், புத்தருக்குப்பின், அரச மரவழிபாடு நாடெங்கும் பரவியிருப்பதும், அரச மரவழிபாட்டின் தாயகம் இந்தியாவே எனக்காட்டும். மரவழிபாட்டின் ஆதிகர்த்தர் திராவிடரே ஆரியர் அல்லர். பேர்குசன் முதல், கோ.சுப்பிரமணியம், க.ப.அறவாணன் ஆய்வு வரை மரவழிபாடு திராவிட முறையே என்பதைத் தெளிவாக்குகின்றன. தமிழ்த் திராவிடம், ஆபிரிக்காவிற்கும் இன்ன பிற நாடுகளுக்கும் கொடுத்த சொத்தே மரவழிபாடு என்பதில் ஐயமில்லை. அரசமரவழிபாடு புத்தரால் அறிமுகப் படுத்தப்பட்டதன்று. முன்பே வழிபாட்டில் இருந்த அரசமரம், புத்தரின் போதிமரம் ஆனபின், மேலும் பெருமை பெற்றது, பரவலாக்கப் பெற்றது. அவ் வளவே.

எனினும் மரவழிபாடு பற்றிய ஒரு முடிந்த முழுமையான கட்டுரையாக இதனை கொள்ள முடியாது. இது தொடர்பாக செய்திகள் மேலும் சேகரிக்கப்பட வேண்டும். உலகெங்கும் காணப்படும் மரவழிபாடு பற்றி மேலும் ஆய்வுகள் வெளிக் கொணரப்படவேண்டும். பின்னர், மரவழிபாடு பற்றிய ஒரு முழுமையான ஆய்வு வெளிவரமுடியும். 1868ல் அறிஞர் பெல்குசன் தம் சிறந்த மரவழிபாட்டு ஆய்வுக்குப்பின், சிறந்த நூல் எதுவுமே இதுவரை எழுதப்படவில்லை.

### *மரவழிபாட்டின் தோற்றம்*

வழிபாட்டுக்கு அடிப்படை அச்சமும் அன் புமே. அச்சம் எல்லா உயிர்களுக்கும் உரிய சிறப்பு நிலை. அன்பு, நன்றி என்பன சிந்தனையின் வளர்நிலை. எனவே ஆதிமனிதனின் முதல் உணர்வு அன்பு, நன்றி என்பனவற்றைவிட அச்சம் என்பதே பொருந்தும். நன்றி என்ற பண்பு மனிதப் பண்பாட்டின் வளர்ச்சியில் உருப்பெறுவது. ஆதிமனிதனின் ஆதி இயல்பு அச்சம்; வழிபாட்டின் முதல் அடிப்படையும் அச்சமே. அடுத்த அடிப்படைகளே அன்பு, நன்றி ஆகியன.

மரவழிபாடு மிகத்தொன்மையான வழிபாடு களில் ஒன்று. ஆதிமனிதனின் இயற்கை ஆற்றல் வழிபாட்டை அடுத்தோ, அதனை ஒட்டியோ மர வழிபாடு தொடங்கியிருத்தல் வேண்டும். மரவழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதும் பரவியிருந்த ஒரு வழிபாட்டு முறை. சில நாடுகளில் பரவலாகவும், ஆழமாகவும், அகலமாகவும் பரவியிருந்தது. சில நாடுகளில் ஓரளவு பரவியிருந்தது. உலக நாடுகள் எனும்போது பாபிலோனியா, சுமேரியா, பாரசீகம், பாலஸ்தீனம், சிரியா, லெபனான், இலங்கை, இந்தியா, ஜப்பான், கிரேக்கம், ஜேர்மனி, போலந்து, ஸ்கண்டிநேவியா, பிரான்ஸ், பிரிட்டன், ஆபிரிக்கா என்பன உள்ள டங்கும். மரவழிபாட்டுக்கு மூலகாரணம் எது? மூல காரணங்கள் எவை? அன்பு, அச்சம் என்பன பொதுக் காரணிகள் அவை மட்டுமன்றி வேறு சிறப்புக் காரணிகளும் மரவழிபாட்டின் அடிப்படைக் காரணி களாக இருத்தல் வேண்டும்.

- **மரத்தால் விளையும் நன்மைகள்**

1. மரம் உணவு தந்தமை
2. மனிதனின் ஆதி வீடு மரமாதல்
3. மர இலைகளே ஆடை
4. மரமே மனிதனுக்குரிய கருவிகளை வழங்கும் மூலப்பொருள்
5. மரமே தீ பெற உதவியது
6. மரம் தரும் நிழல்
7. மரமே ஊர்ப் பொதுவிடம்
8. மரம் நோய் தீர்க்கும் மருந்தாகும்
9. மரவழிபாடு மகப்பேற்றை நல்கும்

அரச, வேம்பு மரவழிபாடு குழந்தைப் பேற்றை நல்கும் என்ற நம்பிக்கையாக இந்தியா விலும் ஆபிரிக்காவிலும் வழக்கத்தில் உண்டு குறிப் பிடத்தக்கது. மகப்பேற்றைவேண்டி தொட்டிலும் குழந்தையும் இணைந்த சிறிய கைவினை ஆக்கத் தினை மரங்களில் கட்டி நேர்த்திக்கடன் செலுத் தும் மரபு தென்னிந்தியாவில் உண்டு.

10. மரவழிபாடு மாப்பிள்ளையை நல்கல்

தமிழகச் சிற்றூர்களில் அரசமரமும் வேப்ப மரமும் சேர்ந்து வளர்ந்த இடங்கள் வழிபாட் டிடங்களாக உள்ளன. அரசமரம் மாப்பிள்ளையா கவும் வேப்பமரம் மணப்பெண்ணாகவும் உருவகிக் கப்பட்டு அவ்விரு மரங்களுக்கும் திருமணம் நடத்தி வைக்கப்படும். நல்ல மணவாளர் வேண்டு மென பெண்களும், நல்ல மாப்பிள்ளை வேண்டுமென தாய்மாரும் மரத்தைச் சுற்றி வந்து வழிபடுதல் குறிப்பிடத்தக்கது.

- **மரத்தால் விளையும் தீமைகள்**

1. மரவழிபாடும் தீமை செய்தல்

சில மரங்களை வழிபட்டால் தீமை அண்டாது என்ற நம்பிக்கையும் மரவழிபாட்டுக்கு ஓர் அடிப்படை. முன்னோர் வழிபாட்டின் பிறிதொரு பிரதிபலிப்பே இந்நம்பிக்கையாக உருவெடுத்திருக்க வேண்டும். மக்களுக்கு நன்மைதரும் மாந்தர் இறப்பிற்குப்பின் மரங்களில் உறைவதாகவும் நம்பப் பட்டது. இதுபோன்று தீயோர் ஆவியும் மரங்களில் உறையும் நம்பிக்கையும் உண்டு. நல்லோர் நன்மை செய்வதைத் தொடர்வதைப்போலத் தீயோர் தீமை செய்வதைத் தொடர்வர் என்பதால் பேய் போன்று உருவிலேயே தோற்றம் அளிக்கும் இலுப்பை, புளி மரங்களில் தீயோர் தம் ஆவி உறைவதாக நம்பப் பட்டு வழிபட ஆரம்பித்தனர்.

2. மரம் நோய் தருதல்

சில மரங்களை வழிபட்டால் நோய் தீரும் என்ற நம்பிக்கை அம்மரத்தை வழிபடா விட்டால் நோய் வரும் என்ற நம்பிக்கையாகப் பண்டைய மக்களின் மனதில் வளர்ச்சி பெற்றது. சில இடங்களில் வளர்ந்திருக்கும் மரங்களை வழிபட்டால் சில நோய்களை மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையாக வளர்ச்சிபெறும்.

நோயாளிகளின் தலைமுடி, நகம், துணி ஆகியன சில மரங்களில் கட்டி வைக்கப்படும். தமிழ்நாட்டுக் கோயில் மரங்களில் இத்தகு முடிச்சுகளைப் பல இடங்களில் காணலாம். ஆபிரிக்காவில் மருத்துவமனைக்கு உள்ளும், பக்கத்திலும் உள்ள முருங்கை மரங்களில் நூற்றுக் கணக்கான துணி முடிச்சுக்கள் தொங்குவதைப் பார்க்கலாம்.

## *மரவழிபாடே - கோயில் வழிபாடு*

நன்மை தருவதால் மரங்களின் மீது பக்தி ஏற்பட்டு வழிபாடு உருவாயிற்று. தீமைகள் நல்கும் என்ற பயத்தாலும் மரவழிபாடு அறிமுகமாயிற்று. ஆதிமனிதன் அளவில் நின்று பார்க்கும் போது, அவனுக்கு மிக அண்மையில் நின்று நன்மையும் தீமையும் நல்கிய மரங்கள் முதலில் அவனுக்கு வழிபடு பொருள்களாயின. பண்டைய மரவழிபாடே பிற்காலத்து கோயில் வழிபாடாக வளர்ச்சிபெற்றது. வெறும் மரவழிபாடு, பின்னர் உருவவழிபாடாக வளர்ச்சி பெற்றது. மரமும் உருவமும் சேர்ந்தே வணங்க ப்பட்டன. காலப்போக்கில் வழிபாட்டில் உருவத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமரத்தின் கீழ் சிலை என்ற நிலை மாறி, சிலைக்காக மரம் எனும் நிலை உருவாயிற்று. ஆரம்பநிலையில் மரக் கோயில்கள் கட்டப்பட்டன. அதில் புனித மரத்தின் கீழ் இருந்த உருவம் மூலவராக நாட்டப்பட, புனித மரமும் உருவமும் தனித்தனியே பிரிந்தன. எனினும் பல இடங்களில் புனிதமரம் தலவிருட்சம் என்று பெயர் பெறும்.

- **மரதேவதை வழிபாடே உருவ வழிபாடானமை**

நடுகல் வழிபாடே பிற்கால உருவ வழிபாடாயிற்று. மரவழிபாட்டின் ஒரு கூறு, மரங்களில் தெய்வம் வாழுகின்றது. தேவர்கள் வாழ்கின்றனர். தேவதையர் வாழ்கின்றனர் என்ற நம்பிக்கையாகும். இந்தக்கட்டத்தில், வழிபடப்படும் மரங்களில், வாழ்வதாக நம்பப்பட்ட தெய்வங் களுக்கு தனியே மரத்தில் உருவம் செய்து, அந்த மரத்தடியிலே நாட்டி வழிபடும் பழக்கம் அறிமுகமாயிற்று.

சிரிய மக்கள், சாத்தான், ஒலிவ் மரத்தில் அமர்ந்து மக்களுக்குத் துர்போதனை செய் கின்றான் என்று நம்பினர். வேப்பமரத்தில் இருந்து, வேப்பிலையில் இருந்து துர்க்கை அருள் புரி கின்றாள் என இந்தியர் நம்புகின்றனர். *"ஆந்தில்"* என்ற இடத்தில் வாழ் மக்கள், மரம் வாழ் தெய் வங்கள் தம் உருவை மரத்தில் செதுக்குமாறும் அதனைக் கோயிலில் பிரதிஸ்டை செய்து வணங் குமாறும், ஊர்ப்பூசாரிகளுக்கு அசரீரவழி, ஆணை யிடும் என்று நம்பினர். இப்படி மரத்தில் உறையும் தெய்வங்களுக்கு மரத்திலேயே உருவம் செய்து நாட்டி வழிபட்டனர். காளி கோயிலிலுள்ள காளி முகம் மரத்தாலேயே இன்றும் செய்யப்படுவது, மரத் திற்கும் உருவத்திற்கும் ஊடே உள்ள உறவைக் காட்டும.

- **உலக நாடுகளில் மரவழிபாடு**

ஏற்கனவே பட்டியலிடப்பட்ட நாடுகளில் மரவழிபாடு இருப்பினும், இந்தியாவிலும், ஆபிரிக்கா விலும் சிறப்பாக இன்று வரை தொடர்வது குறிப்பி டத்தக்கது. கிறிஸ்தவமும், இஸ்லாமும் உலக நாடுகளில் பரவுவதற்கு முன் பலநாடுகளில் மர வழிபாடு இருந்து வந்ததை அந்தந்தநாட்டுச் சமய வரலாறுகள் தெரிவிக்கும். பௌத்தமதம் மரவழிபாடு, இந்தியா, இலங்கை தென்கிழக்காசிய நாடுகளில் மிக வேகமாகப் பரவுவதற்கு பெருங்காரணமாக இருந்தது.

மரங்கள் அனைத்திற்கும் ஆத்மா உண்டு என்பது ஆபிரிக்கர் நம்பிக்கை. ஆற்றல் உள்ள சில ஆவிகள், தம் இருப்பிடமாகப் புனித மரங்களைக் கொண்டிருக்கும். பெரும்பாலும் ஒவ்வொரு சிற்றா ரிலும், ஊர்க்கடவுள் மரம் நடுமையமாக விளங்கும். இதுபற்றி ஆபிரிக்கரிடையே வழங்கும் பழமொழி கடவுள் மரத்திற்கும் மக்கள் வாழ் இல்லத்திற்கும் இடையே உள்ள தொடர்பை எடுத்துரைக்கும். *"மரம் தெருவில் இருக்கும்ஆ அதன் வேர் மூலம் வீட்டில் இருக்கும்"* (The tree may stand in the street but its roots are in the house)

அசாந்தி (Ashanti) என்ற இனக்குழு மக்கள் வாழும் ஆபிரிக்க ஊர்களில், வான் கடவுளுக்காகப் புனித மரத்திலிருந்து, கிளையொன்று வெட்டப்பட்டு நாட்டப்படும். அம்மரம், கடவுள் மரம் என்ற பொருளில் 'லேயஅந னரய' என்று குறிக்கப்படும். தோகோ (Togo) மக்கள், மாந்தரைப்போலவே, மரங்களுக்கும் ஆன்மா உண்டு. அவற்றிற்கு உணர்ச்சிகள் உண்டு. அவை பேசும் என்றும் நம்பினர். ஈவ் (Ewe) என்ற இனக்குழுவினர், புனித மரத்திற்கு இராட்சத ஆன்மாக்கள் உண்டு என்று கருதினர். ஈவ், யொருபா (Yoruba) இனக்குழு மக்கள், தாம் வாழும் ஊர்களில் அரசமரங்களையும், பவ்பாவ் மரங்களையும் ஊர்க்கடவுள் மரங்களாக வழிபட்டனர். இவர்களைப் போன்றே பிலா (Pila) இபரிபா (Bariba) இனக்குழுவினர், மேற்கண்ட மரங்களைப் புனித மரங்களாகப் போற்றினர்.

சுருக்கமாக வடஇந்தியா, தென்இந்தியா பற்றி நோக்கின், வடஇந்தியாவில் மரவழிபாடு என்று கூறப்படும் அம்சங்கள் பெரும்பாலும் தென்னிந்தியாவிலும் காணப்படுகின்றன. சில வடிவங்கள் வேறுபட்டும், சில வடிவங்கள் முதன்மை இழந்தும் காணப்படும். அரசமரம், வேப்பமரம், துளசி ஆகியவற்றை ஒட்டிய வழிபாடுகள் தென்புலத்தில் மிகுதி. தென்இந்தியாவில், தமிழ்நாட்டில் மரவழிபாடு பற்றி சற்று நோக்கும் போது, உலகநாடுகளின் மர வழிபாட்டு பின்பற்றுதல்களைத் தமிழகத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால், இவ்வழிபாட்டில் தமிழர்தம் மிகுந்த ஈடுபாடும் ஆழமும் புலப்படும். தமிழர் மரத்தை, மரத்தின் கிளையை, இலையை, பூவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயை, பழத்தை தம் வழிபாட்டுள் இணைத்துப், பிணைத்துக் கொண்டிருப்பது சிறப்பிற்குரியதே. பல நூறு ஆண்டுகளாகத் தமிழர் மரந்தொடர்பான வழிபாட்டை எந்நோக்கம் கொண்டு பின்பற்று கின்றனர்.

1. கடவுளின் அடையாளமாக மரத்தைக் கருதுதல்.

2. மரங்களில் பேய், பிசாசு உறைவதாக நம்பு தல் (இந்த மரத்தில் என்பார், அந்த குளத் தில் என்பார் - பாரதி) எனவே உரிய மரங்களை வழிபட்டால் பேய் பிடிக்காது எனவும் பேய் பிடித்திருந்தால் விட்டுவிட்டுப் போய்விடும் என்றும் நம்புதல்.

3. நோய்களுக்கு மூலம் அம்மனே அம்மனே நோய் தருபவள் அவள் நோய் விலக்குபவள். எனவே அம்மனின் அடையாளமாக மர இலையைப் போற்றுதல்.

4. மரவழிபாடு நல்ல மணமகனைத் தனக்குத் தரும் என்று நம்புதல்.

5. மரவழிபாடு குழந்தைப் பேற்றை அளிக்கும் என நம்புதல்.

போன்றவற்றைக் காரணங்களாகக் கொள்ளலாம்.

மரத்தையே வழிபட்டது முதல்நிலை; மரமே தெய்வம் என்று கருதப்பட்ட நிலை, பின்பு மரத்தில் தெய்வம் உறைவதாக எண்ணி வழிபட்டது இரண்டாம் நிலை; மரம்வேறு, தெய்வம்வேறு என்று கருதிய நிலை, மரத்தின் அடியில் தெய்வத்தைப் பிரதிட்டை செய்து வழிபட்டநிலை மூன்றாம் நிலை; இந்நிலையில் மரம் வேறு தெய்வம் வேறு என்றானதுடன், தெய்வத்தின் இருப்பிடம் மரத்தடி-அவ்வளவு தான் என்ற நிலை உருவாகிவிட்டது. தெய்வத்தின் இருப்பிடம் மரம் என்ற நிலைமாறி தெய்வ இருப்பிற்காக தனியே கோயில் எழுச்சி கண்டமை நான்காம் நிலை. இந்நிலையில் மரம் ஏறத்தாழத் தன் முதன்மையை, தேவையை முற்றுமாக இழந்துவிட்டது. இதுவே இன்றைய நிலை. எனினும் தென்இந்தியாவைப் பொறுத்தவரை, பல கோயில்களில் மரம் தல விருட்சமாகப் போற்றப் படும். இங்கே தெய்வமும், மரமும் வணங்கப் படுதலைக் காணுகிறோம். ஆனால் மரமே தெய்வ மாக இருந்த முதல்நிலை மாறி, பிரதிமை தெய்வ மாக முன்னுரிமை பெற்றுவிட்டதையும், மரம் பிரதி மையின் துணைமையாக மாற்றம் கண்டமையும் வெளிப்படை. மானுடவியல் அணுகுமுறைகளின்வழி மரவழிபாடு பற்றி நோக்கின், பண்பாடு என்பது மானுடவியல் ஆய்வுகளின் அடித்தளமாயும், மைய எண்ணக்கருவாகவும் அமையும் பல்வகைப்படும் பண்பாட்டுப் புலங்களிடையே எவ்வாறு அர்த்தம் கொள்ளப்படுகிறதென்பது முக்கியம் பெறும். பல்வேறுபடும் பண்பாட்டுப் (Cultural diversity) புலங்களிடை, அப்பண்பாட்டு நெறிமுறை, வரையறைக்குள் அர்த்தம் காணவிழைவது, நடைமுறையில் வெளிப்படையாய் உள்ளது. மனிதநடத்தையின்(Human behavior) வெளிப் படையாய் கண்டுணரமுடியும். உலக நாடுகளிடை, இது தொடர்பான ஒருமைத் தன்மைகளையும், பல்வகைத் தன்மைகளையும் காண முடியும். சமய த்தின் மானுடவியல் தளத்திலிருந்து பார்க்கின்ற போது, நம்பிக்கையின் அடிப்படையில் தொழிற் படுவதும் வெளிப்படை. இவ்வழிபாடு தொடர்பாக சில நாடுகளிடையே ஒருமைத்தன்மைகள் (உதாரணமாக இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா) காணப்படுவதற்கு, மானுடவியலாளர் பண்பாட்டுப் பரவுகையை (cultural diffusion) பிரயோகித்து விளக்கமுனைதலும் உண்டு. ஆயினும் அவ்வவ் பண்பாட்டுப் புலங்களுக்கேற்ப மாறுதல் அடைதலும் இயல்பே.


சமூகமாற்றத்தினூடும் இவ்வழிபாட்டு மரபு கள் புதுமை பெறுவதும், தொடர்வதும் கண்கூடு. இன்றும் தமிழகத்தில் மகப்பேறு வேண்டி சிறு தொட்டில்களை நேர்த்திக்காய் மரங்களில் கட்டு வதும், சென்னை மாநகரத்தில் கூட ஆலயங்களில் உள்ள தலவிருட்சத்தை கன்னிப்பெண்கள், திருமணமான பெண்கள் சுற்றி வழிபடும் மரபு, (நகரவாழ்விடையும் புத்துயிர் பெறுவது குறிப்பிடத் தக்கது) என்பன அதன் தொடர்ச்சியை வலுப் படுத்தும். ஆரம்பநிலையை இன்று காணவிழைவது கடினமே. ஆனால் அவை சமூகமாற்றத்தினிடையும், அவ்வவ் பண்பாட்டுப் புலங்களுக்கேற்ப மரவழிபாடானது மாற்றம் கண்டிருப்பினும், தொடரும் வழிபாட்டு முறையாக திகழ்வது வெளிப்படையே.


**உசாத்துணைகள்**


- அறவாணன், க.ப 1984. மரவழிபாடு-திராவிட ஆபிரிக்க ஒப்பீடு, பாரிநிலையம், சென்னை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Keesing, Felix.M.1963. Cultural Anthropology. Holt, Rinehart and winston, United States of America.
- Makhan Jha. 1999. An introduction to social anthropology, vikas publishing House pvt Ltd, New Delhi.
- Sinha B.C. Tree worship in ancient India, Books today Oriental publishers New Delhi.
- Subramaniya Pillai G. 1948. Tree worship and ophiolatry, Annamalai University, Annamalai nagar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தோக்கிய உபநிடதத்தில் "தத்வமஸியும் அதன் மெய்யியல் அர்த்தங்களும்"

முபீஸால் அபூபக்கர்,
உதவி விரிவுரையாளர், மெய்யியல் உளவியல் துறை

சாந்தோகர்களின் உபநிடதம் என்பது தான் சாந்தோக்கிய உபநிடதம் என்பதன் அர்த்தமாகும். சாந்தஸ் என்பதற்கு வேதம் என்றும், வருத்தம் என்றும், வருத்த சாத்திரம் என்றும் அர்த்தம் கூறுவர். சாந்தோகன் என்ற சொல்லுக்கு சாம வேதம் படித்தவன் என்ற பதவிளக்கமும் உண்டு. மேலும் சாந்தஸ் அல்லது சாமம் பாடும் நபர் என்றும் வியாக்கியானம் சொல்லலாம்.

சாந்தோக்கியத்தில் பத்து அத்தியாயங்கள் உண்டு. அவற்றுள் முதலிரண்டு அத்தியாயங்கள் தவிர மீதி எட்டும் சேர்ந்ததே சாந்தோக்கிய உபநிடதமாகும். பிரம்ம சூத்திரத்தில் பெரும்பகுதி இவ்வுபநிடதத்தின் மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதனால் இதனை மந்திர பிரமாணம் எனவும் இதிலுள்ள எட்டு அத்தியாயத்தில் எதனையும் "*அஷ்டத்யாயி*" என்றும் கூறலாம் என உபநிடத மேதையான சங்கராச்சாரியார் கூறுகின்றார். உரை நடையிலான உபநிடதங்களை விட செய்யுள் வடிவிலான உபநிடதங்கள் பழைமையானவை என்ற ஆராய்ச்சி உண்மைப்படி ஒரு தொன்மையான உபநிடதமாக இது கூறப்படுகன்றது. புத்தரை விட பழைமையானது இது என்று பல அறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். டொய்சன், எஸ். இராதாகிருஷ்ணன் போன்றோரும் அதனை ஏற்கின்றனர். இதன்படி இவ்வுபநிடதம் உருவான காலம் ஏறத்தாள கி.மு 800 இற்கு முன் இருக்கலாம்.

மேலும் பிரச்னம், முண்டகம், கடம் முதலிய உபநிஷத்களைப் போல் இது ஒரே ரிஷியின் உபதேசமாக அமைந்ததன்று. பிரஹதாரண்யத்தைப் போல் பல ரிஷிகளின் உபதேசங்களின் தொகுதி. புருஷ புருஷ வித்தையின் ரிஷி மஹிதாச ஐதரேயர், ஸமவர்க்க வித்தையின் ரிஷி ரைக்வர், ஷோடச காலப் பிரம்ம வித்தையின் ரிஷி, ஸத்ய காம ஜாபலர், சாண்டில்ய வித்தையின் ரிஷி சாண்டில்யர், பஞ்சாக்னி வித்தையின் ரிஷி ப்ரவாஹன ஜைவலி என்போராகும். மேலும் இவ்வுபநிடதத்தில் புகழ் பெற்ற நான்கு மகா வாக்கியங்கள் சம்பிரதாய முறையில் ஏற்கப்பட்டு இருந்தாலும் நம்முடைய மனதில் முன்னிற்பது '*தத்வமஸி*' என்ற மகா வாக்கியம் தான். இது சாந்தோக்கியத்தில் தான் முழக்கமிடுகின்றது. அத்தோடு ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம ஆத்மை வேதம் ஸர்வம் முதிலயவையும் இதிலடங்கும்.

பிற உபிடதங்களில் உள்ளதை விட அதிக உபாசனைகள் சாந்தோக்கியத்தில் இருக்கின்றன. எட்டு அத்தியாயங்களில் ஆறாம், ஏழாம் அத்தியாயங்கள் மட்டுமே முழுமையாக ஆத்ம ஞானச் சார்பானவையாக உள்ளன. இதிலுள்ள மகா வாக்கியங்கள் ஓங்காரத்தில் அடக்கம். படிப்படியாக ஓங்காரப் பொருளை விளங்க வைப்பதே இவ்வுபநிடதத்தின் முக்கிய நோக்கமாக காணப்படுகின்றது. "*ஓமித்தேய — தஷர — முக்கத — முபாஸீத்*" என ஆரம்பித்து பிரஹ்ம லோக '*மபிஸம்பதயதே நச புரணரா வர்த்தேத*' என்று முடிவடைகின்றது.

இவ்வுபநிடதத்தின் ஆறாவது அத்தியாயம் சுவேத கேதுவுக்கு '*தத்வமஸி*' என்ற பரஞானம் வந்து சேர்ந்த கதையை விவரிக்கின்றது. பன்னிரெண்டாம் வயதில் குருவை அணுகி வேதங்களையெல்லாம் அறிந்து கொண்டுவிட்டேன் என்ற அகங்காரத்துடன் இருபத்து நான்காம் வயதில் வீட்டிலிருந்து திரும்பி வந்த சுவேத கேதுவிடம் தந்தை ஆருணி கேட்ட கேள்வியினால் வேதஞானத்திற்கு அப்பாலும் வேறு ஞானம் அறியப்படாமல் இருக்கின்றது என்ற உண்மை அவ்விளைஞனை திகைக்க வைத்தது. இது தான் அந்த கேள்வி.

"*கேட்கப்பட்டதை கேட்டதும், நினைக்கப்படாததை நினைத்தும் அறியப்படாததை அறிந்ததும் நிறைவேறியது எஞ்ஞானத்தின் மூலமாக?*"

இதற்கான தத்துவத்தை அவ்விளைஞன் தெரியாதிருந்தான். அஞ்ஞானியாய் அந்த மகனை ஞானியாக்குவதற்கு அந்த தந்தை முனைந்தார். மேலும் ஆருணியின் உலகப் புகழ் பெற்ற பரம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தை உபதேசிப்பதற்கான சந்தர்ப்பம் இதுவாக இருந்தது. மேலும் இதிலுள்ளபடி சுவேத கேதுவின் தந்தையான உத்தாலக ஆருணி எல்லாங் கற்றவராக இருந்தும், தனது மகன் ஆசாரியர்களிடம் சேவை செய்து கல்வி கற்று வரவேண்டும் என அவனைத் தகுந்த ஆசாரியாரினைத் தேடியடையும்படி அனுப்பி வைத்தார். மேலும் நன்றாகக் காய்த்துப் பழுத்த மரத்தின் கிளைகள் வளைந்திருப்பது போல் கல்வியால் பக்குவம் அடைந்தவன் பணிவுடையவனாயிருப்பான். பணிவின்மை கல்வியின் குறைவைக்காட்டும். அத்துடன் ஆத்மஞானத்தினாலேயே கல்வி பூர்த்தியாகின்றது, என்பதையும் சுட்டுகின்றது. மேலும் *'குழந்தாய்! எங்ஙனம் ஒரு மண்கட்டியினால் மண்ணாகிய அனைத்தும் அறியப்பட்டதாகுமோ, வேறுபா டெல்லாம் பேசும் இடத்துப் பெயரளவி லேயாமோ, மண் ஒன்றே உண்மையோ, அங்ஙனம்'* என்றார். இதன் மெய்யியல் அர்த்தம் யாதெனில், ஒரு மண்கட்டியை அடிப்டையில் என்னவென்று அறிந்து கொண்டால் போதும். எல்லா மண்பாண்டங்களும் நமக்குத் தெரிந்தாகி விடும். இதைப்போன்றதே தங்கமும், தங்கத்தின் தோற்ற மாற்றங்களும், இரும்பும் இரும்பின் தோற்ற மாற்றங்களும் பிரித்தறியப்பட வேண்டும். அத்துடன் பொருளின் பல்வேறு மாற்றங்கள் வெறும் பெயர்கள் மட்டுமே. மண் எல்லாமாக உள்ளது என்பதே உண்மை. இதுவே இம்மந்திரத்தின் பிரதான அர்த்தமாகும். பெயரும் உருவமும் கலந்த வெவ்வேறு தன்மையான இவ்வுலகம் ஆதியில் ஏகமாகவும் அத்வைதீயமாகவும் இருந்தது. உலகத்தில் ஒரு பொருளை உருவாக்க பல காரணங்கள் தேவைப்படுகின்ற போது, பிரபஞ்சப் படைப்பில் ஒரேயொரு காரணம் தான் ஈடுபடுகின்றது என்ற வேறுபாட்டை ஒளிரச் செய்யவே அத்வைதம் என்பது எடுத்துரைக் கப்பட்டது. மட்பாத்திரம் உதாரணமாகக் கூறப்பட்டதால் இங்கே பல காரணங்கள் செயற்பட்டிருக்கலாம், என்ற ஐயப்பாடு சாதாரண புத்தியில் விசாரத்தை ஏற்படுத்தி இருப்பதை இந்த முழுமையான அறிவுரையால் ஆருணி மறுத்திருக்கின்றார்.

மேலும் உபதேசிக்கையில் சிருஷ்டிக்குமுன் 'ஸத்' எனும் நிலையில் தான் இருந்து பின்னரும் அதே நிலையையே அது அடைந்தது என்று கூறுவதுடன், நான் பலவகையாவேன், வெகுவாக வளர்வேன், என்று ஒளியை சிருஷ்டித்து, ஒளி நீரையும், நீர் உணவையும்(அன்னம்) சிருஷ்டித்தது என்கின்றார்.

இதன்படி அந்த ரகமான மெய்மை தனக்குள் தானே பலவாறாக வளர விரும்பிய போது, இம்மிக விசித்திரமான உலகம் உண்டானதாகவும் அவற்றின் அடிப்படையில் ஒளியையும், ஒளி நீரையும், நீர் உணவையும் படைத்ததாகக் கூறுகின்றனர். இதன்படி நவீன உலக செயற்பாடுகளில் சூரிய ஒளியினால் மழை, நீர் போன்றனவும் எங்கு நீர் உள்ளதோ, அங்கு உணர்வுகள் பெருகுவதையும் நிதர்சனமாக விளக்கியதுடன், இவ்வாறு மிகவாகப் பின்னர் பலவாகி, பலவாகிப் பெருகும். உலகச் செயற்பாட்டைச் செய்ய ஊடுபாவன காரணம் சூட்சமமான அந்த ஏக சத்தியம் தான். அதுதான் சத்தியம், அது தான் ஆன்மா, அது நீயே (தத் ஸத்யம், ஸஆத்மா, தத்வமஸி ச்வேதகேதோ) என்று கூறினார். இதில் உலக தோற்றத்தின் முதற்படைப்பு நீர் தான் என்ற கூற்று மறுக்கப்பட்டு ஒளியே முதன்மையானது. அதிலிருந்து நீர் தோன்றியது என்றும் கூறப்பட்டுள்ளதுடன், உண்ட உணவு மூன்று வகைப்படும் எனவும், அதில் ஸ்தூலபாகம் - மலமாகவும், எது நடுத்தரமானதோ அது உடம்பில் சதையாகவும், எது சூட்சுமபாகமோ அது மனமாகவும் ஆகின்றது என்கின்றார். இதன்படி மனிதன் தான் உண்ணும் உணவுக்கும், அவனது சுகாதார உடல் மனம் தொடர்பான விடயங்களைப் பொறுத்தே அவனது மனம் நல்லதா?, கெட்டதா? எனத் தீர்மானிக்கப் படுவதாகவும் கூறுகின்றார்.

இன்னும் கூறுகையில் *'மனம் அன்னமயமானது, பிராணன் நீர் மயமானது வாக்கு ஒளி மயமானது ......... புருசன் பதினாறு கலைகள் உடையவன். பதினைந்து நாள் சாப்பிடாமலிரு. ஆனால் வேண்டியளவு ஜலத்தை குடித்து வா, பிராணன் ஜலமயமானதால் அது போகாது'* இவ்வாறான உபதேசம் மனம் ஆசையின்பாலும், இயற்கையிலேயே உணவின் மீதும் ஆர்வமுடையதும் என்றும், உயிர் நீர் மயமானது, அது நீரைக் கொண்டு நீண்ட நாள் வாழக்கூடியது என்பதனால் நீரைக்குடித்து உனது உணவு ஆசையைக் கட்டுப்படுத்து அப்போது *'ஸத்'*தை அறிவாய் என்கிறதுடன் மனிதன் தூங்கும் போது, தன் ஆரம்பமான *'ஸத்'* உடன் ஒன்று படுகின்றான். தன்னிடமே லயிக்கின்றான். ஆகையால் அவன் தூங்கும் போது, ஆன்மாவுடன் ஒடுங்கி விட்டான் என்று கூறுவதுடன், மனத்திற்கு பிராணன் என்பது பிராணனின் பிராணனான ஆத்மாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"*கயிற்றால் கட்டப்பட்ட ஒரு பறவையானது எங்கனம் திசை தோறும் பறந்து வேறெங்கும் உறைவிடம் காணாமல் கட்டப்பட்ட இடத்திலேயே நிலை பெறுமோ அங்கனமே மனமும் திசை தோறும் பறந்தும், வேறெங்கும் செல்லாது பிராணனிடமே நிலை பெறும். மனத்திற்கு உறைவிடம் பிராணனாகும்*"

என்ற உபநிடத வாக்கியம் மனதை, ஒரு இடத்தில் உள்ள பறக்கும் பறவைக்கு ஒப்பிட்டு அதே போல மனமும் அலையக்கூடியது என்றும், பின்னர் வசிக்கும் மரத்தை வந்தடைவது போல சக்திகளெல்லாம் கூடஸ்தனான ஆத்மாவிடம் வந்தடைகின்றன என்கின்றார். இவ்வாறு மனம் பற்றி ஆராய்ந்த ஆரம்ப நிலைக்கருத்துக்கள், பிற்காலத்தில் தோன்றிய மனம் பற்றிய ஆய்வுக்கு மிகவும் பிரதானமானவையாக இருந்திருக்கின்றன. அத்தோடு இத்தகையான உபநிடதங்கள் மனிதன் அன்றாட வாழ்வில் சந்திக்கின்ற நடைமுறை உதாரணங்களையும், சிறிய உதாரணங்களையும் கொண்டமைந்துள்ளவையும் இம்மகா வாக்கியத்தின் இன்னொரு சிறப்பியல்பாகும்.

"*குழந்தாய்! தேனீக்கள் எங்கனம் பல திக்குகளிலுள்ள மரங்களில் இருந்து இரசங்களைச் சேகரித்து பின் ஒரு இரசமாக மாற்றுகின்றன. ஒவ்வோர் இரசமும் இம்மரத்தின் இரசம், தான் இந்த மரத்தின் இரசம் என்பதை அறியாதோ அது போலவே இப்பிராணிகளெல்லாம் ஸத்தை அடைந்து 'ஸத்'தை அடைந்துள்ளோம் என்று அறிய மாட்டார்கள். அவை இங்கு புலியோ, சிங்கமோ, ஓநாயோ, பன்றியோ, புழுவோ, பூச்சியோ, கொசுவோ எப்படி எப்படி இருக்கின்றனவோ அப்படியே மீண்டும் ஆகின்றன.*"

இவ்வுபநிடத செய்யுளில் தேனீக்கள் பல பூக்களில் இருந்து எடுக்கும் தேன், வெவ்வேறு சுவையுடன் இல்லாமல் ஒரேயொரு சுவையுடன் கடைசியில் உருவெடுப்பது போல இவ்வுலகத்திலுள்ள நரியும், சிங்கமும், ஓநாயும், புறாவும், பறவையும், ஈயும், கொசுவும், எல்லாமே அந்த சத்தியமாக இருக்கின்றன. அது போலவே இதன் மிகையர்த்தம் உயிரினங்கள் எவ்வாறு வகை வகையாகப் பிரிவு படுத்தப்பட்டாலும் அவற்றின் '*ஸத்*' ஒன்றாகவே இருக்கும் என்பதுடன் அவற்றின் வெளித்தோற்றம் பல்வேறு பிரிவுகளிலும், தோற்றங்களிலும் நோக்கப்படினும் உண்மை ஒன்றேயாகும். இன்னொரு வாக்கியத்தின் படி,

'*எது அணுமாத்திரமான சூட்சும வஸ்துவோ அதுவே ஆத்மாவாய்க் கொண்டது. இது எல்லாம் அதுவே ஸத்யம், அதுவே ஆத்மா, அதுவே நீயாக உள்ளாய். (தத்வமஸி)*'

இங்கு தத்வமஸி என்பது சாம வேதத்தின் மகாவாக்கியமாக உள்ளது. இதன்படி அணுமாத்திரமான வஸ்துவாக இருப்பினும், அதுவும் ஆத்மாவைக்கொண்டது. அவ்வாத்மா தான் '*நீ*', நீயும் அதில் உள்ளாய் என்கின்றார். இதைத்தான், பின்னர் தோன்றிய சோக்கிரட்டீஸ் '*உன்னையே நீ அறிவாய்*' என்றார். மேலும் ஸாபிகள் தன்னை அறிந்தாலே தலைவனை அறியலாம் என்றனர். அது போலவே உலக நதிகள் கிழக்கிலும், மேற்கிலும் பாய்ந்து செல்கின்றன. சமுத்திரத்தில் தோன்றி சமுத்திரத்திலேயே மறைகின்றன. அத்துடன் சமுத்திரமாகவே மாறிவிடுகின்றன. அவை அந்நிலையில் '*நான் இது*' என்று எங்கனம் அறிய மாட்டாவோ, அங்கனமே இப்பிராணிகள் யாவும் '*ஸத்*'தில் இருந்து தோன்றினோம் என்று உணர்வதில்லை. அதுவே நீயாக உள்ளாய் என்கிறது. அதன்படி, வெவ்வேறு இடங்களில் தோன்றினாலும், வெவ்வேறு இடங்களில் சந்தித்தாலும் நம்மை இனங்காண முடியாத அளவுள்ள நதியைப் போல உயிரினங்களும் தம் அடிப்படையான '*ஸத்*'தை அறிய வேண்டும்.

ஆத்மா எங்கும் நிறைந்திருக்கும். அதுவோர் உயிர் வடிவான மரத்தில் உள்ள நீரைப் போன்றது. அந்த மரத்தில் எங்கு வெட்டினாலும் நீர் வடியும். ஆனால் ஒரு கிளையை அதிலிருந்து வெட்டி விடின் அது பட்டுப்போய் இறந்து விடும். ஆனால் என்றும் அணுமாந்திரமான சூட்சும வஸ்த்துவான ஆன்மா சாவதில்லை. '*அதுவே நீயாக உள்ளாய்*'. எனவே அதிலிருந்து வெளிப்படும் மெய்யியல் அர்த்தம், ஆன்மாவாகிய வஸ்த்து எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக நிறைந்து உள்ளது. அடியாயினும், நுனியாயினும் அது குறைந்து விடுவதில்லை. அணுவாயினும், மலையாயினும் அது எங்கிலும் நிறைந்துள்ளது. அதைக்காண முடியாவிடினும் அது எங்குமுள்ளது. அதைப்போலவே உத்தால ஆருணர் தன் மகனான சுவேத கேதுவுக்கு இன்னும் போதிக்கின்றார்.

ஆருணி மகனிடம் ஆலம்பழம் ஒன்றைக் கொண்டு வருமாறு கூறினார். அப்பழத்தைப் பிளந்த போது அதில் சின்னஞ் சிறிய விதைகளை அவன் பார்த்தான். அதல் ஒன்றை எடுத்து நசுக்கி உடைத்த போது உள்ளே எதுவும் தென்படவில்லை. எதுவும் இல்லாது போலிருந்த அதிலிருந்து பின்னர் ஒரு பெரிய ஆல மரம் தோன்றி வளர்வது போல ஆத்மா என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூக்குமமான சக்தியில் இருந்து காண்பதெல்லாம் உருவாகின்றன. அது தான் *'நீ'* என்கின்றார். இதன் படி நாம் நோக்கின், எந்த ஒன்றினதும் வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்கி விடக்கூடாது. மாறாக சிரத்தை — நம்பிக்கை — வைக்க வேண்டும். நம்பிக்கையின் சக்தி அகக்கண்ணைத் திறக்கும். ஊனக்கண் காணாததை ஞானக்கண்ணால் காணலாம். விதையினுள் மரத்தை ஊனக்கண் காண முடியாது விடினும், ஞானக்கண் காண்கின்றது. விதையினுள் மரம் முழுவதும், அதன் பூவின் வாசனையும், நிறமும், மற்ற எல்லா விஷேட குணங்களும், மறுபடி அம்மரத்தின் அத்தகைய விதைகள் நிறைந்த கனிகளை உண்டாக்கும் சக்தியும் அடங்கிக் கிடக்கின்றன. இந்த அதிசயத்தை ஆழ்ந்து சிந்தித்தால் சூட்சுமமாகிய ஆன்ம சக்தியில் அனைத்தும் அடங்க இருக்கும் இரகசியம் ஒருவாறு விளங்கும். இவ்வாறு *'அது தான் நீ' என்ற 'தத்வமஸி'* போதிக்கப்படுகினறது. அது போலவே தண்ணீரில் உப்பை இரவிலிட்டு அடுத்த நாள் சோதிக்கிறார்கள். முன்னர் தண்ணீரில் இடப்பட்ட உப்புக் கல் பின்னர் தென்படவில்லை. ஆனால் தண்ணீரை எந்தப் பகுதியிலிருந்து எடுத்து உபயோகித்தாலும், உப்புச் சுவை தான். சூக்குமமும் எங்கும் பரவுவதுமான இந்த உப்புச் சத்து போன்று பிரபஞ்சத்தில் சத்தியம் எங்கும் நிறைந்திருக்கின்றது. அந்த சத்தியமே ஆத்மா. இவ்வாத்மாவாகிய எங்கும் பரந்துள்ள பொருள் எப்படி மறைந்து போவது போல உப்பைக் கண் காணா விட்டாலும், நாவு உணர்வது போல ஐம்புலன்களும் காணாவிட்டாலும் புத்தியில் அது பிரகாசிக்கும் என்பதை இவ்வுதாரணத்தின் மூலம் உணர முடியும்.

உலகில் காணப்படுவனவற்றின் பொருள் யாவும் பிரம்மத்தால் அமைவதனால் அது பிரம்ம மயமானது. உலகில் நிகழும் தோன்றல், நிலைத்தல், அழிதல் முதலியன பிரம்மத்தால் நிகழ்வன. எல்லாம் ஈற்றில் ஒடுங்குவது பிரம்மத்திலேயே. இது சாதுவதமானது. இதுவும் ஆன்மாவும் ஒன்று. புறத்தே அமைந்து காணப்படும் எமது பண்புகளையெல்லாம் நாம் களைந்து கொண்டே போகும் போது ஈற்றில் எஞ்சி நிற்கும் சாரம் நிறைந்த பொருள் ஒன்றைக் காண்போம். *'அது ஒப்புயர்வற்றுத் தனித்து நிற்பது, அதுவே ஆன்மா எனப்படுவது'* என்று சிலர் உபநிடதங்கூறும் கருத்துக்களை எடுத்துக்கூறி பொருளைத் தெளிவாக்குவர். இவ்வுண்மையினையே உபநிடதங்களிலுள்ள மகா வாக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன. இவையே தத்துவ ஞானிகட்கு உண்மை நிலையினை தெளிய வைத்துள்ளது. இந்த அடிப்படையிலேயே *'தத் - த்வம் - அஸி'* எனும் மகா வாக்கியம் 'இப்பிரபஞ்ச பிரம்மம் எல்லாம் நீயே, இப்பிரபஞ்சம் நீ உணரும் அளவிற்கே உள்ளது'. அதாவது உன்னில் வேறானதும், வெளியே புறம்பாகத் தெரிவதுமான பிரபஞ்சம் ஒன்றுண்டு, என மனதில் கருதும் வரைதான் பிரபஞ்சம் உளது. உலகமும், பிரம்மமும். பிரம்மமும் ஆன்மாவும் ஒன்றே. இவ்வாறு அமைந்ததும் ஒன்றே என்றும், இவற்றில் காணப்படும் ஒருமையை விளக்கும் முகமாகவே உபநிடதங்களில் ஆங்காங்கு அறிவுத் தெளிவுரைகள் உள்ளன.

இவ்வாறான உபநிடத மகா வாக்கியங்களில் *'தத் த்வ அஸி'* முதலானவை வெளிப்படுத்தும் ஆத்ம வித்தையின் அளவுக்கு மென்மையானதொரு பேருண்மையை மனித மூளை இதுவரை கண்டு பிடிக்கவில்லை. பலவற்றின் நடுவில் கிடந்து உழறும் மனிதன், *'ஒன்று, ஒன்று மட்டுமே'* என்ற சில தன் முனைப்பான நேரங்களில் மனம் மெல்ல உச்சரிக்கும் போது, உள்ள உணரும் தங்கு தடையற்ற அறிவு தான் அது. அது நிலையற்றது என்ற போதிலும் முடிவடையாத ஏதோ சுவிஷேஷத்தின் மின்னலாட்டம் கொண்டு சுவைத்துத் தீர்க்கும் அந்த அறிவு உவ்வொருவருடைய பயணத்தின் கடைக்கோடியிலும் நின்று கொண்டு நம்முடைய சஞ்சல புத்தியை கையசைத்து அழைத்துக்கொண்டிருக்கின்றது. இந்த அழைப்பு பலரிலும் மங்கிப் பயனற்றுப் போகும் போது சிலரை மட்டும் அது உள்ளுலகங்களின் முழுமையான நெறிகள் மூலம் முன்னோக்கி அழைக்கின்றது.

Referance

1. Indra Mahalingam and (1997) Brain Encyclopedia of asian Philosoy London and New York
2. இராமகிருஷ்ணன். எஸ். (1979) சமய வழிபாட்டில் வடக்கும் தெற்கும், சென்னை, நியு சென்சரி புக் கவுஸ்.
3. அண்ணா (1957) உபநிஷத்சாரம், சென்னை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்.
4. ருத்ர துளசிதாசன், (2000) 'தத்வமசி', சென்னை சாகித்திய அகடமி வெளியீடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத் கீதை காட்டும் கர்மயோகம்



*திரவியநாதன் திலீபன்,*
*மெய்யியல்துறை, 3ம் வருடம், கலைப்பீடம்*

இந்து இந்திய தத்துவங்களில் ஒன்றாக பகவத்கீதையும் கொள்ளப்படுகிறது. இந்து சமய பிரஸ்தான திரயங்களில் ஒன்றாகவும் பகவத்கீதை விளங்குகின்றது. இது மகாபாரதத்தில் பீஷ்ம பருவத்தில் 2 வது அத்தியாயத்தில் இருந்து 42 வது அத்தியாயம் வரையுள்ள 18 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இப் 18 அத்தியாயங்களையும் கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம், ராஜ யோகம், என்ற நான்காக வகுத்து நோக்குவர்.

இந்நான்கு யோகங்களில் கர்ம யோகத்தினை *"தன்னலமற்ற சேவை மார்க்கம்"* என்றும் கூறுவர். கருமம் என்பது செயலைக் குறிப்பது. கருமயோகம் என்பது முழுமையை அடைவதற்குச் செயலைக் கருவியாக கொள்ளலாகும். கரும யோகத்தில் அருச்சுனனுக்கு துக்கம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்ற கேள்வியோடு கீதையின் தத்துவப் பகுதியானது ஆரம்பிக்கின்றது.

அருச்சுனனுக்குத் துக்கம் ஏற்பட்டதற்குக் காரணம் பற்றாகும். அதாவது, போர் செய்வதற்கு முன்னர் போர்க்களத்தினை உற்றுநோக்கிய அருச்சுனன் அங்கு உற்றார், உறவினர், குரு, மைத்துனர் போன்ற பலர் காணப்படவே போர் செய்வதிலிருந்து பின்வாங்கி தடுமாற்றமடைகின்றான். இந்நிலையில் பகவான் கண்ணன் அருச்சுனனை நோக்கி *"அருச்சுனா! போர் செய்வதே உனது கடமையாகும். எனவே அதிலிருந்து சற்றும் நீ பின்வாங்க கூடாது. போரினால் உன்னால் அழியப்போகும் பகைவர்களுடைய உடலைப்பற்றித் துக்கப் படுகிறாயா? அல்லது உலகைப்பற்றி துக்கப்படுகிறாயா?"* எனக் கேட்டார். மேலும் "உடல் அழிந்தாலும் அழியாவிட்டாலும் எப்போதோ அழியப் போகும் உடலைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. இன்னும் உயிர்களை ஒருவராலும் அழிக்க முடியாது. உயிரானது கொல்வதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை. எனவே அவர்கள் மீது போர் தொடுப்பதே உனது கடமையாகும். *"கடமையை கடமைக்காகச் செய்"* என உபதேசித்தார்.

பகவத்கீதையின் மையக்கருத்து செயலை துறத்தல் அல்ல (Renunciation of action); மாறாக செயலில் துறவாகும் (Renunciation on action). கீதையின் செயல், பக்தி, அறிவு, ஞானம் என்பவற்றின் இணைப்பாகக் காணப்படுகின்றது. இங்கு துறவு என்பது துறவறத்தை குறிப்பதல்ல. பதிலாகக் கடமையைச் செய்தல், நல்லறங்களைச் செய்தல், தன்னைக் கடவுளின் கருவியாகக் கருதிச் செயற்படல் போன்றனவாகும். மேலும் சேனையிலுள்ள பல வகை உறவினர்ளைக் கண்டு அருச்சுனன் போர் புரியாது நின்ற போது, பகவான் கண்ணன் *"அருச்சுனா! அவர்கள் மீது காணப்படுகின்ற பற்றினை துறந்து போர் செய்"* எனக் கூறுகின்றார். எனவே, துறவு என்பது செய்யும் செயலின் அர்ப்பணிப்பையே குறிக்கின்றது.

பகவத்கீதையில் கண்ணன் அருச்சுனனை நோக்கி கடமையைக் கடமைக்காகச் செய் எனக் கூறுகின்றார். அதாவது *"போர் செய்வதே உன்னுடைய கடமை. எனவே கடமையைக் கடமைக்காகச் செய்"* என உபதேசிக்கின்றார். இக்கருத்தினையே மேலைத்தேய மெய்யியலின் தந்தையான *"Immanual Kant"* தனது நூலான *"Critique of Practical Reason"* என்ற நூலில் குறிப்பிடுகிறார். கடமையைக் கடமைக்காகச் செய் என்ற கருத்தி னை நாம் இரு பொருளில் நோக்கலாம். ஒன்று, ஒரு கடமையைப் பொறுப்பேற்று விட்டோம் என்பதால் அதை விரும்பியோ விரும்பாமலோ செய்தலாகும். இங்கு செயலில் வெறுப்புள்ள தன்மை காணப்படுகின்றது. இரண்டாவது, ஒரு கடமையைப் பொறுப்பேற்று விட்டோம் ஆதலால் அதிலிருந்து சற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வாங்காது, இலட்சியப்பாதையை நோக்கிச் செல்தலாகும். இதனையே வள்ளுவரும்,

*"எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்*
*எண்ணுவமென்பது இழுக்கு"*

மேற்குறிப்பிட்ட இரு வகைகளில் இரண்டாது வகையையே கீதை உணர்த்துகின்றது.

மேலும் கீதையில் *"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"* என்ற கருத்தும் முக்கிய இடம் பெறுகின்றது. அதாவது பகவான் கண்ணன் அருச்சுனனை நோக்கி *"போர் செய்வதே உனது கடமையாகும். அதனால் ஏற்படும் பலனை எதிர்பாராதே. அதாவது தொழில் புரியத்தான் உனக்கு அதிகாரமுண்டு. அத்தொழிலால் ஏற்படும் பல னால் உனக்கு எவ்வித அதிகாரமுமில்லை"* என உபதேசிகின்றார். அறிவாளி ஒருவனது செயலுக்கும் அறிவிலி ஒருவனது செயலுக்கும் வேறுபாடு இது தான். அறிஞானானவன் தனது கடமையைச் செய்வான், பலனை எதிர்பார்க்க மாட்டான். அறிவிலி இதற்கு மாறாக செயற்படுவான்.

இன்னும் *"இவ்வுலகத்தில் வாழும் மனிதர்கள் யாவரும் பலன்களை நோக்கியே கருமங்களைச் செய்வார்கள். அதனால் அவர்கள் எப்போதும் கருமங்களினால் பந்திக்கப்படுகிறார்கள். எனவே குந்தியின் மகனாகிய நீ பலனை எதிர் பாராது பற்றின்றி யுத்தம் செய்"* எனக் கூறுகின்றார். மேலும் *"இவ்வுலக கர்மச் சக்கரத்தினை யானே இயக்குகின்றேன். பஞ்சகிருத்திய தொழிலை நானே செய்கின்றேன். எனக்குக் கட்டுப்பட்டே யாவும் நடக்கின்றன"* எனவும் கூறுகின்றார். இவ்விதம் பகவான் கண்ணன் பல உபதேசங்களைக்கூறி *"அருச்சுனா! நீ இந்த உண்மையை அறிந்தால் யுத்தத்தினை கைவிட மாட்டாய் அல்லவா?"* எனக்கூறி கர்ம யோகத்தினை உபதேசித்தார்.

பகவத்கீதை கூறும் கருத்துக்களை நோக்கும் போது இதில் பல விமர்சனங்களும் எழுந்துள்ளன. அதாவது கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதனையே கண்ணன் அருச்சுனனுக்கு உபதேசித்தார். ஆனால் நடைமுறையில் இது சாத்தியமானதொன்றாகக் காணப்படுமா? என்ற கேள்வியும் நமக்குள்ளே எழுகின்றது. ஏனெனில் கடமையைச் செய்பவர்கள் பலனை நோக்கமாகக் கொண்டே செயற்படுவார்கள். அவ்வாறு பலனை எதிர்பார்க்காமல் செய்வது இயந்திரங்களினுடைய செயற்பாட்டை ஒத்ததாகும். எனவேதான் கீதை கூறும் கருத்துக்கள் சில நடைமுறையில் பொருத்தப் பாடற்றதாகக் காணப்படுகின்றது

## இறைவனுக்குரிய ஐந்து உபசாரங்கள்

- கந்தம்
- புஷ்பம்
- தூபம்
- தீபம்
- நைவேத்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடஇலங்கையில் இந்துசமய மறுமலர்ச்சியும் ஆறுமுகநாவலரும்

பேராசிரியர் அ. சிவராஜா,
அரசியல் விஞ்ஞானத்துறை

## அறிமுகம்

### I.

இலங்கையில் 19ம் நூற்றாண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் கிறிஸ்தவ மிஷனறிகளின் மதமாற்ற நடவடிக்கைகளுக்கும் காலனித்துவ சமூகத்தில் கிறிஸ்தவர்கள் பெற்றிருந்த சலுகைகளுக்கு எதிரான எதிர்ப்பியக்கமாகவே முதலில் பௌத்த புனருத்தாரண இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. குமாரி ஜெயவர்த்தனா குறிப்பிடுவது போல கிறிஸ்தவர்கள் பெற்றிருந்த பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாகப் பெற்றிருந்த வாய்ப்புகளை புதிதாக எழுந்த பௌத்த பூர்ஷ்வாக்கள் வெறுத்ததோடு அவர்களே பௌத்த புனருத்தாரண இயக்கத்திற்கு நிதி வழங்கியதோடு அந்த இயக்கம் அநாகரிக தர்மபால, வலிசிங்க ஹரிச்சந்திர போன்ற தலைவர்களால் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தலைமை தாங்கப் பட்டது. வடக்கில் ஆறுமுகநாவலரால் தலைமை தாங்கப்பட்ட இந்து புனருத்தாரணமானது பௌத்த புனருத்தாரண இயக்கத்தைப் போன்று பொதுவான நோக்கம், செயற்படும் முறை என்பவற்றைக் கொண் டிருந்தது. ஆறுமுகநாவலரே இலங்கைத் தமிழர் களிடையே அவர்களது ஆன்மீக பாரம்பரியம் பற்றிய உள்ளுணர்வுகளை மேம்படுத்தியவராவார். இக்கட்டுரையில் வடஇலங்கையின் இந்துசமய மறுமலர்ச் சியையும் அதில் ஆறுமுகநாவலரின் பங்கு பற்றியும் காண்போம்.

### II.

தெற்கில் பௌத்த புனருத்தாரண இயக்கத் தினைப் போலவே இந்து புனருத்தாரண இயக்க மும் பிரதானமாக கிறிஸ்தவ மிஷனறி நடவடிக்கை களுக்கு எதிராகவே செயற்பட்டது. இந்த இயக்கத் தினை தன்னந்தனியாக வழிநடத்தியவராக ஆறுமுக நாவலர் காணப்படுகின்றார். இவர் சைவ சித்தாந்த இந்து சமயத்தினை வெளிப்படுத்திய மாபெரும் தமிழ்ப் புலமையாளராக இருந்த நவீன உரைநடை இலக்கிய அபிவிருத்திக்கு பங்களித்தவர் ஆவார். அத்தோடு வடமாகாணத்தில் நவீன தமிழ்க் கலாச்சாரத்தினை ஓர் உயிர்ப்பு மிக்க சக்தியாக மாற்றியவர். நாவலர் கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பல துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டது மாத்திரமல்லாமல் ஆரம்ப மற்றும் இரண்டாம் தரத்திற்கான தமிழ்ப் பாடப்புத்தகங்களையும் வெளியிட்டார். இவரது மத நடவடிக்கைகள் சைவ பரிபாலன சபை தோற்றம் பெற வழிவகுத்தது. இச்சபை குடாநாட்டில் இந்து சூழ்நிலையில் பிள்ளைகளுக்கு சைவக் கல்வியை வழங்குவதற்கு உதவியாக அமைந்தது. நாவலர் தனியே மதம், கல்வி போன்ற துறைகளுடன் மாத்திரம் கட்டுண்டு இருக்கவில்லை. 1876ல் வடக்கில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தின் போது நிவாரண நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தினார். அத்தோடு மது வரிக்கு எதிரான இயக்கத்தினை வடக்கில் ஆரம்பித்து வைத்ததோடு இலங்கை சட்டசபையில் திரு.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை தமிழர்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்வதற்காக 1879ல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இவ்வாறு நாவலர் மதத்துறையில் உள்ள தனது ஈடுபாட்டினை நடைமுறையில் செயற்படுத்தத் தக்கதாக இணைத்தார். இது சமூகத்திற்கு மிக முக் கியமானதாக இருந்ததோடு சமூக அரசியலை மதத் தோடு இணைத்தவராகக் காணப்படுகின்றார்.

### III.

கிறிஸ்து மத பாதிரிமார்களாலே தாபிக்கப் பட்ட வித்தியாசாலைகளிலே கருவிநூல்கள் மாத் திரம் படிப்பிக்கப்படுதலையும் அவர் கண்டு சைவ சமயப் பிள்ளைகளுக்குக் கருவி நூல்களோடு சமய நூல்களும் படிப்பிக்கப்பட்டால் அவர்கள் தம் மதத் தில் நிலைத்து நிற்பதோடு பிற மதங்களைக் கண்டிக்கும் சக்தியுடையவர்களாக ஆவர் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து அத்தகைய நூல்களைப் படிப்பித்தற் பொருட்டு தான் ஒரு வித்தியாசாலையை தாபித்தல் வேண்டும் எனக்கருதி 1848ம் ஆண்டு ஆவணி மாதம் வண் ணார்பண்ணையில் ஒரு வித்தியாசாலையைத் தாபித்தார். இவ்வித்தியா சாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கரு நூல்களும் சமய நூல்தரும் புத்தகங்களும் இல்லாதிருந்தமையால் புதிதாக நூல்களை அச்சிடுவதற்கு ஒரு அச்சியந்திரம் அவசியம் எனக் கருதி 1849ம் ஆண்டு சென்னைக்குப் புறப்பட்டார். அங்கே சில காலம் இருந்து யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்து தான் கொண்டு வந்த அச்சியந்திரத்திற்கு வித்தியாநுபாலன யந்திரசாலை எனப் பெயரிட்டு தாபித்து அதில் சைவசமய மக்களுக்கு அவசியம் தேவைப்பட்ட புத்தகங்களைப் புதிதாக அச்சிட்டும் பதிப்பித்தார்.

தமிழ்ப்பாசையில் பாலபாடங்கள் உருவாக்கினால் சைவசமயத்தைப் பின்பற்றும் தமிழர்களுக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கும் என நினைத்து பல நீதி சாரங்களையும் சைவ சமய சாரங்களையும் திரட்டி வசனநடையில் எழுதி முதற்பாடத்தினிறுதியில் ஆத்திசூடி கொன்றை வேந்தன் எனும் நீதி நூல்களையும் இரண்டாம் பால பாடத்தில் அவற்றிற்கு உரையும் எழுதி சேர்த்து அச்சிட்டார்.

மேலும் ஆங்கிலம் கற்க விரும்பிய சைவ சமயப் பிள்ளைகளுக்காக 1872ம் ஆண்டு தை மாதம் வண்ணார்பண்ணைச் சைவ ஆங்கில வித்தியாசாலையைத் தாபித்தார். 1848ல் கோப்பாயிலும் புலொலியிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளைத் தாபித்தார்.

1877ம் ஆண்டில் மழை குறைந்தமையால் யாழ்ப்பாணத்தில் பஞ்சமுண்டாயிற்று. அதனைக் கண்ட நாவலர் தமது கையால் சிறிது பொருளுதவி சில சைவர்களைக் கொண்டு ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி வார்ப்பித்தார்.

பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டது போல "இலங்கையிற் சைவ சமயம் பல நூற்றாண்டுகளாக நிலவி வந்திருப்பது உண்மையேயாயினும், சைவாகம உணர்ச்சி எல்லாக் காலத்தும் தனிச்சிறப்புடனும் உரிமையுடனும் இருந்து வந்ததா என்பது ஆராய்சிக்குரிய ஒன்றாகும்.

வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து இப்பொழுது வடபகுதித் தமிழ் இந்துக்களிடையே செல்வாக்குடன் விளங்கும் சைவ சித்தாந்தம் ஆறுமுக நாவலர் காலத்தை அடுத்த காலப்பகுதியிலேயே தனிச்சிறப்பு வாய்ந்த உயர்நிலை எய்தியது எனலாம். நல்லைநகர் ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி தமிழ்நாட்டிலும் சைவசமயத் தினை புனருத்தாரணம் செய்யப் பெரும் பாடுபட்டார் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். பிற சமயங்களின் ஊடுருவல்களினால் நலிவுற்றிருந்த சைவசமயத்தினை மீண்டும் நிலைநாட்டினார் என்ற கூற்று மிகை எளிமைப்படுத்தப்பட்டதொன்றாகும். பிற மத கண்டனங்களை மேற்கொண்டு சுயமத ஸ்தாபனத்தினைச் செய்தும் சமயத் தொண்டாற்றிய நாவலர் அவர்கள் நலிவுற்றிருந்த சைவசமயத்தினை அப்படியே நிலைநிறுத்தினார் அல்ல என்றும் அதில் சில மாற்றங்களை ஏற்படுத்தினார் என பேராசிரியர் கைலாசபதி தொடர்ந்தும் குறிப்பிடுகின்றார்.

"*யாழ்ப்பாணச் சமயநிலை*" என்ற பிரசித்தி பெற்ற கட்டுரையில் நாவலர் எடுத்துக்கூறிய விமர்சனங்கள் மக்கள் மத்தியில் வழக்கிலிருந்த சைவ சமயத்தில் காணப்பட்ட குறைகள் பற்றியனவே. அக்குறைபாடுகளைக் களைவதாலேயே சைவத்தை மீண்டும் நன்னிலைக்குக் கொண்டு வருதல் கூடும் என நாவலர் நம்பியதோடு அதற்கேற்றவாறு செயற்பட்டார். சீர்திருத்தமடைந்த சைவ சமயத்தினையே நாவலரும் அவரைச் சார்ந்தோரும் இந்துக்களிடையே நிலைநாட்டினார்கள்.

கலாநிதி.செ.யோகராஜா குறிப்பிடுவது போல சமயப் பிரசங்கம் செய்வதில் ஈடுபட்ட நாவலர் ஈழத்தின் முதல் சைவசமய பிரசங்கி ஆகிவிடுகிறார்! புராணபடன விற்பன்னராக மிளிர்கிறார். சைவ சமய விருத்தியின் பொருட்டு பாடசாலைகள் நிறுவும் முயற்சியில் நாவலர் ஈடுபட்டமையே முக்கியமாகிறது! பாடநூல்கள் வெளியிட்டமை இத்தகைய முயற்சியுடன் தொடர்புபட்டது. நாவலர் வெளியிட்ட சமயக் கண்டன பிரசுரங்களும் குறிப்பிடத்தக்கன. கோயிற் புனருத்தாரண நடவடிக்கைகளைப் பற்றியும் சிந்தித்தார். நாவலர் தமது முயற்சிகள் பலவற்றுக்கு "*இந்து சாதனம்*" பத்திரிகையைப் பயன்படுத்திக் கொண்டார்.

நாவலரது சமயப் பணிகள் தமிழகத்திலும் இடம் பெற்றன. ஆதீனங்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு, நிகழ்த்திய பிரசங்கங்களும் முக்கியமானவை. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரது சமயப்பணிகள் எத்தகைய முக்கியத்துவம் உடையது என கேள்வி எழுப்பிய யோகராஜா இத்தொடர்பில் இரு விளைவுகள் குறிப்பிடத்தக்கன என்றார்!

1. கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிகள் காலப் போக்கில் வலுவிழந்தமை
2. சைவசமய மரபுகள் வற்புறுத்தப்பட்டு சைவ சமயத்தவர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படு த்தப்பட்டமை.

மேற்சொன்ன இரண்டு விளைவுகளுமே வட இலங்கையில் இந்துமத புனருத்தாரணத்துக்கு வழி வகுத்தன. ஆறுமுகநாவலரின் முன்மாதிரியினைப் பின்பற்றி சைவக்கல்வியும், சைவ சமயமும் நிலை பேறு அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஓர் சீடர் பரம்பரை எழுந்தது. அதுவே பிற்காலத்தில் வட இலங்கை இந்துசமயப் புனருத்தாரணத்தினை உயர்நிலைக்கு எடுத்துச்சென்றன.

## IV.

### *முடிவுரை*

இக்கட்டுரை வடஇலங்கையில் இடம் பெற்ற இந்துசமய புனருத்தாரணத்தையும் அதில் ஆறுமுக நாவலர் வகித்த பங்கினையும் விளக்குவதற்காக எழுதப்பட்டது.

வடஇலங்கையில் நாவலர் தலைமையில் இடம்பெற்ற இந்து குறிப்பாக சைவ புனருத்தாரண இயக்கத்தையும் அதில் ஆறுமுகநாவலரின் இடத் தையும் சரியாக மதிப்பிடுவதற்கு அவர் வாழ்ந்த காலத்து வடஇலங்கையின் சமூக-சமய சூழ்நிலை யை அறிவது அவசியமாகும். அக்காலப்பகுதியில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சி இடம்பெற்றதோடு கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப பல மதக் குழுக்கள் இலங்கைக்கு வந்தன.

இக்குழுக்கள் தமது மதத்தைப் பரப்புவதற்கு வாய்ப்பாகப் பாடசாலை களை நிறுவின. அங்கு கல்விகற்க வரும் மாணவர்கள் கிறிஸ்தவ மதத்தில் சேரும்படி வற்புறு த்தப்பட்டனர். இத்தகை மதமாற்ற முயற்சிகளுக்கு எதிராக தென்னிலங்கையில் ஒரு பௌத்தமத புனருத்தாரண இயக்கம் தோன்றி அம்முயற்சிகளை எதிர்த்து வந்தது. அவ்வாறே வடஇலங்கையிலும் ஆறுமுகநாவலர் தலைமையில் ஒரு இந்துசமய/ சைவசமய மறுமலர்ச்சி ஏற்பட்டு மதமாற்ற முயற்சிக ளுக்கு எதிராகச் செயற்பட்டது. நாவலர் காலத்து வடஇலங்கையின் சூழலில் தான் மறுமலர்ச்சி இயக்கத்தினதும் ஆறுமுக நாவலரது பங்களிப்பினையும் மதிப்பிட வேண்டும். நாவலரது பணிகள் பன்முகப்பட்டவை. தமிழ் நூற்பதிப்பு உரைநூல்கள் போன்ற முயற்சிகளி னூடாக வடஇலங்கையில் ஒரு சமய விழிப்புணர்ச்சி க்கு வித்திட்டார்.

#### உசாத்துணை நூல்கள்

1. A.Silvarajah, Politics of Tamil Nationalism in Srilanka (New Delhi:South Asian Publishers, 1995)
2. க.கைலாசபதி, இலக்கியச் சிந்தனைகள் (Colombo: Kumaran Book House, 1983)
3. செ.யோகராசா, சுவாமி விபுலானந்தரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் (மட்டக்களப்பு: விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை, 1992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் சபாரத்தின முதலியார் பற்றிய ஓர் அறிமுகக் குறிப்பு

*பேராசிரியர். இரா. வை. கனகரட்ணம்,*
*தமிழ்த்துறை (இந்துப்பண்பாடு)*

*"அரசாங்க மதிப்பை நமது முதலியார் அவர்கள் எக்காலத்திலும் உடையவராக இருந்தார். இனி முதலியாருடைய தமிழ் கல்வி அறிக்கை பற்றியும் சமய அனுமானம், சாதியபிமானம், தேசாதிமானம், பாஷாபிமானம் என்னுமியற்றைப் பற்றியும் சொல்லுகில் இக்காலத்தில் சிலரே இவருக்கு ஒப்பானவ ரெனலாம்."*

( இந்து சாதனம் 1882 )

உலக நாடுகள் பலவற்றில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் பெரும்பான் மையானோர் சைவத்தை அனுட்டிப்பவர்கள். சைவ வளர்ச்சியின் பொருட்த் தமிழ் நாடு யாவரும் வியக்கும் வகையில் பெரும் பங்காற்றி வருகின்றது. ஈழ நாட்டின் சைவ சமய வளர்ச்சியும் அதன் தொடர்ச்சித் தன்மை சார்ந்ததுவே. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழ நாடு தாம் பெற்றிந்த கடன்களை முதலும் வட்டியுமாகத் தீர்த்துக் கொண்டது. ஈழ நாடு சைவ சமய வளர்ச்சிக்குப் பல்வேறு வழிவகைகளால் காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளது என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். அப்பங்களிப்புகள் சமய நோக்குடையனவாகவும் அமைந்திருந்தன. இவ்வகை நோக்குகளை முன்னெடுத்துச் சென்று அவற்றின் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களுள் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் குற்ப்பிடத்தக்கவர்.

நாவலரவர்கள் சைவ சமய வளர்ச்சியின் பொருட்டுத் தனது முயற்சிகளை முன்னெடுத்துச் சென்ற அளவுக்குச் சைவசித்தாந்தத்தை முன்னெடுத்துச் செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாக குறிப்பிடப்படுவதுண்டு. சைவத்தையும் சைவசித்தாந்தத்தையும் பிரித்து நோக்க முடியாது. அவை பேதமற்றவை, இரண்டற்று அத்துவிதப்பட்டவை. எனவே நாவலரவர்கள் சைவத்தையும் சைவசித்தாந்தத்தையும் பிரிப்பின்றி ஒப்பாக நோக்கிச் செயற்பட்டாரென்பதுவே உண்மை.

நாவலரவர்களின் சைவசித்தாந்த நோக்கினை, நாவலரது சமய நூலினூடாகவே பெரிதும் காணலாம். சைவவினாவிடை முதலாம், இரண்டாம் புத்தகம் சைவ நெறியுரை, திருமுருகாற்றுப்படை, கோயிற்புராணவுரை முதலியவற்றினூடாகத் தெளிவாகக் காண முடிகின்றது. நாவலர் காட்டிய வழியினைப் பின்பற்றி பல மாணவர்கள் சைவத்தையும் சைவசித்தாந்தத்தையும் வளர்த்து வந்தனர். நாவலரது மாணவப் பரம்பரையை இரு வகையாக பிரிந்து நேக்கலாம்,

1. சைவத்தையும் கல்வியையும் வளர்க்க முற்பட்டோர்.
2. சைவத்தையும் சைவசித்தாந்தத்தையும் வளர்க்க முற்பட்டோர்.

1. சைவத்தையும் கல்வியையும் வளர்க்க முற்பட்ட மாணவ பரம்பரையினுள் வித்துவ சிரோன்மணி ந.ச.பொன்னம்பலப்பிள்ளை, த.கைலாசபிள்ளை, வல்வை.வைத்திலிங்கப் பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், ம.க.வேற்ப்பிள்ளை ந.சதாசிவப்பிள்ளை முதலானோர்களைக் குறிப்பிடலாம்.

2. சைவத்தையும் சைவசித்தாந்தத்தையும் வளர்க்க முற்பட்ட மாணவப் பரம்பரையில் காசி செந்தில்நாததையர், அம்பலவாணநாவலர், தர்க்ககுடாரதாரதாரி திருஞானசம்மந்தப் பிள்ளை, கொக்குவில் சபாரத்தினம் முதலியார் முதலானோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். நாவலரது மாணவனாகவும் நாவலர் காட்டிய சித்தாந்த வழி நின்று செயற்பட்ட கொக்குவில் சபாரத்தினம் முதலியாரின் பணிகளைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

- பிரசங்க புராணபடனம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சமய வளர்ச்சியில் ஈடுபடுதல்.
- பிரபந்த இலக்கியங்களை அளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுயமத தாபனங்கள் பொருட்டுக் கண்டனங்கள் மேற்கொள்ளல்
- சைவசித்தாந்தக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லல்.
- நிறுவனவழி நின்று சைவத்தமிழ் பணியினை மேற்கொள்ளல்

1. பிரசங்க புராணபடனம் என்னும் அடிப்படையில் சமய வளர்ச்சியில் ஈடுபடுதல்.

சைவப்பாரம்பரிய சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தமையும், தமிழ்ப் புலமையாளர்கள் சுயம்பு நாதப்பிள்ளையிடம் கல்வி பயின்றமையும், கிறிஸ்தவ மத சூழ்நிலையில் கல்வி பயின்றமையும், நாவலரின் மாணவப் பரம்பரையில் ஒருவராகவும், நாவலரின் ஞானஆட்சிக்கு உட்பட்டவராகவும் விளங்கிய முதலியாரிடத்தில் உள்நின்ற ஆற்றலும், தேவையும் அவரை பிரசங்கத்தில் ஈடுபடவைத்தது எனலாம்.

யாழ்ப்பாண குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் இடம் பெற்ற விழாக்கள், சமய வைபவங்கள் முதலானவற்றில் பங்கு பற்றிச் சைவம், சைவசித்தாந்தம், தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், என்பவற்றைப் பொருளாகக் கொண்டு பிரசங்கம் செய்து வந்தார். குடாநாட்டின் வெளியே, தாம் உத்தியோகத்தின் பொருட்டுச் சென்று முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, காலி, கண்டி முதலான இடங்களிலும் பிரசங்கம் செய்து வந்தார்.

முதலியாரவர்கள் இலக்கண, இலக்கியப் புலமையாளராகவும் விளங்கினார். முப்பதுக்கு மேற்பட்ட பிரபந்தங்களைப் பாடியவர். சைவ இலக்கியங்களிலும், சைவ சித்தாந்தங்களிலும் புலமையும் ஆளுமையுமுடையவர். இந்திய தத்துவங்களையும் மேலைத்தேய தத்துவங்களையும் நன்கு தெரிந்தவர். அவர் வாழ்ந்த சூழ்நிலை, புராணபடனஞ் செய்வதிலும், சித்திரபுத்தினார்கதை, பிள்ளையார்கதை படிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தது. சமயக் கடமைகளில் விரதம் பிடித்தலும், புராணபடனம் கேட்பதும் முக்கியமுடையவையெனக் கருதப்பட்ட நிலையில், முதலியார் அவர்கள் புராணபடனஞ் செய்ய முற்பட்டார். கொக்குவில், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, கொழும்பு, மட்டக்களப்பு முதலான இடங்களில் உள்ள ஆலயங்களில் முதலியார் புராணபடனஞ் செய்து வந்தார். அதனை ஊக்கப்படுத்தியும் வந்தார். தமது குலத்தெய்வமான கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய ஆலயத்திலே கந்தபுராணம், திருச்செந்தூர் புராணம், பெரிய புராணம், முதலான புராணங்களை காலந்தோறும் புராணபடனஞ் செய்வித்து வந்ததுடன், தானும் ஒருவராக பங்கேற்று புராணபடனஞ் செய்து வந்தார்.

முதலியாரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு சுன்னாகம் குமாரசாமிப்புலவர், கொக்குவில் சிவம்புநாதப்பிள்ளை, இணுவில் வேங்கடேசயர், நடராசா முதலானோர் ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். முதலியாருடன் ஒரு வித்துவக் குழுவும் இணைந்து செயற்பட்டதால் புராணபடனஞ் செய்து உள்ளுறைந்து, புலைமைத்துவத்தின் வெளிப்பாடாகவும் அமைந்து வருகின்றது. இது கற்றோருக்கும் மற்றோருக்கும் பரந்து பட்ட கல்விப்பரப்பை அசைவியக்கமாக வழங்கி வருகிறது எனலாம்.

2. பிரபந்த இலக்கியங்களை ஆக்கல்.

முதலியார் அவர்கள் முப்பதுக்கு மேற்பட்ட பிரபந்த இலக்கியங்களை பாடியுள்ளார். அப்பிரபந்தங்கள் சிவன், விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் முதலான கடவுள்மேல் பல்வேறு பா வடிவங்களையும் மனங்கொண்டு பாடியுள்ளார். அவ்வகையில் கொக்குவில் சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை(1889), ஆசிரிய விருத்தம்(1889), கொக்குவில் கிருபாகரசுப்பிரமணியர் மீது ஆசிரியவிருத்தம் ஊஞ்சல்(1889), மும்மணிக்கோவை, வெண்பா, அந்தாதி, வைரவக்கடவுள் தோத்திரம், வீரபத்திரகடவுள் தோத்திரம், முன்னேஸ்வரம் முன்னைநாதர் ஆசிரியவிருத்தம்(1888), நல்லை நாமணிமாலை, சரவணபவமாலை, கந்தர் கலிவெண்பா, ஒட்டிசுட்டான் தான்றோன்றீஸ்வர ஆசிரியவிருத்தம், முதலான நூல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

முதலியார் பாடிய பிரபந்தங்கள் அவரை புலமைத்துவமுள்ளவராக வெளிக்காட்டி நின்ற பொழுதும், அவரது பாடல்கள் பலவும் முழுமையாகக் கிடைக்காத நிலையில், அவரின் புலைமைத்துவம் சரியாக மதிப்பிட்டு வெளிக்கொணரப்படவில்லை. இ;து ஆராயப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

3. சுயமததாபத்தின் பொருட்டு கண்டனங்கள் மேற்கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார் அவர்கள் சைவத்தையும் சைவசித்தாந்தத்தையும் காத்து வளர்த்தலின் பொருட்டுப் பலசமயவாதிகளுடன் வாதங்களில ஈடுபட்டுச் சைவத்தை தாபிக்க முயன்றார். அந்த வகையில் இப்பணியினை பின்வரும் அடிப்படையில் பகுத்து நோக்கலாம்.

- கிறிஸ்தவ மதக்கண்டனம் செய்தல்.
- அகச்சமய, புறச்சமயக் கண்டனம் செய்தல்.

*கிறிஸ்தவ மதக்கண்டனம் செய்தல்.*

நாவலரவர்கள் 1858ம் ஆண்டு முதல் 1869ம் வரை தமிழ் நாட்டில் வந்தமையும், 1879ம் ஆண்டு நாவலரவர்கள் சித்தி பெற்றமையும் கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் சிறந்த யோகம் என்றே கருதினர். சைவத்துக்கு எதிராக பிரசங்கம், அச்சியந்திரம் அமைத்தல், சிறு பிரசுரங்கள், பத்திரிகை வெளியிடல், பாடசாலை அமைத்தல் என்ற வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இந்த நிலையில் நாவலரின் சைவ ஆங்கிலப் பாடசாலைகளிலும், யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் கற்ற க.சபாரத்தின முதலியார், நீர்வேலி சங்கர்பண்டிதர் போல் கிறிஸ்தவ எதிர் நடவடிக்கையில் இறங்கினார். முதலியாரவர்கள் யேசுமதநிரசரனம்(1881), விவிலிய விகிர்தம் (1882), நாலவரியேசுதாரதம்மியம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். மற்றும் விவிலியப்பீட்சை, சைவதூஷண நிராகரணம், சைவவியேசுமததாரதம்மியம், மெய்ஞ்ஞானக்கும்மி மறுப்பு முதலான நூல்களையும் முதலியார் எழுதியதாக அறிய முடிகின்றது. இந் நூல்கள் வெளிவந்ததாக அறியமுடியவில்லை. முதலியார் யேசுமத நிரசரனம் என்னும் நூலை எழுதிய பொழுது கிறிஸ்தவர்கள் அதற்கு எதிர் விளைவாக பிரதிகண்டனம் செய்தனர். அதற்கு பதிலளிக்கும் வகையில் முதலியார் அவர்கள் "*சைவ உதயபானு*"(1882) என்னும் பத்திரிகையில் '*ஆபாசவிநாசனம்*' எனும் கண்டனத்தை எழுதினார். கிறிஸ்தவ கொள்கையைப் பெரிதும் கண்டிக்கும் வகையில் '*தூனியோபாதன திருட்டி*' என்னும் புனைப் பெயரில் இந்து சாதனப் பத்திரிகையில் பல கண்டனங்களைக் கொடுத்தார்.

முதலியார் எழுதிய யேசுமதநிரசனம் என்னும் நூல், யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்த கொக்குவில் குகதாசனால் இயற்றி, யாழ்ப்பாணம் இலங்கை நேசமுத்திராஷரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. (இங்கு குகதாசன் என்பது சபாரத்தின முதலியாரின் புனைப் பெயராகும்) இந்நூல் பிரமாதிவருடம்(18) ஆனிமாதம் வெளிவந்தது. இந்நூலின் முன்னுரையில் இந்நூல் எழுதப்பட்ட நோக்கத்தை பின்வருமாறு குறிப்பிடுவார். "*கிறிஸ்தவ மதத்தினை கண்டிக்கும் பலராலும் பல காலத்து பல புத்தகங்கள் எழுதப்பட்டனவாயினும், அவற்றில் கூறப்பட்டுக்கிடக்கும் விடயங்களையே யாவும் பேசுதலன்றி, அறிவிற்கு போய்ந்த வேறு சில வற்றையே பெரும்பான்மையும் ஈண்டு சேர்த்ததாம். இதனால் இத்துணைத்தே யேசுமத பேதமெனச் சாதித்தமல்லோம், இன்னும் அர்த்தம் உள்ளன. அவையனைத்தும் ஒருங்கு சேர்ப்பின் எம்முயற்சி எழிதில் முற்றாதென்றஞ்சி அவற்றுள் சிலவற்றையே கொண்டிண்டுத்தற்றாம்*" என்பார்.

இந்நூல் காப்புச் செய்யுளுடன் ஆரம்பித்து நூல் (அ)பிதாபடபதித்துவ மனுதலை, (ஆ) சுத்தப்பதிப்பித்துவ மனுதலை, (இ).அவிப்பதித்துவ மனுதலை, (ஈ).விவிலிய மகத்துவ மனுதலை என்னும் விடயங்கள் பற்றிப் பேசும். அத்துடன் ஒவ்வொரு பகுதியும் முறையே 25,10,10,15 உபபிரிவுகளை கொண்டதாய் அமைந்தள்ளது. முடிவாக ஆசிரியர் கூறிய கருத்தினைச் சுருக்கி சுருனம் என்னும் பெயரில் குறிப்பிட்டுள்ளனர்.

விவிலிய மகத்துவ மறுத்தல்(14) என்னும் பகுதியில் அதன் உண்மைத்தன்மை பற்றிக் கூறுகையில், அவர் பின்வருமாறு கூறுவது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். "*2வது விவிலிய நூல் பதியான் அருளப்பெற்றுள்ளதேல், அப்பதி அதனை ஒருங்கே ஒருவர் வாயிலாய் இனிது அளித்திருப்பர். அங்ஙனமின்றி ஓர் விடயத்தையே பலரும் தம்முன் மாறுபட்டுக் கூறியிருந்தாலும், அந்நூல் பலரால் பல காலங்களில் எழுதப் பெற்ற பல துண்டுப்புத்தகங்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டமைந்த, ஆதலினாலும் அது பதி அருள்கொடு தோன்றிய தென்றெனக்*"

(யேசுமதநிராகரணம் 1882,பக்.13)

முடிவாக தமது கருத்தினை கூறவந்த முதலியாரவர்கள், கிறிஸ்தவ மதத்தில் பீடிக்கப்பட்டிருக்கும் சுதேசிகளுக்கு இந்நூல் ஓர் ஔடதம் போன்றதென்றே அறிவுரை பகர்வது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும். அது வருமாறு

> *"யாம் இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் யேசுமதம் அசத்தியத்தின் பாற்றென்கைதாதே விளங்கக் கிடக்கின்றதால் அம்மதாந்தகார நோயாற் பீடிந்தப் பெற்றுள்ளார். யாவரும் இவ்வுடத்தை உட்கொண்டு உய்யக் கடவர்"*

(யேசுமதநிராகரணம் 1881,பக்.14)

*அகச் சமய புறச்சமயவாதிகள் மேற்தொடுத்த கண்டணம்.*

நாவலரவர்கள் சமயவாதம் புரிந்த காலகட்டத்தில், புறச் சமயம் அகச்சமயவாதம் பெரிதும் நேரடியாக இடம்பெறவில்லை. வேண்டும் பொழுதும் நூல்களினூடாக கருத்தியல் வாதத்தில் எழுதிச் செல்வதோடு அமைந்து விட்டது. அதிலும் புறப்புற நிலையில் ஏகான்மாவாதத்தையே நாவலரவர்கள் நாடினார். அகம், அகப்புறம் ஆகியவற்றில் உள்ள நல்ல நெறிகளை நாவலரவர்கள் கடன் வாங்கினார். 1875 ம் ஆண்டையடுத்து தமில் நாட்டில் வேதாந்தம் தலையெடுக்கத்தொடங்கியது. அது நிறுவனமயப் படுத்தப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. பிரமவித்தியா வேதவிளக்கம் (1890), சுதேசமித்திரன், லோகோபாரி(1911), அரியனப்பிரியா முதலான பத்திரிகைகள் தோன்றி வேதாந்த த்த்துவத்தை போதித்து வந்தன. அதேவேளை விசிட்டாத்வைம், சைவசித்தாந்தம் முதலான தத்துவக்கோட்பாடுகளையும் கண்டிக்கவும் தவறவில்லை. அப்பத்திரிகளை மாயாவாத சைவசண்ட மாருதம், அத்வைதவுண்மை, துவிதசைமறுப்பு முதலான பிரசுரங்களையும் வெளியிட்டு வந்தனர். இக்கண்டணங்களையும் எதிர்த்து சூளைச் சோமசுந்தரநாயகர், காசிவாசி செந்தில்நாதையர், சி.தாமோதரம்பிள்ளை, சபாபதிநாவலர் முதலியோர் தமிழ் நாட்டில் பிரதிகண்டனங்களை எழுதினர். ஈழநாட்டில் இருந்து கொக்குவில் சபாரத்தினம் முதலியார், த.கைலாசபிள்ளை முதலானோர்கள் சைவஉதயபானு, இந்து சாதனம் முதலான பத்திரிகைகளிலே ஏகான்மை வாதத்திற்கு எதிரான கண்டனங்கள் தொடுத்தனர். அதே சமயம் முதலியார் சாங்கியம், மீமாஞ்சை முதலான தத்துவங்களையும் கண்டிக்கவே செய்தார்.

*உலகாதிவாதிகள் மேல் கண்டனம்.*

பிறாட்லா சாளஸ் (Bradlausg Charles) அவர்களால் முன்வைக்கப்பட்ட பௌதீகவாதம், பொருள்முதல் வாதமாகம் முதலான கோட்பாடுகள் தமிழ்நாட்டில் தினவர்த்தமானி, தத்துவவிசாரணி, தத்துவவிவேசினி முதலான பத்திரிகைகள் வாயிலாக பிரச்சாரம் செய்யப்பட்டு, சமூக முக்கியத்துவம் பெற்றநிலையில் அவ்வாதங்களை முழுமூச்சுடன் எதிர்த்து வெற்றிகண்ட முதலியாரவர்கள், இக்கருத்துக்களை எதிர்த்து இந்து சாதனம் முதலான பத்திரிகைகளில் எழுதினார். அதன் வெளிப்பாடாக அமைந்தனவே ஈச்சுரநிச்சயம்(1896), பிரபஞ்சவிசாரம்(1918) எனும் நூல்களாகும்.

4. சைவசித்தாந்தக் கொள்கை முன்னெடுத்துச் செல்லல்.

சைவம் ஒரு வேள்விக்குரிய வெறும் சடங்கினை மாத்திரம் கொண்ட மதமல்ல. சைவம் அதன் சடங்குகளையும், தத்துவங்களையும் பிரிக்கவெண்ணாவகையில் பிரிவின்றி இருப்பவை. முதலியார் அவர்கள் சைவத்தின் வளர்ச்சியின் பொருட்டு எடுத்த முயற்சியினை பிரசங்கம் செய்தல், புராணபடனஞ் செய்தல், பிரபந்தங்களைப் பாடல், சுயமத தாபனத்தின் பொருட்டு எதிர்நிலை வாதங்களைப் புரிதல் முதலியவற்றின் ஊடேயும் சித்தாந்தப் பணிகளை ஆற்றியுள்ளார் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றின் தொடர்ச்சியாக சைவசித்தாந்தம் பற்றிய நூலாக்கங்களில் ஈடுபடல், நிறுவனங்களினூடாக சைவத்தையும் சைவசித்தாந்தத்தையும் எடுத்துச் செல்லல் முதலானவற்றின் அடிப்படையில் வளர்த்துச் சென்றார் எனலாம். இங்கு முதலியார் நூலாக்கத்தின் அடிப்படையில் சைவசித்தாந்தத்தை வளர்க்க எடுத்துக் கொண்ட முயற்சியை நோக்கலாம்.

நூலாக்கத்தின் அடிப்படையில் சைவசித்தாந்தத்தை வளர்த்துச் செல்ல முயன்ற முதலியார் அவர்கள் சீவான்யபேதம் (1890), ஈச்சுவரநிச்சயம் (1896), பிரபஞ்சவிசாரம் (1918), சைவோத்தரம், மறுபிறப்புண்மை, பண்டைத்தமிழர் கொள்கைகள், சைவசமய பரிபாலனம் முதலான நூல்களைத் தமிழ் மொழியிலும் ஆங்கிலத்திலும், இந்து சாரம், திருஞானசம்மந்தமூர்த்தி நாயனார் சரித்திரம் என்னும் நூல்களை எழுதியுள்ளார். அத்துடன் திருக்குறள் - அறத்துப்பால் - இல்லறவியல், இறுதிப்பத்ததிகாரம் ஆகியவற்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையவர்கள் மாணவர் உபயோகத்தின் பொருட்டு மொழிபெயர்த்து வெளியிட்டார். 1921 ம் ஆண்டு இம்மொழிபெயர்ப்பு பிறிதொரு பதிப்பைப் பெற்றுள்ளது.

இனி முதலியார் அவர்கள் வெளியிட்ட நூல்கள் சிலவற்றை நோக்கலாம்

*பிரபஞ்சசாரம்*

இந்நூல் ஈச்சுவரநிச்சயத்தின் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளது. சென்னையில் உள்ள செங்கல்வராயநாயக்கர் ஆர்ப்பனேஜ் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு 1918ம் ஆண்டு வெளிவந்தது. சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் இந்நூலக்குரிய சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார். முதலியாரின் ஆளுமை பற்றிக் கூற வந்த புலவர் பின்வரமாறு சிறப்பித்துக் குறிப்பிடுவார்.

> "*பாவலர் வாழி யாழ்ப்பாணக் குடாநாட்டில்*
> *வளம்புனை கொக்குவில் மாநகர் வாசன்*
> *ஊம்புகு புத்தியு மூக்கமு மிக்கோன்*
> *ஆங்கில திராவிடமாமிருமொழியும்*
> *பங்கமில் பலபடிந்தினி துணர்ந்தோன்*
> *சைவபுராணமெனும் சைவசித்தாந்தமும்*
> *எவ்வெவ் காலமுமியம்பும் விநோதன்."*
> (பிரபஞ்சவிசாரம்)

சபாரத்தின முதலியார் இந்நூலை எழுதியதன் நோக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"பரதகண்டத்திலே இருந்த காலத்திலே மேலைத்தேசங்களில் பிரசித்து பெற்று விளங்கும் பிரகிருத சாத்திரக்கொள்கைகள் நுழைந்து, எமக்குப் பிராச்சித்தமாகக் கிடைத்த தெய்வக்கொள்கையைப் பெரிதும் தளர்வுறுத்துவனவாயின் அவற்றின் ஆபாசங்களை எல்லாம் அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வந்த "*உதயபானு*" என்னும் பத்திரிகையில் எடுத்துக்காட்டிக் கண்டித்தோம். பின்னும் சிலகாலம் சென்றபின் "*பிரமவித்தியா*" எனப் பெரியதோர் பத்திரிகை தோன்றி மாயாவாதப் பிரசங்கம் செய்யத் தலைப்பட்டது. இப்பத்திரிகைக்குத் துணையாக சென்னைபட்டினத்திலே பல துண்டுப்பிரசுரங்கள் எழுதி வெளியிடப்பட்டன. இவற்றையும் யாம் யாழ்ப்பாணத்தில் பிரகடனஞ் செய்யப்படும் "*இந்துசாதனம்*" எனும் பத்திரிகையில் நெடுங்காலமாகக் கண்டித்து பல வியாசங்களை எழுதிவந்தோம். வாதம் என்னும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

இவற்றைக் கண்ட எமது இஷ்டர்கள் பலர் இந்த விடயங்களையெல்லாம் திரட்டி ஒரு புத்தகவடிவமாக அச்சிட்டு வெளிப்படுத்துவதுண்டானால் நமது தேசத்தாருக்குப் பெரும் பயனுண்டாமென்று எமக்கு பலமுறைகளை திரட்டினாராக, நாம் அந்த வியாசங்களோடு இக்காலத்திலே மேலைத்தேசங்களிலே தோன்றி, எமது தேசத்தில் நுழைந்து நம்மவருக்கு பெருங்கேடு சூழ்வனவாகிய பிரயோசனவாதம், பிரமானவாதம், பரிமானவாதம், சந்தேகவாதம் முதலிய கொள்கைகளையும் அவற்றோடு தமது தேசத்தில் முன்னொரு காலத்தில் பிரசித்திபெற்றிருந்த சாங்கியம், மீமாம்சை முதலிய மதக் கொள்கைகளையும் ஆராய்ந்து அவற்றினது ஆபாசங்களையும் எடுத்துக்காட்டுவதுண்டானால் தமிழ்நாட்டாருக்கு பெரிதும் உபயோகமாகுமெனக் கருதி, பிரபஞ்சோற்பதத்தைக் குறித்து, அவை கொண்டுள்ள கொள்கைகளை ஒரு சிறிதாவது கைக்கொள்ளத்தக்க அல்லவென்பதை எடுத்துக்காட்டி, இறுதியாக சைவசித்தாந்தக் கொள்கையே சுருதி, யுக்தி, அனுபவங்களுக்கெல்லாம் ஏற்புடையதாகிய சிறந்த கொள்கையென்பதை நாட்டி, அருள்ஞான மூர்த்தியாகிய ஆறுமுகப் பெருமானுடைய திருவருளை முன்னிட்டு, இந்தப்பிரபந்தத்தை "*பிரபஞ்சவிசாரம்*" என்னும் பெயரோடு வெளிப்படுத்தலாயினோம்" என்பர்.

(பிரபஞ்சவிசாசரம், 18, 8 முகவுரை)

பிரபஞ்சவிசாசரம் எனும் நூல் மூன்று முக்கியயியல்களைக் கொண்டது. அவை நாத்திக மரபு, சந்தேக மரபு, ஆத்தீக மரபு என்பனவாம். ஒவ்வொரு மரபும் தனித்தனி பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. நாத்திக மரபு உலோகாயுதம், பௌதீகவாதம், பரமாணுவாதம், பரிணாமவாதம், சிதாபாசவாதம், சூனியவாதம், பிரயோசனவாதம், சாங்கியவாதம் என்னும் பிரிவுகளைக்கொண்டது. சநதேகமரபு சந்தேகவாதம், பௌத்தவாதம், மீமாஞ்சைவாதம் என்னும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஆத்திகமரபு கிறிஸ்தவமதம், மாயாவாதம் சைவசித்தாந்தம் என்னும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இம்மரபுகளை சற்று விரித்து நோக்கின் சாத்திகமரபு பற்றி பேசுவோர், இப்பிரபஞ்சத் தோற்றத்திற்குக் கர்த்தாவாக இறைவன் உளன், என்பதை எதிர்வினையாகக் கொண்டு இப்பிரபஞ்சத்தோற்றத்திற்கு கர்த்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரல்லர் என்பர். சந்தேக மரபு பற்றி பேசுவோர், இப்பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு கடவுள் ஒருவர் கர்த்தாவாக உளர் என்பதில் உடன்பாடுமின்றி எதிர்வினையுமின்றி என்றும் சந்தேகம் கொண்டு வாதித்திருப்பர். அத்வைத மரபுடையோர் இப்பிரபஞ்சத்தோற்றத்துக்கு இறைவன் ஒருவன் உளான் என்பதில் உடன்பாடு கொண்டு வாதிப்பர்.

முதலியார் அவர்கள் நாத்திக மரபினையும், சந்தேக மரபினையும், ஆத்திக மரபிலொன்றான சைவசித்தாந்த மரபுகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுத்தலிப்பார். சைவசித்தாந்தத்தில் முப்பொருளாகிய பசு, பதி, பாசம் மூன்றும் உண்மைப் பொருட்கள் அழிவற்றன் தனித்துவமுடையன. இப்பிரபஞ்சம் ஆன்மாக்களின் பொருட்டு இறைவனால் படைக்கப்படுகின்றது. அவனது கல்யாண குணங்களான எண்குணங்கள் இவற்றுக்கு அடிப்படையாக அமைகின்றன. அவனது சதசக்தியும் மாயை இவற்றுக்கெல்லாம் பிறிதோர் வகையில் அடிப்படை, அவனது குணங்கள் அவனின் சொரூப இலட்சணம் அல்லது நிர்க்குணன் என்பர். (25-52)

பௌதீக வாதிகளால் இவ்வுண்மையை புரிந்துக்கொள்ளாது, கடவுள் உண்மையை குறித்து அவர்களால் எழுதப்படும் ஆக்கங்கள் யாவற்றையும் தொகுத்து நான்கு ஆக்கங்களுக்கு உட்படுத்தி அவற்றுக்கான விடைகளை சைவசித்தாந்தப் பிராமணங்கள் கொண்டு விடையளிப்பது தருக்கவியலும் சித்தாந்த நூல்களிலும் கொண்டுள்ள நுன்மான் நுழை புலத்தை காட்டி நிற்கும் பௌதீக வாதங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் பொருட்டு எழுப்பும் வினாக்கள் பின்வருமாறு அமையும்.

- கடவுள் பிரபஞ்சத்தை எங்கிருந்து சிருஸ்டித்தார்
- பிரபஞ்சம் தோன்றும் முன் கடவுளை சர்வவியாபி என்பதெங்கனம்
- அமுர்துப் பொருளாகிய கடவுள் மூர்த்திப் பொருளாகிய சடப்பிரபஞ்சத்தை சேட்டிப்பதெங்கனம்.
- ஞானசொரூபியாகிய கடவுளுடைய சந்நிதி கள் அஞ்ஞானத்துவத்துக் கேதுவாகிய மலம் அமைந்து விளங்குவது எங்கனம்.

(பிரபஞ்சவிசாரம் 1918, பக் 235-256)

இவற்றுள் இண்டாவது வினாவான பிரபஞ்சத் தோற்றத்திற்கு முன் சர்வவியாபி என்பதெல்லாம் எங்கனம்? என்னும் வினாவுக்கு முதலியார் அவர்கள் பின்வருமாறு விடையளிப்பார். *"பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன் பொருளொன்றுமில்லை"* என்பது,

> *"சைவசித்தாந்தக் கொள்ளையன்று*
> *பதியைப் போலவே பசு பாசங்களும்*
> *அநாதிக்கண்ணென்பதே சைவசித்தாந்தக்*
> *கொள்கை"*

இனி மாயையில் நின்று மாயங்கள் தோன்றி வழிக்கடவுள் அவற்றில் வியாபித்து விளங்குவதால் சுவை தோன்றுமுன் இல் பொருளாயுள்ளவற்றுள் அவர் வியாபி என்பதையாவது என்பது பெறப்படமாட்டாது. இப்பொருள் "*சர்வம்*" என்னும் பொருட் சமுதாயத்தினுள் வைத்தெய்யப்படுவதென்க. உட்பொருள்களிலெல்லாம் வியாபித்துள்ளார் என்பதை அவர் "*சர்வவியாபி*", என்பதன் பொருள், (பிரபஞ்ச சாரம் 1918. பக் 55) இந்து சமய கோட்பாட்டில் சைவசித்தாந்த நோக்கத்தின் வெளிப்பாடு.

இந்நூல் 1918ம் ஆண்டு மதுரை மெய்கண்டான் அச்சகத்தில் இருந்து வெளிவந்தது. அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. சைவ சித்தாந்தத்தையும் சைவத்தையும் மூலத்திலிருந்து அறியதாவர் பொருட்டு எழுதப்பட்டது. இது பதினாறு இயல்களைக் கொண்டது. சமூகம், சமயம், சமய ஒழுக்கலாறு, தத்துவம் முதலான விடயங்களைப்பற்றி விரித்துரைப்பது. கடவுள் சிந்தனை ஆன்மாவின் இயல்பு, முத்தி, தியானம், வழிபாடு ஒழுக்கம், விபூதி, உருத்திராக்கம், புனித நூல்கள், சோதிடம், சமூக அமைப்பு முதலான விடயம்பற்றி இந்நூல் எடுத்துரைக்கின்றது.

தமிழ் மொழியை அறியாதோர் தமிழையும் சைவசித்தந்தத்தையும் அவற்றின் உள்ளடக்கத் தையும் ஒரேயிடத்தில் நன்கு தெரிந்துகொள்வதற்கு இ;தொரு சிறந்த வழிகாட்டி நூலாகும். சமய குரவர் நால்வரில் ஒருவரான திருஞானசம்பந்தர் வரலாற்றையும் ஆங்கிலத்தில் என்னும் பெயரில் இந்நூல் ஞானசம்பந்தரின் வரலாற்றை சிறப்புற விளக்குவதோடு சம்பந்தரின் காலத்தையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தியிருப்பதும் முதலியாருக் குள்ள வரலாறு உணர்வை வெளிப்படுத்தி நிற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியாரவர்களால் ஆங்கிலத்தில் வெளியிட எண்ணியிருந்த நூல்களும் பண்டை தமிழர்களின் சமய கொள்கை (Religion of the Ancient Tamils) எனும் நூலும் முக்கியத்துவ மடைகின்றது. இந்நூலில் கூறப்பட்ட விடயங்கள் ஏற்கனவே Hindhu Organ (இந்து ஓகன்) எனும் ஆங்கில பத்திரிகையில் பாகங்களாக கொண்ட தமிழ் மக்களின் சமய கொள்கை சிவ சித்தந்தம் என்பதை ஆதாரங்களுடன் நிறுவ எடுத்துக் கொண்ட முயற்சியின் வெளிபாடாகவே இந்நூல் அமைகின்றதென்பர்.

இந்நூல் இயற்றிய நோக்கத்தை முதலியார் அவர்கள் *"ஈச்சுரநிச்சியத்துக்கு மறுதலையாயுள்ள மதங்கள் பூர்வத்துள்ள உலோகாயதம், நீச்தர சாங்கியம் பௌத்தம் முதலியவும் தற்காலத்தவனாகிய பௌதீகவாதம் (Materiliam) சங்கேதவாதம், நீச்சரவாதம், மித்தியாவாதம் முதலியனவாம் இவற்றின் கண்ணே ஈச்சர பெருமைக்கு விரோதமாயுள்ள துறைகளை மாத்திரம் எடுத்து கண்டித்து சுசுஷத்தையும் தாபித்து இதனை பிரசுரிக்கின்றோம்"* என்பார்.

இந்நூல் முதல் பகுதியில் காப்புச்செய்யுள் உபாசனாமூர்த்தி வழங்கும் அவதாரிகைகள் முதலான விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இதற்க சிறப்பு பாயித்தை சுன்னாகம் அ.குமாசுவாமி புலவர் வழங்கியுள்ளார். முதலியார் பல நூலின் பெருமையினை எடுத்துரைக்கும் போது,

*"பூவுலகிற் கடவுளில்லை மறைகளில்லை*
*யென்னுரைக்கும் பொயவாதப்*
*பாவிக்கடங் கொள்கையெலா மறுத்துரைத்துத்*
*தர்க்க நெறி பரவக்காட்டி*
*மூவிருவருமாய் முத்தொழில் முறையியற்றி*
*யாவருக்கும் முதன்மை பூண்ட*
*தேவொருவ னுளனென்று பற்பலரும்*
*விற்பனமாய்த் தேறும் வண்ணம்"*

. . . . . . . . . . . . . . .

*"நாத்திகர்கண் மனமறுக வீச்சுரநிச்*
*சயமென்று நாமஞ்சூட்டிக்*
*கோத்தொரு நூல் பிரகடனஞ் செய்து தந்ததான்*
*யாருமிது கொள்க மாதோ"*

எனப் சிறப்பித்து பாடுவதில் தமக்குள்ள மகிழ்ச்சியை வெளப்படுத்தினார் இந்நூல் பொதுவியல், சிறப்பியல் எனும் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. பொதுவியல் இரண்டு சூத்திரங்களையும், சிறப்பியல் மூன்று சூத்திரங்களையும் மொத்தம் ஐந்து சூத்திரங்களால் ஆனது. இப்பெருநூல் பொதுவியலில் முதற் சூத்திரம் கடவுணிச்சய விடயத்தை பொதுவகையால் நோக்குமிடத்து, உலகத்தே கடவுள் உண்டென கொண்ட வழக்கை யாம் எல்லோரும் கைக்கொள்ள வேண்டிய கடப்பாடு உடையது என்பதையும் இரண்டாம் சூத்திரம் கடவுள் உண்டெனக்கொள்வதே கடவுள் இல்லை எனக்கொள்வதிலும் புத்திக்கியந்ததென்பதையும் நிறுவுவதாகும். சிறப்பியல்பினில் வரும் மூன்றாம் சூத்திரம் கடவுள் உண்மையைச் சிறப்பு வகையில் நோக்கும் போது அதுரையாயிக தர்மத்தக்கு இனிது அமைவுடையதாய் அதனால் செவ்விதல் தாபிக்கப்படும் என்பதையும் நான்காம் சூத்திரம் கடவுள் உண்மை இனிறியமையாச் சிறப்பினதாய் சந்தேகம் விடுபடுவதையும் நாட்டப்படு ஐந்தாம் சூத்திரம் கடவுள் உண்மைக்கு மறுதலையாய் உள்ள ஆட்சேபங்களையெல்லாம் சமாதானம் செய்யப்படுவதையும் பொருளாக கொண்டுள்ளன. உதாரணமாக முதலாம் சூத்திரம் எட்டு அதிகாரங்களையும் ஒவ்வொரு அதிகாரமும் குறிப்பாக முதலாம் அதிகாரம் இருபது பேரிகளையும் இரண்டாம் அதிகாரம் எட்டு பேரிகளையும் மூன்றாம் அதிகாரம் 33 வாடி நான்காம் அதிகாரம் 12 பேரிகளையும் 6 சாதி: 1உப பிரிவு 7 அதி :2 உப பிரிவு அதி:8 3உப பிரிவு கொண்டதாக அமைந்துள்ளது.

இந்நூலின் முக்கியத்தவம் தந்த விமர்சகர் ஒருவர்

"இப்பொழுதும் பௌதீகவாதம் தாண்டவமாடுவதால் கடவுளைச் சிந்தித்துப் பயபக்தியுடன் ஒழுகுவோர் சிலரே அப்படிக் கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் எல்லா மதமும் ஒன்றென்பர். ஒருசிலர் எல்லா மதமும் எப்படி ஒன்றாகும் அரசனும் வேறொரு கீழ் அதிகாரியும் எப்படி ஒன்றாவான். பண்டை காலத்தில் அரசினர்கள் சமய கல்வியை போதித்தனர். பல கோயில்களைக் கட்டியும் தரும சாலைகளை நிறுவியும் அவற்றின் மூலமாக கடவுள் உண்மைகளை மக்கள் உணரச்செய்ய இக்காலத்திலோ சமய அறிவு பின்பற்றப் படாமையினால் நாஸ்திகமும் சந்தேகவாதமும் நிலவுகின்றன. இவற்றைக் குறைப்பதற்கு இந்நூல் பெரிதும் ஏற்புடையது. இது தர்க்க முறையாலும் சுருதி முறையாலும் விபரமாக நல்லதமிழ் வசன நடையில் அமைந்துள்ளது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிடுவது எல்லோரினதும் கவனத்தையும் ஈர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்நூல் இரண்டு பதிப்புகளாக வெளிவந்துள்ளது. முதல் பதிப்பு 1896 ஆம் ஆண்டிலும் இரண்டாம் பதிப்பு தமிழ், தமிழ்நாடு, மைலாப்பூர் வெ.ஜம்புலிங்கம் அவர்களால் ஜய வருடம் (1928) வெளியிடப்பட்டது. அதில் "*நூலசிரியர் சரித்திரம்*" எனும் விடயங்கள் பற்றி அடக்கமான குறிப்பொன்றையும் எழுதியுள்ளர். அவர் மதிப்புக்கு திருவாடுதுறை ஆதினவித்துவான் சைவசித்தாந்த சைவமணி *த.ச.மீனாட்சி சுந்தரம்பிள்ளை* அவர்கள் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அவர் நூசிரியர் பற்றி பாடும் போது

*"கருவிநூல் சமயநூல் கற்கும்*
*உண்மை புண்ணியமுடையயோர்*
*சிலர்க்கே வாய்க்கை பெறுவதை யுன்னி*
*பெறாகும் எளிதில்*
*கற்கவாய்ப் புடையதாய் இனிய உரைநடையினிற்*
*பல செய்திகள்*
*எடுத்தியம்பி நன்கனமுளத்திற் பசுமரத்தாணி*
*என்னை*
*பதிய ஈச்சுரநிச்சயம் எனுமெய்ந்த நூலை*
*ஐந்து கரத்தினை*
*ஐயைந் ததிகரகரயத்தமைத் தையம்*
*எட்டுணை யேனும் - மில்லா வியற்றித்*
*தந்தபே ரூபகாரரத்தை முன்னாட்*
*செய்தருள் பெரியோன் சிவவாழ்வுடைய*
*ஈழநன்னாட்டிடை யாழ்பாணந்சுறு*
*கொக்குவில் நகரான் கோதறு மனத்தான்*
*. . . . . . . . . . . . . . .*
*சித்தாந்த சைவதிறமே பேணுவோன்"*

என சிறப்பித்து பாடுவார்.

***சீவான்ம பேதம்:***

இந்நூல் 1890ல் வெளியிடப்பட்டது, ஜீவான்மாவுக்கும், பரமான்மாவிற்கும் இடையிலான வித்தியாசத்தை எடுத்தக்காட்வதோடு மட்டுமன்றி மாயாவாதத்தை ஒருவகையில் கண்டிக்கவும் செய்கின்றது. அதே சமயம் சைவசித்தாந்த சிறப்பினை எடுத்துக் கூறவும் தயங்க வில்லை.

**நிறுவன வழிநின்று சைவ தமிழ் பணிகளை மேற்கொள்ளல்**

முதலியார் அவர்கள் யாழ்பாண குடா நாட்டில் சிறந்த புலமையாளர்களுள் ஒருவராகவும் செல்லப்பிரபுவாகவும் முதலியார் சமாதான நீதவான் முதலான பட்டங்களுக்கு உரித்துடையவராகவும் விளங்கியமையால் இக்குடாநாட்டிலே ஆரம்பிக்கப் பட்ட சமூக, சமய கல்வி நிறுவனகளின் உயர் பதவிகள் அவரை நாடி வந்துள்ளன. அப்பதவிகளை வரவேற்பதுடன் அவற்றின் புனிதத்தை போற்றும் வகையிலவும் அவற்றின் வளர்ச்சின் பொருட்டும் ஊழியம் புரிந்தனர். இந்த வகையில் அவர் பின்வரும் நிறுவனங்களைக் குறிப்பிடலாம்.

சைவ பரிபாலன சமாசீயம், சைவ பரிபாலன சபை, சைவசித்தந்த சமயம், யாழ்பாண தமிழ்ச்சங்கம், காவிய பாடசாலை, செந்தமிழ் பரிபாலன சபை என்பவற்றை குறிப்பிடலாம். 1880ம் அண்டு வை.ஆறுமுகப்பிள்ளையின் அனுசரனை யுடன் சைவசித்தாந்த சமாசியத்தில் ஒரு அங்கத்தவராக இருந்து பணியாற்றியவர் என அறிய முடிகின்றது.

சர்வதாரி சித்திரை மாதம் 11 ம் நாள் (1888) சைவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சபையே சைவ பரிபாலன சபையாகும். அதன் ஆரம்ப உறுப்பிராக 1889ம் ஆண்டு அதன் கணக்கு பரிசோதகராகவும் விளங்கியவர் முதலியாராவார். இச்சபை சைவர்கள் அந்நிய மதங்களில் புகாவண்ணம் தடுத்தல், சைவ பிள்ளைகள் தமிழ் மொழி மூலம் கற்கும் ஊர்கள் தோறும் பாடசாலைகள் அமைந்தல், சைவ பொதுமக்கள் பொருட்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகை நடத்தல், கல்வி ஒழுங்குகளில் சிறந்தோரைக் கொண்ட பிரசங்கங்கள் செய்தல் இலமாகிய ஆலயங்களையும், மடங்களையும் புனருத்தாரணம் செய்தல் எனும் நோக்கங்களை கொண்டு இயங்கியது இச்சபை.

1889ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இச்சபை யாழ்பாணத்தில் உயர்தர இந்து பாடசாலை ஆரம்பித்தது. 1885ம் ஆண்டு இப்பாடசாலை இந்துக்கல்லூரி என்ற பெயரைப் பெற்றது. 1902ம் ஆண்டு இந்துக்கல்லூரி அதிகாரசபை ஒன்றினால் நிர்வகிக்கப்பட்டது. அதன் செயலாளராக இருந்து வந்தவர் (1902-1922) முதலியார் அலுவலர்கள். 1897ஆம் ஆண்டு விவேகானந்தர் யாழ்பாணம் வந்த பொழுது வரவேற்பு குழு உறுப்பினர்களுள் ஒருவராக இருந்து விவேகானந்தரை வரவேற்றார். 1901ம் ஆண்டு இந்து வாலிபர் சங்கம் அமைக்கப்பட்டது. அதன் பிரதான சொற்பொழிவாளராகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினார். 1889ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ஆம் திகதி இந்து சாதனம் என்ற தமிழ் பத்திரிகையையும் Hindu Organ என்ற ஆங்கில பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்ட போது அவற்றின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் இவ்விரு பத்திரிகைகளுக்கு விடயதானம் செய்பவராகவும் விளங்கினார். இச்சபையின் வளர்ச்சியுடனும் இந்துக்கல்லூரியின் வளர்ச்சியுடனும் இவரது பணி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1914ம் ஆண்டில் சைவசித்தாந்த மகாசமாஜம் என்னும் சமய தாபனம் யாழ்பாணத்தில் தாபிக்கப்பட்டது. அதன் முக்கிய உறுப்பினராகவும் அதன் பிரசாரமாகவும் விளங்கியவர்கள் முதலியார் அவர்கள். இவரின் தத்துவ நூல் அறிவினையும் சைவ சித்தாந்த நூல் புலமையையும் ஆற்றலையும் இத்துறை சார்ந்தோர் போற்றினர். தமிழ் நாட்டில் உள்ளோரும் முதலியாரை பாராட்டத்தவறவில்லை. தமிழ் நாட்டில் சென்னை, தூத்துக்குடி முதலான இடங்களில் அமைந்திருந்த சைவசித்ததந்க சமாஜங்கள் இவை நடத்திய சைவசித்தாந்த மகாநாடுகளின் பொழுது முதலியார் அவர்களை அழைத்து அம்மகாநாடுகளுக்கு தலைமை தாங்கச் செய்தும் பிரசங்கம் செய்வித்தலும் பெருமை கொண்டன. 1916ம் ஆண்டு மார்கழி மாதம் மைலாப்பூரில் நடைபெற்ற பதினாறாவது சென்னை சைவசித்தாந்த மகாநாட்டில் முதலியாரவர்கள் தலைமையேற்று சொற்பொழி வாற்றினார். அவரது உரையை அக்கால பத்திரிகைகள் பாராட்டத்தவறவில்லை. கலாசிந்தாமணி என்ற பத்திரிகை முதலியாரின் சொற்பொழிவை பின்வருமாறு பாராட்டும்.

"இச்சமயத்தின் பதினொராவது கூட்டம் ஸ்ரீமான் எஸ். சுபாரத்தினம் முதலியவர்கள் தலைமையின் கீழ் கூடியது.

பல வித்துவ சிரோன்மணிகள் பற்பல இடத்திலிருந்து வந்து பற்பல விசயங்களை பற்றி பலவிதமான உபநியாசஞ் செய்தனர். ஒவ்வொருநாளும் இறுதியிலும் சபாநாயகராகிய ஸ்ரீமான் சபாரத்தின முதலியாரவ்கள் உபநியசித்த விடயங்களின் அருமை, பெருமைகளை கடைந்தெடுத்து *'சைவசித்தாந்த அமுது ஈ;து, இதனை உண்பின்'* என்று உபசரித்து ஊட்டினது போல ஒவ்வொருவருடைய செவியிலும் ஊட்டினார் அனைவரும் அதனை உண்டு தேக்கினர்"

(கலாசிந்தாமணி1916)

1898 ஆண்டு த. கைலாசப்பிள்ளையின் தலைமையில் சைவபிரகாச வித்தியாசாலையில் *"யாழ்பாண தமிழ்ச்சங்கம்"* ஒன்று அமைக்கப் பட்டது. இதன் செயலாளராக அமைந்து செயலாற்றுவர் முதலியாரவர்களே. இவற்றோடு சுன்னாகம் இ.குமாரசுவாமிபுலவர், ஆ. முத்துதம்பி முதலானோர்கள் அங்கம் வகித்தனர். சென்னை தமிழ் அகராதி பெரும் திருத்தத்தைப் பெற்றது இக்காலத்திலேதான். இச்சங்கம் பல பண்டித வகுப்புகளையும் நடத்திப் பட்டம் வழங்கியது.

1917ஆம் ஆண்டு ஆடி மாதம் சேர் பொன்.அருணாச்சலம் அவர்கள் செந்தமிழ் பரிபாலனசபை என்ற ஒரு பெயரில் தமிழக் கல்வித்தாபனத்தை தாபித்தார். இதன் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவராக முதலியாரவர்கள் விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

முதலியார் முருக பக்தர். முருகனையே குலதெய்வமாக கொண்டவர். கொக்குவில் கிருபாகர சுப்ரமணிய கோயில் தர்மகர்த்தா, இக்கோயில், அவர் பாட்டனார் வழிவந்தது. ஓய்வு நேரங்களை இக்கோயிலின் வளர்ச்சியின் பொருட்டு கழித்தவர். இங்கு வீற்றிருக்கும் கிருபாகரசுப்ரமணிய பிள்ளையின் மிகுந்த பக்தியுடையவர், இதனாற்போலும் தம்மை குகதாசன் என அழைத்துக்கொண்டார். இக்கோயிலில் வீற்றிருக்கும் சுப்ரமணிய கடவுள் மீது பல்வேறு பிரபந்த வடிவங்களில் நூல்களை இயற்றியுள்ளார். இக்கோயிலை ஆன்மீகக் களமாக கொண்டு, பிரசங்கம், புராணபடனம், மகோற்சவம், கிரியைகள், சடங்குகள் என்னும் ஆன்மீக ஊடகமாக கொண்டு சைவபொதுமக்களை இத்தலத்துக்கு வருவித்து தலத்தில் இறக்கி அவர்களுக்கு ஆன்மீக நாட்டத்தை பெருக்குவதில் முன்னின்று உழைத்தவர் முதலியாராவார்கள்.

முதலியாரவர்கள் தாம் இயற்றிய ஈச்சரநிச்சயம் என்னும் நூலில் தமது உபாசன மூர்த்தியை நினைவு கொள்ளும்போது பின்வருமாறு பாலசுப்ரமணிய கடவுளைப் பாடி போற்றியிருப்பது கடவுள் மீது இருந்த ஈடுபாட்டினை காட்டி நிற்கின்றது.

*"அகிலசரா சரத்தினாற்*
*றனாதுண்மை யடிய ரேங்கள்*
*தகுதி பெற யுணர்ந்துயுமா*
*றவ்வவற்றிற் சார்ந்துஞ் சாரா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திகபரக்க ளுயிர்குயிரா*
*யெவ்வெவையு மியக்கு மாதிக்*
*குக பெருமானடினையை*
*முடியணியாக் கொண்டு*
*வாழ்வோம்."*

(ஈச்சுரநிச்சயம்1928)

தமிழ் மக்களினதும் குறிப்பாக சைவ மக்களினதும் சைவ சித்தாந்தத்தின் வளர்ச்சியின் பொருட்டு தம்மை அர்ப்பணித்து உழைத்த சபாரத்தின முதலியார் அவர்கள் கலாயுத்தி சித்திரை மாதம் 3 ஆம் திகதி (1858) புதன்கிழமை யாழ்ப்பாண கொக்குவில் என்னும் கிராமத்தில் வசித்த சபாபதிபிள்ளையாருக்கும் ஆச்சிமுத்து அம்மையாருக்கும் மகனாகப்பிறந்தார்.

முதலியாரவர்கள் தமது இளமைக் கல்வியை கொக்குவில் பண்டிதர் சுயசம்புநாத பிள்ளையிடமும் பின்னர் நாவலரிடத்திலும் பயின்றார். ஆங்கிலக்கல்வியை கொக்குவில் பாடசாலையிலும் நாவலர்களின் சைவாங்கில வித்தியாசாலையிலும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி முதலியவற்றிலும் பயின்றார்.

1878ஆம் ஆண்டு அரச சேவையில் எழுதுவினைஞராக சேர்ர்த முதலியாரவர்கள் உயர் உத்தியோகம் வரை உயர்ந்தவர். முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கொழும்பு, காலி முதலான இடங்களிளெல்லாம் பணியாற்றியவர். 1921ஆம் ஆண்டு தமது பதவியிலிருந்து ஓய்வுப்பெற்றவர்.நாட்டுநலம் பொதுமக்கள் நாட்டம், மொழி, சமய பற்றுக்கொண்ட முதலியாரவர்கள் முதலியார் பட்டம்,(1917) இராசவால்(1919)பட்டமும், அவரை அலங்கரித்துக்கொண்டது. இவை இந்தியாவில் வழங்கப்பட்டது. இராசாகிப், இராவகபதூர் ஆகிய பட்டங்களுக்கு சமமானது என்பார்.

1889ஆம் ஆண்டு கனகம்மாள் என்னும் பெண்ணை திருமணம் செய்தனர். ஒரு ஆணும் பெண்வும் இவருக்கு இருந்தனர். இருமுறை திருமணம் செய்து கொண்ட முதலியார் அவர்கள் ஐப்பசி மாதம் 3ம் திகதி புதன் கிழமை இறையடி சேர்ந்தார்.

முடிவாக ஈழ நாட்டின் சைவ சமய வளர்ச்சியை கருத்திற் கொண்டு உழைத்தோர்களை பின்வரும் அடிப்படையில் பகுத்து நோக்கலாம்.

1. சைவத்தையும் தமிழ் மொழியையும் கருத்திற் கொண்டு உழைத்தோர்.
2. சைவம், சைவ சித்தாந்தம், தமிழ் மொழி ஆகியவற்றை அடிபடையாகக் கொண்டு உழைத்தோர்.
3. சைவ சித்தாந்த வளர்ச்சியை கருத்திற் கொண்டு அதனூடாக சைவத்தையும் தமிழ் மொழியையும் வளர்த்தவர்கள்.

இவற்றின் இறுதிப் பகுதியில் அடங்குபவரே சபாரத்தின முதலியாரவர்கள். சைவ சித்தாந்த வளர்ச்சியின் பொருட்டு தமது வாழ்வின் பெரும்பகுதியை அதற்கு அர்ப்பணித்து செயற்பட்டவர். முதலியார வர்கள் ஈழ நாட்டின் சைவ சித்தாந்த மெய்யியல் வளர்ச்சிக்கு பணியாற்றியோர் பற்றி ஆராய முனைந்தால். அவர்களுள் முதன்மையான இடத்தை பெறுபவர் கொக்குவில் ச. சபாரத்தின முதலியார் எனக் கூறின் அதனை ஆட்சேபிப்பதற்கு ஒருவரும் இலர்எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டிச் சோலை தான்றோன்றீஸ்வரம்



**ஜனார்த்தினி தவராஜா,**
பல்மருத்துவப் பீடம்

கிழக்கிலங்கையிலேயே மிகப் பிரசித்த பெற்ற சிவாலயங்களில் ஒன்று கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும். இங்குள்ள ஆலயங்கள் திருப்படைக் கோயில்கள் என்றும், தேசத்துக் கோயில்கள் என்றும் வகைப் படும். கொக்கட்டிச் சோலைத் தான்றோன்றீஸ்வரர் ஆலயம் திருப்படைக் கோயில் வகையைச் சேர்ந்த தொன்றாகும்.

மட்டக்களப்பு நகரில் தெற்கே 13 கிலோ மீற்றர்கள் தொலைவில் கொக்கட்டிச்சோலையெனும் இயற்கை எழில் மிக்க கிராமத்தில் நிழல் தரு மரங்கள் நிறைந்த வீதியின் மருகில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இந்தியாவிலிருந்து கதிர்காம யாத்திரை மேற்கொண்ட கொக்கடியார் எனும் அடியார் ஒருவர் இலங்கை வந்து கொக்கட்டிமரம் ஒன்றின் நிழல் ஒன்றில் சமாதியடைந்தார். அங்கு இச்சிவலிங்கம் தானாகத் தோன்றியது என்பது வரலாறு.

கிழக்கிலங்கையில் அரசியல் ஆதிக்கம் பெற்ற இந்திய வம்சத்தைச் சேர்ந்த அரசன் குளக் கோட்டன் ஆவான். சைவ சமயத்தில் ஒரு பிரிவினராகிய வீரசைவரை ஆதரித்தவன், கதிர் காமம், கொக்கட்டிச்சோலைத் தான்றோன்றீஸ்வரம் போன்ற ஏழு கோயில்களுக்கு திருப்பணி செய்தவன் என்று சான்றுகள் கூறுகின்றன. இதனை விளக்கும் சான்றாக பின்வரும் கல் வெட்டினைக் கூறலாம்.

*"சீர்மேவு இலங்கைப்பதி வாழ்வு தரு செல் வமும் சிவநேச இரு சமயமும் செப்புதற் கரிதான மாணிக்க கங்கையும் செகமேவு கதிர மலையும் ஏர் பெறும் தென்கயிலை வாழ் கோண லிங்கம் மேன்மை தான்றோன்றுலிங்கம் வெற்றிபுனை மயூர சித்திர சங்கார வேல் வெள்ளை நாவற் பதியதாம் பேர் பெறும் தென் திருக்கோயில் சிவா லயம் சிவபூசை தேவாரமும் செய்முறைகள் என் றென்றும் நீடூழி காலமும் தேசம் தளப்பாமலும் ஏர் பெருகு பரிதி குளராசன் குளக்கோட்டம் எவ்வுலகுமுய்வதாக ஏழு கோபுரம் கோயில் தொழுவார் தினம் தேட எங்கெங்கு மெற்றினாரே"*

பண்டைக்கால வேடன் ஒருவன் கொக்கட்டி மரங்கள் நிறைந்த சோலைக்குத் தேன் எடுப்பதற்குச் சென்றான் உயர்ந்த மரம் ஒன்றின் உச்சியில் தேன் கூடு இருப்பதைக் கண்டு மரத்தை வெட்டும் போது இரத்தம் போல் செந்நிற பால் வடிய அவ்விடத்தை ஆராய்ந்த வேடன் சிவலிங்கம் ஒன்று இருப்பதைக் கண்டான் என்று " மட்டக்களப்பு மான்மிகம்" கூறு கின்றது. பின் அவனது கூட்டத்தாரால் அவ்விடம் வழிபட்டு வந்தது. இச்சிறப்பைக் கேள்வியுற்ற குளக் கோட்ட மன்னன் அங்கு கோயில் கட்ட முனை ந்தான்.

| | | |
|---|---|---|
| இறைவன் | :- | கொக்கட்டிச் சோலைத் தான்றோன்றீஸ்வரர். |
| இறைவி | :- | பார்வதி அம்மையார். |
| தலவிருட்சம் | :- | கொக்கட்டி மரம். |

தற்போது சுயம்புலிங்கத்தின் மேல் உமாமகேஸ்வரர் விக்கிரகம் ஒன்று தாபிக்கப் பட்டுள்ளது.

தான்றோன்றீஸ்வரங்களின் சிறப்பு அங்குள்ள இலிங்கத்தை ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்தி ற்கு மாற்ற இயலாது.

இங்கு பூசை செய்பவர்கள் *"சங்கமர்"* எனப் படுவர். சிவனடியாராகிய பூசகர் என்பது இதனது பொருள். குளக்கோட்டனால் நியமிக்கப்பட்ட இவர்கள் பின்பற்றுவது வீராகமம். இவர்களின் பூசை முறைகள் மற்றய சைவ கோயில் பூசையிலும் வேறுபட்டது. இக்கோயிலின் தீர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு மிக்கது. இது பின்வரும் சம்பவம் மூலம் எடுத்து க்காட்டப் படுகிறது.

கோயிலின் மூன்றாவது மண்டபத்தில் பார்வதி அம்மன் கோயில் வாசல் முன் கற்சிலை இடபம் ஒன்றுண்டு. 16ம் நூற்றாண்டில் கோயிலை இடித்தழிக்க போர்த்துக்கேயர் வந்த போது, கேலி செய்யும் பொருட்டு பூசகரைப்பார்த்து *"இக்கற்சிலை இடபம் இங்கு என்ன தேவைக்குள்ளது? இது புல், தண்ணீர் அருந்துமா? "* எனக் கேட்டனர். ஆவேசம் கொண்ட பூசாரி *"ஆம்"* என்று கூறிய பதிலால் புல், தண்ணீர் ஊட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. என்ன அதிசயம், காளை எழுந்து புல் தின்று தண்ணீர் அருந்தி விட்டு போர்த்துக்கேயரைத் துரத்த தொடங்கியது. அன்று அவ்விடம் விட்டு சென்றவர்கள் மீண்டும் கோயிலை அழிக்கும் பொரு ட்டு திரும்பவேயில்லை. இக்கோயிலில் மூன்று காலப் பூசைகள் இடம் பெறும். தைப்பூசம், மாசி மகம், வருடப்பிறப்பு, திருக்கார்த்திகை, திரு வெம்பாவை, போன்றவை இங்கு சிறப்பாக கொண்டாடப்படும். சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாகர்சஷ்டி, போன்ற விரதங்களும் இங்கு சிறப்பாகும்.

ஆவணி அமாவாசைக்குப் பின்வரும் சந்திரனின் முதற் பிறை தோன்றும் நாள் கொடியேற்றமாகும். இதன் பின் பௌர்ணமி கடந்து வரும் முதலாம் ஞாயிறு பிற்பகல் தேர், திங்கள் தீர்த்தம் நடைபெறுவதுடன் பதினைந்து நாள் மகோற்சவம் நிறைவுறும். தீர்த்த நாளின் அதிகாலை வேட்டைத் திருவிழா, ஆன்ம ஈடேற்றத்திற்குத் தடையான மலங் களை இறைவன் அழிக்கும் பாவனையில் அமைந்த தாகும். இப்பிரதேசத்தில் தேர்த்திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். சிவனும் அம்பிகையும் சித்திரத்தேரிலும், முருகனும் விநாயகரும் பிள்ளை யார் தேரிலும் வலம் வருதல் கண்கொள்ளாக் காட்சி.

திருவிழாவையடுத்து கோயில் பரிபாலகர், தொண்டூழியக்காரர் திருவிழாவில் பங்கு கொண்டோரையும் கௌரவிக்கும் சீர்வரிசையாகக் குடுக்கை கூறுதல் இடம் பெறும். இதைபற்றி மட்டக்களப்பு மான்மிகத்தில் பங்கு கூறும் கல்வெட்டும், திருப்படைக்களஞ்சியமும் கூறுகின்றது.

வண்ணக்கர்கள் மூன்று கூட்டமாகப் பரிபாலனையை மேற்கொள்வர். இவர்கள் தொன்று தொட்டு வேளாண்மை செய்பவர்கள். காலிங்காக் குடி, உலகிப்போடி குடி, படையாண்ட குடி. என்ற மூன்று குடியைச் சேர்ந்தவர்கள் வண்ணக்கர் பதவியைப் பெறுவர். ஆயுள் முழுவதும் இப்பதவியில் இருப்பர். ஈண்டு கூறும் வண்ணக்கர் மூவரில் காலிங்கா குடியைச் சேர்ந்தவர் தலைமைப் பதவிக்கும், உலகிப்போடி குடியைச் சேர்ந்தவர்கள் பொருளாதாரத் தொழிற்பாட்டிற்கும், படையாண்டிக் குடியைச் சேர்ந்தவர் நிருவாக நடைமுறைக்கும் பொறுப்பானவர்கள். வண்ணக்கர், சங்கமர், தொண்டூழிக்காரர் ஆகியோரின் உரிமை கிழக்கிலங்கைப் பாரம்பரிய முறைக்கு அமைந்த தாய்வழி உரிமையாகப் பொறுப்பு மாற்றம் செய்யப்படும்.

மட்டக்களப்பு மான்மியம், கல்வெட்டுக்கள், மரபுப் பாடல்கள், வெற்றிலைக்காரப் புலவர் என்று பொது மக்கள் கூறுகின்ற சின்னவப்புலவரும், புலவர் மணிப் பெரியதம்பிப்பிள்ளை என்பவரும் இதன் மீது இரு பதிகங்கள் பாடியுள்ளனர். நாட்டுக் கூத்து, கிராமிய இலக்கியத்திலும், கொக்கட்டிச் சோலைத் தான்றோன்றீஸ்வரர் ஆலயத்தின் மீது பல காப்புச் செய்யுள்கள் கூறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் இயக்கம்
## கிறிஸ்தவ கண்ணோட்டத்துடனான ஒரு மீள் வாசிப்பு

*மார்க்கண்டன் ரூபவதனன்,*
*ஊவா வெல்லசப் பல்கலைக்கழகம்*

உலக வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முக்கியமான, ஒரு திருப்பு முனையான நூற்றாண்டு. சமூகம், சமயம், அழகியல், பண்பாடு, அறிவியல் என்பன ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி முரண்பட்டு போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்த நூற்றாண்டு.

இலங்கையிலும் 19 ஆம் நூற்றாண்டு மிக முக்கியமானதாகும். காலனித்துவ ஆட்சி, ஆட்சியாளர்களுடன் கொணரப்பட்ட நவீனத்துவ அம்சங்கள், ஆங்கிலக்கல்வி, உலகமெங்கும் பரவிக்கொண்டிருந்த புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம், மத்திய தர மக்கள் உருவாக்கம், சுதேச மத மொழி கலாச்சார மறு மலர்ச்சி என அனைத்தும் கொண்ட காலப்பகுதி.

இலங்கை பூராவும் பௌத்த, சைவ(சுதேச மதமாகிய) இஸ்லாமிய மதங்களைச்சார்ந்த சாதாரண பொது மக்கள் சிலரும், படித்த சமயத்தலைவர் சிலரும், சமயத்திலும் மொழியிலும் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயத்திற்கெதிராகவும் கிறிஸ்தவர்களுக்கெதிராகவும் சுயமத, மொழி கலாச்சார பாதுகாப்பு என்ற தொனிப்பொருளில் ஈடுபட்டனர். இவர்களுள் இலங்கையின் வடக்கே குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சுயமதமாகிய சைவத்தை பாதுகாக்கும் பொருட்டுப் பொதுமக்கள் பலரும் அறிஞர்கள் சிலரும் ஈடுபட்ட வேளையிலும் தனக்கான சில தகைமைகளுடனும் கடமைகளுடனும் சைவ-தமிழ்ப் பாதுகாவலனாக மேற்கிளம்பியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என நன்கறியப்பட்ட க. ஆறுமுகப்பிள்ளை (18.12.1822 – 19.11.1887) ஆவார்.

**இலங்கையில் கிறிஸ்தவம்.**

போர்த்துகீஷர் வருகையுடன் - அதற்கு முன்பே கிறிஸ்தவர்களுடனான தொடர்புகள் இருந்த போதிலும் - கிறிஸ்தவம் நிறுவனமாக இலங்கைக்கு வந்தது. இவர்கள் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை இலங்கையில் பரப்பினர். பின்பு வந்த ஒல்லாந்தர் தமது சீர்திருத்த கிறிஸ்தவத்தை பரப்பினர். கத்தோலிக்கமும் ஒல்லாந்த சீர்திருத்தசபையும் ஒன்றையொன்று முட்டியும் மோதியும் நிலை பெற்றன. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயரின் வருகையுடன் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவப் பிரிவுகள் - இலண்டன் மிஷன், கேர்ஷ் மிஷன், வெஸ்லியன் மிஷன், பப்ரிஸ் மிஷன், பிரஸ்பற்றேரியன் மிஷன் - இலங்கை வந்து தமது மதப்பரப்புகைகளை செய்தன. அவையும் நிலைபெற்றன. தொடர்ந்து அமெரிக்க திருச்சபையும் இலங்கை வந்து நிலை பெற்றது.

ஆங்கிலேயர் கால ஆட்சியில் அமுல்படுத்தப்பட்ட சமய சுதந்திரத்தால் இலங்கையில் ஏற்கனவே இருந்த, மேலைதேசத்தில் இருந்து வந்த சமயங்கள் அனைத்தும் சுதந்திரமாக இயங்கின. இதனால் இலங்கையை தமது ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வந்த ஆங்கிலேயரின் அனுமதியுடன் மிஷனறிமார் நாட்டின் பல பாகங்களிலும் தமது பணியை – மதப்பரப்புகையை மேற்கொண்டனர்.

இலங்கையின் வடபகுதியிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே மிஷனறிமார்களின் பணிகள் குறிப்பிடத்தக்க அளவு இடம்பெற்றன என்றால் மறுப்பதற்கில்லை. அங்கிலிக்கன், வெஸ்லியன், மிஷனறிமார் தமது பணிகளை போட்டிகளுக்கு மத்தியில் செயற்படுத்திக் கொண்டிருந்த வேளையில் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் செல்ல ஆங்கிலேய அரசினால் அனுமதிக்கப்பட்ட அமெரிக்க மிஷனறிமார் யாழ்ப்பாணத்தை தமது மிஷன் களமாகக் கொண்டு பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவ்வாறு புரட்டஸ்தாந்து மிஷனறிகளின் பணிகளைக் கண்ட கத்தோலிக்கரும் தமது பணிகளை மீள் உருவாக்கம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயங்கள், பாடசாலைகள் மருத்துவமனைகள் விடுதிப்பாடசாலைகள் என்பன யாழ்ப்பாணத்தில் பெருகலாயின.

பொதுமக்கள் சமய நம்பிக்கையின் பொருட்டும், சுயதேவை பூர்த்தியின் பொருட்டும் (கல்வி, தொழில், சலுகை, கௌரவம்) மதம் மாறியபடி இருந்தனர்.

யாழ்ப்பாணச் சமூக உள்கட்டுமானத்துள் கிறிஸ்தவமும் உள்ளீர்க்கப்பட்டது. கத்தோலிக்க மதம் பெரும்பான்மையையும் "*தாழ்த்தப்பட்ட*" எனக் கூறப்படும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றது. புரட்டஸ்தாந்து மதம் பெரும்பான்மையும் "*உயர் சாதி*" எனத் தம்மை அழைத்துக் கொண்டோர் மத்தியிலும் அதிக செல்வாக்குப் பெற்றது. இதற்கு தேவாலயங்கள் அமைந்த இடங்களும் இதர செய்திகளும் சான்று பகர்கின்றன.

## நாவலர் - கிறிஸ்தவ தொடர்பு

யாழ்ப்பாணத்தின் நகர்ப் பகுதியை அண்மித்த பிரதேசத்தில் நாவலர் பிறந்து வளர்ந்தார். நாவலரின் தந்தை கந்தப்பிள்ளை ஓர் அறிஞர். தமிழ், போர்த்துகீஷ், ஒல்லாந்து, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தவர். கிறிஸ்தவர்களின் தொடர்பு இல்லாமல் அவருக்கு இத்தகைய மொழிப்புலமை ஏற்பட்டிருக்கவும் முடியாது. தேவையும் இருக்க முடியாது. கிறிஸ்தவர்களுடன் அவருக்கு இருந்த நெருங்கிய தொடர்பு தான் சில கிறிஸ்வ நாடகங்களையும்[1] அவரால் எழுதி அரங்கேற்ற முடிந்தது. ஆக கிறிஸ்தவர்களுடனான தொடர்பு நாவலருக்கு தந்தை வழியூடாகவே ஆரம்பித்து விட்ட ஒன்று எனலாம்.

நாவலரின் குடும்பத்தினர் சைவர்களாக இருந்த போதிலும் அவர்கள் கிறிஸ்தவர்களுடனான தொடர்பை பெருமையுடன் பேணிக் கொண்டிருந்தனர். இதனால் நாவலரை 12 ஆவது வயதில் கிறிஸ்தவ பாடசாலைக்கு அனுப்பினர். ஆங்கிலம் கற்கும் படி செய்தனர். அத்துடன் அமையாது நாவலர் உயர்ந்த தொழில் செய்ய வேண்டும் என்றும் விரும்பினர்.[2] வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் சேர்ந்த 12ஆவது வயதுடன் நாவலருக்குக் கிறிஸ்தவத்துடன் நேரடித் தொடர்பு ஏற்பட்டது. கிறிஸ்தவர்களிடம் ஆங்கிலம் பயின்றார். பேர்சிவல் பாதிரியுடன் தொடர்பு கொண்டார். அதே பாடசாலையில் ஆசிரியரானார். ஆங்கிலமும், தமிழும் கற்பித்தார். கிறிஸ்தவர்களும் நாவலரிடம் கற்றனர். பேர்சிவல் குருவும் கற்றார். கிறிஸ்தவத்துடனான நாவலர் தொடர்பு புலமைத்துவத் தொடர்பானது.

மொழிப்புலமையுடன் பேர்சிவல் பாதிரியுடன் கொண்ட நட்பினாலும் பைபிள் மொழிபெயர்ப்பில் நாவலர் இணைந்து கொண்டார்.[3] சீரான மொழி பெயர்ப்பு என்பது மூல மொழியின் உரிய விளக்கம் இலக்கு மொழிய பெயர்க்கப்படும் போது தான் ஏற்படுகின்றது. இதற்கு மூல மொழிப்பிரதி மீதான கூர்ந்த வாசிப்பும் தெளிவும் முக்கியம். அதேவேளை இலக்கு மொழி மீது விடயத்தைக் கொணரக்கூடிய திறமையும் முக்கியம். இத்தகைய திறமை நாவலருக்கு இருந்தது. அதனால் தான் நாவலர் அப்பணிக்கு அழைக்கப்பட்டார்.

பைபிள் மொழிபெயர்ப்பின் போது பைபிளை '*அக்குவேறு ஆணிவேறாக*' நாவலர் படிப்பதற்கு அரிய வாய்ப்புக் கிடைத்தது. கிறிஸ்தவ இறையியலை அக்கால விளக்கத்திற்கேற்ப நாவலர் விளங்கி வைத்திருந்தார்.

இது மட்டுமல்லாமல் மொழிபெயர்ப்பில் ஈடுபட்ட அங்கிலிக்கன் மிஷனறிமாருடனும், அமெரிக்க மிஷனறிமாருடனும் தொடர்பு ஏற்படலாயிற்று.

மொழிபெயர்ப்பில் நாவலர் இணைந்து கொண்டது இலங்கையில் கிறிஸ்தவ வளர்ச்சிக்குப் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியது என்பதை நாவலரின் பிற்கால நடவடிக்கைகளில் இருந்து காண முடிகின்றது. இதை தனது கணிப்பில் ச. குலேந்திரன் பின்வருமாறு கூறுவார்

"*கிறிஸ்தவனல்லாத ஒருவரை எந்த அளவுக்கு வேதத்திருப்புதல் வேலையில் சேர்த்துக் கொள்ளலாம் என்பது பரீட்சைத் திருப்புதலுடன் ஒட்டியுள்ள ஒரு பெரிய கேள்வியாகும். ஆனால் அப்படிப்பட்ட உதவி பெற்றுக்கொள்ளும் போது கவனத்தோடு உபயோகிக்கப்பட வேண்டும் இதில் பேர்சிவல் ஐயர் அதி விவேகமாய் நடக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும்*".[4]

குலேந்திரனின் அகநிலை சார்ந்த கணிப்பின் படி நாவலரை அவரது செயற்பாட்டைக் குறித்து இப்படிக் கூறலாமோ இல்லையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் தனது சமய வளர்ச்சிச் செயற்பாட்டிற்கும், பிறசமய எதிர்ப்புச் செயற்பாட்டிற்கும் அதிகம் கற்றுக்கொண்ட களமாக மொழிபெயர்ப்பு வேலையைப் பயன்படுத்தினார் என்பது மறுப்பதிற்கில்லை.

இந்தக்களத்தில் வேலை செய்யும் போது பாதிரிமார், ஆட்சியாளர், சுதேசக் கிறிஸ்தவர்கள் எனப்பலதரப்பட்டவர்களுடனும் தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட நாவலர், இவர்கள் பற்றிய தமது கணிப்புக்களையும் தம்முள் நிலை நிறுத்திக் கொண்டார் எனலாம்.

கிறிஸ்தவம் உலகமெங்கும் ஆட்சியாளர்களின் உதவியுடன் தீவிரமாகப் பரப்பப்பட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியில் ஆட்சியதிகாரங்களுக்குப் பயந்தும் கிறிஸ்தவ உள்ளடக்கம் பற்றிய பூரண அறிவு இன்றியும் கிறிஸ்தவத்தை எதிர்த்தவர்களோ, விமர்சித்த வர்களோ குறைவு எனலாம்.

அக்காலத்தில் கிறிஸ்தவ உட்பிரிவுகள் தத்தமக்குள்ளே பிளவுபட்டுப்பட்டுத் தாம் முன்வைக்கும் இறையியல் கோட்பாட்டு விளக்கங்களும், ஒருபிரிவு இன்னொரு பிரிவு மீது செய்யும் விமர்சனங்களுமே கிறிஸ்தவ சீர்திருத்தமாகவும், இறையியல் கொள்கைகளாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தன.

இலங்கையில் கிறிஸ்தவம் மீதான கேள்வி, விமர்சனம் 19 ஆம் நூற்றாண்டில் சைவசமய அறிஞர்கள் மத்தியிலிருந்து வெளிக்கிளம்பியது. இதற்கு நாவலர் தலைமை தாங்கினார்.

கிறிஸ்தவ இறையியல் கோட் பாடுகளையும், கிறிஸ்தவர் நடவடிக் கைகளையும் அறிந்து வைத்திருந்தாலும் அவை பற்றி பேசவோ, எழுதவோ நாவலர் ஆரம்பத்தில் முயற்சி எடுக்கவில்லை. எப்போது சைவ சமயம் மீதான கண்டனங்கள் எழுந்தனவோ அப்போதே சைவத்தைப் பாதுகாக்கும் பொருட்டும், அதன் பெருமையைப் புலப்படுத்தும் பொருட்டும் தற்பாதுகாப்பு நடவடிக்கையாகக் கிறிஸ்தவத்தைப் பற்றி நாவலர் எழுதத் தொடங்கினார்.

*'குருட்டுவழி'*, நற்கொடை, மும்மூர்த்தி லட்சணம், துராசார விருத்தாந்தம் முதலிய நூல்களாலும், ஏனைய துண்டுப்பிரசுரங்களாலும் சைவத்தையும் சைவர்களையும் தாக்கி எழுதும் பொழுது நாவலரும் அவரது சீடர்களும் (மரபினரும்) பல துண்டுப்பிரசுரங்களையும், *"சைவத்தூஷணபிரகாரம், சுப்பிரபோதம்,"* முதலிய நூல்களையும் கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிராகவும் எழுத வேண்டியதாயிற்று.

கிறிஸ்தவத்தை பல்வேறு பெயர்கள் கொண்டு நாவலர் குழுவினர் அழைத்தமையைக் காணமுடிகின்றது. புன்மதம், துர்ச்சமயமாகிய கிறிஸ்தவ மதம், துர்ப்பலர்களின் மதம்[5] என நாவலர் அழைத்தார். இத்தகைய பெயர்கள் தமிழ்ப்பண்பாட்டில் அத்தகைய நிலையில் பயன்படுத்தப்பட்டன என்பது மனங்கொள்ளத் தக்கது.

கிறிஸ்தவர்கள் சிவாகமங்களை பொய் நூல்கள் என்று கூற, நாவலர் பைபிளைப் பொய் நூல் என்கிறார். நாவலரின் இந்த வார்த்தை கோப மிகுதியால் வந்த ஒன்று தான் என்று எண்ண வேண்டியிருந்தது. ஏனெனில் கிறிஸ்தவ மூலநூலாகிய பைபிளும் அதில் அடங்கியுள்ள, நடைபெற்ற செய்திகளும் வரலாற்றுண்மைகள் என்பதை நாவலர் அறியாதவரல்லர்.

இங்கு அவர் செய்த முக்கிய வேலை சைவசமயத்தில் இருக்கும் சிவாகமங்கள் முதலானவற்றை பைபிளுக்கு இணையாகப் பேசியது தான். ஸ்ருதி, அதன் வழியாக வந்த வேதங்கள், ஆகமங்கள் என்பவறறுடன் *"சமயக்குரவர்கள் நால்வராலும் வேதங்களின் அர்த்தத்தைப் பெரும்பாலும் அநுசரித்து அருளிச்செய்யப்பட்ட தேவாரம், திருவாசகம் எனும் திராவிட வேதங்களும்"*[6] கூட சைவ சமய வேத நூல்கள் என்று அடித்துக் கூறினார். பைபிளை இவற்றுக்குச் சமப்படுத்தி செய்திகளையும், இதர இறையியல் கருத்துக்களையும் மேற்கோள்காட்டிச் சமன் செய்தார்.

**கேள்விக்குள்ளான கிறிஸ்தவ இறையியல்.**

1. பல தெய்வ வழிபாடு.

சைவம் பலதெய்வ வழிபாட்டைக் கொண்டது என்றும் விக்கிரகங்களை வழிபடும் சமயம், மரபுவழி கிரியைகளுக்கு அதிக முக்கியதுவம் கொடுக்கின்றது என்றும் கிறிஸ்தவர்கள் சுட்டிக்காட்டினர். நாவலர் இவை பற்றிய பிரதிவாதங்களையும் கிறிஸ்தவ அறிவைப் பயன்படுத்திச் சில ஒப்புமைகளையும் முன்வைத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவன், கணபதி, முருகன், அம்மன் எனப்பல தெய்வங்களை வழிபடுகிறீர்களே என்ற பாதிரிமார்களின் கேள்விக்கு 'எங்களைப் பலரைத் தெய்வம் என்று வழிபடும் அஞ்ஞானிகள் என்று இகழ்கின்றாய் யெகோவா பரிசுத்தாவி கிறிஸ்த்து என்றும் பலரைத் தெய்வம் என்றும் வணங்கும் அஞ்ஞானி நீயே'' என்று கூறுகிறார் நாவலர். மூவரும் ஒருவர் என்பதை நாவலர் அறியவில்லை போலும்.

மேலும் நாயன்மார் வழிபாடு குறித்த பாதிரிமார் கருத்துக்குமதிப்பளித்து நாவலர் தமதடியார்களை வணங்குவதற்கு தம்மை வணங்குவதற்குச் சமம் என்று சிவாகமங்கள் கூறுகின்றன என்றார் அத்துடன் பைபிளிலும் இது சம்மந்தமாக கூறப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார் யோசுவா ஆண்டவரின் படைத் தலைவரை விழுந்து வணங்கியமை (யோசு 5:14) இறுதித் தீர்ப்பு நாளில் என்ன நடைபெறும் என்று எதிர் பார்க்கும் மக்களுக்கு இயேசு வழிகாட்டியமை (மத் 25:40) சாராள் கர்ப்பம் தரித்த செய்தி கூற வந்த மூன்று மனிதரை ஆபிரகாம் வணங்கியமை (ஆதி 18:2) என்பவை அவற்றுள் சில.

2 விக்கிரக வழிபாடு

பிண்டப் பொருட்கள் மீது ஒரு வகை இறைத்தன்மையை ஏற்றி வழிபடுவதும் அவற்றுக்கு தாபம் காட்டுவதுமான சடங்குகளை பாதிரிமார் ஏழனம் செய்த போது கோதுமை அப்பத்தை சரீரம் எனவும் திராட்சை ரசத்தை இரத்தமெனவும் பாவித்துக் கொண்டு எம்மைக் கல்லையும் மண்ணையும் வணங்கும் அஞ்ஞானிகள் என்றும் கடவுளுக்கு செய்யற்பலதாகிய வழிபாட்டை அறிவில்லாத விக்கிரகங்களுக்கு செய்யும் பாவிகள் என்றும் தூசிப்பது மதிமயக்கமன்றோ? என்று வினாவுகிறார்.

3 மரபுவழி வரும் வழிபாடு

மரபுவழிக் கிரிகைகளை இயேசு உடைத்தெறிந்தார் என்று கூறும் கிறிஸ்தவ இறையியலாளர்கள் இயேசு காலத்தின் பின்னும், இன்னும் அக்கிரிகைகள் தொடர்ந்து வருவதை அறியவில்லையே என ஆதங்கப்பட்டார் நாவலர் கடவுள் தான் கூறும் கவிதையை தொன்று தொட்டுச் செய்யும் படி கட்டளையிட்டார் (யாத் 12:14-17, எண் 10:8) அப்படியாயின் இயேசு அதைத் தள்ளினால் தேவ விரோதி ஆகி விடுகிறாரே மேலும் குஷ்ட ரோகியைக் குணப்படுத்தி ''மோசேயின் கட்டளைப்படி நீ சுத்தமானதைக் குறித்துப் பலி சொலுத்துவாயாக'' என ஏன் இயேசு கூறுகிறார் இயேசுவின் பின்னும் கிரியையைச் சீடர் கடைப்பிடித்தார்கள் தானே பவுல் திமோத்தேயுவிற்கு ஏன் விருந்தசேதனம் செய்வித்தார்? (அப் 6:3)

நாவலர் கிறிஸ்தவம் குறித்து இவ்வாறு பல கேள்விகளைக் தொடுத்தார் அத்தகைய கேள்விகளை தொகுத்து நோக்கும் போது சில அம்சங்களை நாம் கண்டு கொள்ளலாம்

1 நாவலர் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டினை மையப்படுத்தியதான கிறிஸ்தவத்தை பார்த்தார்.

2 நாவலரின் கிறிஸ்தவ இறையியல் மறுப்பு, விமர்சிப்பு என்பன புரட்டஸ்தாந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

3 கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட விடயங்களையே தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என்ற மரபுவாதியாகக் காணப்பட்டார்.

இத்தகைய அம்சங்களையும் நாவலரது கிறிஸ்தவ கண்டனங்களையும் நாம் நோக்கும் போது கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை மீண்டும் ஆய்வு செய்ய வேண்டிய, மீண்டுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை அக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை ஏனெனில் நாவலரது விமர்சனம் கிறிஸ்தவத்தை மேலும் மேலும் வளர்க்க உதவுமேயொழிய அழிக்க உதவாது.

## கிறிஸ்தவர்கள் பற்றிய கண்டணம்

யாழ்பாணத்து கிறிஸ்தவர்களை ''கிறிஸ்தவர்கள்'' என்ற ஒரே பார்வையில் நாவலர் பார்க்கவில்லை அவர்கள் மீதான கண்டணங்களையும் தெரிவிக்கவில்லை விதேசிகளை வேறாகவும் சுதேசிகளை வேறாகவும் கிறிஸ்தவர்களை வேறாகவும் புரட்டஸ்தாந்து மதத்தை வேறாகவும் உயர்சாதி என்று தம்மை அழைத்த கிறிஸ்தவர்களை வேறாகவும் தாழ்சாதி என அழைக்கப் பட்ட கிறிஸ்தவர்களை வேறாகவும் நாவலர் நோக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கர்களுடன் நாவலர் தொடர்பு கொண்டது மிகவும் குறைவு என்றே கூறலாம் இதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

1. நாவலர் காலத்தில் கத்தோலிக்க குருமார் புரட்டஸ்தாந்துப் பாதிரிமார் போல அபார சமயபிரச்சாரம் செய்ய வில்லை கத்தோலிக்க பாதிரிமார் அனேகர் சுதேசிகளாக இருந்தனர்.

2. கத்தோலிக்கர் தமது பாடசாலையில் கல்வி பயிலும் சைவ மாணவர்களை சைவ அனுஸ்டானங்களை செய்ய வேண்டாம் என்று கூறவில்லை. கிறிஸ்தவ சமய நூல்களை வற்புறுத்தி படிப்பிக்கவும் இல்லை என்பது நாவலர் கருத்து.[8]

3. கத்தோலிக்கத்தில் சேர்ந்தவர்கள் விசுவாசிகளானவர்கள் பெரும்பாலும் கரையோரச் சமுகத்தினரே இவர்களும் சைவர்களாக இருந்தே போத்துக்கேயரால் கத்தோலிக்கராக்கப்பட்டனர். ஆயினும் "சைவசமயக் கிரிகைக்கு கரையார் யோக்கிரரல்லர் என்று சிவபெருமான் அருளச்செய்தார் என்பது திருவிளையாடல் புராணத்தினது வலைவீசின படலத்தாலே துணியப்பட்டதன்றோ"[9] என்று நாவலர் கேட்டார் இதையின்னும் அடைப்புக் குறியிட்டு உறுதிப்படுத்துவார் சி.டி வேலுப்பிள்ளை.

கத்தோலிக்க சமயத் துறவிகள் சிறந்த இறையியல் கொள்கையினை விளக்கக் கூடியவர்களல்லர். விளக்குவதற்கும் அதனை உள்வாங்கக் கூடியவர்கள் இல்லை என்பது நாவலர் கருத்து.

இவ்வாறு சமூகக் கட்டுமானங்களையும் அவை சார்ந்த ஏற்றத் தாழ்வுகளையும் கத்தோலிக்கத்தில் புகுத்தி ஒரு சமூகத்தினை ஒதுக்குவது போன்று ஒரு சமயத்தினை ஒதுக்கிவைத்துப்பார்த்தால் கத்தோலிக்கத்தின் வளர்ச்சி குறித்தும் வீழ்ச்சி குறித்தும் நாவலர் எதுவும் கூறாது விட்டு விட்டார் போலும்.

## புரட்டஸ்தாந்து கிறிஸ்தவக் கண்டனம்

அ) பாதிரிமார் கண்டனம்

பாதிரிமாரைக் கண்டிக்க உறுதி பூண்ட நாவலர், அவர்களை கீழ்த்தரமான பெயர்கள் கொண்டழைத்தார். "சில காலத்துக்கு முன்னே இங்கிலாந்து அமெரிக்கா என்னும் தேசங்களிலுள்ள துர்ப்பலராகிய சில மிலேச்சர்கள் என்றும்"[12] பாதகர்கள் என்றும் மலேச்சாகளாகிய பாதிரிகள் என்றும் அவர்களை அழைத்தார் பாதிரிமாரது நடவடிக்கைகளினை அவதானித்த நாவலர் அவர்கள்தமக்கான ஒரு தொழிலின் நிமிர்த்தமும் பணம் சம்பாதிப்பின் நிமிர்த்தமும் சுயதேவைக்காகவே இலங்கை வந்துள்ளார்கள் என்று கூறினார் ஏனெனில் தமது சைவ சமயப் பரப்புகையாலும் பாதுகாப்பு நடவடிக்கையாலும் கிறிஸ்தவ மதப்பரப்புகையானது குறைவடைவதைக் கண்ட போதும் அது பற்றித் தமது தலைமையகத்துக்கு அறிவிக்கவில்லை என்பதை

*"இவ்வுண்மையை தங்களை இத் தேசத்துக்கு அனுப்பிய சங்கத்தார் அறிந்தார்களாயின் இங்கே கிறிஸ்துமதம் பரவாது என்று துணிந்து தங்களை சுயதேசத்துக்கு வருவித்துக் கொள்வார்கள் என்றும் மென் மேலும் தங்களுக்குப் பணம் அனுப்பினார்கள் என்றும் தாங்கள் இத்தேசத்துக்குப் போல பிறதேசங்களில் அதிக சௌக்கியம் அநுபவித்தல் இயலாதென்றும் பயந்து அவ்வுண்மையை அவர்களுக்கு தெரிவியாது இங்கே கிறிஸ்தவம் மென் மேலும் பெருகுகிறது என்று முழுப்பொய்யறிவுப்பு எழுதுகின்றனர்"*[13]

என்று சாடுகிறார்.

மேலும் பாதிரிகளின் பத்திரிகைப் பிரசுரத் தன்மையை கேள்விக்குட்படுத்தும் முகமாகவும் பாதிரிகளின் நடுநிலைமையை கேள்விக்குட்படுத்தும் வகையிலும்

*"இன்ன இன்னார் இன்ன காலத்திலே இன்ன இன்ன பிரகாரம் பரிசுத்தாவி புகப்பெற்று கிறிஸ்தவ சமயத்திலே புகுந்தனர் என்று பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தியுள்ள பாதிரிமார் அவர்கள் மீண்டும் சைவசமயத்தை தழுவினர் கிறிஸ்தவத்தை வஞ்சித்தனர் என்னும் உண்மையை ஏன் பிரசுரிக்கவில்லை"* என்று கேட்டார்.

சுகமானவர்கள் தம்மிலும் சாதி குறைந்தவனுடன் இருந்து கல்வி கற்க முடியாது என்று பாதிரிமாருக்கு கூற அம் மாணவனை பாடசாலையில் இருந்து நீக்கிவிட்ட பாதிரிமாரை நோக்கி *"யாழ்ப்பாணத்திலே சாதி வொற்றுமை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அறுத்துக் கிறிஸ்தவமதத்தை நாட்டடவல்லவர்கள், பொருள் வாஞ்சை பிசாசாவேசிகளாகிய இந்த பாதிரிமாரும் சுதேசகுருமாருந்தானே"* எனக் கேள்வி செய்கிறார் பாதிரிமாரும் சாதியாசாரங்களை கடைப்பிடித்தார்கள் என்பதை நாவலர் கோடிட்டுக்காட்டுகிறார் இத்தகைய பாதிரிமார்களிலும் ஆட்சியாளர்களான ஆங்கிலேயர் நல்லவர்கள் என்று கூறுவார் நாவலர் அதாவது ஆட்சியாளர்களால் சைவத்துக்கு எந்தக் கெடுதலுமில்லை பாதிரிமார்களால்தான் பாரிய கெடுதல் உண்டு என்றும் நாவலர் அடிக்கடி முழக்கமிட்டார்.

## சுதேச கிறிஸ்தவரும் நாவலரும்

ஒரு சமயத்தின் இறையியல் விசுவாசிகளின்றி வளரவோ நிலைபெறவோ முடியாது அந்த விசுவாசிகள் உண்மையான விசுவாசிகளாகவும் தாம் சார்ந்த சமயத்தை உண்மையுடன் அநுசரிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் சமயம் மக்கள் மயப்பட்டு நீண்ட நாள் நிலை பெறும் நாவலர் கால யாழ்ப்பாண சமூகத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் சிலர் உண்மையான விசுவாசிகளாகவும் சிலர் போலியாகவும் வாழ்ந்து வந்தனர். அத்தகைய போலிக் கிறிஸ்தவர்களை கிறிஸ்தவத்துக்கு ஊறு விளைவிப்பவர்களாகவே நாவலர் பார்த்தார்.

"சைவர்கள்" என்று கூறிக் கொண்டு போலியாக வாழும் சைவர்களை எவ்வாறு கண்டித்தாரோ அவ்வாறே கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டு போலியாக வாழ்ந்த கிறிஸ்தவர்களையும் கண்டித்தார்.

அக்காலத்தில் கிறிஸ்தவ மதத்திற்கு செல்பவர்கள் மூன்று நிலையில் இருந்தனர்.

1. கத்தோலிக்கர் -கிறிஸ்தவர்
2. ஒல்லாந்து சீர்திருத்த சபையினர் - கிறிஸ்தவர்
3. சைவர்- கிறிஸ்தவர்

இவ்வகையினருள் சைவத்தில் இருந்து கிறிஸ்தவத்துக்கு மாறிய சுதேசிகளைக் குறித்தே நாவலர் அதிக அக்கறை காட்டினார் அவர்களின் பெரும் பாண்மையினோர் உயர் குலத்தினர் என்பது இதற்கு பிரதான காரணம்.

சைவசமயத்தில் இருந்து கிறிஸ்தவ சமயத்துக்கு மாறுபவர்கள் உண்மையான சைவசமய இறையியலை அறியாதவர்கள் என்பது நாவலரது துணிபு. இவ்வாறு மாறுபவர்கள் சிவ துரோகம் செய்பவர்கள் என்பார் இவ்வாறு *"சிவ துரோகம் செய்தவர்கள் சிவபெருமானுடைய சாபத்திற்கு ஆளாவார்கள். அவர்கள் சைவசமய பற்றுச் சற்றுமற்றுக் கிறிஸ்தவ சமயப்பற்று முற்றுமுற்று நடப்பதே மிக நலம்"* என்பார் இதன் மூலம் கிறிஸ்தவர்கள் ஆனவர்கள் முழுமனதுடனே அச்சமய இறையியலை ஒழுக வேண்டும் என்று கூறுகின்றார்.

நாவலர் இவ்வாறு கூறுவது தமது சமயப் பாதுகாப்பினையும்' கருத்தில் கொண்டுதான் என்பது புலனாகும் ஆயினும் நாவலரது சமயப்பாதுகாப்பு தனியே சமயம் சார்ந்தது மட்டுமல்ல. ஓர் உயர் குல சமூகத்தினையும் சார்ந்தது என்றே கூற வேண்டும். உயர் குல சமூகத்தைப் பாதுகாப்பதால் சைவசமயத்தினையும் பாதுகாக்கலாம் என்பது நாவலரது எண்ணம்

*"இவர்கள் (உயர் குல வேளாளர்கள்) சாதி உயர்ச்சியினையும் சைவத்தையும் விரும்புவது சத்தியமேயானால் சாதியாசாரத்தையும் சமயாசாரத்தையும் இயன்ற மட்டும் கிரமப்படி அனுட்டிக்கக் கூடியவர்கள் மற்றைச் சைவசமயிகளையும் சைவகுருமார்களையும் கெடுக்காது முற்றும் கிறிஸ்தவர்களோடு கலந்துவிடக்கடவார்கள். என நாவலர் வலியுறுத்திக் கூறுவதற்கு அக்கால சுதேச கிறிஸ்தவர்களின் நடவடிக்கைகள்தான் காரணமாக இருக்க முடியும்"* யாழ்ப்பாணத்தில் ஒருவனே சிலரெதிரே சைவசமயியாகவும் வேறுசிலரெதிரே கிறிஸ்து சமயியாக அக் காலத்தில் தோற்றமளித்திருக்கிறார்கள்.

- முழங்காலிடுவர் இராப்போசனம் அருந்துவர் நற்கருணை வீடுகளில் விபூதி அணிவர்.
- இறந்தவரை பாதிரியைக் கொண்டு அடக்கம் பண்ணுவர் பின்பு ஐயரைக் கொண்டு பூசை செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருமணத்தினை பாதிரிமாரினைக் கொண்டு சேச்சிலும் ஐயரைக் கொண்டு கோயிலிலும் நடத்துவர்.

எனப் போலிகளை எடுத்துக்காட்டுவார் இதற்கு காரணம் என்ன என்பதையும் நாவலர் ஆய்வு செய்து அதானித்துக் கூறியுள்ளார்.

இத்தேசத்திலுள்ள வறியவர்கள் அநேகர் சைவசமயமே மெய்ச் சமயம் என்று அறிந்தும் அன்னம் வஸ்திரம் முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும், உபாத்தியாயருத்தியோகம், பிரசங்கியுத்தியோகம் முதலிய உத்தியோகங்களைச் செய்து சம்பளம் வாங்கும் பொருட்டு கவர்மெண்ட் உத்தியோகங்ளினிமித்தம் துரைமார்களிடம் சிபாரிசு செய்விக்கும் பொருட்டும், கிறிஸ்து சமயப் பெண்களுள்ளே சீதனமுடையவர்களையும் அழகுடையவர்களையும் விவாகஞ் செய்யும் பொருட்டும், கிறிஸ்தவ சமயத்திலே பிரவேசிக்கலாயினர் இவ்வாறு தேவையின் நிமித்தம் சமய மாறுபவர்களிடத்தே உண்மையான விசுவாசம் எங்கேயிருக்கப் போகிறது.

இந்நிலை நாவலர் காலத்துக்கு மட்டுமின்றி தற்காலத்துக்கும் பொருந்துவதாகவே உள்ளது. சமயத்திற்கேற்ப சமயம் மாறுவதை இன்னும் காண்கிறோம். கிறிஸ்தவர்களே கிறிஸ்தவர்களாக மதமாற்றப்படுவதை நாம் காண்கிறோம் இக்கால கிறிஸ்தவ மதமாற்றம்.

சைவர் ---- கிறிஸ்தவர் (Free church)
கத்தோலிக்கர் ---- கிறிஸ்தவர் (Free church)
Main line church ---- கிறிஸ்தவர் (Free church)

என அமைந்து செல்வதைக் காண்கிறோம் இம் மதமாற்றத்தின் விசுவாசம் அடிப்படையில் இடம் பெறுகின்றதா, சுயதேவை என்ற பின்னணியில் நடைபெறுகின்றதா, என்பது ஆய்வுக்குரியதே கிறிஸ்தவத்திலே பூரண விசுவாசம் கொள்ளாதவர்களுடைய புறநிலைச் செயற்பாடுகள் எந்தளவு ஒரு கிறிஸ்தவச் செயற்பாடாகச் இருக்க முடியும் என்பது நாவலர் கேள்வி இவ்வாறான கேள்விகள் விமர்சனங்கள் கிறிஸ்தவத்தை மேலும் மேலும் தூய்மைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. நாவலரது சைவ இயக்கச் செயற்பாட்டில் கிறிஸ்தவர்களாக இருந்து பல சுதேசிகள் சைவர்களாக மாறினர். இதுவும் கிறிஸ்தவத்தை மேலும் தூய்மைப்படுத்தும் ஒரு விடயம்தான் போலிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்திலிருந்து இதற்கு இழுக்கினை ஏற்படுத்துவதிலும், ஒருசிலரது தூய உளத்துடன் கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைத்திருப்பது கிறிஸ்தவ விருத்திக்கு பயனுள்ளதேயாகும். நாவலரது இத்தகைய கண்டனங்களினால் விமர்சனங்களை கிறிஸ்தவ மதத்தை யாழ்ப்பாண மயப்படுத்த வேண்டிய தேவை பாதிரிமாருக்கும் சுய கிறிஸ்தவர்களுக்கும் ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை.

## நாவலர் இயக்கமும் கிறிஸ்தவ பரப்புகையும்

நாவலர் மிஷனறிமாருடனே தமது வாழ்க்கையை ஆரம்பித்தார் மிசுனறிமாரின் உள்வீட்டு பிள்ளையாக வளர்த்தார் அவர்களின் செயற்பாடுகள் எல்லாவற்றைம் ஆழ அகல உள்வாங்கினார் உள்வாங்கி அவற்றை தமது சமய வளர்ச்சிக்கும் பயன்படுத்தினார் நாவலர் சைவசமய மீள் கட்டுமாண நடவடிக்கைகள் அனைத்திலும் மிஷனறிமாரின் மாதிரிகள் இளையோடுவதை அவதானிக்க முடியும் அதாவது கற்றல-பிரயோகித்தல் என்பது நாவலர் வேலையாகிறது.

பாதிரிமாரின் சமயப் பரப்புகை என்பது "*கல்வி*" என்ற ஒரே ஊடகத்தைக் கொண்டே மேற்கொள்ளப் பட்டுள்ளது. யாவருக்கும் கல்வி என்பதை சுதேசிகள் கற்க வேண்டும் என்றதற்கு அப்பால் கிறிஸ்தவ இறையியலைப் பரப்பும் ஒன்றாகவே பார்க்க வேண்டும் ஏனெனில் புரட்டஸ்தாந்து மதம் பைபிலை பிரதானப் படுத்துவது பைபினைப் படித்து அதன் வழிவரும் விசுவாசமே உறுதியானது என்பதை அவர்கள் தமது இறையியல் கொள்கையாகவும் கொண்டனர் எங்கே தேவாலயங்கள் அமைத்தார்களோ அருகே பாடசாலையும் அமைத்தார்கள் பைபிள் வாசிக்க கல்வியறிவு தேவையன்றோ 19ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியில் நாவலர் காலத்தில் மதமாறிக் கல்விகற்றவர்களிலும் கல்விகற்று மதமாறியவர்களே அதிகம். கல்வி –அறிவு –கிறிஸ்தவம் -தொழில்- அந்தஸ்து என்ற நிலையே அக்காலத்தில் காணப்பட்டது. இந்நிலை ஒரு வகையில் கிறிஸ்தவ இறையியலை அறிவியல் பூர்வமாகப் பரப்ப வழிவகுத்தது எனலாம்.

இதை உற்று நோக்கிய நாவலர் தானும் கல்விப்பணி செய்ய திடன் கொண்டார் சாதாரண திண்ணைக் கல்வியிலிருந்து 1848 இல் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆரம்பித்ததுடன் அவரது பணி அதிகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே சமய நூல்களை அதிகம் கற்பித்தார். சைவ உண்மைகளைப் போதித்தார். சாதாரண துண்டுப்பிரசுரங்களை வாசிக்கக் கூடியவர் களையும் தத்துவார்த்தமாக பேசக்கூடிய புலமையாளர்களையும் உருவாக்கினார். பாதிரிமார்கள் அச்சுக் கூடம் அமைத்து கிறிஸ்தவ நூல்களை அச்சிட்டு வெளியிட்டனர். சமயக் கண்டன பிரசுரங்களையும் வெளியிட்டனர். அதைப் போல நாவலரும் அச்சுக் கூடம் அமைத்து சைவசமய நூல்களையும், கிறிஸ்தவ மத கண்டனங்களையும் வெளியிட்டார்.

பாதிரிமாரின் சமயப் பரப்புகைக்கு கடைப்பிடித்த மற்றுமொரு உத்தி "பிரசங்கம்" பைபிளில் வாசித்த கிறிஸ்தவ உண்மைகளை மேலும் தெளிவுபடுத்தும் பிரசங்கம் கருவியானது அதை நன்குணர்ந்த நாவலர் அதே பணியைப் பின்பற்றலானார். 1947-12-31 அன்று வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் நடத்திய பிரசங்கத்துடன் அதையும் ஆரம்பித்தார் சிவாகம சைவசித்தாந்த விளக்கங்களை ஆலயங்களில் சென்று பிரசங்கித்து சைவ சமயத்தை நிலைபெறச் செய்ய நாவலர் பாடுபட்டார் நாவலர் இயக்கத்தின் இத்தகைய பணிகளால் கிறிஸ்தவம் வளர்ச்சி பெரும் இடர்களையே எதிர் கொண்டது.

*"19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எண்ணியிருந்ததிலும் பார்க்க யாழ்ப்பாணத்திலே மிஷனரி ஊழியம் சித்தியடையாததிற்கும் கிறிஸ்தவ சமயம் பரவாவதற்கும் முக்கிய காரணம் ஆறுமுக நாவலரே என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை அதை அவர் செய்யக் கூடியவராக விளங்குவதற்குக் காரணம் கிறிஸ்தவர்களே."*[19]

என குலேந்திரன் கூறுவது சாலவும் பொருத்தமே. சைவம் கிறிஸ்தவம் ஆகியவற்றைச் சாராது புற நிலையாக நின்று நோக்கினால் தான்சார்ந்த சமயத்திற்கும் இனத்துக்கும் அரிய பணி செய்த ஒருவராகவே நாவலர் கணிக்கப் படுவார். சைவர் நாவலரை தெய்வமாகப் போற்றுவர். கிறிஸ்தவர் நாவலரை எதிரியாக கட்டமைப்பர். எல்லாவற்றிற்கும் அப்பால் சென்று நாவலரை ஒரு கிறிஸ்தவ சமய விமர்சகர் என்ற ரீதியில் நோக்கினால் அவரது விமர்சனத்தால் கிறிஸ்தவம் புதிய கோணத்தில் கால ஓட்டத்திற் கேற்ப, சூழமைவுற்கேற்ப தமது இறையியல் கொள்கைகளை மாற்றத்துக்கு உள்ளாக்க வேண்டும் என்ற உண்மை புலப்படும் கிறிஸ்தவம் சக பண்பாடுகளையும் உள்வாங்கிய பல் பண்பாட்டுச் சமயம் (Malti cultural religion) என்பதால் ஒவ்வொரு பண்பாட்டையும் சார்ந்த சமயங்களைவெற்றி கொள்ளவும் சிறப்பாகவும் பொதுவாகவும் இறையியல் கொள்கைகளை வடிவமைக்கவும், தான் செல்லும் சமயங்களில் இருந்தும் அச் சமய வாதிகளின் விமர்சனங்களில் இருந்தும் பல பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போதே கிறிஸ்தவம் மட்டுமல்ல எந்த சமயமும் நீடித்து வாழ முடியும்.

அடிக்குறிப்புக்கள்

1. கந்தப்பிள்ளை நல்ல நாடக ஆசிரியர். அவர் எழுதிய என ஏரோது நாடகம், சென் நீக்கிலாஸ் நாடகம் என்பவற்றைக் குறிப்பிடுகின்றார் செல்லையா.
2. வெஸ்லியன் மிஷன் பாடசாலைத் தொழிலை நாவலர் விட்டு வந்ததுடன் அவரது சகோதரர் ஏசினார் என நாவலர் குறிப்பிடுகின்றார்.
3. தான் மொழி பெயர்ப்பில் கலந்து கொள்ளவில்லை என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை.
4. குலேந்திரன்.ச (1967) கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தில் பக். 147
5. சைவ தூஷண பரிகாசம் பக். 4
6. சைவ தூஷண பரிகாசம் பக். 3
7. சைவ தூஷண பரிகாசம் பக். 1
8. சைவ தூஷண பரிகாசம் பக். 48
9. சைவவிரோதம் பக.20
10. வேலுப்பிள்ளை. சி.பு (1984) அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம். பக். 22
11. இழிமொழித் திமிர தீபிகைச் சண்ட மாருதம்
12. சைவ தூஷண பரிகாசம் பக். 4
13. யாழ்ப்பாணச் சமயநிலை பக். 45
14. யாழ்ப்பாணச் சமயநிலை பக். 145
15. சைவவிரோதம் பக். 20
16. சைவவிரோதம் பக். 21
17. யாழ்ப்பாணச் சமயநிலை பக். 67
18. யாழ்ப்பாணச் சமயநிலை பக். 67
19. குலேந்திரன்.ச பக்.148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படைப்பியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமை தாராயோ .....!



க. தர்சினி, புவியியல்துறை

எங்கும் நிறைந்த பரிபூரணம் - என்
இதயத்தில் நிறைந்திட்ட இன்ப வெள்ளம்
யாதுமாகி நான் வாழ வழிகாட்டினாள்
ஏதும் தடுமாற்றம் எனக்கில்லை
என்னுள் வாழ்கிறாள்

அன்னையவள் புகழ்பாட ஆசையுண்டு - ஆனாலும்
முடிவதில்லை, சிறியவள் நான்
உலகத்தை ஆட்டிவிக்கும் அன்னையவளை
பலமோடு நான் சொல்ல வார்த்தைகளில்லை!
வல்லமை தந்திடம்மா...அன்னையே உன்னைப்பாட!

தாய்மடியில் நான்தவழ்ந்தேன் சிலகாலம் - அவள்
தயவில் வாழ்கின்றேன் பலகாலம்
வல்லமை தந்தவள் என் வடிவாம்பிகை
வாழ்த்துகின்றேன் என்றும் அவள் நாமம்!

அன்னையே! அம்பிகையே!
அழைக்கின்றேன் உன்னையல்லால் யாருமில்லை!
உடலை நம்பிய வாழ்விங்கு வேண்டாம்
உண்மை ஆத்ம வீரம் வேண்டும்
கல்வியும் கேள்வியும் பெருகிட வேண்டும்
கலையும் குணமும் பொங்கிட வேண்டும்
அன்பும் அறிவும் வளர்ந்திட வேண்டும்
தியாகமும் தியானமும் மேலோங்கிட வேண்டும்!

மேதினி எங்கும்.....
சீரும் சிறப்பும் பொங்கிட வேண்டும்
உண்மைக்கு மட்டுமே உழைத்திட வேண்டும்
உத்தமி உந்தன் அருள் தினம் வேண்டும் !
வல்லமை தந்திடம்மா....அன்னை பராசக்தியே!
வாழ்நாளெல்லாம் வணங்குகிறோம் உன்பாதாரங்களையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதமும் இன்தமிழும்



*மகாலிங்கம் ரமணசுந்தரன்,*
*இறுதியாண்டு, பொறியியற் பீடம்*

சிந்துவெளி நதிப்பள்ளத்தாக்குத்தனில் ஊற்றெடுத்துப் பாரத தேசமெங்கும் பரந்துபட்டுத் தேச எல்லைகள் தாண்டி தேனமுதாய் தேவன் சிவனவன் சிறப்புக்களை மனிதனவன் மானிட விழுமியங்களோடு வாழும் வகையும் விளக்கும் மார்க்கம் இந்துசமயம் என இருவரிகளில் விளக்கும் அளவிற்குத் திருக்குறளாய்க் குறுகியதன்று எம் மதம். அணுவைத்துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தன்னகத்தே கொண்ட குறள் போல் ஆழ்ந்த கருத்தைக் கொண்டது. ஆழத்தைக் கண்டவருமிலன், காணப்போவதற்கும் யாருமிலன் கடவுளைத் தவிர. சுருங்கக் கூறின், தொன்மை, இனிமை, புலமை, அறிவுடைமை ஆகியவற்றின் கலவையாகக் கூறி இந்து மதத்தின் எல்லைகளை வரையறுக்க முயல்வது காற்றுக்குக் கடிவாளமிடும் முயற்சியை நிகர்த்தது. ஆதலின், மதத்தை வரையறுத்து அதன் சிறப்பைச் செப்ப முயலும் பணியைச் சற்றே மறுதலிப்போமாக. ஹாஸ்யமாகவோ, காரசாரமாகவோ வழங்கப்படும் இன்னொரு இன்தமிழ்க் கருத்து, கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி. உண்மைகளை மறுத்துரைத்து உலகத்தவர் உவகையைக் களையுமளவிற்கு மதியூகத்தில் இழிநிலையில் யாருமிலர். ஆதலின், மேற்கூறிய கருத்தையும் ஆமோதிப்போமாக. இந்துமதம் + இன்தமிழ் என்ற பதத்தின் பொருளை உணர்வோமாக! அன்றேல் இந்து மதம் "*இன்று + அமிழ்*" என்ற கருத்தையும் சிந்திப்போமாக! இந்து மதத்திற்கும் இன்தமிழுக்கும் இடையே இழையோடியுள்ள தொடர்பதனைத் தொடுப்பதே இந்த ஆக்கத்தின் நோக்கமாகக் கொள்க.

வார்த்தைகளுக்கு வரையறையிட்டு வரம்பு போடஇயலா இரண்டு விடயங்களை ஒப்புநோக்க நினைந்த என் அறியாமைதனை அனைவரும் மன்னிப்பீராக !

இன்றமிழ் இறும்பூதெய்துவது இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றின் சேர்க்கையாலன்றோ? அவ்வாறே, எம்பெருமான் பரம்பொருளாய்ப் பிரிக்கமுடியாத சிவமாகவும் சக்தியாகவும் இருபொருட் சேர்வையாய்க் காட்சி தருவதை யாரும் மறுப்பதற்கிலர். அது மட்டுமா? இன்பம்-துன்பம், இரவு-பகல், யொவனம்-விருத்தாப்பியம், என இருபொருளாய் விரியும் வாழ்க்கைத் தத்துவங்களைத் தமிழ்க் கவிகளிலும் இணையற்ற இந்துமதக் கொள்கைகளிலும் காணலாம் என்பது கண்கூடு. அம்மையப்பன் அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி தருவது உலகத்தில் ஒன்றையொன்று சார்ந்தியங்கும் இயல்பைப் பறைசாற்றுவதற்கும் காதலின் புனிதத்தையும் ஆணுக்கு பெண் சரிசமம் என்ற சமத்துவத்தைப் போதிப்பதற்கும் என இந்து மதம் தன்னை நியாயப்படுத்துமிடத்து, சுந்தரத் தமிழ் அதனை இணைபிரியா இலக்கணமும் இலக்கியமும் இயைந்த சுவையெனக் கூறுவதும், இந்துமதமும் இளந்தமிழும் ஒத்துப்போவதை உற்றுநோக்குக. மேலும், மொழிநடை சிறப்புற எதுகை, மோனை ஆகிய இரண்டும் தேவை என்பதை ஆணும் பெண்ணும் இணையும் இல்லறத்தின் சிறப்பாக இந்து மதம் காட்டுவது மெச்சுவதற்குரியது. அவ்வாறே, இல்வாழ்க்கையில் தோற்றவர்கள் அதனை ஒரு மாயையாக நோக்கும் பாங்கு, தமிழில் மட்டுமே புரையோடிப்போன ரஸவாதங்களுக்குச் சான்று. ஏனெனில் ரஸவாதங்களுக்குச் செம்மொழி தமிழ் போல் சிறந்ததை யாரும் கண்டிலர்.

உயிராகவும் மெய்யாகவும் இருந்து சிறப்புறா எழுத்துக்கள் ஆணையும் பெண்ணையும், உயர்மெய் எழுத்துக்கள் இல்லறத்தையும் விளிக்கும் பாங்கு "*சிவமே சக்தி, சக்தியே சிவம்*" என்பதை வலுப்படுத்து வதாயிருப்பது சிறப்பு. மேலும், கையறுநிலைக் கவிதைகள் இன்று உருப்பெற அன்று சக்தியும் சிவனும் ஊழிக்காலத்தின் முன் ஊடல் கொண்டு பிரிந்து வாழும் சோகத்தை யாக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தவர்களின் எச்சங்களாகவே கருதப்படுகின்றன.

வரிசைப்படுத்தி ஆக்கம் யாக்குமளவிற்கு அறிவு முதிர்ச்சியற்ற யான், முடியுமானவளவிற்கு முனைந்து பார்க்கின்றேன். "*ஒன்றே குலம், ஒருவனே தேவன்*" எனப் பரம்பொருளை ஒன்றென நம்புவர்கள் இந்துக்கள். அதே போன்றே தமிழும் சுவையிலும், அது தரும் பொருளிலும் என்றும் தனித்துவமானது; முதன்மையானது. "*சக்தி-சிவம்*" என சிவசக்தியாக நீக்கமற நிறைந்த இறையருள் இரு வடிவினது. இச்சா சக்தி, கிரியா சக்தியாய் முருகனுக்கு சக்திகள் இரண்டாய் இருப்பது வாழ்வியற் தத்தவங்களுக்கு முரண்பட்டதாய் இருப்பதும் அதனால்த் தான். இந்து மதத்தை ஒத்து இளந் தமிழிலும் இலக்கணம்-இலக்கியம், குற்றியலுகரம்-முற்றியலுகரம், குறில்-நெடில், அகச்சுட்டு-புறச்சுட்டு என இவ்விரண்டாகப் பிரிந்து நிற்பினும், முன்னையதின்றிப் பின்னையதில்லை. இதை விளக்குமாற் போல் சூரிய சந்திரரை இருவராகக் காட்டுவது மேலும் சிறப்பு. செம்மொழி தமிழுக்கு மட்டுமேயுள்ள சிறப்பு "*ஆய்த வெழுத்து*". மூன்று வட்டங்களால் ஆன இவ்வெழுத்து மும்மூர்த்திகள் நீக்கமற நிறைந்து ஒன்றாய் அருள்பாலித்து உலகைப் பரிபாலிக்கும் விதத்தை விதந்துரைக்கின்றது. மூன்று விரல்களால் விபூதியணிவதும், வழிபாட்டின் பின்னர் மூன்று முறை சாந்தி கூறுவதும் முக்கண்ணன் சிவபெருமான் பெருமைகளைக் கூறுமிடத்துத் தமிழும் வல்லினம், மெல்லினம், இடையினம் என எழுத்துக்களைப் பிரித்து அழகு செய்கின்றது. எம் ஈழத்திருநாட்டிலுள்ள மூவினங்களையும் முப்புரி நூல் தரித்த முப்புரங்களை எரித்த முக்கண்ணன் காப்பான் என நம்புவோம். இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என வேதங்கள் நான்கு. உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து என தமிழ் அரிச்சுவடியின் பரிமாணங்கள் நான்கு. இவ்வாறே சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு தொண்டுகள். தமிழ் இலக்கியங்கள் பெண்மைக்கும், ஆண்மைக்கும் இலக்கணமாக வரையறுத்து நான்கு குணங்கள் இல்லறம், துறவறம், கிருகஸ்தம், வனப்பிரஸ்தம் என விரிகின்றன வாழ்வியலின் நான்கு நிலைகள். சமய குரவர்கள் நால்வர் என்பதையும் நினைவிற் கொள்க.

மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி, பாலை எனச் சங்க காலத்தில் ஐவகை நிலங்களைக் கொண்டிருந்தவன் தமிழன். இந்து மதத்தில் ஆகாயம், நீர், நிலம், காற்று, நெருப்பு எனப் பஞ்ச பூதங்கள் உள்ளங்கை நெல்லிக் கனி போல் ஒற்றுமை. மேலும், படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், மறைத்தல் என ஐந்தொழிலுடன் ஆண்டவன். அவனுக்கு பெண்கள் செலுத்தும் பஞ்சாங்க நமஸ்காரம் என விரிகின்றது. ஐவகை நிலத்துக்கும் ஐவகை பூக்கள், ஐவகை காதல் ஒழுக்கங்களென மறுபுறம் தமிழ். பாலைநில மறவன் கூட தமிழன் என்பதாலோ இன்னமும் தமிழன் வீரத்தில் மறவனாகவும், "*நாமார்க்குமடியல்லோம் நமனை அஞ்சோம்*" என வீரமாய் வேழமது வெந்த புண்ணில் பாயும் போதும் வேற்றிடமதனிற் புகாமல் சம்ஹாரம் சங்கரன் வழித்தோன்றலாய் இருக்கின்றான். இதனால் தான் இறைவன் கூட சாம, பேத, தானங்களுக்கு அப்பாற்பட்டுத் தண்டமதை கையிலேந்தி திரிபுரங்களை எரித்ததும் சூரசம்ஹாரங்களை மேற்கொண்டதுமாய் வீரத் தமிழன் கொள்கைளை காரணம் காட்டி நியாயப்படுத்துகின்றான். ஆறுகாலப் பூசைகள் ஆலயத்தில் ஆண்டவனுக்கு. குன்று தோறும் உறையும் குமரனுக்கு ஆறுமுகங்கள், ஆதலின் அவன் ஆறு முகன். அறுபடை வீட்டில் உறை பவன் அவன். வல்லினம், இடையினம், மெல்லினம் என மூவினத்திலும் தலா ஆறு எழுத்துக்கள். சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என இந்து மதத்தில் ஆறு பிரிவுகள். சப்த கன்னியர், சப்த ரிஷிகள் எழுவர். இசைத்தமிழதனில் ஸ்வரங்கள் ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என ஏழு. அஷ்டதிக்கு பாலகர்கள் போல் அழகு தமிழுக்கு வேற்றுமைகள் எட்டு. அஷ்டலட்சுமி, அட்டாங்க நமஸ்காரம், அஷ்டயோகம் என பரந்துபட்ட இந்து சமய கொள்கைகள். நவரசங்கள் தமிழில் வழங்கும் போது நவராத்திரி, நவக் கிரகம் என மறுபுறத்தை அலங்கரிக்கும் இந்து மதம். இந்து மதத்தில் தசாவதாரங்கள், இன் தமிழில் பத்துப்பாட்டு என நீள்கின்றது பட்டியல்.

இந்து மதக் கொள்கைகள் சில வற்றையேனும் தமிழ் எவ்வாறு எடுத்தியம்புகின்றது என்பதை சற்று ஆராய்வோம். மனிதனின் வாழ்வு மதத்தால் மெருகேற்றப்பட வேண்டும். அன்றியும் அவன் மதவாதியாகவோ, மிதவாதியாகவோ பரிணமித்து விடக்கூடாது என்பதைத் தமிழ் கூறும் பாங்கு தனித்துவமானது. சால, உறு, தவ, நனி, கூர், கழி என்ற உரிச்சொற்கள் தாமாகப் பொருள் கொண்டிராதன. ஆனாலும் அவை தமிழுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும் போது அவற்றின் சுவை மெருகேறும் விதம் தனிரகம். இங்கு உரிச்சொற்களை மதமாகக் கொண்டால், மேலுள்ள கருத்துக்கு விடை வெள்ளிடை மலை. நாடு நமக்கு செய்ததை எண்ணி விழையாமல், நாட்டுக்கும் அச் சமூகத்திற்கும் நாம் என்ன செய்தோம் என்பதை எண்ணிப்பார்க்கத் தான் கீதாசாரத்தில் கிருஷ்ணன் *"கடமையைச் செய் பலனை எதிர் பாராதே"* என்று பகர்ந்ததை *"நீ போல் வளை"* என தமிழ் நியாயப்படுத்துவது குடத்துள் விளக்குப் போலான நாசூக்கான நயம். ஜீவ காருண்யத்தை வலியுறுத்தும் இந்து மதம் *"அன்பே சிவம்"* எனத் திருமூலர் பகர்ந்ததைச் சிரமேற்கொள்கிறது. அதுமட்டுமன்றி, பசுவதையை முற்றிலுமாக எதிர்க்கும் மார்க்கமாக திகழ்கின்றது. இதனை தமிழும் தன் பங்கிற்கு கோமாதா எனவும் காமதேனு எனவும் அழைத்து மாந்தரை விழிப்பூட்டுகின்றது. மாதா எனத் தாயை நினைவில் நிறுத்திப் பெண்ணாக உருவகித்துப் பெண் வன் முறைகளுக்கெதிரான அடக்குமுறைகளை ஊக்கப் படுத்தி சிரோமணியாகத் தமிழ் ஜொலிக்கின்றது. இறைவன் வினைத்தொகையை நிகர்த்தவன். ஏனெனில் முக்காலத்தில் எக்காலத்திலும் இறை வனில்லாத தருணங்கள் இருப்பதில்லை. அதாவது இறைவன் முக்காலத்திற்கும் பொதுவானவன். வினைத்தொகையினை நிகரத்தவன். இதனால் தான், மணிவாசகர் *"ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி"* என ஆண்டவனை இறைஞ்சி நெக்குருகினார். இவ்வாறு இந்து மதக் கொள்கைகள் இன்தமிழுடன் இயைந்து வரும் சந்தர்ப்பங்கள் பலவுள. இவ்வாறான தனித் துவமும் சிறப்பும் செம்மையும் மேன்மையும் கொண்ட தமிழின் சுவையில் சொக்கநாதப் பெருமான் சிக்கிச் சொக்கிய தருணங்களுமுள. ஈழவன் இராவணன் தமிழிலில் யாத்த சாம கானமதில் கருங்கல்லும் கரைந்தோடிக் கடவுள் மனதும் களிப்புற்ற கதைகளைத் தந்த வரலாற்றுக்கு ஒரு கோடி நன்றிகள் உரித்தாகட்டும். ஔவையின் புலமையதனில் மயங்கிய ஐங்கரன் துதிக்கையால் கைலாய மலையில் ஔவையை சேர்த்த கதைகளும் இனிவரும் சம்பவங்களை நியாயப்படுத்த உதவும். பாரதியார் கூட தமிழிலில் கவிகளை யாத்த போதிலும் கண்ணபிரான் மீதுள்ள தீராத பக்தியை, தன்னைக் காதலனாகவும் கண்ணனை காதலி கண்ணம்மாவாகவும் சித்தரிக்கும் தலைவன்-தலைவி உறவைக் காட்டுவதானது, மணிவாசகர் இறைவனை இறைஞ்சிப் பாடிய பாடல்களை நிகர்த்தன. 12 திருமுறைகளைக் கொண்ட தேவார, திருவாசகம் முதலான இன்றமிழ்ப்பாடல்கள் இறைவனுக்கு காணிக்கையானது. பன்னிரு ஆழ்வார்கள் தொகுத்தளித்த திவ்வியப் பிரபந்தங்கள், ஆண்டாள் காரைக்காலம்மையார் பாடல்கள், குருபரரின் பராபரக் கன்னி, அருணகிரிநாதர் திருப்புகழ், திருமூலர் ஆகமங்கள் எனத் தமிழிலில் இறைவனுக்கு இசை சேவகம் புரிந்த தமிழ்ப்பாக்களின் எண்ணிக்கை ஏராளம். சங்கம் வளர்த்த தமிழ், இந்து மதத்தையும் வளர்த்து வந்தது என்பதையும் மறுப்பதற்கு யாருமிலர்.

இவ்வாறு இன்தமிழுக்கு மயங்கிய இறைவன், வேதங்களையும் உபநிடதங்களையும், ஆகமங்களையும் தமிழில் புனையாது, முற்று முழுதாக சமஸ்கிருதத்தில் புனைந்தது தான் ஏனோ? இதுவும் காலம் காலமாக வஞ்சிக்கப்பட்டு வரும் தமிழினத்தின் சாபக்கேடா? அல்லது வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்ட தருணங்களா? என்பது வழமைபோல் இறை இரகசியமாக இருந்து விடக்கூடாது என்பது அனைவரினதும் அவா. சமஸ்கிருதத்தில் மந்திரங்களை ஓதும் வேளையில் தமிழிலும் 9 மடங்கான சக்தியைத் தரும் என விஞ்ஞானம் விளக்கமளித்தாலும், விளங்காத மொழிதனில் மந்திரங்களை செவிமடுத்து (!) இறைவனை வழிபட முனைபவர்களின் நிலைமை மூடநம்பிக்கைகளில் மூழ்கி முத்தெடுக்க விளைபவர்களின் செயலை ஒத்தது என்பதை மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு இந்துவும் அறிவர். அகத்தியர் வைத்தியம், ஆரூடம் எனப் புனைந்த நூல்களும் தாண்டி அவர் சீடர் தொல்காப்பியர் யாத்த தமிழ் இலக்கணங்களும், கம்பஇராமாயாணம் போன்ற தமிழ் நூல்களும் வடமொழி நூல்களுக்கு நிகராக உள்ளபோது வேதங்கள் உபநிடதங்கள், ஆகமங்கள் மாத்திரம் தொலைந்து போயினவா? அல்லது தொலைக்கப்பட்டதா? இறை மொழியாக சமஸ்கிருதம் இருக்கலாம். இறைவனை அடை வதற்கு மொழி ஒரு தடையா?

இந்து சமயிகளாகவும் தமிழர்களாவும் எமக்கும் சில கடப்பாடுகளுள. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்தமிழாலும் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட்ட இந்து சமய விழுமியங்கள் சினிமா, தொலைக்காட்சித் துறைகளால் இன்று மரணக் கிடங்கைத் தேடிப்போவது ஜீரணிக்க முடியாத உண்மை. இத்தகைய மரணக்கிடங்குகளுக்கு வார்த்தைச் சாட்டையடிகள் உரித்தாகட்டும். இன்றேல் இந்து சமயம் இன்றே அமிழும் நிலைக்குத் தள்ளப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் மெய்ப்பிக்கும் மூடநம்பிக்கைகள்



*சி. எழில்வேள்,*
*பல் மருத்துவ பீடம்*

தொன்றுதொட்டு பல மூடநம்பிக்கைகள் நம் வழக்கில் உள்ள போதும் இன்றைய அறிவியல் வளர்ச்சி காரணமாக அவை நிராகரிக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் சில மூடநம்பிக்கைகள் விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்டு வருகின்றன.

ஆலயங்கள், குறித்த சில ஆண்டுகளுக்கு ஒரு தடவை கும்பாபிஷேகம் செய்யுமாறு பெரியோர்களால் வலியுறுத்தப்படும். ஆலயங்களில் உயரமான பகுதி கோபுரமாகும். ஏன் ஊரிலே மிக உயரமான பகுதி கோபுரமாகவே காணப்படுகின்றது. இதில் காணப்படும் கலசங்களில் வரகுத்தானியம் நிரப்பப்பட்டு காணப்படும். இது இடி, மின்னலை தாங்கும் சக்தி உடையது. இதனால் ஆலயமும் வரும் இடி மின்னலில் இருந்து பாதுகாக்கப்படுகிறது. காலப்போக்கில் கலசத்தில் உள்ள வரகுத்தானியம் பழுதடைவதால் அதனை மாற்றுவது சிறந்தது. இதனால் கும்பாபிஷேகத்தின்போது கலசத்தில் உள்ள வரகுத்தானியம் மாற்றப்படும்.

நாம் நித்திரை செய்யும்போது வடக்குத்தெற்காக நித்திரை செய்தல் கூடாது எனக்கொள்ளப்படுகிறது. புவியின் காந்தப்புலமானது வடக்குத் தெற்காகக் காணப்படுகிறது. எமது உடலின் சமநிலைக்குச் சில அயன்கள் தேவைப்படுகிறது. சில அயன்கள் காந்தப்புலத்தினால் கவரப்படுகின்றது. நாம் தொடர்ந்து வடக்குத் தெற்காக நித்திரை செய்யும் போது புவிக்காந்தப்புலம் காரணமாக அயன்கள் தலைப்பகுதியில் செறிவடைவதால் உடலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தலாம்.

உணவினை தூர இடங்களுக்கு எடுத்துச்செல்லும் போது அதனுடன் சிறு கரித்துண்டு வைத்துக்கொண்டு செல்லப்படும். கரித்துண்டானது பேய்களிடமிருந்து உணவைப் பாதுகாக்கும் என நம்பப்படுகின்றது. கரியானது நச்சு வாயுக்களை உறிஞ்சும் தன்மையுடையது. தூர இடங்களுக்கு எடுத்துச்செல்கையில் நச்சு வாயுக்கள் உணவில் சேர்ந்து உடலிற்கு தீங்கு விளைவிக்காது இருப்பதற்காகவே கரித்துண்டு வைத்துக்கொண்டு செல்லப்படுகிறது.

*இவ்வாறு பல மூடநம்பிக்கைகள் விஞ்ஞானத்தால்*
*நிரூபிக்கக்கூடியதாக உள்ளன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரீரத்தில் தச வாயுக்கள்



*ச. சகீசன், மூன்றாம் வருடம், பொறியியற் பீடம்*

ஒவ்வொரு மனித உடலையும் அண்ட சராசரங்களின் பிரதிநிதியாகத்தான் ஆண்டவன் படைத்துள்ளான். பூமி, தீ, நீர், காற்று, ஆகாயம் எனும் இந்த பஞ்ச பூதங்கள் அண்ட சராசரங்களிலும் நிறைந்து நிற்கிறது. இதில் எது குறைந்தாலும், எது அதிகமானாலும், தொல்லையும், வேதனையும்தான் பெருகும்! இதைப்போலத்தான் உடலும்! இதுவும் பஞ்ச பூதங்களால் ஆனது. இதை மூன்று முக்கிய பிரிவுகளாக பிரித்தால் அவை வாத, பித்த, சிலேத்துமம் எனலாம். மனிதன் நலிவுற்றால் முற்காலத்தில் வைத்தியர் நோயாளியின் கையில் ஓடும் மூன்று முக்கிய நாடிகளான வாத, பித்த, சிலேத்துமத்தில் எந்த நாடி குறைந்துள்ளது என்பதையும் கண்டறிவார்கள். உடனே மருந்தை தயார் செய்து நோயாளிக்குக் கொடுத்து குணமாக்குவார்கள். (*ஆனால் இன்று ஆங்கில வைத்தியம் தான் ஆட்சி செய்கின்றது*). தசவாயுக்கள் மனித உடலில் உண்டு. இவை கலந்துதான் வாத, பித்த, சிலேத்துமங்களாக இயங்குகின்றன. மொத்தத்தில் மூன்று நாடிகளும் இணைந்து இயங்கும்வரை உடலுக்குத் தொல்லையில்லை.

அதை ஒருங்கிணைக்க ஒரு சித்தர் எளிய நடையில் ஒரு பாடலைக் கூறியுள்ளார், *"காலையில் இஞ்சி, கடும் பகல் சுக்கு, மாலையில் கடுக்காய், மண்டலம் உண்ண கோலை ஊன்றி குறுகி நடந்தோர் கோலை வீசி குலாவி நடப்பாரே"* இதன் பொருள் இஞ்சிச் சாற்றை காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டால் பித்தம் சாந்தியாகும்! சுக்கு, வாயுவைக் கட்டுப்படுத்தும்! பிஞ்சுக் கடுக்காய்ப் பொடியை இரவு படுக்கப் போகும் போது பாலுடன் உண்டால் இரத்தம் சுத்தமாகும், மலச்சிக்கல் தலையெடுக்காது.

இவ்வாறு சித்தர்கள் பல்வேறு அறிவுரைகளை எமக்காகக் கூறியுள்ளார்கள். அவை விஞ்ஞான ரீதியாக அர்த்தமுள்ளனவாகவும் உள்ளன. சரீரத்தில் பத்து வாயுக்கள் இருக்கின்றன. ஸ்திரி புருஷர்கள் எல்லோரும் நாம் மனிதர்களாய் இருக்கின்றோம் என நினைப்பார்களேயொழிய அவர்களுக்குள் பத்து வாயுக்கள் இருந்து அந்தந்த வாயுக்கள் அதனதன் வேலையைச் செய்கின்றதென எம்மில் அநேகம் பேருக்குத் தெரியாது. அந்த வாயுக்கள் என்ன செய்கின்றன என இனிப் பார்ப்போம்.

அவற்றை, அதாவது தசவாயுக்களை மகா சித்தர்கள் இவ்வாறு கூறுகின்றனர்.

*"தசவாயுக்கள் பெயரைச் சாற்றக் கேள் ப்ராணன்*
*நிஜமார பானனேர் வ்யானன் - வசமாரு*
*மத்தகைய னாகனுதானன் கிரிகரன்*
*தேவதத்தன் தனஞ்ஜய னிதுதான்"*

இவற்றில் பிரதான வாயுக்கள் ஐந்துண்டு. அவையாவன,

*"ஹ்ருதி ப்ராணோ குதே பாநோ உதாநஹ கண்ட*
*தேஸஸ்நிதஹ ஸமாநோ நாபிதேஸஸ்து*
*வ்யாநஸ்ஸர்வ ஸரீரக'*

ப்ராண – அபான – உதான - ஸமான – வியான இந்த ஐந்து வாயுக்களும் சரீரத்தில் என்ன வேலைகளைச் செய்கின்றன எனப் பார்ப்போம்.

1. *பிராணவாயு :-* இது இதயதில் இருந்து பசி தாகங்களை உண்டாக்கி புசித்த ஆஹாரங்களை ஜீரணிக்கும் படி செய்யும்.

2. *அபான வாயு :-* இது மனித உடலிலிருந்து கழிவுகளை வெளியே தள்ளும்.

3. *உதான வாயு :-* இது கண்டத்திலிருந்து சாப்பிடும் பதார்த்தங்களை விழுங்கி ரசம் வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திப்பி வேறாய்ச் செய்து அந்த திப்பியை மலவாயில் தள்ளும்.

4. *ஸமான வாயு :-* இது நாடியிலிருந்து உதான வாயுவால் செய்த அன்ன ரசத்தை இரத்தமாகச் செய்து சரீரத்திற்கெல்லாம் அனுப்பும்.

5. *வியான வாயு :-* இது சரீரம் எங்கும் நிறைந்து. சரீரத்தின் மேல் படும் குளிர், உஷ்ணங்களைக் அறியும். இந்த வியான வாயுவிற்கு உப வாயுக்கள் ஐந்துண்டு. அவையாவன,

*'நாக - கூர்ம — கிருகர — தேவதத்த — தனஞ்செய'*

1) *நாக* :- இது கண்டத்திலிருந்து வாந்தியை உண்டாக்கும்.

2) *கூர்ம* :- இது கண்களிலிருந்து சுரப்பிகளைத் திறக்கவும் மூடவும் செய்யும்.

3) *கிருகர* :- இது மூக்கிலிருந்து தும்மலை உண்டாக்கும்.

4) *தேவதத்தன்* :- இது மார்பிலிருந்து கபத்தை உண்டாக்கி கொட்டாவியையும் விக்கலையும் உண்டாக்கும்.

5) *தனஞ்ஜயன்* :- இது கர்ப்பப்பையில் இருக்கும். அது மட்டுமன்றி சரீரத்தை விட்டு உயிர் போகும் போது *'ப்ராண — அகான — உதான - ஸமான — வியான - நாக - கூர்ம — கிருகர — தேவதத்த'*

இந்த ஒன்பது வாயுக்களும் உடலை விட்டு போய்விடும். தனஞ்ஜெய வாயு மாத்திரம் போகாமல் சரீரத்தில் இருந்து கொண்டு நாற்றத்தை உருவாக்கும். இது எப்போது போகுமெனில், உடலை எரிக்கும் போது பாதி சரீரம் வெந்த பிறகு *'டப்'* என்ற சத்தத்துடன் வெடித்து, அப்போது வெளியேறும். கொளுத்தாமல் புதைத்தால் சரீரத்தை அழுகச்செய்து நாற்றத்தை உண்டாக்கி சரீரத்தை மண்ணோடு மண்ணாய்ச் செய்து அதன் பிறகு போகும்.

பஞ்ச பூதங்களாலான இவ்வுடம்பு தச வாயுக்களால் ஆளப்படுகின்றது என்பதை சித்தர்கள் மேற்கண்டவாறு விளக்கிச் சொல்லியிருக்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜையும் அதன் முக்கியத்துவமும்



*தேவகிசுதா சிவநேசன், பல் மருத்துவ பீடம்.*

### *ஆன்மீக வாழ்க்கையில் பூஜை*

தியானத்தில் இறைவனுடன் ஒன்றுபடுவது ஆன்மீக வாழ்வின் மிக உயர்ந்த அனுபூதியாகக் கூறப்படுகின்றது. தீவிர சாதனைகள், கடின தவம், இறையருள் இவற்றின் வாயிலாக இந்த அனுபூதி கிடைக்கின்றது. ஏதோ ஒரு சில சாதகர்கள் மட்டுமே நேரடியாக இந்த நிலைக்கு தகுதி பெறுகின்றார்கள். மிகப்பெரும்பாலானோர் ஆரம் பத்திலிருந்து படிப்படியாகச் செல்ல வேண்டி யவர்களாகவே இருக்கின்றனர். இத்தகைய ஆரம்பப்படியாக வைக்கப்படுகிறது பிரார்த்தனை.

ஓர் உயர் உண்மையுடன் நாம் கொள்கின்ற தொடர்பே ஆன்மீக வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகின்றது. சாதாரணமாக, உலகமும் அதிலுள்ள பொருட்களுமே நமக்கு உண்மையாகத் தெரிகின்றது. ஆனால் உலகின் உண்மையை விட உயர்ந்ததோர் உண்மை இருப்பதையும் அந்த உண்மை தான் உலகை இயக்குகின்றது என்பதையும் வாழ்க்கையின் அனுபவங்கள் நமக்கு புரியவைக்கின்றது. அந்த உண்மைப் பொருளாகிய இறைவனுடன் தொடர்பு கொள்ள நினைப்பது இயல்பே. துல்லியமாக இல்லாமல், ஏதோ ஒரு மங்கலாக மட்டும் உணர்ந்த அந்த இறைவனை நோக்கி கைகளை கூப்புகிறான் மனிதன். தனக்கு வழிகாட்டுமாறு, தனக்கு உண்மையை உணர்த்துமாறு, அந்த பேருண்மை வடிவிலான இறைவனிடம் மனத்தை திறக்கின்றான். இதுவே பிரார்த்தனை.

பொதுவாக மனம் எதனையும் பெறுகின்ற நிலையிலேயே இருக்கின்றது. இதனால் தான் ஆன்மீக வாழ்வின் முதற்படியாக பிராத்தனை யுள்ளது. இந்த பிரார்த்தனையின் பலனாக இறைவனிடமிருந்து அவரது அருட்கிரணம் வருகின்றது. நம்பிக்கை, அன்பு, மனவுறுதி, போன்ற வடிவங்களில் அது நம் மனதில் நிறைகின்றது. தகுதி வாய்ந்த சிலரது வாழ்வில் பிரார்த்தனையே தியானமாக நிறைவு பெறுவதுண்டு. ஆனால் பலருக்கு தியானத்திற்கும், பிரார்த்தனைக்கும் இடையில் ஒரு படி தேவைப்படுகின்றது. அதுவே பூஜை.

### *பூஜையின் நியதிகள்.*

இந்து மதத்தில் பின்பற்றப் படுகின்ற பூஜை முறை முக்கியமாக மூன்று தத்துவங்களின் அடிப்ப டையில் செயற்படுகின்றது.

1. மனிதன் தெய்வீகமானவன்.
2. தெய்வீகத்தைப் பெறுவது எப்படி?
3. தெய்வத்தை எழுந்தருளச் செய்வதற்கான ஆற்றல்.

### *பூஜைக் கிரியை.*

வேத காலங்களில் பிரார்த்தனைகள் மூல மும், வேள்விகள் மூலமும் தெய்வத்துடன் தொடர்பு கொண்டனர். பின்னாளில் அது பூஜையாக உரு வெடுத்து வளரத்தொடங்கியது. பல்வேறு பூஜை முறைகளும் அதற்குரிய சடங்குகளும், கிரியை முறைகளும் உருவாயின. இவற்றையெல்லாம் கூறு கின்ற சாத்திரங்களே ஆகமங்கள். சைவம், சாக்தம், வைணவம் போன்ற முக்கிய நெறிகளுக்கெல்லாம் தனித்தனியாக ஆகமங்கள் உள்ளன. பூஜை முறைகள் இடத்திற்கிடம் மாறுபட்டாலும் பொதுவாக சில அடிப்படைகளைக் கொண்டவைகளாக இருக் கின்றன.

பொதுவாக தினசரி பூஜையில் ஆறு படிகள் உள்ளன.

1. ஆயத்தம் (பூர்வாங்கம்).
2. தூய்மைப்படுத்தல் (சுத்தி)
3. தன்னை தெய்வீகமாக்கல் (பூத சுத்தி)
4. தெய்வத்தை எழுந்தருளச் செய்தல் (ஆவாஹனம்)
5. சேவை (உபசாரம்)
6. நிறைவு (புஷ்பாஞ்சலி)

**I. ஆயத்தம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் புனிதமே உருவானவர். எனவே அவரைப் பூஜிப்பதற்கு நாம் பயன்படுத்துகின்ற எல்லாமே புனிதமாக இருக்க வேண்டும். எனவே மந்திரங்கள் மூலம் பூஜைக்குரிய பொருட்கள் புனிதப்படுத்தப்படுகின்றன. அங்கே உறைகின்ற தீய சக்திகள் அனைத்தும் விரட்டப்படுகன்றன. இஷ்ட தெய்வத்தின் படம் அல்லது திருவுரும் உட்பட அனைத்தையும் முதலில் தூய்மை செய்ய வேண்டும். பூஜை அறை பூஜைக்குரிய பொருட்கள் அனைத்தையும் தூய்மைப்படுத்தி, மலர், சந்தனம், தூபம், தீபம் போன்றவற்றை உரிய இடங்களில் வைக்க வேண்டும். பொதுவாக கிழக்கு அல்லது வடக்கு பார்த்தவாறு அமர்ந்து பூஜை செய்வது நல்லது. அதற்கேற்ப ஆசனத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

முதற்கிரியை ஆசமனம் ஆகும். வாயை தூய்மைப்படுத்தல் என்பது இதன் பொருள். இதைச்செய்யாமல் எந்த மந்திரத்தையும் உச்சரிக்கக் கூடாது.

அடுத்தது சங்கல்பம். அன்றாட வாழ்க்கையில் நாம் செய்கின்ற தவறுகளும் சந்திக்கின்ற தோல்விகளும் ஏராளம். இதற்கு பொதுவாக 3 காரணங்களைச் சொல்லலாம்.

1. தன்னறிவு இல்லாமல் ஒரு செயலைச் செய்வது.
2. ஒரு இலட்சியத்திற்காக அல்லாமல் ஏனோதானோ என்று செய்வது.
3. திடசங்கல்பம் இல்லாமல் வேலை செய்வது.

இந்த மூன்றிலும் முக்கியமானது திடசங்கல்பம். இது மற்ற இரண்டிற்கும் அடிபப்படை.

எனவே பூஜைசெய்யும் போது அதன் நோக்கம் என்ன என்பதை சங்கல்பித்து கொள்ள வேண்டும். முக்கியமாக சாதாரண வாழ்க்கைக்கு வளம் சேரப்பதற்காகவோ அல்லது முக்தியை நாடி அந்த பூஜை செய்யப்படுகிறதா என்பதை உறுதிப் படுத்துவதற்கு உரியது அந்த கிரியை. தன்னறிவு இல்லாமலும், ஏனோ தானோ என்றும் பூஜை செய்யாமல் இருப்பதற்கு இந்த சங்கல்பம் உதவுகின்றது.

**2. தூய்மைப்படுத்தல்.**

அடுத்து வருவது பூஜைக்குரிய நீரைப்புனிதப்படுத்துவது. கங்கை யமுனை போன்ற 7 தீர்த்தங்களும் மந்திரங்கள் மூலம் அழைக்கப்பட்டு, பூஜைக்குரிய நீரில் சங்கமிக்குமாறு பிரார்த்திக்கப்படுகின்றன. பூஜை முழுவதும் இந்த நீரே பயன்படுத்தப்படுகின்றது. பிறகு இடையூறுகள் எதுவும் இல்லாமல் பூஜை நிகழ அதற்குரிய தெய்வங்களிடமும் குருமார்களிடமும் பிரார்த்தனை செய்யப்படுகின்றது.

**3. தன்னை தெய்வீகமாக்குதல்.**

பூஜைக்குரிய பொருட்களைப் புனிதப் படுத்துவது போலவே தன்னையும் தெய்வீக மாக்கிக்கொள்ள வேண்டும். தன்னிலுள்ள பாவங்கள் அனைத்தையும் ஒரு பாவ புருஷனாக முதலில் சங்கல்பித்துக் கொள்ள வேண்டும். பிறகு மந்திரங்கள் மூலம் அவனை எரிக்க வேண்டும். அடுத்து, தான் ஒரு புனிதமான, சுயஒளிமிக்க ஆன்மா என்பதை திடமாக்கி கொள்ள வேண்டும். இந்த கிரயை 3 படிகளாக செய்யப் படுகின்றது.

முதலில் பிராணாயாமம். இதன் மூலம் நுண்ணுடல் புனிதமாக்கப் படுகின்றது. அடுத்து வருவது பூத சுத்தி என்படும் முக்கியமான கிரியை ஆகும். மூலாதாரத்தில் உறங்குகின்ற குண்டலினி சக்தி விழித்தெழுந்து தலையிலுள்ள சகஸ் ராரத்திற்கு சென்று அங்குள்ள ஒளிமயமான பரமாத்மாவுடன் இணைவதாக இங்கே சங்க ல்பிக்கப்படுகின்றது. அதன் பிறகு, பாவ உடல் அந்த தெய்வீக ஒளியில் எரிந்து விடுவதாக நினைக்க வேண்டும். பிறகு தனக்கு பாவங்கள் அற்ற ஒரு ஒளிமயமான தெய்வீக உடல் கிடைப்பதாகவும் எண்ணிக்கொள்ள வேண்டும். பூத சுத்திக்குப் பிறகு, அதாவது புதிய தெய்வீக உடம்பு கிடைத்த பிறகு அந்த உடம்புடன் இதயத்தில் இஷ்ட தெய்வத்தின் சான்னித்தியத்தை நிரப்ப வேண்டும்.

**4. உடம்பில் தெய்வீக ஆற்றலை வளர்த்தல்.**

பூஜை செய்பவனுக்கு இப்போது தெய்வீக உடம்பு கிடைத்து விட்டது. இதயத்தில் தெய்வீக சான்னியத்தை அவன் உணர்கின்றான். இனி அவன் தனது எல்லா அங்கங்களிலும் தெய்வீக ஆற்றலை நிறைக்க வேண்டும். இது நியாசம் எனப்படுகின்றது. சில பீஜ மந்திரங்களை உச்சரித்து உடம்பின் பல்வேறு அங்கங்களை தொடுகின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் உடம்பின் எல்லா அங்கங்களிலும் தெய்வக ஆற்றல் நிறைக்கப்படுகின்றது.

**5. இஷ்ட தெய்வத்தை எழுந்தருளச் செய்தல்.**

இவ்வாறு தெய்வீக ஆற்றல் நிறைந்த அங்கங்களுடன் கூடிய உடம்பு இஷ்ட தெய்வத்தை அழைக்க வல்லதாகின்றது. பொதுவாக திருவுருவம், சிவலிங்கம், சாளக் கிராமம், கும்பம், படம் போன்றவை பூஜைக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் இஷ்ட தெய்வம் எழுந்தருள்வதற்காகச் செய்யப்படுகின்ற கிரியை ஆவாஹனம் எனபடுகின்றது.

இதயத்தில் எழுந்தருளியுள்ள இஷ்ட தெய்வம் மூச்சு வழியாக வெளிவந்து கையிலுள்ள மலரில் அமர்வதாகக் கருத வேண்டும். பிறகு அந்த மலரை திருவுருவத்தின் மீது வைக்கும்போது இஷ்ட தெய்வம் அங்கு எழுந்தருளுவதாக நினைக்க வேண்டும். பிறகு அந்த திருவுருவிற்கு பல்வேறு முத்திரைகள் மூலம் ஆற்றல் அளிக்கப்படுகின்றது. இந்தக் கிரியை பிராணபிரதிஷ்டை எனப்படுகின்றது.

**6. சேவை.**

திருவுருவில் எழுந்தருளியுள்ள இஷ்ட தெய்வத்திற்கு கை கால் அலம்ப தண்ணீர் கொடுத்தல், அபிஷேகங்கள் செய்தல், நைவேத்தியம் போன்ற பல்வேறு உபசாரங்கள் அல்லது சேவைகள் செய்யப்படுகின்றன. பெருமைக்குரிய விருந்தாளி ஒருவர் வீட்டிற்கு வருவது போல கருதப்பட்டு இந்த உபசாரங்கள் செய்யப் படுகின்றன.

**7. நிறைவுக் கிரியைகள்.**

எல்லாப் பூஜையும் நிறைவுற்ற பிறகு கை நிறைய மலர்களை இஷ்ட தெய்வத்தின் திருவடிகளில் சமர்ப்பித்து பூஜை நிறைவு செய்யப்படுகின்றது.

**8 பிரசாதம்.**

பூஜைகளில் அபிஷேகம் செய்யப் பட்டவை, நைவேத்தியம் செய்யப்பட்டவை எல்லாம் பிரசாதமாக கடைசியில் வழங்கப் படுகின்றது. பிரசாதம் மனதை தூய்மைப் படுத்துவதாகக் கருதப்படுகின்றது. அது மட்டுமின்றி, பிரசாதம் எனும் சமஸ்கிருத வார்த்தை அருள் என்று பொருள்படுகின்றது. எனவே பிரசாதம் என்பது இறையருளைப் பெறுவது என்பதாகும்.

***ஹோமம்.***

விசேஷ பூஜைகளிலெல்லாம் பொது வாக ஹோமம் செய்யப்படுகின்றது. பூஜையின் நிறைவாக இது கொள்ளப்படும். வீடுகளில் தினசரி செய்யப்படும் பூஜைகளில் ஹோமம் பொதுவாக இடம் பெறுவதில்லை.

***ஆராத்ரிகம்***

இது பொதுவாக ஆரதி என்று அழைக்கப்படுகின்றது. தூபம், தீபம் போன்ற வற்றை தெய்வத்தின் முன்னால் காண்பிக்கின்ற கிரியை இது. இந்த வேளையில் தெய்வத்தின் திருவுருவில் ஒரு விஷேச சான்னித்தியம் வெளிப்படுவதாக கூறப்படுகின்றது. பொதுவாக ஆரதி வேளைகளில் மணி, சங்கு, சேகண்டி போன்றவைகளால் நாதம் எழுப்பப்படுகின்றது. இதனால் அந்த வேளையில் மனம் ஒருமுகப்பட்டு தெய்வத்தை நினைக்க ஏதுவாகின்றது.

***பூஜையின் ஒன்பது அம்சங்கள்.***

*சரவணம் கீர்த்தனம் விஷ்ணோ /*
*ஸ்மரணம் பாதஸேவனம் /*
*அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம்*
*ஆத்மநிவேதனம் //*

இறைவனை பக்தி செய்யும் வழியில் 9 படிகளை வைக்கிறார் பிரகலாதர். அவை இறை வனின் பெருமைகளை கேட்பது (சரவணம்), அவர் புகழைப்பாடுவது (கீர்த்தனம்), அவரைச் சிந்திப்பது (ஸ்மரணம்), அவரது திருப்பாதங்களுக்கு சேவை செய்வது (பாத ஸேவனம்), மலர்களால் அர்ச்சிப்பது (அர்ச்சனம்), நமஸ்கரிப்பது (வந்தனம்), சேவகனாக, தோழனாக, குழந்தையாக, அவருடன் ஓர் உறவு முறையை ஏற்படுத்திக் கொண்டு அவரை நாடுவது (தாஸ்யம், ஸக்யம்), தன்னையே அவருக்கு சமர்ப்பிப்பது (ஆத்ம நிவேதனம்) என்பனவாகும்.

***எது பூஜை?***

இந்து மதத்தில் நான்கு விதமான பூஜைகள் கூறப்படகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. புற பூஜை**

பொதுவாக வீடுகளிலும் கோயில்களிலும் செய்கின்ற பூஜை. பல்வேறு மந்திரங்களுடனும் கிரியைகளுடனும் கூடியது இது.

**2. மானசீக பூஜை**

1. புறத்தில் செய்கின்ற அத்தனை கிரியைகளையும் உபசாரங்களையும் மனதளவில் செய்வது.
2. இஷ்ட தெய்வ மந்திரத்தை செபிப்பதும், இஷ்ட தெய்வத்தின் திருவுருவை சிந்திப்பதும்.

**3. ஸ்தோத்ரம்**

துதிகள், பஜனைகள் போன்றவற்றின் மூலம் தெய்வத்தினை வழிபடுவது.

**4. கைங்கரியம்.**

1) கொயில்களிலும் மற்ற இடங்களிலும் திருத்தொண்டு செய்தல்.
2) செய்கின்ற வேலைகளை எல்லாம் இறைவனுககு சேவையாக செய்தல்

எனவே பூஜை என்று சொல்லும் போது சில கிரியைகள் மட்டுமல்ல. இறைவனுக்கு நாம் அனைத்தையும் கொடுக்கின்ற நிலையில் நம்மை வைத்திருக்கின்ற ஒரு மனப்பக்குவம் என்று கொள்வது இன்றியமையாதது. பூஜையின் நோக் கம், அகங்காரத்தைக் குறைப்பதும், இறை வனுடன் நமக்கு ஒரு மாறாத உறவை ஏற்படுத்துவதும் ஆகும். இதைமட்டும் அடைந்து விட்டால் வாழ்க்கையே ஒரு பூஜையாக மாறிவிடும்.

உசாத்துணை நூல் :- சுவாமி பஜானானந்தா

## சிவபெருமான் உருவ வருணனை

நுதலது இமையா நாட்டம்
வான் இலங்கு பிறை அன்ன விலங்கு வால்வை எயிறு
எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை
முதிராத் திங்களோடு சுடரும் சென்னி
யாழ் கெழ மணிமிடற்று அந்தணன்
செவ்வான் அன்ன மேனி
மார்பின்தே மையில் நுண்ஞாண்
கொன்றைத் தாரான் மாலையன் கண்ணியன்
கையது தணிச்சி மழுவேல்
சேர்ந்தொன் உமையே
வரிகிளர் வயமான் உரிவை உடுத்தவன்
ஊர்ந்தது ஏறே

அகநானூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2006/ 2007ம் ஆண்டிற்கான இந்து மாணவர் சங்க 50வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

| | |
|---|---|
| 2006/ 01/ 23 | எமது செயற்குழு பொறுப்பேற்கப்பட்டது |
| 2006/ 02/ 02 | அலங்கார உற்சவம் ஆரம்பம் |
| 2006/ 02/ 11 | அஷ்டோத்திர சதசங்காபிஷேகம் ஆரம்பம், தைப்பூசத் திருவிழா |
| 2006/ 02/ 26 | மகா சிவராத்திரி |
| 2006/ 04/ 11 | பங்குனி உத்திர விஷேட அபிஷேக பூசை |
| 2006/ 04/ 14 | வியய வருடப்பிறப்பு – விஷேட அபிஷேக பூசை |
| 2006/ 04/ 21 | நடேசர் அபிஷேகம், நடேசர் தரிசனம் |
| 2006/ 05/ 12 | சித்திரா பூரணை விஷேட அபிஷேக பூசை |
| 2006/ 07/ 02 | நடேசர் அபிஷேகம், நடேசர் தரிசனம், மணவாளக் கோல தின நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம், திருவூஞ்சல் |
| 2006/ 07/ 24 | ஆடி அமாவாசை விஷேட அபிஷேக பூசை |
| 2006/ 07/ 28 | ஆடிப்பூரம் |
| 2006/ 09/ 13 | கிருஷ்ண ஜெயந்தி விஷேட பூசை, விநாயகர் சதுர்த்தி பூசை |
| 2006/ 09/ 23 | நவராத்திரி விரதாரம்பம் |
| 2006/ 10/ 02 | விஜய தசமி உற்சவம் |
| 2006/ 10/ 22 | ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் |
| 2006/ 10/ 27 | ஸ்கந்த ஷஷ்டி பூர்த்தி (சூரஸம்காரம்) |
| 2006/ 10/ 28 | ஸ்கந்த ஷஷ்டி திருக்கல்யாணம் |
| 2006/ 12/ 03 | திருக்கார்த்திகை உற்சவம் |
| 2006/ 12/ 04 | விஷ்ணுவாலய தீபம் |
| 2006/ 12/ 31 | திருவெம்பாவை ஆரம்பம் |
| 2007/ 01/ 03 | நடேசர் ஆருத்ரா அபிஷேகமும் தரிசனமும் |
| 2007/ 01/ 05 | எமது செயற்குழு கையளிக்கப்பட்டது |

**இணைச் செயலாளர்கள்**

*ஸ். தினேஸ் குமார்*

*ய. யவநீதா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்க செயற்குழு
# 2006 / 2007

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | *கலாநிதி. தி. ஆனந்த மூர்த்தி* |
| பெரும்பொருளாளர் | : | *திரு. வ. தர்மதாசன்* |
| தலைவர் | : | *செல்வன். சா. மோகனஜீவ்* |
| உபதலைவர் | : | *செல்வன். க. விஷ்ணுகாந்தன்* |
| இணைச்செயலாளர்கள் | : | *செல்வன். ஸ். தினேஸ் குமார்*<br>*செல்வி. ந. யவநீதா* |
| இளம்பொருளாளர் | : | *செல்வன். சோ. ஆதவன்* |
| இதழாசிரியர்கள் | : | *செல்வன். சி. பிரஷாந்*<br>*செல்வி. க. அபிரா* |
| பண்டக முகாமையாளர் | : | *செல்வன். யோ. தேவநேசன்* |
| நிர்வாக அலுவலர் | : | *செல்வன். பா. மோகன்ராஜ்* |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | *செல்வன். நா. அனந்தன்*<br>*செல்வன். எஸ். ஜெகவந்தன்*<br>*செல்வன். கு. வாகீசன்*<br>*செல்வன். சி. வாகீசன்*<br>*செல்வன். ம. விக்னேஸ்ராவ்*<br>*செல்வி. அ. காயத்ரி*<br>*செல்வி. பா. மகியினி*<br>*செல்வி. சி. சுசந்தா* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Peradeniya

## Hindu Students' Union - 2006/2007



Row 1 (L/R) (Seated): Mr.S.Thineshkumar, Miss. N.Yavaneetha, Mr. V.Tharmathasan (Senior Treasurer), Prof. H.Abeygunawardane (Vice Chancellor), Dr.T.Ananthamoorthy (Senior President), Mr. S.Athavan, Mr. S.Mohanajeev.

Row 2 (L/R): Mr. S.Prasanth, Mr.B.Mohanraj, Mr.B.Sanjeevan, Mr.S.Visnukanthan, Miss.G.Abira, Miss.A.Gayathri, Miss. B.Mahijini, Mr.S.Vaheesan, Mr.N.Ananthan, Mr.Y.Thevanesan, Mr. S.Vaheesan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழு
# 2006 / 2007

| | | |
|---|---|---|
| தலைவர் | : | *பேராசிரியர் செ. சிவயோகநாதன்* |
| பொதுச்செயலாளர் | : | *திரு. த. இராஜேஸ்வரன்* |
| நிர்வாகச் செயலாளர் | : | *திரு. இரா. மகேஸ்வரன்* |
| பொருளாளர் | : | *திரு. வ. தர்மதாசன்* |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | *திரு. ஏ. அரியரட்ணம்* |
| | | *திரு. கே. நீலகண்டன்* |
| | | *திரு. ரி. சிவசுப்பிரமணியம்* |
| | | *கலாநிதி. தி. ஆனந்த மூர்த்தி* |
| | | *கலாநிதி. வி. மகேஸ்வரன்* |
| | | *கலாநிதி.ரி. சிவானந்தவேள்* |
| | | *திரு. ஆர். மகேந்திரன்* |
| | | *செல்வன். சா. மோகனஜீவ்* |
| | | *செல்வன். ஸ். தினேஸ் குமார்* |
| | | *செல்வன். சோ. ஆதவன்* |
| | | *செல்வன். சி. திவாகரன்* |
| | | *செல்வன். பா. சஞ்ஜீவன்* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Peradeniya

## Board of Trustees - Kurunchikumaran Temple - 2006/2007



Row 1 (L/R) (Seated) : Dr.T.Ananthamoorthy, Mr.R.Maheshvaran ( Secretary), Mr.V.Tharmathasan ( Treasurer), Prof.C.Sivayoganathan (President), Mr.T.Rajeshvaran (Secretary), Mr.A.Ariyaratnam.

Row 2 (L/R) : Mr.Y.Thevanesan, Mr.B.Sanjeevan, Mr.S.Athavan, Mr.S.Thineshkumar, Mr.S.Mohanajeev.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Peradeniya

## Hindu Graduates Associations - 2006/2007



Row 1 (L/R) (Seated) : Dr.T.Ananthamoorthy, Mr.T.Maheshvaran (Secretary), Mr.S.Sivasoruban (Treasurer).

Row 2 (L/R) : Mr. V.Tharmathasan, Mr.T.Rajeshvaran, Mr.K.Balathasan, Prof.C.Sivayoganathan, Mr.T.Balamurali, Prof.A.Sivaraja, Dr. (Mrs). K.Maheshvaran.

Absentees : Dr.V.Maheshvaran (President), Dr.T.Sivananthavel.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements From

VINAYAGAR TRADERS

No.15, KANDY ROAD,
GAMPOLA.
T.P- 081 4485071

With Best Complements From

M.THANGAVELPILLAI & Co

No 35-37, NUWARAELIYA ROAD,
GAMPOLA.
T.P- 08 - 52463

With Best Complements From

T.R.STORES

59,AMBEGAMUVA ROAD,
GAMPOLA – 20500.
T.P- 08 / 352452



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**With Best Complements From**

# Sri Muthumari



## Stores

*No 23, Kandy Road,*
*Gampola.*
*Dial : 2352779, 2351823, 4920079*



**With Best Complements From**

## NEW



## GANESH

## STORES



**With Best Complements From**

## A.S.UUMARASWARY



## & Co

*10,12 STATION ROAD,*
*GAMPOLA.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Complements From**



# SRI MURUGAN'S

No. 94
Colombo Street,
Kandy.
Tel: 081-2223399

**With Best Complements From**

KE

# KAVIJA ELECTRICAL

**Govt. Suppliers – Dealers in Electrical Goods
Apliances & Hardwares.**

Rajarata Super Market 2nd Floor,
98-2/1, Colombo Street,
Kandy.
Tel: 08 – 233215
Fax: 08 - 224055

**With Best Complements From**



# Jayanthys



## Dealers in Textile

No. 106, Colombo Street,
Kandy.
Tel : 081- 2222464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements From

Express your Love with Gold



# LATHA JEWELLERS

No.27
Kotugodella Veediya,
Kandy – Srilanka.
Telefax : 081 – 2232027

With Best Complements From

# *Vasanthas*



**JEWELLERS & PAWN BROKERS**

NO. 56,
D.S.SENANAYAKE VEEDIYA,
KANDY.
TEL.0094 81 2233151
2224300
FAX. 0094 81 2223627

With Best Complements From

# Central Agencies (Pte) Ltd.



**IMPORTERS - CONTRACTORS - SUPPLIERS WHOLESALE DEALERS IN ELECTRAL GOODS**

127, Kotudodella Vidiya,
Kandy.
Srilanka.
Phone : 081-2224203

With Best Complements From

SINCE 1976



# SRILEKAH JEWWLLERS





57,Yatinuwara Veediya,
Kandy.
T.P 081-2202925
Fax: 081-2229105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements From

**SRI HARAN HARDWARE**

**Dealers in :**
**Machinery, Water Pumps, Tools, Paint, PVC Pipe, Power Tools and Agent for Asian Paints & Anton Product.**

182, Colombo Street,
Kandy.
E-mail : rihhk@sltnet.lk
Tel : 081-2223750
Fax : 081-2232371

With Best Complements From

**CHANDRA STORES**

**Branch : 60, New Moor Street,**
**Colombo – 12.**

207, Colombo Street,
Kandy.
E-mail : chandraimports@yahoo.co.in
Tel : 081-2234332
081-2232756
081-2229175
Fax : 081-2229174

With Best Complements From

**KRISHNA STORES**

**163,Colombo Street,**
**Kandy.**
**Tel : 234204**

With Best Complements From

**RAJAH & SONS**


**109,Colombo Street,**
**Kandy.**
**Tel : 08 - 222835**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**With Best Complements From**






**(ABOI Approved Company)**

12, Melbourne Avenue,
Colombo – 04, Srilanka.

Mobile: +94(0777)317075, Phone: +94(0112)503266
Fax: +94(0112)360481

mail to: vakeesan@lanka.com.lk or
visit us at: www.seagullonline.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Complements From**

# RANJITHA TRADERS

**IMPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS.**

180, Colombo Street,
Kandy.
E-mail : ranjithatraders@yahoo.com
Tel : 081-2232350,2229155
Fax : 081-2229156

**With Best Complements From**

# VIGNESWARAN STORES



No:173, Colombo Street,
Kandy.
Tel : 08-223014

**With Best Complements From**

# *Commercial Hardware Stores*



43,Colombo Street,
Kandy.
Srilanka.
Dial : 081 – 2223565
Fax : 081 - 2223565

**With Best Complements From**



# ஹோட்டல் சௌமியா

இல. 9,
டி. எஸ். சேனநாயக்க வீதி,
கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements From

# RATNAM & SONS

8/14 Main Streeet,
Talawakelle.
Tel : 052-2258401

With Best Complements From

# LINGAM STORES

NEWS PAPER AGENT

No. 23B, Ambagampuwa Road,
Nawalapitiya.
T.P. 054-2222107

With Best Complements From

# ஸ்ரீ கணேசானந்தா பிராமணாள் சைவ உணவகம்

சுத்தமான சுவையான சைவ உணவுகளுக்கு கண்டி மாநகரில் நாட வேண்டிய இடம்

இல. 42, பேராதனை வீதி, கண்டி.
தொ.பே : 081-2223489
081-2233281



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements From



ALANKAAR JEWELLERS

*For 22Kt solid gold & latest fashion jewellery.*

No. 234, Trincomalee Street,
Matale.
T.P – 066 2222344

With Best Complements From



Sujatha JEWELLERS

*Genuine 22Kt gold*

No. 278, Main Street,
Matale.
T.P- 066 4460658



With Best Complements From

SRI KUMARAN STORES



DEALERS IN BEST TABACCO, GROCERIES AND CIGARS.

345, Main Street,
Matale.
T.P- 066 4900413



With Best Complements From

Sri Lakshmi Stores



*Wholesale & Retail in Chicken & Eggs.*

No. 445, Main Street,
Matale.
T.P - 066 2232072
Mobile- 077 7973264




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

- இவ்விதழ் பொலிவுற வெளிவர இன்னருள் புரிந்த குறிஞ்சிக் குமரனை பலகோடி நன்றிகளோடு வணங்குகின்றோம்.
- ஆசியுரை வழங்கி இவ்விதழை ஆசீர்வதித்த பெரியோருக்கும்,
- வாழ்த்துக்கள் மூலம் இவ்விதழ் வளம் பெற்று வெளிவர வாழ்த்திய பெரியோருக்கும்,
- அறிவு செறிந்த கட்டுரைகள் மூலம் இவ்விதழின் ஆய்வியல், வாழ்வியல், சமூகவியல் என்பவற்றைச் சிறப்பித்த பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், ஆகியோருக்கும்,
- ஆக்கங்கள் தந்துதவிய மாணவர்களுக்கும்,
- விளம்பரங்கள் மூலம் இவ்விதழை பொலிவூட்டி, இவ்விதழ் வெளிவர உதவிய எமது வர்த்தக நெஞ்சங்களுக்கும்,
- விளம்பரங்களைச் சேகரிக்க உதவிய மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும்,
- அட்டைப்படத்தை அழகுற வரைந்து தந்த ச.சக்திராஜ் (2ம் வருடம், பொறியியற் பீடம்) அவருக்கும்,
- இவ்விதழுக்காக விளம்பரங்களை வடிவமைத்த சி.திவாகரனுக்கும் (3ம் வருடம், பொறியியற் பீடம்),
- ஆலோசனை வழங்கி இதழினை மெருகேற்றிய நண்பர்களுக்கும்,
- இம்மலரினை அச்சுக்கலையால் அழகுசெய்த சந்துனி பதிப்பகத்தாருக்கும்,
- இவ்விதழ் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும்,

எமது இதயபூர்வமான நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதழாசிரியர்கள்
***சி. பிரஷாந் (பொறியியற் பீடம்)***
***க. அபிரா (பொறியியற் பீடம்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**With Best Complements From**

குறிஞ்சிக்குமரன் அருளால் இந்து தருமம் மலர் வெளியிடுவதையிட்டு பெரும்மகிழ்ச்சியடைகின்றோம். வெளிவரும் இந்து தரும இதழுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# இந்து மாணவர் சங்க உறுப்பினர்கள்

# 1998 - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org